அடுத்த காலடி



25 விளம்பரம்

EST 1991

...அடுத்த காலடி.

'விளம்பரம்' இருபத்தைந்து ஆண்டுகள்

1991-2015

பதிப்பு - 01
மே. 24, 2015

VLAMBARAM™
'Canada's Oldest Tamil Newspaper'
Vlambaram Publications Inc.
GTA Square
Tel: 416.282.8059 | Fax: 416.282.4978
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com
5215 Finch Avenue East, #201,
Toronto ON M1S 0C2 Canada

உள்நிரல்

பதிப்புரை

கடந்து வந்த பாதையும் அடுத்த காலடியும் 009
– ராஜா மகேந்திரன்

விளம்பரம் அற்ற ஊடகம் – சேரன் 019

முத்தமிழ் மகளே வாழியவே! – வி. கந்தவனம் 027

நீடூழியென வாழ்த்திடுவோம் விளம்பரமே! 028
– க. கந்தசாமி

அகவை இருபத்தைந்து 029
- கவிநாதம் பரந்தாமன்

இயந்திர இணையம் – கார்த்திகேசு விஜயசுகந்தன் 031

'வாழ்த்திடுவோம் விளம்பரத்தை' – சத்தியகலா 040

நித்திய வாழ்வு வாழலாம் – தயாநிதி 041

தொழில்நுட்பங்களும் செய்திப் பரிவர்த்தனையும் 053
– செந்தில்

கணினித் தமிழ் காத்திடும் எம் தமிழை!! 059
– அகணி சுரேஸ்

உலகம் அழியக் கூடிய வாய்ப்புக்கள் 069
– விஜே குலத்துங்கம்

வானியலில் தமிழர் பங்களிப்பு – கனி 075

வானசாத்திரமும் தமிழர் காலக்கணிப்பும் 081
– சிவ ஞானநாயகன்

உள்நிரல்.

எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? – டாக்டர் கோபால் 089

வருமுன் பாதுகாப்பு – டாக்டர் மனோகரி
– டாக்டர் மனோகரி உமாகரன் 092

நீண்ட நாள் வாழ நினைத்ததை அடைய !
– என். செல்வசோதி 095

பேரானந்தத்துக்கு ஒரு பயணம் – பெரி. முத்துராமன் 099

சத்தியம் இனியும் தவறுதல் சரியோ!
– வள்ளிநாயகி இராமலிங்கம் 103

சுமைகளை சுகங்களாக்குங்கள்
– நா. க. சிவராமலிங்கம் 106

அன்புக்கு நிகரானது – கே. ஜி. மாஸ்ரர் 109

பகையும் புகையும் – புலவர் ஈழத்துச் சிவானந்தன் 112

சுட்ட பழமும் சுடாத பழமும்
– முனைவர் பார்வதி கந்தசாமி 116

ரொறன்ரோவில் தமிழர் மத்தியில் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியும் சந்திக்கும் சவால்களும்
– பேராசிரியர் இ. பாலசுந்தரம் 124

தமிழ் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்
– ஆரணி 132

தவறு கற்பிக்கும் பாடம் – லலிதா புரூடி 135

கனேடிய இளம் சமூகமும் பெற்றோரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்
– 'சிந்தனைப்பூக்கள்' பத்மநாதன் 137

போரின் பின்னர் தமிழர் வாழ்வு – விகிர்தன் (இலங்கை) 143

உள்நிரல்..

வடக்குக் கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னான பெண்களின் நிலை 151
– எஸ். கே. விக்னேஸ்வரன்

எமக்கான திரைப்பட மொழி சாத்தியமானதா? 161
– ரதன்

மாறிவரும் நகைச்சுவை உணர்வும் வெளிப்பாடும் 171
– கலகலப்பு தீசன்

ரொறொன்ரோ பெரும்பாகத் தமிழர் மத்தியில் ஏற்பட்ட 175
– வர்த்தகத்துறை வளர்ச்சியும் வாழ்க்கை மாற்றங்களும்
– துறையூரான்

கனேடிய தமிழர் வாழ்வில் காப்புறுதி 181
– சிவ பஞ்சலிங்கம்

தமிழ் இலக்கியத் தோட்டம் – அ. முத்துலிங்கம் 189

கனேடிய தமிழர் நாடக வளர்ச்சி 194
– கலாநிதி வி. கந்தவனம்

கனேடிய தமிழர் பரதக்கலையும் இசைக்கலையும் 199
– த. சிவபாலு

மொழிபெயர்ப்பாளர் - மணி வேலுப்பிள்ளை 214

'கடலோடி' நூலாசியர் திரு. நரசய்யாவுடன் 224
ஒரு கலந்துரையாடல்
அ. முத்துலிங்கம், சத்தியா மகேந்திரன்

அதுவே விதைத்து அறுவடையும் செய்து 228
கொண்டு போட்டுது
- மறைந்த முன்னாள் அதிபர் பொன். கனகசபாபதி

மூன்று கிளிகள் சுதந்திரமாக பறக்கின்றன 232
- செழியன்

உள்நிரல்...

என் படுக்கை அறைக்குள் நுழைந்திருந்தது மரம் – திருமாவளவன் 236

காலப் பெருங் களம் – செல்வம் அருளானந்தம் 250

பிரபஞ்சத்துக்கள் – முத்துராஜா 251

எத்தர்களும் பித்தர்களும் – வீரகேசரி மூர்த்தி 252

சர்வதேச விளையாட்டு அரங்கில் தமிழர் – எஸ். கணேஷ் 253

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டி நடுவர்கள் 258

விளம்பரம் – 2015 போட்டியில் வெற்றிபெற்ற கவிதை

'300 பருத்தி வீரர்களும் ஒரு தலைவரும்' 259
முதலாம் பரிசு பெற்ற கவிதை – கே. இந்திரஜித்

'தமிழரின் கலையும் பண்பாடும்' ---
முதலாம் பரிசு பெற்ற கட்டுரை – ஆர். லட்சுமணன்

'வானவில்' ---
முதலாம் பரிசு பெற்ற குறுநாவல் – நிலானி சுதன்

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டிகளின் முடிவுகள் 260

பதிப்புரை

கடந்த முப்பது ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து, வளர்ந்து, பணியாற்றிய அனுபவத்துடன் 'விளம்பரம்' பத்திரிகையின் வரலாற்றை நான் மீள்நோக்கிப் பார்க்கிறேன். இன்று ஏறக்குறைய நாலு இலட்சம் மக்களைக் கொண்ட எங்கள் சமூகத்துடன் இரண்டறக் கலந்த ஊடகப் பயணம் என் அகக்கண்ணில் புலப்படுகிறது. எத்தனை ஆண்டுகள்! எத்துணை மாற்றம்! இதை எல்லாம் பிரதிபலிக்கும் ஓர் ஊடகக் கண்ணாடியாக 'விளம்பரம்' விளங்குவது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியும் நிறைவும் அடைகிறேன்.

1991இல் 4 பக்கங்களில் விளம்பரங்களுடன் மட்டுமே வெளிவந்த இலவச 'விளம்பரம்' இன்று 40 பக்கங்களில் பல ஆக்கங்களையும் கொண்டு வெளிவருகிறது. கால் நூற்றாண்டாக இடைவிடாது தொடர்ந்து வெளிவரும் பத்திரிகை என்ற பெயரையும் அது ஈட்டிக்கொண்டுள்ளது. எங்கள் சமூகத்துக்குப் பயன்படும் தகவல்களை வழங்கும் செய்திமடலாக எழுந்து, கலை-இலக்கிய-அரசியல் எழுத்துக்களை நடுநிலையுடன் முன்வைக்கும் இதழாக ஓங்கி, வாசகர்களுக்குத் திசைகாட்டும் ஊடகமாக மணம் கமழ்கிறது.

இளந்தலைமுறையின் நலன்கருதிச் செயற்படுவதில் 'விளம்பரம்' பெருமைப்படுகிறது. கனேடிய கல்விநெறிக்கும் பாடத்திட்டத்துக்கும் அமைவாக ஆசிரியர்களும், மாணவர்களும் முன்வைக்கும் ஆக்கங்க-ளையும், புதிய தொழில் முயற்சியாளர்களைக் கருத்தில் கொண்டு துறை சார்ந்தவர்களின் கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஊடகமாக விளங்கும் நிலைக்கு 'விளம்பரம்' உயர்ந்துள்ளது.

சிறகடிக்கும் வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யும் வண்ணம் சுற்றுலாத் துறைக்கு 'விளம்பரம்' இடம்கொடுத்து வந்துள்ளது. பிறந்த நாடு, புகுந்த நாடு, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்கும் இடையேயான பயண விபரங்களை வழங்கும் ஊடகமாக விளங்குவதன் ஊடாக தமிழ்கூறும் நல்லுலக மக்களின் ஊடாட்டத்துக்கு 'விளம்பரம்' உறுதுணை புரிந்து வருகிறது.

புதிய உலக அமைப்பை மின்னூடகம் ஆக்கிரமித்துள்ள இவ் வேளையில் நாமும் அதற்குள் அடியெடுத்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலமாக விளங்கும் 'தமிழ்வணக்கம்' (tamilvanakkam.com) இணையதளம் 'விளம்பர' ஊடகத்தின் ஓர் அங்கமாக முகிழ்த்துள்ளது. இலங்கை, இந்திய, கனேடிய, உலகச் செய்திகளையும், திரைப்படத்துறை, விளையாட்டுத்துறைச் செய்திகளையும் உடனுக்குடன் முன்வைக்கும் இணைய ஊடகம் இது.

'விளம்பரம்' தொகுத்து முன்வைக்கும் இந்நூலுக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அன்பர்களுக்கும், இந்நூலாக்கத்தை ஒப்பேற்றுவதில் ஓராண்டாக எமக்கு உறுதுணை புரிந்த நண்பர்களுக்கும், எமது உலகளாவிய கதை, கவிதை, கட்டுரை, திரைப்படப் போட்டிகளை உலகெங்கும் விளம்பரப்படுத்திய ஊடகங்களுக்கும், போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கும், அவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கும், ஆக்கங்களைத் தேர்ந்து தெரிந்து முன்வைத்த துறைஞர்களுக்கும், வெற்றிபெற்றவர்களை ஏற்றிப்போற்றிய பெருமக்களுக்கும், அழைத்த வேளைகளில் எல்லாம் எமக்குத் தோள்கொடுத்த தோழர்களுக்கும் எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991இல் நாம் இட்ட வித்துக்கு நீர் பாய்ச்சிய றிப்ளக்ஸ் 'Reflex' அச்சகத்துக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை அதன் மூலகர்த்தாவாகிய அமரர் ஈழத்துப் பூராடனார் அவர்களை நான் நினைந்துருகி நிற்கிறேன். அன்னாரின் குடும்பத்தவர்க்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். 'விளம்பர' வாசகர்களுக்கு நன்றி பாராட்டும் இத்தருணத்தில் அதன் ஊழியர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், எனது நண்பர்களுக்கும், குடும்பத்தவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டவன் என்பதையும் பதிவுசெய்கிறேன். விளம்பரம் கடந்த 25 ஆண்டு காலமாக தவறாது உரிய காலத்தில் வெளிவர உறுதுணையாகவும் அதன் ஆசிரியராகவும் இருக்கும் எனது மனைவிக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றியையும் கடப்பாட்டையும் உரித்தாக்கி விடைபெறுகிறேன்.

ராஜா மகேந்திரன்
'விளம்பரம்' பதிப்பாளர்

கடந்து வந்த பாதையும் ...அடுத்த காலடியும்.!

- ராஜா மகேந்திரன்

வாழ்க்கை எங்கிருந்து தொடங்குகின்றது, எங்குபோய் முடியும் என்பது யாருக்கும் இதுவரை தெரியாத புதிர். துரத்தப்பட்டோம், அலைந்தோம், அங்கலாய்த்தோம், வசதிக்கும், தேவைக்கும், அறிவுக்கும், நோக்கத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு நாடும் தற்காலிகம் என நினைத்திருந்தோம். ஆனால் நிரந்தரமாக தங்கிவிட்டோம். இன்று அதுவே எமது இறுதி கால வாழ்வுக்கு உரிய இடமாகவும் அமைந்துவிட்டது. அதுமட்டுமல்லாமல் அடுத்த, அதற்கடுத்த சந்ததியினரும் வாழும் நாடாகி விட்டது. இதுவே அவர்களின் தாய் நாடு ஆகிவிட்டது. அவர்களின் தாய். தந்தை, தாத்தா, பாட்டியின் வீடுதான் இலங்கை என்று கூறவேண்டி வந்துவிட்டது.

உலகின் 120 நாடுகளில் தமிழர்கள் வாழுகின்றார்கள் என்பது ஒரு கணிப்பு. புலம்பெயர்ந்த நாடுகளில் கனடாவில்தான் அதிகூடிய தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பது இன்னுமொரு கணிப்பு. ஏறக்குறைய நாலு இலட்சம் (0.4 மில்லியன்) மக்கள் கனடாவில் வாழ்வதாக அறியப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் 80களின் தொடக்கத்தில் கனடாவிற்கு புலம்பெயர்ந்தவர்கள். அதற்கு முன்பாக தமிழ் பேசும் மக்கள் கனடாவில் இருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. இவர்கள் தொழில் நோக்கமாக அல்லது மேற்படிப்பு காரணமாக வந்தவர்கள் எனக் கொள்ளலாம். தமிழர்களின் புலம்பெயர்வு ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பாகவே ஏற்படத் தொடங்கிவிட்டது. தமிழன் என்று ஓர் இனம் இருக்கின்றது என்று உலகிற்கு தெரியப்படுத்தியதே இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வே. தமிழர்கள் என்றால் இலங்கையில் மட்டும் தான் இருப்பதாக இன்றும் நம்பும் வேற்றினத்தவர்களைக் காணக்கூடிய - தாக உள்ளது. ஏறக்குறைய 100 வருடங்களிற்கு முன்பாக இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வு, மலாயா (இன்றைய மலேசியா) நோக்கியதாக இருந்தது. இது ஒரு பொருளாதார நோக்கம். பிரிட்டிஷ்காரரினால் புலம்பெயர்க்கப்பட்ட இந்திய தமிழ் மக்களின் நிலை வேறாக இருந்தது.

80களின் புலம்பெயர்வில், பெரும்பகுதியினர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். இவர்களின் எண்ணிக்கையில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பேதம் இல்லாமல் இருந்தது. இன்னொரு உண்மையையும் நாம்

கருத்தில் கொள்ள வேண்டும். உலகின் பல நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் நிரந்தரமாக வாழ்ந்து வந்தாலும், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழ்பவர்களின் செயற்பாடே பெரிதாகக் கொள்ளப்பட்டும், பேசப்பட்டும் வந்தது. வருடா வருடம் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து தமிழ் பேசக்கூடிய மக்கள் பெருமளவில் தொழில் நோக்கமாகவும், மேற்படிப்பு காரணமாகவும் தொடர்ந்து புலம்பெயர்வதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக 2013ஆம் ஆண்டில் கனடாவிற்கு வந்த புதியவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 250,000 ஆகும். இதில் 33,000 பேர் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். இதில் குறிப்பிட்டளவினர் தமிழ் பேசக் கூடியவர்கள். இந்நிலைமை தொடர்ந்தவண்ணமே இருக்கும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகளிற்கும் இவர்களின் வருகை அதிகரிக்கவே வாய்ப்புகள் உள்ளன. இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை குறைந்தாலும், இந்தியாவிலும், இலங்கையிலும் இருந்து வரும் தமிழர்களின் எண்ணிக்கையால் கனடா போன்ற நாடுகளில் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கூறலாம். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களால் உருவாகியது 'புலம்பெயர் தமிழ் இலக்கியம்'. இதன் வளர்ச்சியும் நிச்சயமாக இருக்கும் என்றே கூறலாம்.



80களில் அகதிகளாக வந்த இளம் வயதினரான எமக்கு போதியளவு பணவசதி இருக்கவில்லை. ஏனைய இனத்தவர்களைப் பற்றிய போதிய சமூக அறிவு, அவர்களுடன் தொடர்புகொள்ளும் வசதிகள் என இன்னோரன்ன விடயங்களில் பரந்த அறிவு இருக்கவில்லை என்பது உண்மை. கனடாவின் முதலாவது தமிழ் சமுதாயம் உருவாகிய காலம் அது. வாழ்வதற்காக பலவிதமான தொழில்களும் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கனவே பட்டப்படிப்பு முடித்தவர்கள், பெரியளவில் படிக்காதவர்கள் அல்லது வேறு நாடுகளில் தொழில் புரிந்துகொண்டு இருந்தபோது தாய் நாட்டிற்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளவர்கள் எனப் பலரும் கனடாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இலங்கையில் நடந்து கொண்டிருந்த தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக வெளிநாடுகளில் இலங்கை அகதிகள் இலகுவாக உள்வாங்கப்பட்டார்கள். இவர்களால் குடும்ப இணைவு இலகுவாக்கப்பட்டது. இதற்கு உதாரணமாக இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டுவந்த கப்பல் 1987இல் Halifax இற்கு வந்தபோது கனேடிய மக்களினதும் ஊடகங்களினதும் எதிர்ப்புக்கு மத்தியில் அன்றைய கனடிய

பிரதம மந்திரி மாண்புமிகு பிறையன் மல்றோனியின் அறிக்கையினால் கப்பலில் வந்து இறங்கியவர்கள் அகதிகளாக வரவேற்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழ் மக்கள் இலகுவாக அகதிகளாக வரக்கூடியதாக இருந்தது. மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. கனடாவில் புதியதொரு தமிழ் சமுதாயம் உருவாகியது.

ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம் உருவாக ஊடகத்தின் தேவை முக்கியமானதாகும். இதனை புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் அறிந்திருந் - தனர். புலம்பெயர்ந்த தமிழ் சமுதாயம் தாயகச் செய்திகளையும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் செய்திகள், அந்தந்த நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, சமுதாய அமைப்பு, அரசியலமைப்பு, கல்வி, சட்டதிட்ட அமைப்பு போன்ற விடயங்களையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. இயற்கையிலேயே தேடலும், ஆர்வமும் கொண்ட தமிழினத்தின் முன்னோக்கிய பாய்ச்சல் புலம்பெயர்ந்தவர்களிற்கு புதிதானதொன்றாக இருக்கவில்லை.

பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், விளம்பரப்பல - கைகள், விளம்பர கைநூல்கள் போன்றவை சங்கிலிக் கோர்வையாக ஆரம்பிக்கப்பட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக கனேடிய ஊடகத் துறையில் கால்பதித்த புலம்பெயர்ந்த தமிழர் தேவைக்கு ஏற்ப தமது எல்லைகளை விரிவுபடுத்தினர். கையெழுத்துப் பிரதியாக, ஒட்டுப்பத்திரி- கையாக, சிறு இதழ்களாக அரும்பு விட்ட ஊடகத்துறை, சஞ்சிகைகள், புத்தகங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என பரிணாம வளர்ச்சி அடைந்தது.

பணநெருக்கடி, நேரப்பற்றாக்குறை, போதியளவு தொழில்நுட்ப அறிவு இல்லாமை, தாய் நாட்டில் உள்ள சொந்தங்களுக்கும் சொந்தமில்லாதவர் - களுக்கும் உதவுவது போன்ற காரணங்களால் சில ஊடகச் சேவைகள் குறுகிய காலத்துடன் தமது ஆயுளை முடித்துக்கொண்டன. ஆனாலும் ஒன்று நின்று போக மற்றையது முளைத்த வண்ணமே இருந்தது.

திரு. சின்னத்துரை செந்தில்நாதனின் 'செந்தாமரை' மற்றும் திரு. செல்வராஜகோபால் அவர்களின் 'உலகளாவிய தமிழ்' போன்றவற்றை கனடா, ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்த ஆரம்ப பத்திரிகைகள் எனக்கூறலாம்.

1982ஆம் ஆண்டு செந்தாமரை பத்திரிகை வந்ததாக திரு. செந்தில்நாதன் கூறியிருந்தார். அத்துடன் இதுவே வட அமெரிக்காவில் வெளிவந்த முதல்

தமிழ்ப்பத்திரிகை எனவும் கூறியிருந்தார். அதன்பின்னர், செல்வராஜகோபாலின் மகனின் முயற்சியால் 'நிழல்' என்ற கணினிச் சஞ்சிகை உருவம் பெற்றது. அது மட்டுமல்லாமல் தமிழ் உலகில் தமிழ்ப் பிரசுரிப்புத் தொழில்நுட்பம் இலகுவாக்கப்பட்டது. இதுவே தமிழ் கணினி அச்சமைப்பின் கண்டுபிடிப்பு ஆகும். உலகில் கனடாவில்தான் முதலில் தமிழ் எழுத்துக்கள் கணினி வடிவம் பெற்றது என்பதனை தமிழ் நாட்டிலிருந்த எழுத்தாளர் சுஜாதா அவர்களின் கட்டுரை உறுதி செய்துள்ளது. தமிழ் எழுத்துருவின் மின்கணினி வடிவம் கனடாவில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதன் வளர்ச்சிக்கு ஆரம்பகாலத்தில் அயராது உழைத்தவர்களில் கலாநிதி விஜயகுமார், திரு. சசிகரன் பத்மநாதன் இருவரையும் குறிப்பிடலாம். சமுதாய வளர்ச்சியின் ஒரு பங்காகவும், அன்றைய மக்களின் தேவையையும் கருதி 1991ஆம் ஆண்டு 'விளம்பரம்' பத்திரிகை உதயமானது.



ரொறொன்ரோவிலும் மிசிசாகாவிலும் அமைந்திருந்த Reflex நிறுவனத்திலேயே 'விளம்பரம்' பத்திரிகை முதலில் அச்சடிக்கப்பட்டது. இதற்குரிய ஆக்க வேலைகள் யாவும் அந்த நிறுவனத்தாலேயே செய்யப்பட்டன. இதற்குரிய அச்சு சம்பந்தமான முழுப்பொறுப்பையும் திரு. செல்வராஜகோபால் அவர்களின் புதல்வர்கள் சந்திரா, ஜோதி, அருள் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சமுதாய தேவை கருதி பத்திரிகையை தொடர்ச்சியாக வெளியிடுவது உறுதி செய்யப்பட்டது. அன்றைய தமிழ் மக்களின் நலனும் தேவைகளும் கருதி விளம்பரங்களை மட்டுமே தாங்கி பத்திரிகை வெளிவந்தது. தேவைகள் மாற, சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட விளம்பரம் பத்திரிகையும் புதிய காலடியை எடுத்து வைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அதன் அடுத்த கட்டமாக 1996 ஆம் ஆண்டிலிருந்து புதிய சமுதாயத்தின் அன்றைய தேவைகளை கருத்தில் கொண்டு, அந்தந்த தொழில்களிலும், சேவைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களின் ஆக்கங்கள் தரம் கருதி பிரசுரிக்கப்பட்டன.

பல பத்திரிகைகளின் தொடர்ச்சியான வரவு கனேடியத்தமிழ் சமுதாயத்தில் ஆரோக்கியமானதாக பார்க்கப்பட்டது. எமது அடுத்த வளர்ச்சியாக, செய்திகளையும் சேர்த்துக் கொள்வது எனத் தீர்மானித்தோம். ஒரு செய்திப் பத்திரிகையாக உருமாற்றம் பெற்றது. பத்திரிகையின் உருவமும், பத்திரிகையின் அமைப்பும், பாவிக்கும் தாள்களும் மாற்றி அமைக்கப்பட்டன. தொடர்ச்சியாக வந்த பத்திரிகைகள் இலவசமாகவே

வழங்கப்பட்டன என்பதனையும் இதில் குறிப்பிட வேண்டும். மக்களின் இணைப்பு பாலமாக இருந்த விளம்பரம் 'சமூக முன்னேற்றப்பத்திரிகை' என்பதனை தனது மூலமந்திரமாக மாற்றியது.

2002 ஆம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட பத்திரிகை, சஞ்சிகைகள் சம்பந்தமான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பத்திரிகை	ஆரம்பதிகதி	ஆசிரியர்	அப்போதைய முடிவு
செந்தாமரை	ஒக்ரோபர்1982	எஸ்.செந்தில்வேல்	1994இல் நிறுத்தப்பட்டது
நிழல்	1987	செல்வராஜகோபால்	1998இல் நிறுத்தப்பட்டது
உலகத்தமிழர்	ஜனவரி 1987	ந.கமலவாசன்	வெளிவந்து கொண்டு இருக்கிறது
ஈழநாடு	-	கே.ரி. பரமேஸ்வரன்	வெளிவந்து கொண்டு இருக்கிறது
தாயகம்	1989	ஜோர்ஜ் குருசேவ்	1995
விளம்பரம்	ஜனவரி 1991	ராஜா மகேந்திரன்	வெளிவந்து கொண்டு இருக்கிறது.
பொதிகை	யூன்1994	நிருபா தங்கவேற்பிள்ளை	செப்ரெம்பர் 2000
ஈழகேசரி	யூலை1993	வே.இராஜலிங்கம்	ஒக்ரோபர் 1995
ஈழமுரசு	ஜனவரி 1994	ஆர்.கோபாலகிருஷ்ணன்	வெளிவந்துகொண்டு இருக்கிறது.
சூரியன்	1994	ஆர்.என்.லோகேந்திரலிங்கம்	1996
தமிழர்செந்தாமரை	மார்ச் 1996	கனக அரசரத்தினம்	வெளிவந்து கொண்டு இருக்கிறது
உலகம்	செப்ரெம்பர்1995	எம்.பி.கோணேஷ்	1996
நம்நாடு	நொவம்பர்1995	வே.இராஜலிங்கம்	வெளிவந்துகொண்டுஇருக்கிறது
உதயன்	மே1996	ஆர்.என்.லோகேந்திரலிங்கம்	வெளிவந்துகொண்டு இருக்கிறது
முழக்கம்	யூலை1996	திரு.முருகவேந்தன்	வெளிவந்துகொண்டு இருக்கறது
ஈழம்	யூன்2000	திரு.லோகன் கணபதி	தெரியவில்லை
கனடாமுரசொலி	யூலை 2000	ஆதி கணபதி சோமசுந்தரம்	வெளிவந்து கொண்டு இருக்கிறது
சுதந்திரன்	செப்ரெம்பர் 2002	செல்வா செல்லையா	வெளிவந்து கொண்டு இருக்கிறது
வாசகன்	1998	கே.ரீ சண்முகராஜா	தெரியவில்லை
முரசொலி	1999	கே.ரீ சண்முகராஜா	தெரியவில்லை
தமிழோசை	-	கே.ரி பரமேஷ்வரன்	தெரியவில்லை

மேலுள்ள பத்திரிகைகள் தவிர இந்தக் காலகட்டத்தில் மணியோசை, செரந்தீபம், மஞ்சரி, வெற்றிமுரசு, தமிழ்குரல், The World Mirror, The Sri-Lankan Reporter போன்ற பத்திரிகைகளும் 'உலகத்தமிழோசை' போன்ற

சஞ்சிகைகளும் வந்த பிற்பாடு நிறுத்தப்பட்டு விட்டன. அல்லது பெயர் மாற்றப்பட்டு வந்து கொண்டு இருந்தன. முக்கியமாக 'தமிழர் தகவல்' மாதாந்த சஞ்சிகை 1991இல் இருந்து தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருந்தது.

இக்காலகட்டத்தில் வர்த்தக சேவை (சி. செந்தில்வேல்), தமிழ்ச்சோலை (ந. யோகதாசன்), தமிழர் தாயகம் (பா. ஞானபாண்டியன்), கீதவாணி (நடா ராஜ்குமார்), தேமதுரம் (பி. ஞானேஸ்வரன்) சங்கமம் (க. சிவசோதி இளையபாரதி), ரேடியோ ஏசியா (எம்.பி. கோணேஷ்), தமிழோசை (ஸ்ரீஸ்கந்தா), தமிழ் ஒலி (வசந்தா நடராஜன்), கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (CTBC) (இளையபாரதி), கனடிய தமிழ் வானொலி (CTR), கமலநாதன், அலையோசை (விஜய் ஆனந்) போன்ற வானொலிச் சேவைகள் நடத்தப்பட்டு பல நிறுத்தப்பட்டிருந்தன. சில தொடர்ந்தும் நடத்தப்பட்டுக்கொண்டு இருந்தன.

ஏசியன் மகசீன் (பி. ஞானேஸ்வரன்), கலையரங்கம் (விஷ்ணு), கலாபம் (ரிவிசிலோன்) (சு. ஸ்ரீனிவாசன்), தமிழ்விஷன் (TVI) (சி. சிவகுமாரன்), தமிழ்.Com (சேகர்), ஆரம் (இ. செந்தில்நாதன்), ATN (சண் சந்திரசேகர்), தமிழ்விஷன் நெற்வேக் (TVN) (பவன்) ஆகிய தொலைகாட்சி சேவைகளும் நடத்தப்பட்டு வந்தன. இந்தவகை தொலைக்காட்சி சேவைகளில் சில சேவைகள் குறிப்பிட்ட மணித்தியாலங்களும் ஒரு சில 24 மணிநேர சேவைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

மற்றும் வருடம் ஒரு தடவையாக நந்தாவின் 'தமிழர் மத்தியில்', செந்தியின் 'தமிழன் வழிகாட்டி' மற்றும் 'தமிழர் வணிகம்' போன்ற விளம்பர கைநூல்களும் வெளிவந்து கொண்டு இருந்தன.

பத்திரிகைகளில் அனேகமானவை இலவசமாகவே விநியோகிக்கப் - பட்டன. இருந்தும் சில பணத்திற்கு விற்கப்பட்டன என்பதும் குறிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு - 2002 இன் இறுதிப் பகுதியிலிருந்த ஊடகங்கள் பற்றிய தகவல்கள் மேலே தரப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஏறக்குறைய 200,000 தமிழ் மக்கள் கனடாவில் வாழ்வதாக கணிக்கப்பட்டிருந்தது. அத்துடன் எண்பதுக்கும் மேற்பட்ட பல்லின சமூகங்கள் ஒன்றிணைந்து ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். அப்பொழுது அனேகமான சமூகங்கள் தங்களது சமூகத்திற்குரிய பத்திரிகைகளை

வெளியிட்டுக்கொண்டு இருந்தன. மேலும் இக்காலகட்டத்தில் தமிழ் சமுதாயம் தனக்கென ஓர் இடத்தை உருவாக்க முற்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

எமது விளம்பரம் பத்திரிகையின் பயணத்தில் 2003 இல் வடிவமைப்பு (Layout), அச்சிடும் முறை, பதிப்பு முறையில் புதிய தொழில் நுட்பங்கள் சேர்க்கப்பட்டன. குறிப்பாக தமிழ் இதழ்களின் வளர்ச்சியில் கணினியில் வடிவமைக்கப்பட்ட பத்திரிகையினை எலெக்ரோனிக் முறையில் அச்சு நிறுவனத்திற்கு அனுப்பி அச்சிடப்பட்டது. கனடிய தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாக விளம்பரமே இம் முறையை செய்தது என்பதனை பெருமையாக பதிவு செய்கிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து தரமான பத்திரிகை எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்டன. அத்துடன் மேலும் பல புதிய எழுத்தாளர்களும் விளம்பர எழுத்தாளர் குடும்பத்தில் இணைந்து கொண்டு வாசிப்பாளர்களுக்கு தகுந்த வாசிப்பு, தகவல் விட்டமின்களைக் கொடுத்து வந்தார்கள்.

செய்திகள் எழுதப்படும் போது சார்பற்ற முறையில் எழுதப்படல் வேண்டும். இதையே எமது இறுக்கமான கொள்கையாக கொண்டுள்ளோம். எம்மையோ, எம்மைச் சார்ந்தவர்களையோ முன்னிறுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் விளம்பரம் பத்திரிகை நடத்தப்பட்டு வருகின்றது என்பது பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய விடயமாக கருதப்படுகின்றது.

ஒரு சமூகத்தில் அரசியல், சினிமா, இலக்கியம், விளையாட்டுப் போன்று, ஊடகத்துறையில் இருப்பவர்களிடமும் மக்கள் மத்தியில் மிகையான மதிப்பு உண்டு. இதனால் தவறு செய்பவர்களை ஊடகம் தமது பலத்தினால் வெளிப்படுத்த வேண்டும் அல்லது ஆகக் குறைந்தது அவர்களிற்கு சார்பாக இல்லாமல் ஆவது இருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் விளம்பரம் இயங்கி வருகின்றது. ஊடகங்கள் ஒரு சமூகத்தின் கலை, கலாச்சாரம், பண்பாட்டை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக விஜய் ரிவி இன் சில குறிப்பிட்ட நிகழ்வுகள் (Super Singer மற்றும் நீயா நானா) உலகளாவிய ரீதியில் பிரமாதமாக செயல்படுகின்றன. இவ்வாறான நிகழ்ச்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்றைய புதிய உலகில் அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப வளர்ச்சியும், மணிக்கு மணி மாறிக் கொண்டே வருகின்றன. எதிர்காலத்தில் இன்னும் மிகவும் அதிகமாகவே இருக்கும்.

ஊடகத்துறை இன்று பலவித பரிமாணங்கள் எடுத்து வருகின்றது. இவற்றின் மூலம் பத்திரிகையே. இப்பத்திரிகைத் துறையில் கணினித்துறை பாரிய பங்கு வகிக்கின்றது. உலகம் முழுவதும் இருந்து செய்திகள் பல வழிமுறைகளில் நொடிக்கு நொடி பெறக்கூடியதாக உள்ளன. பலவகையான இலக்கிய, தொழில்நுட்ப, உடனடிச்செய்திகள், சினிமா செய்திகள் போன்றவற்றையும் ஏனைய விடயங்களையும் இணையம், முகநூல், (Face Book), Twitter, வலைப்பதிவுகள் (Blogs) போன்ற பல புதிய தொழில்நுட்பமுறைகளில் கிடைக்கப்பெறுவதால் எதிர்காலத்தில் பத்திரிகையின் ஆயுள் குறைந்து விடுமா என்ற கேள்வி நியாயமானதே.

இவ்வாறான மாற்றங்களை அறிய இந்திய பத்திரிகைகளின் கூட்டமைப்பு பெப்ரவரி 23, 24, 2015 இல் ஒரு கருத்தரங்கை சென்னையில் நடத்தியது. இந்தக் கருத்தரங்கு விகடன் குழும நிர்வாக இயக்குனர் பா. சீனிவாசனின் தலைமையில் நடைபெற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்கத்தைய நாடுகளில் இருந்து 200 இற்கு மேற்பட்டவர்கள் கலந்து தமது கருத்துக்களை வெளியிட்டார்கள். இதில் வெளியிட்ட தகவலின்படி கடந்த இரு ஆண்டுகளில் பத்திரிகையின் வளர்ச்சி 6% ஆகக் காணப்பட்டதாகவும் நடப்பு ஆண்டில் வளர்ச்சி 10% ஆகவும் இருக்கும் எனவும் தெரியப்படுத்தப்பட்டது. அத்துடன் வருடா வருடம் சென்னையில் ஜனவரியில் நடைபெறும் புத்தகவிழாவில் விற்கப்படும் பதிப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பதும் இளைய தலைமுறையின் வாசிப்பு தாகம், ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்தை கட்டியம் கூறி நிற்கின்றன. கனடாவில், தமிழ் ஊடகத்துறையின் 2002ஆம் ஆண்டின் நிலையைக் குறிப்பாக அச்சுத்துறை சம்பந்தமான பட்டியலை முன்னர் பார்த்தோம்.

கடந்த 12 ஆண்டுகளில் மேலும் பல மாற்றங்கள் தமிழ் ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ளன. 2014 இன் இறுதியில் ஊடகத்துறை குறிப்பாக பத்திரிகைத்துறை பற்றிய தகவல் கீழே தரப்படுகின்றது.

விளம்பரம், தமிழர் செந்தாமரை, உதயன், ஈழநாடு, சுதந்திரன், ஈழமுரசு, The Srilankan Reporter போன்ற பத்திரிகைகள் வந்து கொண்டு இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை தவிர 'உலகத்தமிழர்' பத்திரிகை 'கனடா உலகத்தமிழர் பத்திரிகை' என பெயர் மாற்றத்துடன் தொடர்ந்து வெளிவருகின்றது. மேலும் பல பத்திரிகைகள் 2014 இன் இறுதியில் வந்து கொண்டு இருந்தன. அவற்றுள் சில 2002ஆம் ஆண்டின் பின்னரே ஆரம்பிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக தாய் வீடு, தங்கதீபம், கதிர் ஒளி, Tamil Mirror, Monsoon Journal, ஈகுருவி, முகவரி, அங்கர்மான் (Anchorman), ஆதவன், சிறகு, உறவு போன்ற தமிழ், ஆங்கில பத்திரிகை-

களும், வந்து கொண்டு இருக்கின்றன.

தமிழர் தகவல் மாதாந்த மஞ்சரி தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. இந்த இடைக்காலத்தில் மேலும் பல பத்திரிகைகள் சில மாதங்கள், வந்தபின் தமது பதிப்பை நிறுத்திக் கொண்டன என்பதும் இங்கே குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பிட்ட சில சஞ்சிகைகள் அல்லது மஞ்சரிகள் சிலகால இடை-வெளியில் வந்துகொண்டு இருக்கின்றன. அவை: காலம், தளிர், தூறல், உரையாடல் போன்றவை ஆகும். வருடாந்த விளம்பர கைநூல்களாக தமிழன் வழிகாட்டி, தமிழர் வணிகம், தமிழர் மத்தியில், தமிழ் சோர்ஸ் (தேடிப்பார்) போன்றனவும் வருகின்றன. தொலைக்காட்சி, வானொலி, இணைய சேவை, இன்ரநெற் வானொலி, website போன்ற பல ஊடகங்களில் தமிழரின் வளர்ச்சி தொடர்ந்து செல்வதனைக் காணக்கூடி-யதாக உள்ளது. எதிர்காலங்களில் பெரிய வளர்ச்சியினை எதிர்பார்க்கலாம்.

விளம்பரம் பத்திரிகையும் தனது அடுத்த காலடியாக 'தமிழ்வணக்கம்.கொம்' என்ற இணையத்தளத்தில் அரசியல், இலக்கியம், சினிமா, உலக நிகழ்வு - களை நாளாந்த அடிப்படையில் பதிவேற்றம் செய்து வருகின்றது. மற்றும் Vlambaram.Com இல் இதுவரை வந்த விளம்பர பத்திரிகைகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

முக்கியமாக 2002 இல் விளம்பரம் நிறுவனம் உலகத்தமிழோசை என்ற காலாண்டு சஞ்சிகையை, இரு வருடங்கள் கொண்டு வந்தது. இதன் ஆசிரியராக திரு. செந்தில் இரத்தினசபாபதியும், சஞ்சிகை வடிவமைப்பு பொறுப்பாளராக டிஜி (Digi) கருணாவும் செயல்பட்டார்கள். மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்த போதிலும் பொருளாதார ரீதியில் நெருக்கடி ஏற்பட்டதால் இரு வருடங்களிற்குள் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் பதிப்புகள் தமிழ்வணக்கம்.கொம் இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 25 வருட காலத்தில் விளம்பரம் பத்திரிகை சார்பாக நான்கு புத்தகங்களும் இரண்டு சொற்கோவைகளும் வெளியிடப்பட்டுள்ளன. புத்தகங்கள் முறையே திருமதி. லலிதா புருடியின் 'ஆளுமை வளர்ச்சிக்கு பிரார்த்தனைகள்', கனியின் "வேற்றுக்கிரக மனிதர்கள்', மற்றும் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் 'கூதிர்காலக் குலாவல்கள்' மற்றும் அகணிதன். அல்லது நதியின் 'பிழையன்று', மருத்துவர் கோபால் அவர்களின் 'எம்மை நாம் பாதுகாப்பது எப்படி', அகணி சுரேஷ் அவர்களின் 'வெகுளாமை' மற்றும் 'நினைவாற்றல்'. காலம்சென்ற அதிபர் கனகசபாபதி அவர்களின் தலைமையில் ஆறு ஆண்டுகளாக ஒன்றிணைக்கப்பட்ட

சொல் அகராதிகளான 'சொற்கோவை' 'சொல் புதிது'உம் வெளியிடப் பட்டன. கடந்த 25 ஆண்டுகால அனுபவத்தின் தொடர்ச்சியாக **'அடுத்த காலடி'** என்ற நூல் வெளியிடப்படுகின்றது.

ஏறக்குறைய 30 வருடங்கள் புலம்பெயர் தமிழர்கள் கனடாவில் வாழ்ந்துவருகிறார்கள். முதல் பரம்பரையோடு இரண்டாவது பரம்பரையும் தமிழ் சமுதாயத்துக்கு நற்பெயரை பெற்றுக் கொடுத்துள்ளது. அத்துடன் இன்றுள்ள பரம்பரை உயர்ந்த பதவிகளை இலகுவாக பெற்று வருகின்றது. முதலாவது பரம்பரை கடின வேலைக்கு பெயர் பெற்றதுமல்லாமல் கல்வி, நேர்மை, நியாயம், நம்பிக்கை போன்றவற்றிற்கு பெயர் போனவர்கள் எனவும் மற்றைய இனக்குழுமங்கள் மத்தியில் பேசப்படுகின்றன. பலவித தொழில்-களை நடத்தி வருவதுடன் கலை, இலக்கியம், சினிமா, அரசியல், வணிகம், ஊடகம் என சகல வழிமுறைகளிலும் காலை ஆழமாகவும் அகலமாகவும் பதித்துள்ளது. விளம்பரம் இதழ் இச்சமுதாயத்துடன் சேர்ந்தே பயணித்து வருகின்றது. யூத இனம் எவ்வாறு தம்மை கல்வி, பொருளாதாரம், அரசியல், வணிகம், மருத்துவம், சட்டம் போன்ற பல்வேறு துறைகளில் நிலைநிறுத்தினார்களோ அவ்வாறே தமிழரின் அடுத்த காலடியும் நிலை - யாகப் பதியப்படும் என்று எதிர்வு கூற விரும்புகின்றேன். அதுவே எமது எண்ணமும் விருப்பமும் ஆகும். இதற்கு நாம் யாவரும் ஒன்றாக செயற்படுவோம்.

உசாத்துணை நூல்கள்

1. கனடிய தமிழ் ஊடகத்துறையில் இலவசப் பத்திரிகைகள்: ஓர் ஆய்வு
2. தமிழன் வழிகாட்டி
3. தமிழர் மத்தியில்
4. தமிழர் வணிகம்
5. ஆனந்த விகடன் (11.03.2015)



ராஜா மகேந்திரன், P.Eng.

இவர் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக 'விளம்பரம்' பத்திரிகையில் ஆதனம் சம்மந்தமான ஆக்கங்களை எழுதிவருகிறார். 25 ஆண்டுகளாக விளம்பரம் பத்திரிகையை ரொறொன்ரோவிலிருந்து வெளியிட்டு வருகிறார். 'உலகத்தமிழோசை' சஞ்சிகையையும் வெளியிட்டவர். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியாவார்.

விளம்பரம் அற்ற ஊடகம்

- சேரன்

இருபத்தைந்து ஆண்டுகள் ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் நிதானமாகவும் தமிழில் ஒரு பத்திரிகையை வெளியிடுவது ஒரு சாதனை என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்று அல்ல. 'விளம்பரம்' இதழை இவ்வாறு தொடர்ந்து வெளியிட்டு வரும் ராஜா மகேந்திரனுக்கும் ஆசிரியர் சத்தியபாமாவுக்கும் 'விளம்பரம்' நிறுவனத்தினருக்கும் என்னுடைய இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'விளம்பரம்' ஒரு செய்தித்-தாள் மட்டுமல்ல அதனை ஒரு சமூக இயக்கம் என்றும் குறிப்பிடுவது பொருத்தமானது என்று கருதுகின்றேன். கடந்த இருபத்தைந்து ஆண்டு-களில் 'விளம்பரம்' உருவாக்கி, புடமிட்டு, ஒளிர வைத்திருக்கும் எழுத்தாளர்களின் பட்டியல் மிக நீண்டது. அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பொது நல மேம்பாட்டுக்காகவும் சமூக நீதிக்காகவும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் சிந்தித்துச் செயல்பட்டு வருகிறார்கள். தரமான அறப்பொறுப்பு வாய்ந்த எல்லா ஊடகங்களுக்கும் தமது நீண்ட கால பொறுப்புணர்வு மிக்க பங்களிப்பால் ஒரு சமூக இயக்கமாக மாறுவது அவசியமானதாகும். அந்த வகையில் கனடாவின் தமிழ் ஊடகத்துறையில் 'விளம்பரம்' ஒரு முன்னோடியாக அமைகிறது என்று சிறப்புடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஊடகத்துறை மாபெரும் மாற்றங்களைச் சந்தித்து விட்டது. தொழில்நுட்பப் புரட்சி நமது தொடர்-பாடல் முறைமைகளையும், வடிவங்களையும் தலைகீழாக மாற்றி விட்டது. 'தகவல்', 'செய்தி' என்பனவற்றின் பண்பு, வடிவம், தரம், அமைப்பு என்பனவும் பெருமளவு மாற்றங்களுக்கு ஆட்பட்டு விட்டன. ஆழத்தையும், அகலத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்த இதழியல் சுருக்கம், திட்பம், விரைவு என்னும் இயல்புகளுக்கு மாறி விட்டது. சொல்லிய சொல்லும் எழுதிய எழுத்தும் ஆட்சி பெற்றிருந்த காலம் மாறிவிட்டது. இப்போது காட்சிக்கும் படங்களுக்கும் முக்கியத்துவம் தரும் கட்புலன் சார்ந்த, இலத்திரனியல் ஊடகங்களுக்கும் இதழியலுக்குமான காலம். கையில் புத்தகத்தையோ அல்லது செய்தித்தாளையோ வைத்திருப்பவர்-களைப் பார்ப்பது அரிதாகிப் போய்விட்டது. ஆனால் எல்லோர் கைகளிலும் செல்பேசி இருக்கிறது. தொலைக்காட்சியிலும் செய்தித்தாளிலும்

தகவல்கள் வருவதற்கு முன்பாக மிக விரைவில் முகநூலிலும் ஏனைய சமூக இலத்திரனியல் ஊடகங்களிலும் செய்திகளும் தகவல்களும் படங்களும் வந்து குவிந்து விடுகின்றன. பல சந்தர்ப்பங்களில் சாவீடுகளுக்கு போவதைத் தவிர்த்து விட்டு முகநூலில் Rest in peace (RIP) என்று அஞ்சலி எழுதி விடுவதே இப்போது வழக்கமாகி வருகிறது. அன்றாட யதார்த்தம் என்பது முகமும் உருவமும் நிறமும் தெரியாமல் அந்தரத்தில் தொடர்பாடல் கொள்கிற வினோதமும் விசித்திரமும் ஈர்ப்பும் மிக்க கற்பனை வெளியாக மாற்றம் பெற்றுவிட்டது. உடலும் உடலும் முகமும் முகமும் பொருந்துவது மட்டும் தான் காதல் என்று இல்லாமல் குறுஞ் செய்தி, சல்லாபம், இணைய வழி ஊடாட்டம், இலத்திரனியல் தொடுகை போன்றனவே காதலை வளர்க்கவும் முறிக்கவும் மாற்றவும் கூடக்கருவிகளாகி விட்டன. இத்தகையதொரு அதீத நவீனமான புதிய யதார்த்தத்தில் 'விளம்பரம்' போன்ற அச்சு ஊடகங்களின் பங்கு என்ன? இன்றைய யதார்த்தத்துக்குள் இவை தாக்குப்பிடிக்க முடியுமா? என்ற கேள்விகள் நமக்குள் இயல்பாகவே எழுகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக ஊடகத்துறை மாற்றங்களையும், எழுச்சி, வீழ்ச்சி, மலர்ச்சி என்பனவற்றையும் அவதானித்து வருபவர்கள் முக்கியமான நான்கு போக்குகளை இனம் காண்கிறார்கள். முதலாவது, வானொலியில் இருந்து, தொலைக்காட்சிக்கும், தொலைக்காட்சியிலிருந்து கைத்தொலைபேசியின் சின்னத்திரைகளுக்கும் என்று தொழில்நுட்பமும் தொடர்பாடலும் மாறினாலும் வானொலியும், தொலைக்காட்சியும் செல்லாக்காசுகளாக மாறி விடவில்லை. அவை வேறொரு தளத்திலும், இயல்பு மாற்றங்களோடும் தொடர்ந்து வருகின்றன.

இரண்டாவது, அச்சு ஊடகங்களின் வளர்ச்சியிலும் பரவலிலும் பாதிப்புகள் ஏற்பட்டாலும் உலகின் பல பகுதிகளில் அச்சு ஊடகங்களும் நாளிதழ்களும் மிக வேகமாக எழுச்சி பெற்று வருகின்றன. இந்தியா இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அச்சில் வெளியாகும் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அவற்றின் பரவலும் விற்பனையும் மிக அதிகமாகி விட்டது. அச்சு ஊடகங்களின் மறுமலர்ச்சி என்று கூடச் சிலர் இதனை வர்ணிக்கின்றனர். மின்நூல்களின் வருகை நூற்பழக்கத்தை எளிதாகவும், தரமாகவும், விநியோகம் செய்வதற்கு உதவுகிறது என்பது உண்மை ஆனாலும் ஒரு புத்தகத்தை அல்லது செய்தித்தாளை கையில் ஏந்தி வாசிப்பதில் இருக்கிற பழக்கமும் உணர்வும் அவ்வளவு விரைவில் மானுடர்களை விட்டு நீங்கி விடாது என்று தோன்றுகிறது. சொல்லும், சொல்லும் படிமமும், படிமமும் பார்வையும், பார்வையும் இணைய வழியிலும் இலத்திரனில் வழியிலும் தருகிற காதல் உணர்வு உடலும்,

உடலும் நேரடியாக மயங்கும் காதல் உணர்வை ஈடு செய்ய முடியுமா?

மூன்றாவது, ஊடகத்துறையும் தொடர்பாடல்துறையும் இன்று முற்று முழுதாகவே பெரு நிதி நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் போய்விட்டன. எதிர் நீச்சல் போடுபவர்கள் ஆங்காங்கே உள்ளனர் என்பது உண்மை. எனினும் பெரு நிதி நிறுவனங்கள் கோலோச்சும் உலகமயமாதல் யுகத்தில் ஊடக சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், தகவல் அறிவதற்கான அடிப்படை உரிமை என்பன பெரும் அளவில் சிதைக்கப்படுகின்றன.

நான்காவது, நாம் பயன்படுத்துகிற மொழியிலும் மொழிப் பண்பாட்டிலும் மொழிக்கு நாங்கள் வழங்குகிற மதிப்பு, சீர்மை, இனிமை என்பவற்றிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. மொழியைப் பொறுத்தவரை இது ஆக்கபூர்வமான மாற்றம் என்று நாம் கருத முடியாது. பண்பாட்டின் மூலம் என்ற அளவிலும் தொடர்பாடலின் கருவி என்ற வகையிலும் நமது அடையாளத்தின் சிறப்பான கூறுகளுள் ஒன்று என்ற முறையிலும் மொழியின் சிதைவு ஏற்படுத்துகிற பாதிப்பு மிகவும் அச்சம் தருவதாக இருக்கிறது.

தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்த வரையில் மொழியின் சிதைவும் தனித்துவம் இன்மையும் பொய்மையும் திருட்டும் அறிவின் வீச்சின்மையும் பெரு நோய்களாக இருப்பதைக் காண முடிகின்றது. தொடர்பாடலிலும் இலத்திரனில் தொழில்நுட்பங்களிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை இந்தப் பெரு நோய்களை மேலும் ஆழமாகப் பரவலாக்கவே வழி அமைத்திருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. எங்களுடைய ஊடகங்களில் இன்றுவரை பயின்று வரும் சில சொற்களையும் சொற்றொடர்களையும் எடுத்துக்காட்டுக்களாகப் பார்க்கலாம்.

'விஜயம் செய்தார்' என்ற தொடர் எங்களுக்குப் பழக்கம். மன்னர்க-ளும் பிரபுக்களும் 'விஜயம்' செய்வார்கள். இந்தப் பயன்பாடு மேட்டிமை சார்ந்த ஒன்று மட்டுமல்ல. 1920களில் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வந்து ஊடகத்துறையில் பணியாற்றிய ஊடகவியலாளர்களால் அறிமுகம் செய்யப்பட்டு இன்றுவரை வழக்கில் இருக்கும் தொடர் அது. இதனுடைய தொடர்ச்சியாகத்தான் 'மாத்தளையில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புகள் மேலதிக ஆய்வுக்காக அமெரிக்கா விஜயம்' என்று தலைப்புச் செய்தி போட நம்மூர் ஊடக மேதைகளால் முடிகின்றது. இது போலவே 'ராஜிநாமா', 'ஆஜர்', 'ஊர்ஜிதம்', 'வாபஸ்', 'ஜாமீன்', 'பந்தோபஸ்து', "ரகளை" போன்ற சொற்களும் இன்றுவரை மிகவும் தாராளமாக நமது

ஊடகத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பணிவிலக்கம், பணிநீக்கம், பணி துறப்பு, உறுதிப்படுத்தப்படுதல், பின்வாங்குதல் அல்லது மீளப்பெற்றுக் கொள்ளல், பிணை, பாதுகாப்பு போன்ற தெளிவான, எளிமையான, நல்ல மொழிப்பயன்பாடு இருக்கும் போது அவற்றைப் பற்றிய அறிவும், தகவலும் இன்றிக் கனியிருப்பக் காய் கவரும் ஊடகத்துறைதான் நமக்கு வாய்த்திருக்கிறது.

சொற்களின் பயன்பாடு, தெரிவு என்பதில் மட்டுமல்ல இங்கே உள்ள சிக்கல். வசன அமைப்பு, அடிப்படைத் தமிழ் இலக்கணம், வழுவற்ற தமிழ் போன்றவற்றிலும் மொழிச்சிதைவைப் பலமாக ஏற்படுத்துகின்ற தமிழ் ஊடகவியலைத் தான் நாம் பெருமளவுக்குக் காண்கிறோம். மொழி, பண்பாடு, இலக்கியம், நமது தனித்துவமான அடையாளங்கள் என்பனவற்றைப் பேணுவதும் அவற்றினது காலத்துக்கு இசைந்த வளர்ச்சியையும் மாற்றத்தையும் பரிணாமத்தையும் ஊக்குவிப்பது ஊடகத்துறையின் அடிப்படையான பணிகளில் ஒன்றாகும். எனினும், நமது சூழலில் இது நடைபெறுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. எனினும், முக்கியமான காரணம் தமிழ்க் கல்வியின் வீழ்ச்சியும் தமிழைப் படித்தால் உருப்பட முடியாது என்ற மனோபாவமும் தமிழ் மொழிப் பயன்பாடு பற்றிய தாழ்வுச் சிக்கலும் என்றே நான் கருதுகின்றேன். 'தமிழ்த்'தொலைக்காட்சிகளும், 'சுப்பர் சிங்கர்', 'ஜூனியர் சிங்கர்' போன்ற கேளிக்கை, கொண்டாட்டம், களிப்பூட்டும் நிகழ்ச்சிகளில் தமிழ்க் கொலைகளுக்கும் தமிழ் மொழிச் சிதைவுக்கும் தமிழ் மொழி போலப் பாசாங்கு செய்யும் தமிங்கிலத்துக்கும் கிடைக்கும் பரவலான அங்கீகாரமும் வரவேற்பும் நமது இணைய தளங்களின் தமிழ் மொழிப் படுகொலைகளும் நமது சமூகம் எவ்வளவு தூரத்துக்கு நோயுற்றிருக்கிறது என்பதையே சுட்டிக்காட்டுகிறது. ஆங்கில மொழியின் பாதிப்பு, தொழில் நுட்பமும் இலத்திரனியல் சார்ந்தும் எல்லா மொழிகளிலும் இடம் பெற்றாலும் எனக்குத் தெரிந்தவரை, தமிழைத் தவிர உலகில் வேறு எந்த மொழிக்கும் இத்தகைய சுய அவமானம் கிடைத்ததில்லை.

ஆழமும், விரிவும் நமது ஊடகத்துறையில் குறுகி வருவதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இது உலகின் ஏனைய மொழி ஊடகத்துறைக்கும் பொருந்தும். எனினும் மற்றைய மொழிகளில் பலவற்றில் சிறப்பான ஒழுங்கும் தரமும் மிக்க மாற்று ஊடகங்கள் உள்ளன. இத்தகைய மாற்று ஊடகங்கள் மொழியைப் பேணுவதிலும் நவீன காலத்துக்கு ஏற்ப அதனைச் செம்மையும் புதுமையும் செழிக்கும் மொழியாக மாற்றுவதிலும்

ஈடுபட்டுள்ளன. எம்மிடம் இத்தகைய மாற்று ஊடகங்கள் உள்ளனவா? அவற்றின் பலமும் தாக்கமும் என்ன? என்ற கேள்வியையும் நாங்கள் எழுப்பியாக வேண்டும்.

செய்திச் சேகரிப்பு, செய்தியிடல், செய்தியை வழங்கும் முறைமை என்பவற்றில் மொழிக்கும் மொழி அமைப்புக்கும் விபரிப்புக்கும் உள்ள முக்கியத்துவம் கூட இப்போ அற்றுப்போய் விட்டது. வெறுமனே படங்களைப் போட்டுவிட்டால் போதும் என்ற நிலைமை வேரூன்றி விட்டது. நம்மைச் சுற்றியுள்ள ஊடகங்களையே எடுத்துப் பாருங்கள். ஒரு நிகழ்ச்சி, வெளியீட்டு விழா அல்லது கருத்தரங்கம் நிகழ்ந்தால் அங்கு பேசப்பட்ட பொருள் பற்றிய ஒழுங்கான திருத்தமான பதிவுகள் இராது. பேச்சாளர் விவரங்களே சில சமயங்களில் கிடைக்காது. எனினும் பக்கம் நிறையப் படங்கள் போட்டிருப்பார்கள். அப்படங்களுக்கு தலைப்புக்கள் கூடக் கிடையாது. ஊடகவியலின் அரிச்சுவடியான 'செய்தி எழுதுதல்', 'அறிக்கை இடுதல்' என்பனவற்றையே இப்போது காண முடியாது. சிந்தனையையும் ஆளுமையையும் வளர்ப்பதும் பண்படுத்துவதும் தான் நமது சமூகத்தைத் திறனுள்ளதாகவும் ஜனநாயகச் செழிப்பு மிக்கதாகவும் மாற்றும். இந்த உணர்வு நமது ஊடகங்களில் பெரும்பாலானவற்றுக்கு இல்லை என்பது தற்செயலானதல்ல. சமூகத்துக்கு எதிரான நுண்ணிய வன்முறையாகவே நாம் இதனைக் கொள்ள வேண்டும். மக்களை ரத்தமும் தசையும் உயிர்ப்பும் சிந்தனையும் மிக்க உயிரிகளாகக் கருதாமல் வெறுமனே நுகர்வோராகவும், மந்தைகளாகவும் 'பார் கோட்' ஆகவும் (Bar Code) கருதுகிற கடையவர் மனோபாவமே இது.

இதனுடைய தொடர்ச்சியாகத்தான் சமகாலத் தமிழ் ஊடகத்துறையின் இன்னும் இரண்டு நோய்க் கூறுகளைப் பார்க்க வேண்டி இருக்கிறது. முதலாவது நோய்க்கூறு: அப்பட்டமான திருட்டு. ஆங்கிலப் பத்திரிகை-யிலும், ஆங்கில இணையத்தளங்களிலும் வெளிவருவதை அப்படியே வெட்டி, ஒட்டி, 'முழி பெயர்த்து' வெளியிடுவது மரபாகிவிட்டது. அது போலவே தமிழ் இணையத்தளங்களும் மாறி மாறித் திருடிப் பிழைக்கிறார்-கள். யார் யாரிடம் இருந்து திருடினார்கள் (அல்லது அவர்களது கிளை மொழியில் சொன்னால் 'சுட்டது'!) என்பதைக் கண்டு பிடிக்க உங்களுக்கு மாபெரும் உளவு சேவைகளின் உதவி தேவைப்படும். இந்தத் திருட்டுக் கூட்டம் கண்டு பிடித்த அற்புதமான தொடர்தான்" ஊடகம் ஒன்று வெளியிட்டது", அல்லது" கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்தது" என்பதும் இது போன்ற பல தொடர்களும்.

நமது படைப்புகள் மீது நமக்கு இருக்கும் உரிமைக்கு (© Right) எங்கள் தமிழ்ச் சூழலில் அர்த்தமே இல்லை. இது மீறப்படுவது பற்றி வழக்குத் தொடரவும் வாய்ப்பில்லை. ஊடகத்துறை, எழுத்துத்துறை இரண்டினதும் முதுகெலும்பாக இருக்கும் இந்த அடிப்படைச் சுதந்திரமான எழுத்துக் காப்புரிமை என்பதே கானல் நீராக இருக்கிறபோது அறிவின் ஆழம், சிந்தனைத் தெளிவு, பண்பாட்டின் விகாசிப்பு போன்றவற்றைப் பற்றி நாம் பேச முடியாது.

இரண்டாவது நோய்க்கூறு: உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுத்தும் வகையிலமைந்த மலிவான, மலினமான ஊடகவியல். இத்தகைய ஊடகவியலில் மிகைப்படுத்தலும் பொய்மையும் அதீதமான வர்ணிப்பும் அறப் பொறுப்புணர்வின்மையும் பெரிதாக வெளிப்படும். இரண்டு எடுத்துக்காட்டுக்களைப் பார்க்கலாம். நேபாளத்தில் புவியதிர்ச்சி ஏற்பட்ட பிற்பாடு அங்கு படையெடுத்துச் சென்ற இந்தியத் தொலைக்காட்சிகளும் இலத்திரனியல் ஊடகங்களும் நடந்து கொண்ட முறைமை முதலாவது. புவியதிர்ச்சி ஏற்பட்ட உடனேயே இந்திய இராணுவம் உடனடியாக மீட்பு உதவிகளுக்காக அங்கு விரைந்தது. பல இடங்களுக்கு மீட்புக் குழுக்கள் செல்ல முன்பாகவே சில ஊடகங்கள் சென்றுவிட்டன. அங்கு காயப்பட்டவர்களையும் இறந்து கொண்டிருப்பவர்களையும் தமது உறவினர்களையும் சுற்றத்தையும் இழந்து கதறிக்கொண்டிருக்கும் மக்களையும் கவனிக்காமல் புவியதிர்ச்சியில் ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பற்றி மட்டுமே திருப்பி திருப்பி வர்ணித்துக் கொண்டிருந்தன இந்த ஊடகங்கள். மிக முக்கியமான ஓர் இந்தியத் தொலைக்காட்சி, தன்னுடைய கைக்குழந்தையை இழந்து அலறிக் கொண்டிருக்கும் ஒரு தாயிடம் சென்று, 'நீங்கள் இப்போது எப்படி உணர்கிறீர்கள்? எங்களுடைய நேயர்களுக்காகச் சில வார்த்தைகள் பேச முடியுமா?' என்று கேட்டது. அழிவும், அவலமும் மானுடத் துயரமும் கேளிக்கைப் பொருளாக சந்தைப்படுத்தப்படுகிற ஊடகத்துறையை நாம் காண்கின்றோம். இதனுடைய விளைவு தான் Indian Media Go Home! என்ற நேபாள மக்களின் பிரச்சாரம். அவலம் கண்முன்னே நிகழ்கின்றபோது ஒரு ஊடகத்தின் கடமை என்ன? மானுடத்தின் ஆத்துமத்தைப் பேணுவதா? அல்லது மற்றைய எல்லா ஊடகங்களையும் முந்திக் கொண்டு 'படங் காட்டுவது' முக்கியமா என்ற அறக் கேள்விக்கு இடமே இல்லை. இயலுமானவரை மனித உயிர்களைக் காப்பாற்றுவதே உடனடியாகச் செய்யப்படவேண்டியது. அதற்குப் பிற்பாடுதான் ஊடகமும் செய்தியும்.

இரண்டாவது எடுத்துக்காட்டு, போதைப்பொருள் கடத்த முயன்றார் என்ற குற்றத்தின் பேரில் இந்தோனிஷிய அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட

அவுஸ்திரேலியாத் தமிழரான மயூரன் சுகுமாரன் பற்றிய நமது ஊடகச் சித்திரிப்புகள். பத்து ஆண்டுகள் சிறையில் இருந்த போது மனம் திருந்தி ஓர் அற்புதமான ஓவியக் கலைஞனாக மயூரன் சுகுமாரன மாற்றம் பெற்றிருந்தார். அவருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை நீக்குவதற்காக அவுஸ்திரேலியா அரசு, ஐ.நா. சபை, அம்னெஸ்டி அமைப்புப் போன்ற நூற்றுக்கணக்கான அமைப்புகளும் நிறுவனங்களும் இறுதிக் கணம் வரை தீவிரமாக முயன்றன. எனினும் எதற்கும் இணங்கி வராத இந்தோனேஷிய அரசு, மரண தண்டனையை நிறைவேற்றியது. இவை பற்றிய விவரங்களை அவுஸ்திரேலிய, இந்தோனிஷிய ஆங்கிலப் பத்திரிகைகளும் மான்செஸ்டர் கார்டியன் நாளிதழும் உடனுக்குடன் வெளியிட்டு வந்தன. இந்த விவரங்களைச் 'சுட்டு'த் தமிழில் வெளியிட்டு வந்த இணைய தளங்கள் பலவற்றுள் ஒன்று, மயூரன் சுகுமாரன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பும் அவருடைய உடல் துடித்துக் கொண்டிருந்ததாக நேரில் நின்று பார்த்தது போலச் செய்தியும், 'ஆய்வும்' வெளியிட்டிருந்தது. தண்டனை நிறைவேற்றுபவர்களையும் குற்றவாளிகளையும் பாதிரியார் ஒருவரையும் தவிர வேறொருவரும் அனுமதிக்கப்படாத அந்தக் கொலைக்களத்தில் நமது தமிழ் இணையத்தளச் செய்தியாளரும், 'ஆய்வாளரும்' ஆவி போல நுழைந்திருக்கிறார்கள்.

இத்தயை எடுத்துக்காட்டுக்கள் எமது ஊடகச்சூழலில் அளவு கணக்கற்றுப் பெருகிப் போய் உள்ளன. அவலத்தையும் மரணத்தையும் வியாபாரமாக்கும் 'கல்லறை ஊடகவியல்' தான் தமிழில் இன்று கொடி கட்டிப் பறக்கிறது என்று முறையீடு செய்யத் தோன்றுகிறது. இந்தச் சூழ்நிலையில் மக்களுடைய நலன் பேணுகிற, பொது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளையும் அவர்களது போராட்டங்களையும் மையப்படுத்தி எழுகிற ஊடகவியலுக்கு எத்தகைய மதிப்பு இருக்கப் போகிறது?

இந்தச் சூழலுக்கு மாற்றாக, சிறு சிறு முயற்சிகளையாவது ஒருவரும் முன்னெடுக்கவில்லையா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. இருபத்தைந்து ஆண்டு கால வரலாற்றில் இத்தகையதொரு முயற்சியில் நல்ல அர்ப்பணிப்புணர்வோடு செய்யப்பட்டு வருகிற ஒரு இதழ் விளம்பரம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆங்கில ஊடகச் சூழலில் மிகுந்த சிறப்புடைய பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று The Real News Network (TRRN) என்று அழைக்கப்படும் இலவசமான தொலைக்காட்சிச் சேவையாகும் (https://www.youtube.com/user/TheRealNews). கனேடியரான போல் ஜே

(Paul Jay) என்பவரால் நிறுவப்பட்ட இந்த ஊடக அமைப்பு ஒவ்வொரு நாளும், மாற்றுச் செய்திகளையும் விமர்சனங்களையும் பெரு நிதி நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்பட்டு வெளியாகும் ஊடகங்களில் வெளிவராத தகவல்களையும் தருகிறது. விளம்பரங்கள் எதுவுமே இந்தத் தொலைக்காட்சிச் சேவையில் இடம்பெறுவதில்லை. எத்தகைய அரசுகளிடமும் நிதி நிறுவனங்களிடமும் பணம் பெற்றுக்கொள்வதில்லை. வாசகர்கள், சந்தாதாரர்கள் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கும் சிறு சிறு நன்கொடைகள் மூலமே இந்தத் தொலைக்காட்சி, இணைய வழியாக எல்லோருக்கும் கிடைக்கிறது. இதனைப் போலவே வேறும் பல மாற்று ஊடகங்கள் உள்ளன.

அவை நமக்கு வழங்குகிற சிறப்பான பாடம் ஒன்றே ஒன்றுதான்: இருட்டைப் பழித்துக் கொண்டிருப்பதை விட ஒரு சிறு அகல் விளக்கையாவது ஏற்றுவது மேலான செயல் அல்லவா?



உ. சேரன்

மகாகவியின் மகனும் தற்போதுள்ள புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர்களிலும் ஒருவர். வின்ட்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல், மனிதவர்க்கவியல், குற்றவியல் பிரிவில் ஓர் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவரது வெளியீடுகளில் History & Imagination: Tamil Culture in the in the Global Context (2007), New Demarcation: Essays in Tamil Studies(2009) மற்றும் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட கவிதைத் தொகுப்பு 'You Cannot Turn Away' (2011) என்பன உள்ளடங்குகின்றன.

முத்தமிழ் மகளே வாழியவே !

- வி. கந்தவனம்

வெள்ளி விழாவினைக் கொண்டாடும்
விளம்பர இதழே வாழியவே!
முள்ளில் லாதநல் ரோசாவே
முத்தமிழ் மகளே வாழியவே!

முழுமதி மாதத்தில் ஒன்றெனினும்
முகிழ்ந்திடு வாய்நீ இரண்டாக
எழுகின்ற கனடிய இதழ்களிலே
இணையற்ற மூத்தவள் நீயன்றே!

எழுத்துப் பிழைகள் ஏதுமில்லா
இன்பத் தமிழை வளர்ப்பவளே
வழுத்தி உன்னோ டுறவாடும்
வாசகர் போற்ற வாழியவே!

குத்தல் கிண்டல் எதுவுமில்லாக்
குணத்தால் ஒற்றுமை வளர்த்துவரும்
உத்தியும் நன்றே பத்திரிகை
உலகுக்கு நீயோர் உதாரணமே!

விளம்பரம் வேண்டா வித்தகியே
விருந்துகள் வைக்கும் புத்தமுதே
வளமுடன் நம்மினம் வாழ்வதற்கு
வழிவகை சொல்லும் உத்தமியே!

கண்டவர் மயங்கும் காரிகையே
கருதரும் பொன்மணி பவளமெல்லாம்
கண்டருஞ் சாதனை நீபடைத்து
காலத்தை வென்றே வாழியவே!

நீடுழியென வாழ்த்திடுவோம் விளம்பரமே !

- க. கந்தசாமி

நவீனவுலகம் குவலயமாச்சு அச்சு
ஊடகம் பெருகலாச்சு கனடாவில்
ஊடக சுதந்திரம் காக்கும் மூத்த
தமிழ் இதழாச்சு விளம்பரம் ஏடு
நடுவு நிலை தவறாது நன்நெறி காட்டி
பண்பான எம் சமுதாயத்தை பார்போற்ற
உருவாக்கும் வழிகாட்டி நீயே! நீயே!
நீடுழியென வாழ்த்திடுவோம் வாழி!

பகலிரவாய் நாற்றிசையும் தேனிபோல்
செய்தி சேர்த்து மாதமிருமுறை இனிமையாய்
இலவசமாய் எம் மண்வாசனை பரப்பிடுவாய்
உறைபனியும் பாராது உழைக்கின்றாய்
விளம்பரம் நீ எழுத்தாளரின் சங்கப் பலகை
தமிழகச் செய்திகள் அரசியல் ஆன்மீகம்
மருத்துவம் கவிதை விமர்சனம் கலகலப்பே
ஒவ்வொரு துளியிலும் செய்தி

ஒளிமயமான கனடாவின் வளர்ச்சிக்கு
உறங்காத நயகரா நீர்வீழ்ச்சி நீ
சுதந்திர பசிதீர்த்து விருதுகள் பல கண்டு
வெள்ளி விழா வைரம் மணிபவளம் என
பல சாகாப்தம் தித்தித்கும் தேன் தமிழை
வளர்த்திட வாயார வாழ்த்திடுவோம்
அகிலம் தோறும் விளம்பரம் இணையத்திலும்
இல்லத்திலும் உள்ளத்திலும் நிலைத்திடும்.



கந்தசாமி கனகராசா

இலங்கை போக்குவரத்து சபையில் 37 வருடங்களில் விசாரணை அதிகாரி, ஆளணி முகாமையாளராக கடமையாற்றியவர். இவர் மாவை, தோப்பு, ஈழநல்லூர் புனை பெயர்களில் எழுதியுள்ளார். விளம்பரம் வாசகரான இவர் விளம்பரத்திற்கும் ஆக்கங்கள் எழுதிவருகிறார்.

அகவை இருபத்தைந்து !

- கவிநாதம் பரந்தாமன்

உள்ளூர் வெளியூர் உலகச் செய்திகளோடு மாதம் இருமுறை
கனடாவாழ் தமிழ் வாசகர் கரங்களில் ஒரு தமிழ் ஏடாய்
இலவசமாய் வெளிவந்து தவழும் விளம்பரமே
நீ நீடுழி வாழ்க வளர்கவென வாழ்த்துகிறோம்

சிறுகதை தொடர்கதை கவிதைகளோடும் ஆய்வு செய்த பற்பல
ஆக்கங்களையும் திறம்பட எடுத்து எழுதிவந்த
வாசகர் மனம் கவரும் விளம்பரம் நீ நீடுழி
வாழ்க வளர்கவென வாழ்த்துகிறோம்

இளைய தலைமுறை தமிழர்களுக்கு அறிவைவளர்த்திட அவர்தம்
ஆக்கங்களை எழுதி எடுத்துவர ஏற்றதோர் பக்கம் உதவி
அவர்பால் அன்னைத்தமிழ் வளர்த்திட நீ
ஆற்றும்பணிதனை போற்றுகிறோம்

மாணவ மாணவிகள் மனதில் பதிய வைத்திட எண்கணிதம்
விஞ்ஞானம் பௌதீகம் தாவரவியல் காலத்தோடு
வளர்ந்துவரும் கணினிபற்றிய அறிவையும்
ஊட்டிட உதவிடும் விளம்பரமே உன்
பணிதனை போற்றுகிறோம்

நாமும் நமது இல்லமும் என்ற தலைப்பில் தகவல்களை
எடுத்துவந்து நம்மவர் நல்ல மனை வாங்கிடவும்
அடமானக்கடன் பெறும் வழிமுறை அறியவும்
உறுதுணைபுரியும் விளம்பரமே நின்பணி
வாழ்க வளர்கவென வாழ்த்துகிறோம்

இளையோர் முதியோர் யுவதிகள் யாவரும் இன்புற வாழ்ந்திட
நோய்தீர்க்கும் மருத்துவம் யோகாசனம் ஆன்மீகம்
சிரிக்கவும் சிந்திக்கவும் ராசம்மா ராச்சியம்
விளையாட்டு சினிமா போன்ற தகவல்களோடு
வெளிவரும் விளம்பரமே நீ வாழ்க

ஊடகச்சுதந்திரம் உனக்கு இங்குண்டு அகவை இருபத்தைந்து
ஆகிறது இதை அனைவரும் அறிந்திடுவர் இன்று
இன்னும் பல்லாண்டு சேவை ஆற்றிட வேண்டி
விளம்பரமே உன்னை வாழ்க வளர்கஎன
வாசகர்களாகிய நாம் வாழ்த்துகிறோம்
விற்பனை பெருகிட விளம்பரம் செய்திடு
வித்தகராகிட விளம்பரம் படி.



சதாசிவம் பரந்தாமன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் CTBC, கீதவாணி ஆகிய வானொலிகளில் கவிதைகள் படித்துள்ளார். ரொறொன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதிவருகிறார். இவரது கவிதைகள் 2011, 2014ஆம் ஆண்டில் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.


Monday
10
doo
Ps
AI
ID
Fe
Aa



இயந்திர இணையம்

- கார்த்திகேசு விஜயசுகந்தன்

உலகின் எல்லைக் கோடுகள், சிறு நண்டு கரைமீது வரைந்த கோடுகளாய் இணையக் கடலலையில் கரைந்து கொண்டிருக்கின்றன. இணையம் மனிதத்திற்கு எல்லைகளற்ற, புதியதோர் உலகத்தை உருவாக்கித் தந்துள்ளது. இனம், மதம், சாதி, நாடு, ஆண், பெண், நிறம், மொழி என மனிதத்தை வகைப்படுத்தும் எல்லா பிரிவினைகளையும் தாண்டிய ஒரு சர்வமயத்தை இணையம் மனிதத்திற்காக உருவாக்கியுள்ளது. இன்று குடும்பங்கள் பல நாடுகளில், பல நகரங்களில் பிரிந்து வாழ்கின்றன. வ.ஐ.ச ஜெயபாலன் ஒரு கவிதையில் "என்ன நம் குடும்பங்கள் காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா?" என்று ஆதங்கப்பட்டார். அது அன்று. இன்று, குடும்ப அங்கத்தவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும், இணைய உலகில் அவர்கள் ஒன்றாகவே இருக்கிறார்கள். சில நேரங்களில், ஒரே நாட்டில், ஒரே வீட்டில் இருப்பதை விட, இணைய உலகில் குடும்பங்கள் நெருக்கமாக இருப்பதை நிஜத்தில் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையில் இருக்கும் சகோதரியுடனும், இலண்டனில் இருக்கும் பேரக்குழந்தைகளுடனும், அவுஸ்திரேலியாவில் இருக்கும் பெறாமகளுடனும் தினமும் Skype இலும் Facebook இலும் Viber இலும் கூடிக் குலாவும் அம்மம்மாக்களைக் கேட்டுப்பாருங்கள் உண்மை விளங்கும்.

இணையம் மனிதத்தை ஒருமைப்படுத்தியுள்ளது என்றால் அது மிகை ஆகாது. இன்று நாம் எமது கணினியூடாகவோ, சூட்டிகைப்பேசியூடாகவோ (Smart Phone) அல்லது கணிப்பலகையூடாகவோ (Tablet) இணையத்தோடு எம்மை இணைத்துக் கொள்கிறோம். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நாம் எம்மை இணையத்தோடு இணைத்துக் கொள்ளக்கூடிய வசதி எமக்கு இருக்கின்றது. இணையம் எமது அன்றாட வாழ்வில் பின்னிப்பிணைந்து எம்மோடும் எமது வாழ்கையோடும் இன்று ஐக்கியமாகிவிட்டது.

சூட்டிகை கோப்பி இயந்திரம்



சூட்டிகைக் கோப்பி இயந்திரங்கள் நீங்கள் நித்திரையால் எழுந்து நடமாடும்போது, உங்கள் நடமாட்டத்தை உணர்ந்து உங்கள் கோப்பியை தயாராக்கும். இக் கோப்பி இயந்திரத்துக்கு உங்கள் சூட்டிகைப் பேசியினூடாகவும் நீங்கள் கட்டளைகள் போடலாம். சிமாட்டர், மிஸ்ரர் கோப்பி போன்ற நிறுவனங்கள் சூட்டிகை கோப்பி இயந்திரத்தை தயாரிக்கின்றன. சிமாட்டர் நிறுவனம், சூட்டிகை கேத்தில் ஒன்றையும் தயாரித்துள்ளது.

http://smarter.am

இந்த இணையத்தோடு, எம்மைச் சுற்றியுள்ள, எமது அன்றாட வாழ்வில் நாம் உபயோகிக்கும் இயந்திரங்களும், கருவிகளும் தங்களை இணைத்துக்கொண்டு, உலகில் உள்ள மற்ற இயந்திரங்களுடனும், கருவிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி, எமக்காக, தாங்களாகவே சிந்தித்து முடிவுகளை எடுத்தால் எப்படி இருக்கும்?

இது தான் இயந்திர இணையம் (Internet of Things - IoT)

சூட்டிகை கார்கள் (Smart Cars)



இன்று தயாரிக்கப்படும் அனேகமான கார்கள் இணையத்தோடு தங்களைப் பிணைத்து எமக்குத் தேவையான எல்லாத் தகவல்களை பெற்றுத்தரக்கூடிய திறன் வாய்ந்தவை. அனேகமான கார்கள் தாமாகவே நாம் போகும் வழியை நிர்ணயிக்கும் திறன் வாய்ந்தவை. இன்று பல நிறுவனங்கள் தாமாகவே (சாரதி இன்றி) ஓடக்கூடிய அதி திறன் வாய்ந்த சூட்டிகைக் கார்களை உருவாக்குவதில் மிகவும் அக்கறை காட்டிவருகின்றன. அவற்றில் கூகிள் (Google Self-Driving Car) நிறுவனத்தின் தானியங்கு கார் மிகவும் பிரபலமான ஒன்றாகும்.

இது நான் கற்பனை செய்து எழுதிய விஞ்ஞான கற்பனைக் கதையோ அல்லது, அப்பா சவுதியால வந்து போனபின்பு, வீட்டுக்குள்ள பாம்பு வந்த கதையோ அல்ல! இன்று பாவனையில் இருக்கும் தொழில்நுட்பங்களை வைத்து எழுதிய அன்றாட பாவனை உதாரணமே இது. இந்த உதாரணத்தில் உள்ள அத்தனை தொழில் நுட்பங்களும் இன்று பாவனையில் உள்ள தொழில்நுட்பங்களே.

சூட்டிகை வெப்பநிலைப்பி (Smart Thermostat)



சூட்டிகை வெப்பநிலைப்பிகள் இணையத்தோடு தம்மை பிணைத்து, நீங்கள் வீட்டை விட்டு போனதும் தாமாகவே வீட்டின் வெப்பநிலையை மாற்றக் கூடியன. இவ் வெப்ப நிலைப்பிகளை உங்கள் சூட்டிகைப்பேசிகளினூடாவும் கட்டுப்படுத்தலாம். கூகுள் நிறுவனத்தின் நெஸ்ற் (Google NEST) வெப்பநிலைப்பி ஒரு சிறந்த உதாரணமாகும்.

எம்மைச் சுற்றியுள்ள இயந்திரங்களும், கருவிகளும் இணையத்–தோடு தம்மை இணைத்து, மற்ற இயந்திரங்களோடும், கருவிகளோடும் இணையத்தினூடு தொடர்பு–களை ஏற்படுத்தி, கலந்தாலோசித்து, எமது வாழ்க்கையை இலகுவாக்கவும், சுமுகமாக்கவும், எமக்காக சிந்தித்து இயங்குவதே இயந்திர இணையம் ஆகும்.

இயந்திர இணையம் சிறிது சிறிதாக எமது அன்றாட வாழ்வை முற்றாக மாற்றப்போகின்றது. எம்மைச் சுற்றியுள்ள அனைத்து

சூட்டிகை கதவுப்பூட்டு (Smart Door Lock)

சூட்டிகை கதவுப்பூட்டுகள் நீங்கள் வீட்டை விட்டு வெளியே போய் விட்டதை உணர்ந்து தாமாகவே வீட்டுக் கதவை பூட்டிவிடுகின்றன. நீங்கள் வீட்டுக்கு வரும்போது, நீங்கள் வருவதை உணர்ந்து, தாமாகவே வீட்டை திறந்தும் விடுகின்றன. நீங்கள் வேலையில் இருந்து வீடு வந்து சேரமுன் உங்கள் நண்பன் அல்லது நண்பி உங்களைச் சந்திக்க வீட்டிற்கு வந்து விட்டால் என்ன செய்வது? உங்கள் சூட்டிகைப்பேசியினூடு அவர்களின் சூட்டிகைப்பேசிக்கு உங்கள் வீட்டைத் திறக்கும் அனுமதியை அனுப்பி–னால் போதும். அவர்கள் உங்கள் வீட்டுக் கதவுக்கு அருகில் போனதுமே, உங்கள் சூட்டிகை கதவுப்பூட்டு அவர்கள் சூட்டிகைப் பேசியில் உங்கள் அனுமதி இருப்பதை உணர்ந்து அவர்களுக்காக கதவை திறந்து விடும். அவர்கள் வந்துவிட்டார்கள் என்று உங்களுக்கும் ஒரு செய்தியை அனுப்பி வைக்கும். இன்று பலவிதமான சூட்டிகை கதவுப்பூட்டுகள் சந்தையில் இருக்கின்றன. மேலே உள்ள படத்தில் இருப்பது ஓகஸ்ட் நிறுவனத்தின் கதவுப்பூட்டு (http://august.com).



இயந்திரங்களும், கருவிகளும் இணையத்தோடு தம்மை இணைத்து, தமக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி, தகவல்களை பரிமாறி, கலந்தாலோசித்து, எமக்காக பல முடிவுகளை தாங்களாகவே எடுத்து எமது வாழ்வு முறையை முற்றாக மாற்றப்போகின்றன.

இணையம் உலகில் உள்ள 3 பில்லியன் மக்களை மட்டுமே பிணைத்துள்ளது. மிக விரைவில் உலகின் மற்ற 4 பில்லியன் மனிதர்–களையும் இணையம் பிணைத்துவிடும் (http://www.internetworldstats.com /stats.htm). ஆனால், இன்னும் 5 வருடங்களுக்குள் இணையம் 50 பில்லியன் இயந்திரங்களையும், கருவிகளையும் பிணைக்கப் போகின்றது. மனிதர்களை விட ஐந்து மடங்கிற்கும் மேலான இயந்திரங்களும், கருவிகளும் இணையத்தில் பிணைக்கப்படப் போகின்றன. எதிர்காலத்தில் இணையத்தை மனிதர்களை விட, இயந்திரங்களே அதிகமாக உபயோகிக்கப் போகின்றன.

இயத்திர இணையத்தோடு எம்மைச் சுற்றியுள்ள இயந்திரங்களும், கருவிகளும் பிணைக்கப்படும் போது, எமது உலகம் ஒரு சூட்டிகை உலகமாக (Smart World) உருமாறும். உதாரணமாக, எமது வீடு சூட்டிகை வீடாகவும் (Smart Home), எமது நகரம் சூட்டிகை நகரமாகவும் (Smart City), எமது அலுவலகம் சூட்டிகை அலுவலகமாகவும் (Smart Office) உருமாறும். இன்று சிறிது சிறிதாக எம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றும் உருமாறிக் கொண்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். இன்னும் 5 வருடங்களுக்–குள் எமது உலகம் (2020ஆம் ஆண்டுக்கு முன்னதாக) முற்றாக ஒரு சூட்டிகை உலகமாக மாறிவிடும்.

இன்று சாதாரணமாக நாம் ஒவ்வொருவரும் ஒன்றுக்கும் மேற்பட்ட இணையத்தோடு பிணைத்துள்ள இயந்திரங்களையும், கருவிகளையும் உபயோகிக்கின்றோம். உதாரணமாக, சூட்டிகைப்பேசி (Smart Phone), கணினி (Computer), கணிப்பலகை (Tablet) போன்றவை அனேகமாக எல்லோரிடமும் சாதாரணமாக இருப்பதை அவதானிக்கலாம். இன்னும் 5 வருடங்களுக்குள் உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சராசரியாக ஆறு இணையத்தோடு பிணைந்துள்ள கருவிகளை உபயோகிக்கப்போகின்றனர் (50 பில்லியன் கருவிகள், 8.4 பில்லியன் மனிதர்கள் – 2020இல்). உங்களைச் சுற்றியிருக்கும் எல்லா இயந்திரங்களும், கருவிகளும் இயந்திர இணையத்தோடு பிணைக்கப்பட்டவையாகவே இருக்கப் போகின்றன.

இருபத்தியாறு இயந்திர இணையக் கருவிகளா? எங்களைச் சுற்றியா?

சும்மா குறிப்பு சொல்லிக் கதையளக்கிறேன் என்றுதானே நினைக்கிறீர்கள்! ஏன் 2020ஆம் ஆண்டுக்குப் போவான். இன்று எம்மைச் சுற்றி இருக்கக் கூடிய இயந்திர இணையத்தோடு பிணைந்து செயல்படும் இயந்திரங்களையும் கருவிகளையும் பற்றிப் பார்ப்போமா?

மேற்சொன்ன கணினி, சூட்டிகைப்பேசி போன்றவற்றைத் தவிர, இன்று எமது தலையில் இருந்து கால் வரை அணியக்கூடிய இணையக் கருவிகள் பலவற்றை நாம் பாவனையில் காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றில் சிலவற்றை உதாரணங்களாக இங்கு பார்ப்போம்.

சூட்டிகைத் தலைக்கவசம் (Smart Helmet)



LifeBEAM நிறுவனத்தின் சூட்டிகைத் தலைக்கவசம், நீங்கள் துவிச்சக்கரவண்டி ஓடும்போது உங்கள் இதயத்துடிப்பிலிருந்து உங்களுக்குத் தேவையான அத்தனை விபரங்களையும் அவதானித்து உங்கள் சூட்டிகைப்பேசியினூடு இணைத்தோடு பிணைத்து எல்லா விபரங்களையும் உங்களுக்காக சேகரித்து வைத்துக்கொள்ளும்.

சூட்டிகைத் தொப்பி (Smart Hat)



LifeBEAM நிறுவனத்தின் சூட்டிகைத் தொப்பி சூட்டிகைத் தலைக்கவசம் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்யும் திறன்வாய்ந்தது. இத் தொப்பியை நாம் சாதாரண தொப்பி அணிவது போன்று எல்லா இடங்களுக்கும் அணிந்து செல்லலாம். லம்டா என்னும் நிறுவனம் வீடியோ கமரா பொருத்திய ஒரு தொப்பியைத் தயாரித்துள்ளது (https://lambdal.com/hat). லம்டா சூட்டிகைத் தொப்பி, உங்களுக்கு முன் வருபவர்களின் முகத்தையும் உருவத்தையும் வைத்து அவர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பற்றிய விடயங்களை இணையத்தினூடு அறித்து உங்களுக்கு அறியத்தரக்கூடிய திறன் வாய்ந்தது. எத்தனை தடவைகள் நாங்கள் முன்னரே தெரிந்தவர்களை தெருவீதிகளில் சந்தித்து, அவர்களின் பெயர்கள் நினைவுக்கு வராமல் சிரித்துச் சமாளித்திருக்கிறோம்! லம்டா சூட்டிகைத் தொப்பி மட்டும் இருந்திருந்தால், அவர்களுடைய பெயர்கள்

மட்டுமல்ல, அவர்களுடைய சரித்திரத்தையே சொல்லி அவர்களை அசத்தியிருப்போம்!

சூட்டிகை கண்ணாடி (Smart Glass)



சூட்டிகைக் கண்ணாடிகள் ஒரு கணினியை உங்கள் கண்ணுக்கு முன்னாலேயே கொண்டுவந்தது விடுகின்றன. இந்த சூட்டிகைக் கண்ணாடிகளினூடாக நீங்கள் உங்கள் கண் இமைகளை இமைப்பதன் மூலமாகவும், வாயினால் கட்டளைகளிடுவதின் மூலமாகவும் கண்ணாடியில் இருக்கும் கணினியை இயக்கிக் கொள்ளலாம். உங்கள் சூட்டிகைப்பேசிகள் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் இச் சூட்டிகைக் கண்ணாடிகளினூடாக நீங்கள் செய்து கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான விடயங்களை உங்கள் கண்ணுக்கு முன் உடனடியாகத் தருவது மட்டுமின்றி, வீடியோ எடுத்தல், படம் எடுத்தல் என்று எல்லா வித வேலைகளையும் இந்த சூட்டிகைக் கண்ணாடிகள் செய்யக் கூடியவை. சூட்டிகைக் கண்ணாடிகள் எமக்கு முன்னால் இருப்பவர்களைப் பற்றி மட்டுமின்றி, எமது கண்ணுக்குத் தெரியும் இடங்களைப் பற்றிய அனைத்து விடயங்களையுமே இணையத்தினூடாக அறிந்து எமக்கு அறியத்தரக்கூடிய திறன் வாய்ந்தவை. கூகுள் (Google) உட்பட பல நிறுவனங்கள் இன்று சூட்டிகைக் கண்ணாடி தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

சூட்டிகைப்பட்டை (Smart Armband)



உங்கள் கைகளை மந்திரவாதிகள்போல் அசைக்க, கணினிகளும், இயந்திரங்களும் மந்திரத்திற்கு கட்டுப்பட்டவைபோல் உங்கள் சைகைகளுக்கு இணைய இயங்கினால் எப்படி இருக்கும்? கனடாவின் வோட்டலூ நகரித்தில் இருக்கும் தல்மிக் (Thalmic Labs) என்ற நிறுவனம், எமது கை அசைவுகளையும், சைகைகளையும் (Gesture Control) கொண்டு கணினிகளை இயக்கும் சூட்டிகைப்பட்டை ஒன்றை உருவாகியுள்ளது. இந்த சூட்டிகைப்பட்டைகள் எம்மை உண்மையாகவே மந்திரவாதிகளாக்கப் போகின்றன.

சூட்டிகைக் கடிகாரம் (Smart Watch)



இன்றைய தொழில்நுட்பச் சந்தையில் சூட்டிகைக் கடிகாரங்கள் மிகவும் பிரபலமாகி வருவதை நீங்கள் அவதானிக்கலாம். உதாரணமாக அப்பிள் வோச் (Apple Watch), சாம்சங் கியர் (Samsung Gear) போன்ற சூட்டிகைக் கடிகாரங்களை பார்க்கலாம். இன்றைய சூட்டிகைக் கடிகாரங்கள் மிகவும் திறன்வாய்ந்த மணிக்கட்டுக் கணினிகளாகும். இவை கணினிகள் செய்யும் வேலைகளையும், சூட்டிகைபேசிகள் செய்யும் வேலைகளையும் இலகுவாக உங்கள் மணிக்கட்டில் இருந்தே செய்யக்கூடிய திறன் வாய்ந்தவை. இன்றைய சூட்டிகைக் கடிகாரங்களுக்குள் பலவிதமான கணினிமயப் படுத்தப்பட்ட உணர்வுக் கருவிகள் (Sensors) பொருத்தப்பட்டிருக்கின்றன. எமது இதயத் துடிப்பு, சக்தி விரயம், எத்தனை அடிகள் நடக்கின்றோம், எத்தனை படிகள் ஏறுகின்றோம், எங்கெல்லாம் போகின்றோம், எப்படி நித்திரை கொள்கிறோம் என்று எம்மைப்பற்றி அத்தனை விபரங்களையும் அவதானித்து, சேகரித்து, பகுப்பாய்ந்து, தேவையான தகவல்களை எமக்குத் தரவல்லன. இப்போது பலருடைய மணிக்கட்டுகளை சூட்டிகைக் கடிகாரங்கள் அலங்கரிப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். சூட்டிகைப் பேசிகள் போன்று, சூட்டிகைக் கடிகாரங்களும் எல்லோரிடமும் சாதாரணமாக இருக்கும் ஒரு அத்தியாவசிய கருவியாக இன்று மாறிவருகின்றன.

சூட்டிகை உடற்பயிற்சிப் பட்டைகள் (Smart Fitness Bnads)



சூட்டிகை உடற்பயிற்சிப் பட்டைகளும் இன்று மிகவும் பிரபலமாக எல்லோராலும் உபயோகிக்கப்படும் கருவிகளாகும். இப் பட்டைகள் உங்கள் உடற்பயிற்சி தொடர்பான எல்லாவித விபரங்களையும் உணர்ந்து, அவதானித்து, சேகரித்து, பகுப்பாய்ந்து உங்களுக்குத் தருகின்றன. பிற்பிட் (Fitbit), நைக்கி (Nike), சொனி (Sony), சாம்சங் (Samsung) என்று பல நிறுவனங்கள் இன்று சூட்டிகை உடற்பயிற்சிப் பட்டைகளை தாயாரித்து வருகின்றன. இவை சூட்டிகைக் கடிகாரங்களை விட விலைகுறைந்த ஆனால் மிகவும் உபயோகமான கருவிகளாதலால், இவற்றை இன்று அதிகமானவர்கள் தமது அன்றாட வாழ்வில் உபயோகித்து வருகின்றனர்.

சூட்டிகைச் சப்பாத்துக்கள் (Smart Shoes)



இன்று சப்பாத்துகள் கூட தம்மை இணையத்தோடு பிணைத்துக் கொள்கின்றன. சூட்டிகைச் சப்பாத்துக்களுள் பல உணர்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இச் சப்பாத்துக்கள் சூட்டிகைப்பேசிகளினூடாக தம்மை இணையத்தோடு பிணைத்து, எமது நடையைப் பற்றியும், ஓட்டத்தைப் பற்றியும் எல்லாவிதமான விபரங்களையும் எமக்கு சேகரித்துத் தரும் திறன்வாய்ந்தவை. நைக்கி (Nike) நிறுவனத்தின் Nike+ சப்பாத்துக்களை சூட்டிகைச் சப்பாத்துக்களுக்கு உதாரணமாக கூறலாம்.

இங்கு நாம் பார்த்தவை சில உதாரணங்கள் மட்டுமே. இவற்றை விட இன்று பாவனையில் இன்னும் பல இணையத்தோடு பிணைந்து இயங்கும் கருவிகள் பலவற்றை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும். நீங்கள் அணிந்திருக்கும் கருவிகளும், உங்களைச் சுற்றியுள்ள இயந்திரங்களும் கருவிகளும், உங்கள் வீட்டில் இருக்கும் கருவிகளும், உங்கள் அலுவலகத்தில் இருக்கும் கருவிகளும், காரும், நகரத்தில் இருக்கும் அத்தனை இயந்திரங்களும் கருவிகளும் ஒன்றாக இணையத்தினூடு பிணைந்து, தகவல்களைப் பரிமாறி, பகுத்தாய்ந்து எமக்காக தாங்களே சிந்தித்து முடிவெடுக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இந்த இயந்திர இணையம், எமது வாழ்வை சுமுகமாக்கப் போகின்றது என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஆனால், அதி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்தத் தொழில்நுட்பத்தில் சில பாதுகாப்பு (Security) தொடர்பான மற்றும் தனிமனித உரிமை (Personal Rights - Privacy) தொடர்பான சிக்கல்களும் இருக்கின்றன.

இன்று இணையத்தில், இணையக் குற்றங்கள் (Cyber Crime) செய்யும் பல மோசமான குற்றவாளிகள் இருக்கின்றனர். அவர்கள் இணையத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் கணினிகளை வசப்படுத்தி, அவற்றைப் பாவித்து பல இணையக் குற்றங்களைச் செய்து வருகின்றனர். இப்படிப்பட்டவர்கள் இணையத்தோடு பிணைக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களையும், கருவிகளையும் தம்வசப்படுத்தி, மிகவும் பாரதூரமான குற்றங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இணையத்தோடு பிணைக்கும் இயந்திரங்களையும், கருவிகளையும் தயாரிக்கும் நிறுவனங்கள், இந்தக் குற்றவாளிகள் இக் கருவிகளைத் தம் வசப்படுத்த முடியாதவாறு பாதுகாப்பாகத் தயாரிக்க முயற்சித்து வருகிறார்கள்.

இயந்திர இணையத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் கருவிகள் எமது பல அந்தரங்கமான, சொந்த (Privacy / Private Information) விபரங்களை இணையத்தில் சேமித்து வைக்கின்றன. இவ் விபரங்களை இணையக் குற்றவாளிகள் அணுகி, தகவல் திருட்டு (Data Theft) அல்லது அடை–யாளத் திருட்டு (Identity Theft) செய்வதற்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. ஆனால், பாதுகாப்பு, தனிமனித உரிமை, அந்தரங்க விபர தகவல் திருட்டு எல்லாமே தகுந்த கவனமெடுத்து, அதற்கான தற்காப்பு ஏற்பாடுகள் செய்வதன் மூலம் தவிர்க்கப்படக் கூடியனவே.

இயந்திர இணைய உருமாற்றம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. 2020ஆம் ஆண்டுக்கு முன், எமது உலகம் ஒரு சூட்டிகை உலகமாகவும், எமது வாழ்க்கை சூட்டிகை இயந்திரங்களும், சூட்டிகைக் கருவிகளும் கொண்டு நடத்தும் ஒரு புதுவித வாழ்க்கையாகவும் இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இயந்திர இணையம் இயந்திர உலகின் ஓர் ஆரம்பம். இயந்திரங்களும், கருவிகளும் தாமாகவே சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இன்று மனிதனின் மூளைச்சக்திக்கு சமனாக சிந்திக்கக்கூடிய கணினி களை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கணினிகளிடம் இல்லாதிருப்பது, மனிதர்களிடம் இருக்கும் உணர்வுகளும், பகுத்தறிவு–மேயாகும். இந்தக் கணினிகளுக்கு உணர்வுகளையும், பகுத்தறிவையும் கொடுக்கும் ஆராய்ச்சிகள் இன்று பல ஆய்வுகூடங்களில் நடைபெற்று வருகின்றன. இந்தக் கணினிகள் மனிதர்களுக்குச் சமமாகச் சிந்தித்து, மனிதர்கள் போலவே உணர்வுகளோடும், பகுத்தறிவோடும் இருக்கும் போது, மனிதர்களுக்கும், கணினிகளுக்குமான வித்தியாசம் மிகக் குறை–வானதாகவே இருக்கும். அப்போது உலகம் தனியொருநிலையை (Singularity) அடையும். இது வெகுதூரத்தில் இல்லை. உலகின் தனி யொருநிலை பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் அலசுவோம்.
அது வரை....



கார்த்திகேசு விஜயசுகந்தன் MBA, P.Eng.

வாட்டர்லூ மற்றும் வில்பிரட் லோறியே பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான விஜயசுகந்தன் ஓர் இணையத் தொழில்நுட்ப, கணினித்துறை நிபுணர். கனடா–வின் பிரபல தொழில்நுட்ப நிறுவனங்களிலும், ஒன்ராறியோ மாகாண அரசிலும் சிரேஷ்ட பதவிகளை வகித்தவர். அத்துடன் பல கணினித்துறை நிறுவனங்களின் ஸ்தாபகராவும் உள்ளார். விஜயசுகந்தன் கனடாவின் முதற் தொழில்நுட்ப இதழான நுட்பத்தின் பதிப்பாளர் மற்றும் பிரதம ஆசிரியராவார்.

வாழ்த்திடுவோம் விளம்பரத்தை!

- சத்தியகலா

பத்திரிகை பெயர் வருமுன்
விளம்பரமாய் நீ வந்தாய்
தரணியில் தகவல் கொண்டு
விளம்பரமாய் நீ வந்தாய்
இலவசமாக மாதமிருமுறை வலம்
வந்தாய் விளம்பரமே
இன்று 25 ஆண்டில் காலடி
வைத்தாய் விளம்பரமே
குளிர் மழை பனி பாராது சென்று
வந்தாய் விளம்பரமே
கூடிப் பேசிட குதூகலமான செய்திகளைத்
தந்திடுவாயே விளம்பரமே
குற்றம் குறை காணாது
விளம்பரமாய் நீ வந்தாயே
குறைவேதுமின்றி 25 ஆண்டில் காலடி
வைத்தாய் விளம்பரமே
சூரியனைப் போல் பிரகாசித்திடுவாய்
விளம்பரமே என்றென்றும்
சுடர் ஒளியாய் மக்கள் மனதில்
நிலைத்திடுவாய் விளம்பரமே
சுழலும் உலகமதிலும் சுழன்று
வந்திடுவாய் விளம்பரமே
அதனால்
இன்று 25 ஆண்டில் உலாவரும்
விளம்பரமே
வாழியவே வாழியவே என்று
வாழ்த்தி நிற்கின்றோம்!

இன்னும் 30 வருடங்களுக்கு வாழ்வீர்களாயின் நித்திய வாழ்க்கை வாழலாம்!

- தயாநிதி

முன்னுரை

2045 ஆம் ஆண்டுவரை வாழ்வீர்களாயின் நித்திய வாழ்வு வாழலாம் (Live long enough to live forever). நம்ப முடியாததுதான், ஆனால் விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியால் இது நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக அதிகமாக இருக்கின்றன. கட்டுரையினைத் தொடர்ந்து வாசிக்கும் விஞ்ஞான ஆர்வலர்கள் இதனை உணர்ந்து கொள்வார்கள். பல ஆதாரங்களைக் காட்டி இவ்விடயத்தைக் கூறுபவர் கூகிளின் (Google) பொறியியல் பணிப்பாளரில் (director) ஒருவரான றே கேர்ஸ்வில் (Ray Kurzweil) ஆவர். 68 வயதான இவர் 2045 வரை வாழ்ந்து நித்திய வாழ்வை அடைவதற்காகத் தனது தேக, மன ஆரோக்கியத்தை மிகக் கவனமாகப் பேணிப் பாதுகாத்து வருகிறார்.

அவருடைய முக்கிய கருதுகோள், விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சி, நேரியல் (linear) வீதத்தில் இல்லாமல் அடுக்கேற்ற (exponential) வீதத்தில் நடைபெற்றாலும் அதனை நாம் உணராமல் இருப்பதே ஆகும். சற்றே சிந்தியுங்கள். 200 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த எமது மூதாதையரிடம் ஒருவர் இன்னும் 200 வருடங்களில் 1,000 மைல்களுக்கு அப்பால் நடைபெறும் நிகழ்ச்சியை நேரடியாகக் காண்பது போலக் காணலாம் என்று சொல்லி இருந்தால் நம்பியிருப்பார்களா? தம் காலத்திற்கு முந்திய பல்லாயிரம் ஆண்டுகளில் நடைபெறாதது, இன்னும் 200 வருடங்களில் நடைபெறும் என்று கூறினால் அவர்களுக்கு நம்பக் கூடியதாகவா இருந்திருக்கும்? ஸ்கைப்பில் (skype) நேரில் பார்த்துப் பேசுவது, ஆகாயத்தில் பறந்து செல்வது, குதிரைகளுக்குப் பதிலாகச் சொந்த இயந்திரக் குதிரையில் (மோட்டார் காரில்) செல்வது எல்லாம் அவர்களால் நம்பக்கூடியவையாகவா இருந்திருக்கும்?

றே கூறும் விஞ்ஞான வளர்ச்சி மூன்று திசைகளில் நடைபெறும். இம்மூன்றும் ஒன்றை ஒன்று வளர்ப்பதற்கு மிகவும் அவசியமாகும். அவையாவன தானியங்கியியல் (Robotics), மரபுப்பொறியியல் (Genetic engineering), நனோ தொழில்நுட்பம் (Nano technology).

தானியங்கியியல்

முதலில் எமக்குப் பரிச்சயமான தானியங்கியியலுடன் தொடர்பான கணினி அபிவிருத்தி (computer development) பற்றிப் பார்ப்போம். 1946 இல் உருவான முதலாவது இலத்திரனியல் பொது நோக்கக் கணினியின் (Electronic general purpose programmable computer) செயலாக்க வேகம் (processing speed) 0.1 MHz ஆக இருந்தது. எனினும் அது அப்பொழுது இருந்த மின்பொறிக் (Electro mechanical) கணினியைவிட 1,000 மடங்கு செயலாக்க வேகத்தைக் கொண்டிருந்தது. அதனுடைய விலை $ 500,000 ($ 6 மில்லியன் இன்றைய விலை) ஆக இருந்தது. 30 தொன் (ton) எடையுள்ள 1,800 சதுரஅடி பரப்பை ஆக்கிரமித்த இவ் 'எனியாக்' (ENIAC - Electronic Numerical Integrator And Computer), 8'x3'x100' கன அளவைக் கொண்டது. இதனை இயக்குவதற்கு 150 kW வலு தேவையாக இருந்தது. 1949 ஆம் ஆண்டு 'பொப்பியுல மெக்கானிக்ஸ்' (Popular mechanics) என்னும் சஞ்சிகை இவ்வாறு கூறியது 'தற்காலத்து எனியாக் 18,000 வெற்றிடக் குழாய்களுடன் (vacuum tubes) 30 தொன்னாக உள்ளது. எதிர்காலக் கணினி மிகவும் சிறிதாக 1,000 வெற்றிடக் குழாய்களுடன் 1.5 தொன்னாக மாத்திரமே இருக்கும். அப்பொழுது இவ்வளவு சிறிதாக, இவ்வளவு குறைந்த விலையிலா கணினி எதிர்காலத்தில் வரும் என்று ஆச்சரியப்பட்டு மேற்படி கூற்றைப் பலர் நம்பியிருக்கமாட்டார்கள். ஆனால் தற்பொழுது வெறும் 2 இறாத்தல் நிறையேயுள்ள மடிக்கணினி (Laptop) 20,000 மடங்கு செயலாக்க வேகத்தில் $850 இற்கு வாங்கமுடிகிறது.

பொதுவாகச் சொல்லப் போனால் கணினியின் வேகம், ஆற்றல் என்பன மிகப் பெரிய அளவில் மிகத்துரிதமாக அதிகரிக்கும் அதேசமயம் அதனுடைய விலையோ மிகவும் குறைவடைந்து வருகிறது. நாம் முன்பு பார்த்தது போல் 30 தொன் நிறையுடன் மிகவும் குறைந்த அளவில் வேலை செய்த கணினியின் வேலையைவிட மிகமிக அதிகமாக எமது நுண்ணறிபேசி (smart phone) வேலை செய்கிறது.

தானியங்கி என்றால் பலருக்கு ஞாபகம் வருவது மனிதனைப் போலத் தோற்றமுள்ள தானியங்கியைத்தான். ஆனால் மனித உருவம் இல்லாத தானி- யங்கிகள் பல உள்ளன. தற்பொழுது உபயோகத்திலுள்ள பல கார்க- ளிலேயே இதனைக் காணலாம். 'சீர்வேகக்கருவி' (Cruise control) உள்ள பல கார்கள் முன்னே செல்லும் காரை உணர்ந்து தானாகவே வேகத்தைக் குறைத்துக் கொள்ளும். கூகிளின் சாரதியற்ற கார்கள், விபத்துக்கள் எதுவுமின்றி ஒரு மில்லியன் கிலோமீற்றருக்கும் கூடிய தூரத்தை சாதாரண போக்குவரத்துள்ள வீதியில் விபத்துகள் எதுவுமில்லாமல் ஓடியுள்ளன.

இக்கார்கள் சாதாரண போக்கு வரத்துள்ள வீதியில் ஓடுவதற்கு அமெரிக்கா–விலுள்ள நான்கு மாநிலங்கள் அனுமதி வழங்கியுள்ளன. இதேபோல ஐரோப்பிய நாடுகள் சிலவும் இக்கார்களின் பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கவுள்ளன.

வாகன விபத்தில் பெரும்பாலானவை மனிதத் தவறுகளாலேயே நடை பெறுகின்றன எனப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. வாகன விபத்தைத் தவிர்ப்பதற்கு மனித வாகன ஓட்டியைத் தடைசெய்வது எதிர்காலத்தில் இன்றி அமையாததாக இருக்கும். விமானங்கள் 'தானியக்க விமானியால்' (autopilot) இயக்கப்படுவது, செவ்வாய்க் கிரகம் சென்ற தானியங்கி தானாகவே இயங்கி, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து தகவல் அனுப்புவது என்பன மேலும் சில உதாரணங்களாகும்.

மரபுப்பொறியியல்

அடுத்து மரபுப் பொறியியலைப் பற்றிக் குறிப்பிடலாம். 3 பில்லியன் (billion) வருடங்களுக்கு முன்பு இரசாயனங்களிலிருந்து ஆக்கப்பட்ட ஒற்றைக் கல (single cell) அமீபா (amoeba), பக்ரீறியா (bacteria) போன்றவை, முதலில் சிந்திக்கும் திறனற்ற பல்கலங்களையுடைய (multi cell) மீன், பறவை, மிருகங்கள் போன்ற உயிரினமாக பரிணாம வளர்ச்சியடைந்து, தற்பொழுது சிந்திக்கும் திறனுள்ள மனிதனாக பரிணாம வளர்ச்சியடைந்திருக்கிறது. பரிணாம வளர்ச்சிக்குக் காரணம் உயிரினத்தின் தாய், தந்தையரின் 'டிஎன்ஏ'யை (DNA) பிரதி எடுக்கப்படும் பொழுது ஏற்படுகின்ற மிக அரிதான பிரதி செய்யும் தப்புகளே (rare copying errors) ஆகும். பெரும்பாலான இவ் அரிதான தப்புகள், பிறக்கும் உயிரினம் வாழ முடியாததாகவோ, அல்லது சந்ததிகளை உருவாக்க முடியாததாகவோ ஆக்கிவிடும். ஆனால் மிகச் சில பிரதி செய்யும் தப்புகள் பிறக்கும் உயிரினம் அதுவாழும் சூழ்நிலையில் வாழ்வதற்கு அனுகூலமாகி விடும். இப்படியாக மிகவும் குறைந்த வேகத்தில் உயிரினங்களின் 'டிஎன்ஏ' இல் ஏற்பட்ட மாற்றங்களை மரபுப் பொறியியல் மூலமாக மிக, மிக விரைவாக மாற்ற முடியும். இதற்கு முதலில் 'டிஎன்ஏ' எப்படி ஆக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய வேண்டும். அடுத்து 'டிஎன்ஏ' இன் ஒவ்வொரு பகுதியும் உயிரினத்துக்கு எவ்விதமான இயல்பைக் கொடுக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக எமது தோலின் நிறம் வெள்ளையாகவோ அல்லது கறுப்பாகவோ இருப்பதென்பதைத் தீர்மானிப்பது இந்த 'டிஎன்ஏ' யும் இவற்றுடன் சேர்ந்த 'டிஎன்ஏ வெளிப்படுத்துதலும்' (DNA expression), 'புரத மடிப்புகளும்' (protein folding) தான். 'டிஎன்ஏ' இல் உள்ள சில பகுதிகளை

மாற்றி விட்டால் எமது தோலின் நிறத்தை மாற்றி விடலாம். எம்மைத் தாக்குகின்ற பல நோய்களுக்கு, உதாரணமாக நீரிழிவு (diabetes), மாரடைப்பு (heart attack) போன்றவற்றிற்கு முக்கிய காரணங்களாகவும் இவை இருக்கின்றன. எமது வயதினால் ஏற்படும் உடல் மாற்றத்திற்கும் இவையே காரணமாக இருக்கின்றன. எமது மரபணுக்களின் (gene) அமைப்பினை முழுவதாக அறிவதற்கு அதிசக்தியுள்ள கணினி (powerful computer) மிகவும் அவசியமாகும். 15 வருடங்களில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த, 1990இல் தொடங்கிய இந்த 'மரபணுத்தொகை விவரணையாக்கச் செயல்திட்டம்' (genome mapping project) 12 ½ வருடங்களுக்குக் குறைவான காலத்தில் முடிவடைந்ததற்கு, கணக்கிடும் ஆற்றல் (computing capacity) அதிகரித்தது முக்கியகாரணமாகும்.

அடுத்து, கண்ணுக்குத் தெரியாத இந்த மரபு அணுக்களை மாற்றுவது எப்படி? தற்பொழுது சில வைரஸ்களை உபயோகித்து இம்மாற்றத்தைச் செய்கிறார்கள். எதிர்காலத்தில் 'நுண்தானியங்கி' (nanobot) எனப்படும் நுண்ணிய தானியங்கி (micro robot) மூலம் இதனைச் செய்ய முடியும்.

நனோ தொழில்நுட்பம்

எமது உயிரியல் கலத்தையும் விட, சிறிய அளவில் உள்ள பொருட்களைப் பற்றியும் அதன் இயல்புகளைப் பற்றியும் அறிந்து அவற்றை அவ் நுண்ணிய நிலையிலேயே (ஒரு நனோ மீற்றரில் இருந்து நூறு நனோ மீற்றர் வரை) கையாளுவதே நனோ தொழில்நுட்பம் ஆகும். ஒரு மில்லி மீற்றரின் மில்லியனின் ஒரு பகுதியே நனோ மீற்றர் என்று அழைக்கப்படுகிறது.

நனோ தொழில்நுட்பம் மிக மிக நுண்ணிய அளவில் பொருள்களைச் (materials) கையாள்வதற்கு உதவுவதால், மிகப் பெருமளவு கணிப்புக்களை மிகக் குறைந்த வலுவுடன் (power) செய்யக்கூடிய 'கணிக்கும் துண்டுகளை' (computer chips) உருவாக்குவதற்கு உதவும். அந்த தகவலை மிக நுண்ணிய பாதைகளால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் வழி அமைக்கும்.

நனோ தொழில்நுட்பத்தை உபயோகித்து தற்பொழுது ஒரு நனோ மீற்றர் நீளம் மாத்திரமே உள்ள நனோ மோட்டரை (nano motor) உருவாக்கியுள்ளார்கள்.

எதிர் காலத்தில் நனோ தொழில்நுட்பத்தை உபயோகித்து 'நுண்தானியங்கி' (nanobot) எனப்படும் சிறிய, கண்ணுக்குத் தெரியாத தானியங்கியை உருவாக்க முடியும் என்று றே நம்புகிறார். எப்படி வைரஸ், பக்ரீறியாக்கள்

தம்மைத் தாமே பிரதியெடுத்து பெருகுகின்றதோ (self replicate), அதேபோல் இவ் 'நுண்தானியங்கி'களும் தம்மைத் தாமே பிரதியெடுத்து பெருகுமாறு உருவாக்கலாம்.

இந்த 'நுண்தானியங்கி' எமது உடல், சூழல் என்று எமது வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த உள்ளன.

தானியங்கியல், மரபுப்பொறியியல், நனோ தொழில்நுட்பம் என்பவற்றின் ஒன்று சேர்ந்த வளர்ச்சி

மரபுப்பொறியியல், நனோ தொழில்நுட்பம், தானியங்கியியல் என்ற மூன்று துறைகளும் வளர்ச்சி அடைவதற்கு அவை ஒன்றில் மற்றொன்று தங்கியுள்ளன. அதாவது இம்மூன்றும் ஒரு சேர வளர்ச்சி அடையும் பொழுதுதான் அவற்றின் மொத்த வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

எமது உடலை பக்ரீறியா, வைரஸ் என்பன தாக்கி எமக்கு பல நோய்களைத் தருகின்றன. எமது இரத்த ஓட்டத்தில் 'நிரலிடக்கூடிய நுண் – தானியங்கியைச்' (programmable nanobot) சேர்ப்பதன் மூலம் அவை பக்ரீறியாவை அல்லது வைரஸை அடையாளம் கண்டு அதற்கேற்ற விதமான எதிர்ப்பைக் கொடுத்து அதனை அழித்துவிடும். புற்றுநோய்க் கலங்களை (cancer cells) அடையாளம் கண்டுகொண்டு மற்றைய ஆரோக்கியமான கலங்களுக்கு (healthy cells) எவ்வித பாதிப்பும் இல்லாமல் அழித்துவிடும்.

எமது 'டிஎன்ஏ' இலுள்ள நோய் தரக்கூடிய பாகங்களைக் கண்டு பிடித்து அதனைச் சரிசெய்துவிடும். உதாரணமாக நீரிழிவு, மாரடைப்பு போன்ற வியாதிகளுக்குப் பொறுப்பான 'டிஎன்ஏ' கூறுகளைச் சரிசெய்வதன் மூலம் இவ்வியாதிகளை அறவே ஒழித்துவிடும். எமது உடலுறுப்புகளில் ஏற்படும் பிழைகள் அல்லது சேதங்களை சரி செய்துவிடும்.

எமது தோலின் நிறம், உயரம், எமது உடலின் இயக்க வீதம் (metabolism) என்பனவற்றைத் தீர்மானிப்பது 'டிஎன்ஏ' யும் இவற்றுடன் சேர்ந்த 'டிஎன்ஏ வெளிப்படுத்துதலும்', 'புரத மடிப்புகளும்' தான் என்பதை முன்பே பார்த்திருந்தோம். எமது உடம்பில் தோல் சுருக்கம், நரை என்பவற்றிற்கும் இவையே காரணமாகும். எதிர் காலத்தில் இவற்றைச் 'நுண்தானியங்கியைக்' கொண்டு சரிசெய்வதன் மூலம் எமது வயது போன உடலை எங்களுக்கு விருப்பமான வயதுள்ள உடம்பாகவும், எமக்கு விருப்பமான தோலின் நிறமா–கவும் மாற்றலாம். உதாரணமாக 100 வயதுள்ள வெள்ளைத்தோலை உடைய ஒருவர் 20 வயதுள்ள மா நிறமான உடலுக்குத் தன்னை மாற்றலாம். மேலும்

எமது இருதயம், சிறுநீரகம் (kidney) போன்ற உறுப்புக்களையும் இப்படியே குறைந்த வயதுள்ள ஆரோக்கியமான உறுப்புக்களாக மாற்றிக் கொள்ளலாம்.

தற்பொழுது நாம் கொஞ்சம் கொஞ்சமாக பழுதாகிப் போன எமது உறுப்புக்களை செயற்கையாக (artificial) மாற்றத் தொடங்கியுள்ளோம். இரத்தத்தைச் சுத்திகரிக்கும் சிறுநீரகம் வேலை செய்யவில்லை என்றால் இரத்தத்தை வெளியில் எடுத்து 'கூழ்மப்பிரிப்பு' (dialysis) செய்கின்ற இயந்திரம் மூலம் சுத்திகரித்து மீண்டும் உடலுக்குள் அனுப்புகின்றோம். தற்பொழுதுள்ள பெரிய 'கூழ்மப்பிரிப்பு' செய்கின்ற இயந்திரம், எதிர்காலத்தில் எமது சிறுநீரகத்தை விடச் சிறிதாக மாறி உடம்புக்குள்ளேயே இருந்து வேலை செய்யக்கூடியதாக இருக்கும். எமது சிறுநீரகத்தைவிட பல மடங்கு திறமையாக நெடுங்காலத்திற்கு வேலை செய்யக் கூடிய செயற்கைச் சிறுநீரகம் மிகவும் மலிந்த விலையில் கிடைக்கும் பொழுது மனிதர்களில் பெரும்பாலானோர், எப்பொழுது தமது இயற்கைச் சிறுநீரகம் பிரச்சினை கொடுக்கத் தொடங்குகிறதோ அப்பொழுதே இப்புதிய செயற்கை சிறுநீரகத்தை பொருத்தி விடுவார்கள். இதேபோல் எமது மற்றைய உறுப்புக்களான இருதயம், சுவாசப்பை முதலிய-வற்றையும் அவை சரியாக வேலை செய்யாமல் விடத்தொடங்கும் பொழுது மாற்றி விடுவார்கள். பலதடவை அறுவைச்சிகிச்சை (surgery) செய்து ஒவ்வொரு உறுப்பாக மாற்றுவதை விடுத்து, ஒரு உறுப்பு பழுதாகும் பொழுது எல்லா உறுப்புக்களையும் ஒரே அறுவைச்சிகிச்சையில் செயற்கை உறுப்புக்களுக்கு மாற்றும் சாத்தியக்கூறும் பெருமளவில் இருக்கின்றது.

வளர்ச்சியின் அடுத்த கட்டம்

இதற்கு அடுத்த நிலையில் என்ன நடக்கலாம் எனப் பார்ப்போம். எமக்கு சிறுநீரகம், இருதயம், நுரையீரல் போன்றவை உண்மையில் அத்தியாவசிய-மானவையா? சிறுநீரகம் இரத்தத்தைச் சுத்திகரிக்கின்றது. நுரையீரல் ஒட்சிசனைக் வாங்கி காபனீரொட்சைட்டை வெளியேற்றுகின்றது. எமது இரத்தக் கலங்களான வெண்குருதிக்கலம் (white blood cells), செங்குருதிக்-கலம் (red blood cells) போன்றவற்றைத் தாமாகவே இயங்கிச் செயற்படக் கூடிய 'நுண்தானியங்கி'களாக மாற்றும் பொழுது எமக்கு எமது உள்ளுறுப்புக்-கள் எவையும் தேவைப்படா. தற்பொழுது சில நிமிடங்கள் ஒட்சிசன் கிடைக்காவிட்டாலேயே, நாம் மயங்கி இறந்து விடுவோம். ஆனால் 'நுண் - தானியங்கி'களாலான இரத்தத்திற்கு, பலமணிநேரத்திற்கு ஒட்சிசனைச் சேமித்து வைத்துக் கொடுக்க முடியலாம், அல்லது ஒட்சிசன் இல்லாமலே இயங்கலாம். அத்துடன் இவை உணவிலிருந்தோ அல்லது வேறு வழியிலோ சக்தியைப் பெற்று, தாமாகவே கழிவையும் அகற்றி விடும். எனவே சமிபாட்டுத் தொகுதியில் உள்ள உள்ளுறுப்புகள் எதுவுமே எமக்கு அத்தியாவசியமற்றவை.

நாம் எப்பொழுதும் இன்பம் அனுபவிக்கவே விரும்புகிறோம். அழகான காட்சி, நடனம், திரைப்படம், சங்கீதம் என்பனவற்றை அனுபவிப்பதற்கு கண், காது என்னும் புலன் உறுப்புகள் தேவை. உணவைச் சுவைத்துச் சாப்பிடுவதற்கு வாய், மூக்கு தேவை. மிருதுவான பொருளை உணர்வதற்கும், பாலியல் இன்பம் பெறுவதற்கும் தோல் தேவை. இவை எல்லாவற்றிற்கும் மூளை தேவை. இப்படியான இன்பம் அனுபவிக்கத் தேவையான உறுப்புக்களைத் தவிர மற்றவை எமக்கு அத்தியாவசியமானவையா?

எனவே நாம் இன்பம் அனுபவிக்கக்கூடிய முக்கியமான உறுப்புக்களான கண், காது, வாய், மூக்கு, பாலியல் உறுப்பு, தோல், மூளை போன்றவற்றைத் தவிர ஏனைய உறுப்புகளினை, அவை வேலை செய்யும் திறன் குறையும் பொழுது, அகற்றிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, அவை செய்யும் எல்லா வேலைகளையும் செய்யக்கூடிய 'நுண்தானியங்கி'களை எமது இரத்தத்தில் செலுத்திவிடலாம்.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence)

தற்போது உள்ள கணினிக்கு 'நுண்ணறிவு' உள்ளதா என்று கேட்டால் இல்லை என்றே பலரும் கூறுவார்கள். 'நுண்ணறிவு என்றால் என்ன' என்று கேட்டால் மனிதர் செய்யக் கூடிய ஆனால் இயந்திரம் (machine) அல்லது கணினி செய்ய முடியாத விடயங்களைக் கூறுவார்கள். எப்பொழுது அவ் வேலையைக் கணினி செய்யத் தொடங்குகிறதோ அப்பொழுதே நாம் அவ் வேலையைச் செய்வதற்கு 'நுண்ணறிவு' தேவை என்பதை ஏற்றுக் கொள்வ–தில்லை. உதாரணமாக 100 வருடங்களுக்கு முன்பு கணினி இல்லாமல் இயந்திரம் மாத்திரம் இருந்த காலத்தில் மனிதனால் மாத்திரமே கணிப்புகள் செய்ய முடியும். இயந்திரத்தினால் செய்ய முடியாது. அப்பொழுது கணிப்பு செய்வதென்பது 'நுண்ணறிவின்' அடையாளம் என்று கூறினார்கள். எப்பொழுது கணினியினால் கணிப்பு செய்ய முடிந்ததோ, அப்பொழுதே கணிப்புச் செய்யும் திறமை 'நுண்ணறிவின்' அடையாளமாக இல்லாமல் போய்விட்டது.

இப்படி முன்பு மனிதனால் மட்டுமே செய்யக்கூடியதாகவும் 'நுண்ணறிவின்' அடையாளமாகவும் கருதப்பட்ட சில வேலைகளைப் பார்ப்போம். 'மனிதனால் மட்டுமே முகங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்', 'மனிதனால் மட்டுமே நாம் பேசும் மொழியை விளங்கி அதற்குப் பதிலளிக்க முடியும்', 'மனிதனால் மட்டுமே சதுரங்கம் விளையாட முடியும்', 'மனிதனால் மட்டுமே பங்குச் சந்தையில் எப்பங்கின் விலை கூடுமென ஊகிக்க முடியும்', 'மனிதனால் மட்டுமே வேறு வாகனங்கள் செல்லும் சாதாரண வீதியில் கார் (car) ஓட்ட முடியும்', என்று பலவற்றைக் கூறலாம். எப்பொழுது மேற்பட்ட

விடயங்களை இயந்திரம் செய்ய முடிந்ததோ, அப்பொழுதே அது 'நுண்ணறிவின்' அடையாளமாகத் தெரிவதில்லை.

தற்பொழுது நாம் கூறலாம், 'மனிதன் மாத்திரமே 'இயல்பறிவை' (common sense) உடையவனாக இருக்க முடியும்'. அதாவது 'இயல்பறிவு' என்பது தற்பொழுது 'நுண்ணறிவின்' அடையாளம். எதிர்காலத்தில் தானியங்கியானது, 'இயல்பறிவைக்' கொண்டிருக்கும் பொழுது நாம் இயல்பறிவை 'நுண்ணறிவின்' அடையாளமாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இதுவரையில் மனிதமூளை எப்படி இயங்குகின்றது என்பதைப் பற்றிச் சிறிதளவே தெரியும். அதிக சக்தியுள்ள கணினியையும் நனோ தொழில் நுட்பத்தையும் உபயோகிக்கும் பொழுது மூளை வேலை செய்யும் முறைகளை மிகக் கூடுதலாக அறிய முடியும்.

மனிதனைவிட எல்லாவிதத்திலும் புத்திசாலியான தானியங்கியைப் மீள்நோக்குப் பொறியாராய்வு (reverse engineering) மூலம் படைக்கமுடியும். மீள்நோக்குப் பொறியாராய்வு என்பது ஒரு பொருளின் பாகங்களை ஒவ்வொன்றாகப் பிரித்தெடுத்து ஆராய்வதன் மூலமாக, அப்பொருளினை அதே போன்று மீளப் படைத்தல் அல்லது அதனினும் சிறப்பாகப் படைத்தல். மனிதனின் மூளை எப்படி வேலை செய்கிறது என்பதனை ஆராய்ந்து அறிந்து, அதாவது மூளையை 'மீள்நோக்குப் பொறியாராய்ந்து', மனித மூளை வேலை செய்யும் முறையினை நேரடியாக, அல்லது அம்முறையின் அடிப்படையைக் கொண்டு, 'நுண்ணறிவு' உள்ள தானியங்கி ஒன்றினை உருவாக்கலாம். அந்தத் தானியங்கியினால் மனிதனைவிட எல்லாவிதத்திலும் புத்திசாலியான தானியங்கியைப் படைக்கமுடியும். இது தானியங்கியின் 'நுண்ணறிவினை' மென்மேலும் அதிகரிக்க மாத்திரமன்றி, நனோ தொழில்நுட்பத்தின் புதிய பயன்பாடுகளைக் கண்டுபிடிக்கவும் உதவும்.

மனிதனின் மூளை எப்படி வேலை செய்கிறது என்பதனை ஆராய்ந்து அறிந்து, அதாவது மூளையை 'மீள்நோக்குப் பொறியாராய்ந்து', அம் முறை – யினை நேரடியாக, அல்லது அவற்றின் அடிப்படையையோ 'நுண்ணறிவு' உள்ள தானியங்கி உருவாக்குவதற்கு பயன்படுத்துவதன் மூலம் மனிதனைவிட எல்லாவிதத்திலும் புத்திசாலியான தானியங்கியைப் படைக்கமுடியும். இம்மூளை வேலை செய்யும் அறிவு தானியங்கியின் 'நுண்ணறிவினை' அதிகரிக்க மாத்திரமன்றி நனோ தொழில்நுட்பத்தின் புதிய பயன்பாடுகளை அறியவும் உதவும்.

'மூளை மீள்நோக்குப் பொறியாராய்ச்சி'
(Brain reverse engineering)

செய்வதற்குத் தேவையான அளவிற்குக் கணினியினதும் நனோ தொழில் நுட்பத்தினதும் வளர்ச்சி இன்னும் சில வருடங்களில் கிடைத்துவிடும். மூளையை 'மீள்நோக்குப் பொறியாராய்ச்சி' செய்து கிடைக்கும் தகவல், தானியங்கியின் 'நுண்ணறிவினை' மனிதனின் 'நுண்ணறிவுத் தரத்திற்குக்' (intelligence level) கொண்டுவருவது 2030 ஆம் ஆண்டளவில் நடைபெறும் என்று றே கேர்ஸ்வில் கணிக்கிறார். இதற்குத் தேவையான கணக்கிடும் ஆற்றலை எதிர்கால தானியங்கிகள் தற்போதைய கணினித் தொழில்நுட்பம் வளரும் வீதத்தில் 2030 ஆம் ஆண்டு அளவில் பெற்றுவிடும்.

தொழில்நுட்ப ஒருமையும் நித்திய வாழ்வும்
(Technological singularity and immortality)

தானியங்கி மனிதனின் மூளையின் அளவிற்கு வேலைசெய்யத் தொடங்கியவுடன், தொழில்நுட்ப வளர்ச்சி அடுக்கேற்ற (exponential) வீதத்திலிருந்து இரட்டை அடுக்கேற்ற (double exponential) வீதத்திற்கு மாறிவிடும். ஏனெனில் மனிதனைப் போலவே தானியங்கியும் ஆராய்ச்சிகள் செய்து புதிய விடயங்களைக் கண்டு பிடிக்கத் தொடங்கிவிடும். மனிதன் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் வேலை செய்தால், தானியங்கி 24 மணி நேரமும் தளர்ச்சி அடையாமல் வேலை செய்யும். ஒரு மனிதன் தான் பெற்ற அறிவை முழுவதுமாகப் புதிய ஒரு மனிதனுக்கு (குழந்தைப் பருவத்திலிருந்து) மாற்றுவதாயின் கிட்டத்தட்ட 20 வருடங்களாகும். ஆனால் தானியங்கி தனது அறிவை இன்னொரு தானியங்கியை உருவாக்கி அதற்கு மாற்றுவதற்குச் சில நாட்கள் கூடத் தேவையில்லை. இப்படியான ஒரு நிலையில், நாம் சென்ற 100 வருடங்களாக செய்த ஆராய்ச்சிகளால் (research) பெற்ற வளர்ச்சியை எதிர்கால மனிதமூளைக்குச் சமனான அல்லது அதற்கும் கூடிய மூளை உள்ள தானியங்கியினால் ஒரு வருடமோ அல்லது அதற்குக் குறைவான காலத்திலோ பெற்றுவிடலாம். தானியங்கியின் தகவல் செயலாக்க வேகம் (information processing speed) மனிதமூளையின் வேகத்தைவிட மில்லியன் அல்லது பில்லியன் மடங்கு அதிகமாகும். இதுவும் இரட்டை அடுக்கேற்ற வளர்ச்சி வீதத்திற்கு மற்றொரு காரணமாக அமையும்.

இவ்வகை அசுர வளர்ச்சியில் தொழில்நுட்பம் வளர்ந்து 2045ஆம் ஆண்டளவில் எம்மால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாத தொழில்நுட்ப

ஒருமை உள்ள உலகத்தை அடைவோம் என றே எதிர்வு கூறுகின்றார். எமது பிறப்பு/இறப்பிற்கு முன்னரோ, பின்னரோ என்ன நடந்தது/நடைபெறும் என்று எப்படி எம்மால் கற்பனை பண்ண முடியாதோ, அதேபோல தொழில்நுட்ப ஒருமைக்குப் பின்னர் உலகம் எப்படி இருக்கும் என்று ஒருவராலும் கற்பனை செய்ய முடியாது.

எமது அறிவு தற்பொழுதே பல விடயங்களுக்கு கணினியில் தங்கியுள்ளது. எமக்கு ஒரு நோய் வந்துவிட்டால் கூகிளில் தேடி அதைப் பற்றிய விடயங் – களைத் தெரிந்து கொண்டுதான் வைத்தியரிடம் செல்கிறோம். இப்படிப் புறமாக (external) கணினியின் அறிவை நாம் பெற்றுக் கொள்வது மாறி, எமது உடம்புக்குள்ளேயே ஒரு 'கணிக்கும் துண்டை' வைத்து எமது மூளையின் வெளியே உள்ள கணினியுடன் 'கம்பியில்லா' (wireless) முறையில் தொடர்பி– ணைப்பை (connection) ஏற்படுத்திக்கொண்ட மூளை மிக வேகமாக வேலை செய்வதோடு மிக வேகமாகப் புதிய விஷயங்களைப் படித்தறிந்து கொள்ளவும் முடியும். சிலர்தான் மூளைசாலிகள், மற்றவர்கள் என்ன செய்தாலும் அவர்களின் புத்திசாலித்தனத்திற்குச் சமமாக முடியாது என்பதெல்லாம் மறைந்துவிடும். உடம்பின் பாகங்களும் இயந்திரத்தால் மாற்றப்பட்டு மூளையும் கணினியுடன் தொடுக்கப்படும் மனிதனும் இயந்திரமும் ஒன்று சேர்ந்த (merge) அதிமனிதன் என்று இவனைக் கூறலாமா?

நாம் இப்படி இரண்டும் கெட்டானாக மாறுவோம் என்பது பலருக்குப் பிடிக்காத விடயமாக இருக்கும். நாமோ அல்லது எமது சந்ததியினரோ, தற்போதுள்ள எம்மைப் போல இல்லாது அதிமனிதராக மாறுவது எமக்குப் பிடிக்காமல் இருக்கலாம். மாறாமல் இருக்க விரும்புபவர்கள் மாறாமல் இருந்து 80 அல்லது 100 வயதில் இறப்பதற்குச் சுதந்திரம் உள்ளது. அப்படிச் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். ஏன், தற்பொழுது கூட சில சமயக் கூறுகளைப் பின்பற்றுபவர்கள் எவ்வித நோய்க்கும் எவ்வித மருந்தும் எடுக்காமல் குறைந்த வயதில் இறந்துவிடுவதில்லையா? எனவே பெரும்பாலான மனிதர்கள் கணினியுடன் இணைந்த அதிமனிதனாக மாற அப்படி மாறாத சில மனிதர்கள் சாதாரண வயதில் இறந்துவிட, உலகம் அதிமனிதனுக்கு உரியதாகும்.

இந்த நிலையில் மரணம் என்பது சில விபத்துக்களினாலேயோ அல்லது மனிதன் தானாக விரும்புவதனாலேயோ மட்டுமே நடைபெறும். எனவே பெரும்பாலான மனிதர்கள் தாம் விரும்பிய காலம் வரைக்கும் சில ஆயிரம் ஆண்டுகளோ அல்லது நித்தியமாகவோ வாழலாம்.

சந்தேகங்களும் அபாயங்களும்

இவ்விடயத்தைப் பற்றிப் பேசும்பொழுது பலரின் கேள்வியானது இந்த தொழில்நுட்பம் செல்வந்தர்களுக்கு மாத்திரம்தானே உபயோகமாக இருக்கும் என்பதாகும். தொழில்நுட்பம் வளரும் பொழுது அதன் தொடக்கம் செல்வந்தர்களுக்கு மட்டுமே கிடைத்தாலும் சிறிது காலத்தின் பின்னர் எல்லோருக்கும் கிடைக்கும். கையடக்கத் தொலைபேசி, உபயோகத்திற்கு வந்த புதிதில் செல்வந்தர்களால் மாத்திரம் 'அந்தஸ்து சின்னமாகப்' (status symbol) பாவிக்கப்பட்டது. பின்னர் அதன் விலை மிகவும் குறைந்து எல்லோர் கைகளுக்கும் கிடைக்கவில்லையா!

மனிதர்கள் பொருட்களை உற்பத்தி செய்யும் பொழுதோ அல்லது சேவையை வழங்கும் பொழுதோ உழைப்பின் விலை கொடுக்க வேண்டும். ஆனால் தானியங்கிகள் இவற்றை மிகப் பெருமளவில் மிக வேகமாகச் செய்யும் பொழுது விலை கொடுக்க வேண்டிய தேவை இல்லாமல் போய்விடும். எல்லோருக்கும் எல்லாப்பொருட்களும் கிடைக்கும். தற்பொழுது நாம் காற்று, கடல் என்பவற்றை எல்லோருமே சிலவித கட்டுப்பாடுகளுடன் உபயோகிப்பது போல, எல்லாப் பொருட்களும் சேவையும் எல்லோருமே அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். இன்றைய பொருளாதார முறைமை முற்றாக அழிந்துவிடும். நாம் முன்பு கூறிய 'நுண்தானியங்கி'கள் மாசடைந்த சூழலை சுத்திகரிப்பதற்கும் எமது காலநிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் கூட பயன்படுத்தப்படும். எனவே எமது சூழல் கெட்டு இவ்வுலகில் நாம் வாழ முடியாது என்று அஞ்சத்தேவை–யில்லை. தொழில் நுட்ப வளர்ச்சியில் உள்ள அபாயங்களையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. எப்பொழுது மனிதன் சக்திமிக்க ஆயுதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினானோ, அன்றே அபாயங்களும் கூடத் தொடங்கி விட்டன. இரசாயன ஆயுதங்கள், உயிரின ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் போன்றவை இப்பொழுதே உலகை அழிப்பதற்குப் போதுமானதாக இருக்கிறது. எனினும் ஒருசில தனித்த நடை பெறல்களைத் (isolated incidence) தவிர மற்றும்படி அவை உபயோகிக்கப்படவில்லை. எனவே இவ்வளர்ச்சியும் உலகை அழிக்காது எனப் பெருமளவில் நம்பலாம்.

அடுத்து இவ்வளர்ச்சியால் ஏற்படக்கூடிய மேற்படி அபாயங்களைக் கருத்தில் கொண்டு அரசாங்கங்கள் இவ்வகை ஆராய்ச்சிக்குத் தடை கொண்டுவரலாம் எனத் தோன்றலாம் 'முதல்நிலை உயிரணு' (stem cell) ஆராய்ச்சிக்கு முதலில் தடை இருந்த போதும் தற்பொழுது பல நாடுகள் அதன் தடையைத் தளர்த்தத் தொடங்கிவிட்டன. மேலும் அமெரிக்கா போன்ற நாடுகள் இதற்குத் தடைபோடுவது, தடை இல்லாத நாடுகள் இவ்வகை



ஆராய்ச்சி செய்து அந்நாடுகள் பெருவலிமை பெறுவதற்கு ஏதுவாகிவிடும். எனவே வல்லரசுகள் இதற்கு ஆரம்பத்தில் தடையிட்டாலும் தொடர்ந்து தடைபோடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

முடிவுரை

தொழில் நுட்ப வளர்ச்சி வீதம் இதுவரை காலமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. எமக்குக் கிட்டிய எதிர்காலத்தில் (near future) இவ்வளர்ச்சி இன்னும் பன்மடங்கு வீதத்ததில் நடைபெறுவதற்குரிய காரணங்களை இதுவரை பார்த்தோம். மூப்படைதலைத் (aging) தடுப்பதோ அல்லது பின்னகர்த்துவதோ (reverse) முடியாதென்பதற்கு உயிரியல் ரீதியாக எக்காரணமும் இல்லை. எமது உடலையும் இயந்திரத்தையும் ஒருங்காக்கும் முயற்சி எப்பொழுதோ தொடங்கிவிட்டது. அவற்றில் உள்ள நன்மைகளை அறியும் பொழுது, இது தொடர்ந்து நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை. அடுக்கேற்ற வீதத்தில் தற்பொழுது வளரும் தொழில்நுட்பம், தானியங்கி, மனித மூளைக்குச் சமமாகவோ அதனைவிட அதிகமாகவோ சக்தியுள்ளதாக மாறும் பொழுது தொழில் நுட்ப வளர்ச்சி இரட்டை அடுக்கேற்ற வீதத்தில் வளரப் போகிறது. றே கேர்ஸ்வில் கூறியதுபோல இந்த அசுர வளர்ச்சியான தொழில்நுட்ப ஒருமையை 2045 இல் அடையாவிடினும் கூட மிக விரைவில் அடையப்போகிறோம் என்பதைப் பெருமளவிற்கு நம்பலாம். அதுவரை உயிரோடு இருந்தால் நாம் எல்லா இன்பங்களும் பெற்று நித்திய வாழ்வு வாழலாம்.



ப. தயாநிதி B.Sc.(Eng.), PGDip., C.Eng.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர் இலங்கையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பிரதம பொறியியலாளராக இருந்தவர். கனடாவில் Structural Steel Detailer ஆக சொந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

தொழில்நுட்பங்களும் செய்திப் பரிவர்த்தனையும்

- செந்தில்

2011ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதியன்று பாகிஸ்தானிய நகரான அபொட்டாபாட்டில் வாழும் கணினித்துறை வல்லுனரான திரு. சொஹாய்ப் ஆதர் பின்வரும் தகவலை ரிவிற்றர் (Twitter) மூலம் வெளியிட்டார்: 'ஒரு உலங்கு வானூர்தி பறந்து செல்கிறது. அதிகாலை ஒரு மணிக்கு இது ஒரு அபூர்வ நிகழ்ச்சி'. சிறிது நேரத்தின் பின்னர் அவர் இன்னுமொரு ரிவீற்றினை (tweet) வெளியிட்டார்: 'பெரியதொரு சத்தம். துர்சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று நினைக்கிறேன்'. பல மணிநேரத்தின் பின்னர் முழு உலகும் இந்த இரு ரிவீற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டது: அமெரிக்க சிறப்புப்படைகளின் இந்த திருகு வானூர்தி, அபொட்டாபாட்டில் இரகசியமாக வாழ்ந்து வந்த அல் கைடா இயக்கத்தின் அப்போதைய தலைவரான பின்லாடனை அந்த இரவில் தாக்கிக் கொன்றது.

2009ம் ஆண்டில் அமெரிக்காவின் ஹட்சன் நதியில் ஒரு பயணிகள் விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறங்கியபோது, அருகாமையில் படகொன்றில் பயணம் செய்து கொண்டிருந்த பயணியான யனிஸ் க்றூம்ஸ் தமது கைத்தொலைபேசி மூலம் ஒரு புகைப்படத்தை பதிவு செய்து தமது ரிவிற்றர் மூலம் அனுப்பினார். பல ஊடகங்களுக்கு இந்த சம்பவம் பற்றி கிடைத்த முதல் புகைப்படம் இதுவாகும். இந்த இரு சம்பவங்களுக்கும் ஒரு ஒற்றுமையுள்ளது. இந்த இரு, முக்கிய செய்திகளையும் முதன்முதலில் உலகிற்குத் தெரியப்படுத்தியது ரிவிற்றர் தான். அதாவது, ரிவிற்றரில் பதித்தது தனி நபர்கள். இந்த இரு உதாரணங்களும் மாறிவரும் ஊடகத்துறை பற்றியும், நாம் இப்போது எங்கிருந்து, எவ்வாறு எமக்குத் தேவையான செய்திகளைப் பெற்றுக்கொள்கிறோம் என்பது பற்றியும் தெரியப்படுத்துகின்றன. கடந்த காலங்களில் செய்தி பரிவர்த்தனையாளர் மற்றும் நுகர்வோரை நாம் இருவகையாகப் பிரிக்கக்கூடியதாயிருந்தது – செய்தியை வழங்கும் ஊடகவியலாளர்கள், மற்றும் பொதுமக்கள் உட்பட்ட நுகர்வோர் குழு.

ஊடகவியலாளர்கள் பொதுவாக பி.பி.ஸி. போன்ற 24 மணிநேர சர்வதேச வானொலிச் சேவைகள் மூலமும், இதனைவிட மேலாக அசோஸியியேற்றற் பிரெஸ் (Associated Press), தொம்சன்–ரொய்ட்டர்ஸ் (Thomson Reuters) போன்ற சர்வதேச செய்திச்சேவை நிறுவனங்களிட–மிருந்தும் செய்திகளைப் பெற்றுக்கொண்டனர். ரொய்ட்டர்ஸ் போன்ற செய்தி நிறுவனங்களினால் கிட்டத்தட்ட உலகின் அனைத்து நாடுகளிலும் முழு நேர, பகுதிநேர அல்லது சுயாதீன ஊடகவியலாளர்களை பணிக்கு அமர்த்தி செய்திகளை சேகரிக்கக்கூடியதாயிருந்தது. பொதுமக்களைப் பொறுத்தவரையில், பி.பி.ஸி. மற்றும் உள்ளூர் வானொலி மற்றும் பத்திரிகைகள், தொலைக்காட்சி நிலையங்கள் மூலம் தமது செய்திகளைப் பெற்றுக்கொண்டனர். செய்தி வழங்கலில் ஒரு முக்கிய அபிவிருத்தியை அமெரிக்கர் 1963ம் ஆண்டு நவம்பர் 22ம் திகதியன்று கண்டனர். அன்று காலை அந்நாட்டின் பிரதான தொலைக்காட்சி நிலையங்கள் தமது வழமையான நிகழ்ச்சிகளை இடைநிறுத்தி அப்போதைய ஜனாதிபதி ஜோன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை அறிவித்தன. அது மட்டுமல்ல, நான்கு நாட்களின் பின்னர் அவர் அடக்கம் செய்யப்படும் வரையில் அவர்கள் பல விசேட நேரடி ஒளிபரப்புகளைச் செய்தனர். அதுவரை காலமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்று பொதுவாக முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட செய்திகள், விவரணங்கள் மட்டுமே ஒளிபரப்பப்பட்டன. கென்னடியின் மரணம், முன்கூட்டியே தொகுப்பாக்கம் செய்யப்படாத நேரடி ஒளிபரப்புக்கு வழிவகுத்தது.

எனினும் இத்தகைய நேரடி ஒளிபரப்புகள் 1991ம் ஆண்டின் முதலாம் வளைகுடா யுத்தத்தின் போதும் பின்னர் 2001ம் ஆண்டின் 9/11 தாக்குதல் –களின் போதும் தான் முக்கியத்துவம் எய்தின. CNN உட்பட உலகின் பிரதான தொலைக்காட்சி நிலையங்கள் நாட்கணக்கில் விசேட நேரடி ஒளிபரப்புகளை இந்த இரு சந்தர்ப்பங்களிலும் வழங்கின. இலட்சக்கணக்கான மக்கள் தமது தொலைக்காட்சிகளுக்கு முன் நின்று இந்த சம்பவங்கள் பற்றிய உடனடி தகவல்களை பெற்றுக் கொண்டனர். வளைகுடா யுத்தமும் செப்ரெம்பர் 11 தாக்குதல்களும் தொலைக்காட்சியின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தின எனக் கூறலாம். ஆனால், 90ம் ஆண்டுக–ளில் பிரபலமாகத் தொடங்கிய இணையம் மற்றும் இணையதளம் போன்ற தொழில்நுட்பங்கள் தொலைக்காட்சியின் ஆதிக்கத்தைப் பாதிக்கத்தொடங்கியுள்ளன.

இந்த இரு தொழில்நுட்பங்கள் செய்திப் பரிவர்த்தனையை பரவலாக்கத் தொடங்கின. தமது சொந்த இணையவலைப்பக்கத்தை

உருவாக்கி தமது செய்தியை உலகிற்குத் தெரியப்படுத்த அனைவருக்கும் இவை உதவின. இதேவேளை ஊடக நிறுவனங்களும் தமது சொந்த இணைய வலைப்பக்கங்களை உருவாக்கி, செய்திகளை அடிக்கடி தேவைக்கேற்றவாறு மாற்றக்கூடியதாயிருந்தது. இந்தத் தொழில்நுட்ப பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாக Blog போன்ற வலைப்பதிவு தொழில்நுட்பமும் Facebook, YouTube போன்ற இணையதளங்களும் உருவாக்கப்பட்டன. குறிப்பாக வலைப்பதிவுகள் இணைய மூலமான தகவல் பரிவர்த்தனையை ஜனநாயகப்படுத்தின. இணைய வசதியும், ஒரு கணினியும் உள்ள அனைவருமே தமக்கு விருப்பமான விடயங்கள் பற்றி எழுத இவை வழிவகுத்தன. இன்று ஆயிரக்கணக்கான வலைப்பதிவுகள் உலகளாவிய ரீதியில் இலட்சக்கணக்கான மக்களால் வாசிக்கப்படுகின்றன.

இதேவேளை கைத்தொலைபேசியின் பரவலான பாவனையும் இத்தகைய செய்திப் பரிவர்த்தனைக்கு ஊக்கமளித்தது. ரிவிற்றர் இந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு படிக்கல் தான். முற்றுப்புள்ளி உட்பட 140 எழுத்துருக்களினுள் நாம் சொல்லவேண்டியதை சொல்ல வேண்டும். நண்பர்கள், சக ஊழியர்கள், குடும்பத்தினரிடையே தகவல் பரிமாற்றத்தை ஊக்குவிக்க இது ஆரம்பிக்கப்பட்டாலும், செய்திப் பரிவர்த்தனையில் இது ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. குறிப்பாக ரிவிற்றரின் hashtag (#) மூலம் செய்திகளை பரப்பும் வாய்ப்பை உருவாக்கியமை ரிவிற்றரின் முக்கியத்துவத்தை ஊடகத்துறைக்கு உறுதிப்படுத்தியது. ஊடகங்கள் இன்று ரிவிற்றர் மூலம் செய்திகளைப் பெற்றுக்கொள்வது மட்டுமன்றி, மிக முக்கிய சம்பவமொன்று இடம்பெற்றால் தமது ஊடகங்கள் மூலம் நுகர்வோருக்குத் தெரியப்படுத்தமுன்னர் ரிவிற்றரில் வெளிப்படுத்துகின்றனர். அதேவேளையில் ஒரு சம்பவத்தைப் பார்த்த ஒருவர், ஒரு ஊடகம் மூலம் தான் அதனை வெளிப்படுத்த வேண்டுமென்பதில்லை. சரியான hashtags மூலம் தாமே அதனை வெளிப்படுத்தலாம். மேற்குறிப்பிட்ட ஹட்சன் நதி விபத்து பற்றிய தகவல் பரிமாற்றம் இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

இந்த மின்னியல் ஊடகத்தின் ஒரு சிறப்பம்சம் இது பாரம்பரிய எழுத்து, ஒலி மற்றும் ஒளி ஊடகங்கள் அனைத்தையுமே உள்ளடக்கக்கூடியது. அத்துடன் நவீன கைத்தொலைபேசிகள் மூலம் சம்பவங்களை எவரும் பதிவுசெய்து வினியோகிக்கக் கூடியதாயுள்ளது.

விளைவுகள்

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எமது வாழ்க்கையில் ஏதாவதொரு மாற்றத்தை ஏற்படுத்தவே செய்யும். இது நியதி. அதுபோல் இணையம்,

வலைப்பதிவுகள், ரிவிற்றர் போன்றவையும் எமது வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தாமலில்லை. உண்மையில் கூறப் போனால் இந்த மாற்றங்கள் சமூக ரீதியில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மேற்குறிப்பிட்டது போல், செய்திகளை உடனுக்குடன் நாம் பெற்றுக்கொள்ள பல புதிய வழிகளை இந்த தொழில்நுட்பங்கள் வழிவகுத்துள்ளன. அதே வேளை, இந்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள் 'பாரம்பரிய ஊடகங்களான' பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களை பெரிதும் பாதித்துள்ளன.

செய்திகள் உடனுக்குடன் கைத்தொலைபேசி அல்லது tablet மற்றும் கணினி மூலம் எமக்கு உடனடியாகவே கிடைப்பதினால் அடுத்த நாள் காலைவரையோ, ஏன் அடுத்த வானொலி அல்லது தொலைக்காட்சி செய்தி நேரம் வரையோ செய்திகளை அறிய காத்திருக்க வேண்டியது இல்லை. அதுபோல் ஒலி, ஒளிபரப்புச் செய்திகளை அறிந்துகொள்ள வானொலி அல்லது தொலைக்காட்சி உள்ள இடத்தை நோக்கி செல்ல வேண்டிய அவசியமுமில்லை. கைத்தொலைபேசி மற்றும் tablet மூலம் செய்தி நாமிருக்கும் இடத்திற்கே வருகிறது. அது மட்டுமல்ல, எமக்குத் தேவையான செய்திகளை மட்டுமே அறிந்து கொண்டு ஏனையவற்றை புறக்கணிக்கும் வசதியையும் இந்த புதிய தொழில்நுட்பங்கள் எமக்கு வழங்குகின்றன. இதனால் பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவம் குறைந்துவருகிறது. ஒரு ஊடகத்தின் சமூக முக்கியத்துவம் மற்றும் அதன் நுகர்வோர் எண்ணிக்கையை பொறுத்தே விளம்பரதாரர்கள் அந்த ஊடகத்தில் விளம்பரம் செய்வர். பொதுவாக இளம் தலைமுறையினர் பாரம்பரிய ஊடகங்களை நம்பியிருப்பது குறைவு. இந்த தரவும், இணையம் சார்ந்த தொழில்நுட்பங்களினால் வழங்கப்படும் புதிய யுக ஊடகங்களின் போட்டியும் வட அமெரிக்காவின் பாரம்பரிய ஊடகங்களின் விளம்பர வருமானத்தைக் குறைத்துள்ளன (ஆசிய, ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் பாரம்பரிய ஊடகத்துறை வளர்ந்துவருகிறது என்பதும் உண்மை).

இதனால் ஏற்கனவே அமெரிக்காவிலும் கனடாவிலும் பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்காவில் மட்டும் 100க்கு மேற்பட்ட பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஒரு நூற்றாண்டிற்கு மேலாக பிரசுரிக்கப்பட்ட Christian Science Monitor 2009ம் ஆண்டு முதல் தினசரி பதிப்பை நிறுத்தி வார இறுதி பதிப்பையும் இணையப் பதிப்பையுமே பிரசுரிக்கிறது. இதுபோல் பிரபல வார இதழான Newsweek இன் இணையப் பதிப்பை மட்டுமே கொண்டுள்ளது. இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையான கார்டியன் கூட

அச்சுப்பதிப்பை நிறுத்தி விடலாம் என்ற வதந்தி ஒரு காலத்தில் உலாவியது. அநேகமான பிரபல பத்திரிகைகளில் ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்று வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலும் ஆயிரக்கணக்கானோர் வேலையை இழந்துள்ளனர். ஒரு அமெரிக்க பத்திரிகை தனது ஊடகவியலாளர்களுக்கு சரியான முறையில் iPhone மூலம் உயர் தர புகைப்படங்களை பதிவு செய்ய கற்றுக்கொடுத்த பின்னர் தனது புகைப்படப்பிடிப்பாளர்களை வேலையிலிருந்து நிறுத்தியது.

இந்த நிலை, செய்தி, மற்றும் செய்தி பரிவர்த்தனை ஆகியவற்றின் எதிர்காலம் பற்றி பல கேள்விகளை எழுப்புகின்றது. பொதுவாக செய்தி நுகர்வோர் அளவும் தீவிரமும் குறைந்து வருவதை கணிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இளைய தலைமுறையினர் செய்தி பற்றி தமது பெற்றோர் போன்று அலட்டிக்கொள்வதில்லை. மார்ச் மாதத்தில் வெளிவந்த அமெரிக்க அறிக்கையொன்றின் படி, இளைய தலைமுறையினர் அரசியல் மற்றும் உள்ளூர் விவகாரங்கள் பற்றி ஆர்வம் கொண்டிருந்தாலும், இவர்கள் செய்தியை தேடி போவதில்லை. Facebook மற்றும் ரிவிற்றரில் செய்திகள் ஏதாவதொரு காரணம் தொடர்பாக (உதாரணமாக, இவர்களின் நண்பர்கள் ஒரு குறிப்பிட்ட செய்தியை பரிந்துரைத்திருந்தால்) இவர்களை அடையும் பட்சத்தில் இவர்கள் அதனை வாசிப்பர். அதுபோன்று பணம் செலவழித்து செய்தி வாசிப்பதிலும் இளைய தலைமுறையினருக்கு நாட்டமில்லை. இதேவேளை, சினிமா மற்றும் இதுபோன்ற கேளிக்கை தொடர்பான ஊடகங்களில் இவர்களுக்கு பெரு நாட்டம் உண்டு என்பதும் ஆய்வுகளின் போது அறியப்பட்டுள்ளது.

இதேவேளையில் தகவல் பரிமாற்றம் இப்போது மிகவும் பரவலாக்கப்பட்டிருப்பதுடன் ஒரு சிலரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த காலமும் மறைந்துவிட்டது. ஆனால், இந்த ஜனநாயக தொழில்நுட்பம் வன்முறையை ஊக்குவிக்கவும் பயன்படுகிறது என்பதும் உண்மை, உதாரணமாக ஐஸ்இஸ் (ISIS) என்ற இஸ்லாமிய தீவிரவாத குழு தனது பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் ஆள் திரட்டவும் ரிவிற்றர், Facebook போன்ற புதிய யுக ஊடகங்களை உபயோகப்படுத்துகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. எது புதிதோ அதுதான் செய்தி என்பது செய்திக்கான ஒரு விளக்கம். இந்த வரையறையில் மாறுதல் இல்லை. ஆனால் எத்தகைய செய்திகள் நுகர்வோருக்கு முக்கியம்? உதாரணத்திற்கு அரசியல் மாற்றம் பற்றிய செய்தியொன்றா அல்லது ஆக்ரோஷமான

நாயொன்றிடமிருந்து ஒரு சிறுவனை மீட்ட பூனை பற்றிய வீடியோவா? (இந்த YouTube ஒளிநாடா சுமார் 24 மில்லியன் முறை பார்க்கப்பட்டுள்ளது)

இதேவேளை செய்திகள் எவ்வாறு நுகர்வோரை வந்தடைகின்றன என்பதிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பத்திரிகைகளுக்கான, அல்லது ஒலி, ஒளிபரப்பு ஊடகங்களுக்கான தேவை இப்போதைக்கு இல்லாமல் போகப்போவதில்லையென்றாலும் இந்த பாரம்பரிய ஊடகங்களின் அவசியம் குறைந்து வருகின்றது என்பது உண்மை. எதிர்காலத்தில் புதிய யுக தொழில்நுட்பங்கள் மூலம் தான் செய்தி பரிவர்த்தனை நடைபெறும் என்பதையும், பாரம்பரிய ஊடகங்கள் இந்த புது யுக தொழில்நுட்பங்களுக்கு பக்கபலமான பங்கையே வகிக்கக்கூடும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.





இ. செந்தில்நாதன்

செந்தில்நாதன் ஆசியா, ஐரோப்பா, மற்றும் வட, தென் அமெரிக்க நாடுகளிலிருந்து ஊடகத்துறை கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது கட்டுரைகள் உலகின் அனைத்து பாகங்களிலும் பல மொழிகளில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. கனடாவில் OMNI நிலையத்தின் ஆரம் தமிழ் மற்றும் South Asian News ஆகியவற்றின் தயாரிப்பாளராகவும் கடமையாற்றியவர். தற்போது Communications/PR துறையில் ஈடுபட்டுள்ளார். இவர் பல வலைப்பதிவுகளையும் நடத்தி வருகிறார்.

கணினித் தமிழ் காத்திடும் எம் தமிழை!

- அகணி சுரேஸ், B.Sc. Eng., MSc Computing

உலகத்தில் மனிதர்கள் அவர்களின் பேச்சு மொழியால் அடையாளப் – படுத்தப்படுவது வழக்கம். இவ்வகையில் தமிழினத்தின் அடையாளமாகத் திகழ்வது தமிழ் மொழியே. உலகில் 3000இற்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன என்றும் இவற்றில் 300 மொழிகள் அளவில் தமக்கென தனி எழுத்துக்களைப் பெற்றவையாக உள்ளன என்றும் வரலாற்றுக் கட்டுரைகளில் கூறப்படுகின்றன. கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், எபிரேயம் என்பவை செம்மொழிகளாகக் கருதப்படுகின்றன. இந்த வரிசையில் தமிழ் மொழிக்கும் செம்மொழி அந்தஸ்து கிடைத்ததில் வியப்பில்லை. 'நமது தாய்மொழியாம் தமிழ் மட்டும் உலகில் வேறு எந்த இனத்திற்கேனும் தாய்மொழியாக வாய்த்திருக்கு– மானால் அவர்கள் உலகாளும் மொழியாகவே தமிழை ஆக்கியிருப்பார்கள்' என்று அறிஞர் பெருந்தகை அண்ணா கூறியுள்ளார். இந்தக் கூற்று தமிழின் பெருமையையும் கூறி, பெருமைக்குரிய தமிழ் மொழி தமிழர்களால் உரிய முறையில் பேணப்படவில்லை என்பதையும் சுட்டி நிற்கின்றது. உலகத்தில் நாம் பேசும் தாய் மொழியாம் தமிழைக் காத்து வளர்த்துக் கொண்டால் மட்டுமே எமது இனத்திற்கான போராட்டங்களில் ஓர் அர்த்தம் இருக்கும். தமிழர்கள் உலகின் எந்த மொழியையும் வெறுப்பவராகவோ அல்லது பகையாளர்களாகவோ இருக்கக்கூடாது. மாற்றாக நம் தாய்மொழியைப் போல ஏனைய மொழிகளையும், அம்மொழிகளைப் பேசும் இனத்தவர்களையும் மதிப்பவர்களாகவே இருக்க வேண்டும். இதுவே எமது தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆரோக்கியமாக இருக்கும்.

தொல்காப்பியம் வெளிவந்த காலம் முதல் இந்த நூற்றாண்டு வரை தமிழ் மொழியின் வளர்ச்சி நடைபெற்றுத்தான் வந்திருக்கின்றது. இயல், இசை, நாடகம் என்ற மூன்றிற்கும் மேலாக நான்காவதாக அறிவியல் தமிழாகவும், ஐந்தாவதாக கணினித் தமிழாகவும் தமிழ்மொழி பெற்று வருவதைக் காண்கின்றோம். உலகில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையம் எனப் பல்வேறு ஊடகங்களில் தமிழ் மொழி இடம்பிடித்து விரிவடைந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. இவ்வகையில் 'விளம்பரம்' கடந்த 25 ஆண்டுகளாக ஒரு முன்னுதாரணமான பத்திரிகையாகக் கனடாவில் நறுமணம் பரப்பித் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றது. 'விளம்பரம்' பத்திரிகையின் இந்தச் சிறப்பு மலரில் 'கணினித் தமிழ் காத்திடும் எம் தமிழை!!'

என்ற இந்தக் கட்டுரை இடம்பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழர்கள் தற்காலக் கணினி உலகில் தமது தோழமைகளையும், உறவுகளையும் வலைப்பின்னல்கள், சமூக வலைத்தளங்கள் ஆகியன மூலம் வளர்த்துக் கொள்வதையும் காணலாம். 'ஒரு மொழி பயன்படுத்தப்படும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே 'தனிமொழி' எனப்படும் என பரிதிமாற் கலைஞர் கூறியுள்ளார் எனத் தமிழ் மொழியின் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வங்க மொழியின் பிறப்பும், வளர்ச்சியும் பற்றிக் குறிப்பிட்ட சுனிதி குமார் சாட்டர்ஜி தமிழ் ஒரு காலத்தில் இந்திய துணைக்கண்டம் முழுவதும் பேசப்பட்ட மொழியென்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். தமிழ் மொழி நிலைத்து நிற்பதற்கு இயல், இசை, நாடகத்துடன் அறிவியல் தமிழும், கணினித் தமிழும் பலம் சேர்த்து தமிழைக் காத்திடும். அறிவியல் தமிழும், கணினித் தமிழும் மேலும் பாரிய வளர்ச்சியடைவது தமிழ் மொழி நிலைத்து நிற்க துணைநிற்கும் என்ற எனது கருத்தை இந்தக் கட்டுரை வாயிலாகச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

அறிவியல் தமிழ், கணினித் தமிழ் ஆகிய இரண்டும் மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டிய இரண்டு முக்கியமான விடயங்கள் என்பதைக் கருத்திற் கொண்டும் அதிக பக்கங்களுக்கு இந்தக் கட்டுரையை நகர்த்திச் செல்ல முடியாத காரணத்தாலும் கணினித் தமிழ் எவ்வாறு தமிழ் மொழி நிலைத்து நிற்க உதவுகின்றது என்பதையும், கணினித் தமிழ் மென்மேலும் எத்தகைய வளர்ச்சியடைவதன் மூலம் தமிழ்மொழி நிலைத்து நிற்க உதவும் என்பதையும் போன்ற விடயங்களை எனது ஆய்வு சுட்டி நிற்கின்றது. ஒரு மொழி தான் சார்ந்த சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றும் மொழியாகவும் விளங்க வேண்டிய அவசியம் உள்ளது. இன்றைய யுகம் ஒரு கணினி யுகம் (Computer Age) என்று சொல்லப்படுகின்றது. தட்டச்சு செய்தல், தரவுகளைச் சேமித்தல், மின்னஞ்சல், இணையம், மின் வாணிகம், மின் ஆளுகை, மின்னணுக் கல்வி, மின்னணுக் கருத்தரங்கம், பல்லூடகக் கருவிகள், கணினி மென்பொருள்கள், எழுத்துருக்கள், விசைப்பலகைகள், தட்டச்சில் இருந்து பேச்சு, பேசுவதில் இருந்து தட்டச்சு, மொழிபெயர்ப்பு அறிவுப் பகிர்வு எனப் பல்வேறு விடயங்கள் கணினி மூலமாக நடைபெறும் தமிழ் மொழியின் வளர்ச்சிப் படிமங்களாக உள்ளன.

லினக்ஸ் இயக்கச் சூழல் போன்ற கட்டமைப்புக்களில் தமிழுக்குக் கிடைத்த இடமும் கணினித் தமிழ் வளர்ச்சிக்கு வலுவூட்டியது. தமிழக அரசின் ஆதரவும் கணினித் தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். கணினித் தொழில்நுட்பத்தைப் பற்றிய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் தமிழ் மக்களிடையே கணினித் தொழில்நுட்பத்தில் உள்ள அறிவைப் பெருக்குகின்றது. கணினி அறிவியல் கலைச் சொல்லகராதிகளின் வருகையும் கணினித் தமிழ் வளர்ச்சியில் முக்கியமானது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாட்டு

அரசு உதவிகளும், உலகெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்களின் தமிழ் மொழி ஈடுபாடும், கணினி வல்லுநர்களாக உள்ள தமிழர்களும் ஒன்று சேர்ந்து அரும்பணியாற்றினால் கணினித் தமிழ் மேலும் பல சாதனைகளைப் புரிந்து ஓர் உயர்நிலைக்குச் செல்ல முடியும், செல்ல வேண்டும் என்றே நான் கருதுகின்றேன். இன்றைய நிலையில் கணினித் தமிழ் அடைந்த நிலை, வளங்கள் ஆகியன பற்றி முதலில் எனது பார்வையைச் செலுத்துகின்றேன்.

தமிழ் எழுத்துருக்கள்

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் கணினியில் எழுத்துக்களைத் தட்டச்சு செய்யவும் முடியாத நிலை இருந்தது. ஆரம்பத்தில் பாமினி என்ற தமிழ் எழுத்துரு பாவனைக்கு வந்தது. இதில் ஆங்கிலக் குறியாக்கத்தில் அமைந்த எழுத்துக்களில் தமிழ் எழுத்துரு பிரதியீடு செய்யப்பட்டது. மேலும், பல தமிழ் எழுத்துருக்கள் மெல்ல மெல்ல வந்தபோதும் விசைப்பலகைகளில் தரப்படுத்தல் இல்லாததால் கணினியில் வெவ்வேறு மென்பொருட்களிற்கிடையில் தமிழ் மொழியில் உள்ள தரவுகளை எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. சென்னையில் நடைபெற்ற 'தமிழ் இணையம் 99' கருத்தரங்கில் தமிழ் எழுத்துருக்கள் TAM/TAB என்ற வடிவங்களில் உள்ள விசைப்பலகைகள் மூலம் தரப்படுத்தவையாக அறிமுகம் செய்யப்பட்டன. கணினித் தமிழ் வளர்ச்சிக்கான ஓர் உயர் மட்டக் குழுவும் நிறுவப்பட்டது. தமிழ் இணையம் 2000 மாநாடு சிங்கப்பூரில் நடைபெற்றது. 'இணையத்துள் நுழையா மொழி அழிவது திண்ணம்' என்ற கூற்றிற்கமைய, தமிழ் மொழி இணையத்துள் புகுத்தப்படுவது முக்கியமானது என மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. சாதாரண நிலையில் உள்ள தமிழ் மக்களும் இணையப் பயன்பாட்டில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும் என்ற வகையில் கருத்துக்கள் எழுந்தன. இந்த மாநாட்டிலேயே 'உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் தேசிய மொழிகளில் எழுத்துரு அறிமுகத்தைக் கவனிக்கும் பொழுது, முதலில் தமிழ் எழுத்துருக்களே இணையத்தில் சி-டேக் நிறுவனத்-தால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு அடுத்ததாகவே இந்தி மொழிக்கான எழுத்துருக்கள் இணையத்தில் வெளிவந்ததாகக் கூறப்படுகின்றது. பின்பு இந்தியாவின் சி-டேக் நிறுவனம் இந்தியாவில் உள்ள இருபத்திரண்டு மொழிகளுக்கான எழுத்துருக்களை இணையத்தில் வெளியிட்டதாகக் கூறப்படுகின்றது. 16 பிட் (BIT) ஒருங்குறி எழுத்துரு, தமிழ் அனைத்து எழுத்துரு (TACE 16) என்பவற்றைத் தமிழக அரசு 2010ஆம் ஆண்டு நிர்ணயம் செய்து அறிக்கை விடுத்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டவாறு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவினால் ஒருங்குறி குறியேற்றம் (Unicode encoding) தமிழ் அனைத்துரு குறியேற்றம் (TACE 16 encoding) ஆகியவற்றிற்கான தமிழ் எழுத்துருக்கள் (Tamil Fonts), தமிழ் விசைப்பலகை இடைமுக இயக்கி (Tamil

Keyboard Interface) போன்ற மென்பொருட்கள் வின்டோஸ் (Windows), மக்கின்ரோஸ் (Macintosh) லினக்ஸ் (Linux) ஆகிய இயங்குதளங்களில் பயன்படும் விதத்தில் விசைப்பலகைகளை உருவாக்கும் செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த தமிழ் எழுத்துருக்களை http://www.tamilvu.org/ என்ற இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

கணினியின் QWERTY விசைப்பலகையை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற தமிழ் எழுத்துருக்கள் வெளிவந்துள்ளன. கைபேசியின் விசைப் – பலகைகள், கையடக்கக் கணினிகளில் காணப்படும் விசைப்பலகைகள் ஆகியவற்றிற்கேற்ப தமிழ் எழுத்துருக்களின் வளர்ச்சியும் விசாலமடைய வேண்டி உள்ளது. ஏற்கனவே கையடக்கக் கணினிகளுக்கு வேண்டிய தமிழ்மொழிப் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியையும் நாம் காண்கின்றோம். கணினி வல்லுநர்களும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவக்கூடிய அரசுகள், பாரிய கணினி நிறுவனங்கள், சிறிய முதலீட்டு நிறுவனங்கள், தமிழ் மொழி ஆர்வலர்கள், தமிழ் மொழி ஆய்வாளர்கள் கணினித் தமிழ் வளர்ச்சிக்கு மேலும் ஆக்கபூர்வமாகச் செயலாற்ற வேண்டும்.

http://www.suratha.com/ மற்றும் http://www.tamillexicon.com/uc/bamini-unicode ஆகிய இணையத்தளங்கள் பாமினி எழுத்துருவில் இருந்து யுனிகோட்டிற்கும் (ஒருங்குறி Unicode) யுனிக்கோட்டில் இருந்து பாமினிக்கும் மாற்றிக்கொள்ளப் பயன்படுகின்றன.

e-kalappai Tamil Keyman என்ற மென்பொருள் தமிழ் தட்டச்சுச் செய்ய உதவுகின்றது.

இந்தக் கட்டுரையில் கொடுக்கப்படும் இணையத்தள விபரங்களை ஒரு முழுமை யான பட்டியலாகக் குறிப்பிட முடியாது. எனது கவனத்தில் கிடைத்த விபரங்களை உதாரணமாகக் குறிப்பிடுகின்றேன். நாளுக்கு நாள் புதிய இணையத்தளங்கள் பினவரும் விதத்தில் வெளிவந்தவண்ணம் உள்ளன:

http://kandupidi.com/editor/goog_trans.php
http://www.typetamil.in/
http://code.google.com/p/english-to-tamil-live-typewriter/
http://tamilcube.com/tamil/

மேலே குறிப்பிட்ட இணையத்தளங்களில் உள்ள வசதிகள் மூலமும் கணினியில் தமிழ் தட்டச்சு செய்து கொள்ளலாம்.

தமிழ் மென்பொருட்கள்

தமிழ் மொழியில் மென்பொருட்கள் பலவிதமான பயன்பாடுகளிற்கு உருவாக்கப்பட்டுள்ளன. வணிகத்துறையில் உள்ளவர்களின் தேவைகளை அறிந்து தமிழ் மொழியில் மென்பொருட்களை உருவாக்குவதில் பல

நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. கணினி வல்லுநர்களாக கடமை புரியும் தமிழர்களின் பங்களிப்பாகக் கணினித் தமிழ் வளர்ச்சி பெற்று வருகின்றது. தமிழ் மொழி நிலைத்து நிற்பதில் கணினித் தமிழின் வளர்ச்சி முக்கியமானது என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்னும் பல மடங்கு எண்ணிக்கையில் தமிழ் மென் பொருட்கள் வெளிவர வேண்டும். கையடக்கக் கணினிகளின் பயன் பாட்டிற்கும் புதிய புதிய தமிழ் மென்பொருட்கள் வெளிவரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. தமிழ் மொழியில் இளைஞர்களின் ஈடுபாடும், அவர்களுக்குள்ள தமிழ் மொழி அறிவும் பல தமிழ் மென்பொருட்கள் உருவாக வழிவகுக்கும். இளைஞர்கள் தாமாகவே சுயகல்வி மூலம் தமது தமிழ் மொழி அறிவை விருத்திசெய்யக்கூடிய விதத்தில் தமிழ் மொழி கற்றலுக்கான இணை – யத்தளங்களும், ஆங்கிலம் மூலம் தமிழ் கற்றலுக்கான வழிகாட்டிகளும் கணினி உலகில் காணப்படுகின்றன.

தமிழ் மொழி ஆசிரியர்களும் இவ்வாறான வளங்களைப் பயன்படுத்தி புதிய அணுகுமுறையிலும் தமிழ்ச் சிறுவர்களும், தமிழ் இளைஞர்களும் பல்–ஊடக ஈடுபாட்டுடன் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கல்லூரிப் படிப்பை முடித்த இளைஞர்களின் தமிழ் மொழி அறிவை அதிகரிப்பதற்கான வழிவகைகளை தமிழ் மொழிக் கல்வி நிறுவனங்கள் ஆராய வேண்டும். நடுத்தர வயதினரும் வாழ்நாள் கல்வி அணுகுமுறையில் தமிழ் மொழியையும் மேலும் ஆழமாகக் கற்று கணினி பற்றிய அறிவையும் மேம்படுத்தி, அறிவியல் தமிழையும், கணினித் தமிழையும் வளம்படுத்த உழைக்க வேண்டும். தமிழ் இளைஞர்களின் தமிழ் மொழி அறிவையும், ஈடுபாட்டையும் அதிகரிக்க உழைக்க வேண்டும். வெவ்வேறு துறையில் கல்வி அறிவும், பட்டறிவும் கொண்ட தமிழ் அறிஞர்கள் அறிவியல் தமிழ் நூல்கள் வெளிவரவும், தமிழ் அறிவியல் களஞ்சிய இணையத்தளங்களை உருவாக்கவும், தமது துறைசார்ந்த தமிழ் மென்பொருட்–களை உருவாக்கவும் எதிர்காலத்தில் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற அறைகூவலை இந்தக் கட்டுரை மூலமாக விடுகின்றேன். இந்த முயற்சிக்கு முக்கிய தடைக்கல்லாக இருந்த அல்லது இன்னமும் இருக்கின்ற விடயம் கலைச்சொல் அகராதிகளின் தட்டுப்பாடு என்பதில் ஐயமில்லை. ஆனால் உலகில் இந்தக் குறையை நிவர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்களவு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. பல்வேறு கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 'விளம்பரம்' பத்திரிகை நிறுவனமும் கனடாவில் நடைபெற்ற சில முயற்சிகளுக்கு தனது பங்களிப்பைச் செய்துள்ளது. நமக்குக் கிடைத்துள்ள கலைச்சொற்கள் அகராதிகளை மூலதனமாகக் கொண்டு தமிழ் அறிவியல் நூல் வளர்ச்சிக்கும், கணினித் தமிழ் வளர்ச்சிக்கும் புதிய புதிய முயற்சிகள் ஏற்பட வேண்டும்.

தமிழில் தட்டச்சு செய்வது, மின்னஞ்சல் அனுப்புவது, கையெழுத்து உணரி, தமிழ் அச்செழுத்து உணரி, மின்னஞ்சல் அனுப்புவது போன்ற மென்பொருட்கள்

நிறைய வெளிவர வேண்டும். தமிழ் மென்பொருட்களை ஆராய்ந்து இன்னமும் எவ்வாறான மென்பொருட்கள் வேண்டும் என்று ஆராய்ந்து, முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள தமிழ் மென்பொருட்களும் பாவனை-யாளர்களிடம் சென்றடையாத நிலை காணப்படுகின்றது.

http://www.searchko.in/ இது முழுமையாகத் தமிழில் இயங்கும் ஒரு தேடு-பொறி இணையத்தளம். இதில் முற்றாகத் தமிழில் விடயங்களைத் தேடலாம். இதனை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உருவாக்கியுள்ளது. கூகிள் தளத்திலும் தமிழ் உட்பட பல மொழிகளில் விடயங்களைத் தேடும் வசதி உள்ளது. கைத்தொலைபேசிகளில் இணையத்-தளங்களைப் பார்வையிட ஸ்கைபயர் (Skyfire) என்ற தமிழ் உலாவி பயனளிக்கின்றது.

மின் அஞ்சல் மற்றும் சமூக வலைப்பின்னல்கள்

பல வருடங்களுக்கு முன்பு தமிழ் மொழியில் ஒரு மின்னஞ்சல் அனுப்புவதற்கு முடியாமலும் பின்னர் அரிதாகக் கிடைக்கும் ஒரு தமிழ் மின்னஞ்சல் மென் பொருளைத் தேட வேண்டிய அவசியமும் இருந்தது. இப்பொழுது தமிழ் மொழி கணினி உலகில் கண்ட வளர்ச்சியால் இந்தக் குறைபாடு நீக்கப்பட்டுள்ளது. ஒருங்குறி எழுத்துரு (Unicode font) மூலம் மின்னஞ்சல்களையும், சமூக வலைப்பின்னலில் தமிழ் மொழிப்பதிவுகளையும் இலகுவாக அனுப்ப முடிகின்றது. முற்றிலும் தமிழ் மொழியில் இயங்கும் மின்னஞ்சல் மென்பொருட்களும் அரிதாகக் காணப்படுகின்றன. அப்பிள் கையடக்கக் கணினியில் இருந்து தமிழில் மின் அஞ்சலை அனுப்புவதற்காக itune இல் tamil email editor என்ற மென்பொருள் உள்ளது. தமிழ் விசைப் பலகையை கையடக்கக் கணினிகளில் itune இல் பெற்றுக்கொள்ளலாம். http://www.kapruka.com/ என்ற இணையத்தளத்தில் தமிழ் மின்னஞ்சல் வசதியும் உள்ளது. யுனிக்கோட் மூலம் இலகுவாக எந்த மின்னஞ்சல் சேவையிலும் தமிழில் மின்னஞ்சல் அனுப்பலாம். ஆனால் இவ்விடயத்தில் மேலும் பல வளர்ச்சிகளை எதிர்காலத்தில் காணலாம். கணினி மூலம் தமிழ் கற்றலும், கற்பித்தலும் தமிழ் மொழி நிலைத்து நிற்பதற்கும், கணினித் தமிழ் வளர்ச்சிக்கும் எமது எதிர்காலச் சந்ததியினர் தமிழ் மொழியில் புலமை பெற்றிருத்தல் வேண்டும். இந்த விதத்தில் நான் பெரும் இடைவெளியையே காண்கின்றேன். இதன் முக்கியத்துவத்தை சமூகமும், நிறுவனங்களும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. இவ்விடயத்தில் தமிழ் இளைஞர்களும், இளைஞர் அமைப்புக்களும் தாமாக முன்வந்து தமிழ் மொழி வளர்ச்சியிலும், கணினித் தமிழ் மற்றும் அறிவியல் தமிழ் வளர்ச்சியிலும் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்.

இணையத்தளம் மூலமாக தமிழ் மொழி கற்பிப்பதற்காக பயனுள்ள பல இணையத்தளங்கள் உள்ளன. இது மேலும் பன்மடங்கு விருத்தி செய்யப்பட வேண்டும். பல்லூடகத் தகவல் தொழில்நுட்பங்களுடன் தமிழ் மொழி கற்பிப்பதற்கான இணையத்தளங்கள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும். தமிழ் கற்றலுக்கென இணையத்தளங்களுடன், மென்பொருட்களும் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் கற்பித்தலில் பின்வரும் இணையத்தளங்கள் ஈடுபட்டுள்ளன:

http://tamilcube.com/

இந்த இணையத்தளம் தமிழ் மொழி கற்றலுக்கான வளங்களைக் கொண்டு உள்ளது. அத்துடன் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்பு வசதியையும் கொண்டுள்ளது. இந்த இணையத்தளம் சிங்கப்பூரில் இருந்து இயங்குகின்றது. தமிழ் மொழி மட்டுமன்றி, இதர இந்திய மொழிகள் சிலவற்றிற்கான வளங்களையும் இந்த இணையத்-தளம் கொண்டுள்ளது. இந்த இணையத்தளம் தமிழ் எழுத்துக்களை எழுதவும் கற்பித்துக் கொள்கின்றது. தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் இந்த இணையத்தளத்தைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும். மேலும், தமிழ் சோதிடம் மற்றும் தமிழ் பஞ்சாங்கம் போன்ற விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

http://ccat.sas.upenn.edu/plc/tamilweb/

தமிழ் எழுதும் முறையினை மென்பொருட்கள் மூலமும், பல்லூடகத் தகவல் தொழில்நுட்பம் மூலமும் கற்பிக்கும் அணுகுமுறை இந்த இணையத் தளத்தில் காணப்படுகின்றது. தமிழ் மொழியினை அடிப்படை நிலை, இடை நிலை, உயர் நிலை என மூன்று நிலைகளிலும் கற்பிக்கும் பாட உதவிகள் இங்கு காணப்படுகின்றன. இந்த இணையத்தளத்தில் சினிமா மூலம் தமிழினை கற்பிக்கும் விதமாக பல காணொளிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த இணையத்தளத்தில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தியும், முன்மாதிரியாகக் கொண்டும் தமது பாடங்களைத் தயாரித்தும் கொள்ளலாம்.

http://www.tamilvu.org/

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் முன்னர் இயங்கி தற்பொழுது தமிழ் இணையக் கல்விக் கழகம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்த இணையத்தளம் மிகவும் பயனுள்ள ஒரு இணையத்தளம் ஆகும். இந்த முயற்சிக்கான அறிவிப்பு 1999ஆம் ஆண்டின் தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில் தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டது. இந்த இணையத்தளம் மின் நூலகத்தைக் கொண்டுள்ளது. இந்த இணையத்தளம் தமிழக அரசால் உருவாக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது. இந்த இணையத்

தளம் மூலம் தமிழ் மொழியை சுயமாகக் கற்றுக்கொள்வதோடு சான்றிதழ் – களையும் பெற்றுக் கொள்ளலாம். தமிழ் இளைஞர்கள் தமிழ் மொழியை தொடர்ந்து கற்றுவருவதற்கு வரப்பிரசாதமாக இந்த இணையத்தளம் உள்ளது. இங்கு இணைய வகுப்பறையும் காணப்படுகின்றது. இதில் மழலைக் கல்வி, சான்றிதழுக்கான கல்வி, பட்டயம், மேற்பட்டயம், பட்டம், முதுகலை எனப் பல தரங்களிற்கான தமிழ் மொழிப் பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தளத்தில் பண்பாட்டுக் காட்சியகமும் காணப்படுகின்றது. தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் இந்த இணையத்தளத்தை தமது கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். இந்த இணையத் தளத்தில் கலைச்சொற்களுக்கான பேர– காராதியும் காணப்படுகின்றது. கணினித் தமிழ் அறிவைப் பெற்றுக் கொள்ளவும் இந்த இணையத்தளம் குறிக்கப்பட்டளவு துணை புரிகின்றது. இந்த இணையத் தளத்தைக் கையடக்கக் கணினிகளிலும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது ஒரு முழுமையான இணையத் – தளமாக விளங்குகின்றது.

http://www.noolagam.com/

தமிழ் இணைய நூலகம் என்ற பெயருடன் இயங்கும் இந்த இணையத்தளம் தமிழ் மொழி கற்கவும், கற்பிக்கவும் பயன்படும் முக்கியமான இணையத்தளமாக விளங்குகின்றது. பயிற்சித்தாட்களை அச்சுப்பதிவு செய்யக்கூடிய வசதியும் இங்கு உள்ளது. இந்த இணையத்தளத்தோடு இணைந்ததாகச் செயற்படும் http://www.tamilacademy.com/ என்ற இணையத்தளமும் தமிழ் மொழிக் கல்வியை நோக்கமாகக் கொண்டுள்ளது. மழலைக் கல்வியில் இருந்து ஏழாம் நிலை வரையில் பாடநிலைகள் வகுக்கப்பட்டுப் பாடநெறிகள் தரப்பட்டுள்ளன.

http://kidsone.in/tamil/ என்ற இணையத்தளத்திலும் தமிழ் மொழிக்கல்விக்கான வளங்கள் உள்ளன. இவற்றைத் தவிரமும் சில இணையத்தளங்களில் தமிழ் மொழிக் கல்விக்கான வளங்கள் காணப்படலாம். நாளுக்கு நாள் புதிய புதிய இணையத்தளங்கள் வெளிவந்தவாறும் இருக்கின்றது. இவை எல்லாம் கணினித் தமிழிற்கு மட்டுமல்லாது, தமிழ் மொழி நிலைத்திருக்கவும் நல்ல பணியைச் செய்கின்றன என்றே கூறவேண்டும்.

மின் நூலகங்கள், களஞ்சியங்கள்

இந்தக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டவாறு http://www.tamilvu.org/ என்ற இணையத்தளத்தில் ஒரு மின் நூலகம் காணப்படுகின்றது. www.chennailibrary.com, http://www.noolaham.org/ ஆகிய இணையத்தளங்களிலும் மின் நூலகங்களைக் காணலாம். http://www.tamilheritage.org/ என்ற இணையத் தளமும் பயனுள்ள சில நூல்களைப் பார்வையிடப் பயன்படும் ஓர் இணையத்– தளம் ஆகும். http://www.tamilheritage.org/ என்ற இணையத்தளத்தில் மிகவும்

அரிதான பழைய தமிழ் நூல்கள் மின் நூல்களாக பதிவு செய்யப்பட்டு வருகின்றது. http://www.shaivam.org என்ற இணையத்தளத்தில் தமிழ் பக்தி இலக்கியத்தின் பெரும் சொத்துக் காணப்படுகின்றது. மேலும் பல இணையத்-தளங்களிலும், வலைப்பின்னல்களிலும் சிறுகதைத் தொகுப்புக்கள், நாவல்கள், அறிவியல் நூல்கள் ஆகியன மின் நூல்களாகப் பதிவில் உள்ளன. அத்துடன் தமிழ் இலக்கியக் களஞ்சியங்களாக சிறுகதைத் தொகுப்புக்கள், கவிதைத் தொகுதிகள், நாவல்கள் ஆகியன மின் நூல் வடிவத்தில் பல இணையத் தளங்களிலும், வலைப்பின்னல்களிலும் காணப்படுகின்றன. மின் புத்தக விற்பனைகளும் தமிழ் மொழியில் வரத் தொடங்கியுள்ளன. மேலும் பன்மடங்கு வளர்ச்சி தேவை.

மின் நூல்கள்

மின் நூல்களைத் தயாரிக்கும் பொழுது மின் நூல்களின் ஆவண வடிவூட்டம் (format) முக்கியமானது. மின் வாசிப்பான்கள் (e-reader) வெவ்வேறு வடிவூட்டங்களை ஏற்பவையாக உள்ளன. அப்பிள் ipad இல் வாசிக்க iba என்ற extensionஉடன் இருக்க வேண்டும். அமேசனின் kindleஇல் வாசிப்பதற்கு .azw, .mobi, .prc போன்ற extension இருக்க வேண்டும். nook என்ற மின் வாசிப்பான்கள் ,db என்ற Extensionஉடன் கோப்பு இருக்க வேண்டும். epub என்பது பலவிதத்திலும் வாசிக்கக் கூடிய வடிவூட்டம். இதனை பொது நியமக் கட்டுப்பாடு (open standard) கொண்டதாகக் கருதப்படுகின்றது. இதற்கு எழுத்துருக்கள் யுனிகோட் வடிவத்தில் இருக்க வேண்டும். இதனை எல்லா வாசிப்பான்களிலும் படிக்கலாம். http://www.epubbud.com/ என்ற இணையத்தளம் மூலம் இலவசமாக மின் நூல்களை உருவாக்க முடியும்.

மின்னியல் அகராதிகள்

பல ஆங்கிலம்-தமிழ் அகராதிகளும், தமிழ்-ஆங்கிலம் அகராதிகளும் பாவனையில் உள்ளன. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு தமிழ் மொழி கலைச்சொற்கள் முக்கியமானவை. வெவ்வேறு துறைகளில் கலைச்சொற்கள் உருவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் நிறைய வர வேண்டும்.

https://translate.google.ca/
http://dictionary.tamilcube.com/
http://tamil.changathi.com/
http://www.tamildict.com/english.php

மேற்குறிப்பிட்ட இணையத்தளங்கள் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்திற்கும், ஆங்கிலச் சொற்களைத் தமிழுக்கும் மொழி பெயர்க்க உதவுகின்றன. இவ்விடயத்திலும் நிறைய வளர்ச்சியடைய வேண்டும். முக்கியமாக கலைச் சொற்கள் அகராதிகளும் இவ்விதமாகத் தாராளமாகக் கிடைக்க வேண்டும்.

http://tamilelibrary.org/teli/cwords.html என்ற இணையத்தளப் பக்கம் கணினித் துறைக்கான கலைச்சொற்களைக் கொண்டுள்ளது.

கணினித் தமிழ் வளர்ச்சியில் தமிழ் மொழி பற்றிய தற்கால நிலை பற்றியும், மேலும் எவ்வாறான வளர்ச்சியை அடைய வேண்டும் என்பது பற்றியும் கிடைத்த தரவுகளோடு ஆராய்ந்தோம். இவ்விடயம் மிகவும் விரிவாக ஆராய வேண்டியதும், ஆரோக்கியமான பல நடவடிக்கைளை எல்லா மட்டங்களிலும் எடுக்க வேண்டியதும் முக்கியமானதாக உள்ளது. கணினித் தமிழின் வளர்ச்சி நமது தாய்மொழியாம் தமிழை உயர்நிலைக்குக் கொண்டு செல்வதோடு, நிலைத்து நிற்கவும் வழிசெய்யும் என்ற கருத்தோடு இந்தக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

உசாத்துணைகள்

- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை – சிறப்பு மலர், யூன் 2010, சென்னை
- ஆய்வுக் கட்டுரைகள் (http://home.infitt.org/) – உலகத் தமிழ் தொழில்நுட்ப மன்றம் (11வது உலகத் தமிழ் இணைய மாநாடு)
- மொழிபெயர்ப்புப் பணியில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, சி. இளங்குமரன், மலேசியா, 2012
- கையடக்கக் கணினிகளில் தமிழ், செல்வ முரளி, இந்தியா, 2012
- தமிழில் எழுத்துருக்களின் உடற்கூறியலும், வனப்பெழுத்தும், ஏ.எம்.பொன்ராஜ், இந்தியா, 2012
- தமிழ் எழுத்துருக்களின் வளர்ச்சி, சங்க காலம் முதல் இன்று வரை – ஒரு மீள் பார்வை, பேரா. முனைவர். வெ. இராமன், இந்தியா, 2012
- எளிதாகத் தமிழ் மொழியில் மின்நூல்கள், சுகந்தி வெங்கடேஸ், 2012
- தமிழ் மென்பொருள்களும் மக்கள் பாவனையும், அனுராஜ் சிவராஜா, இலங்கை, 2012
- செல்பேசியில் தமிழ்க் கலைச் சொல்லாக்கம், முனைவர் நா.ஜானகிராமன், இந்தியா, 2012
- கட்டுரையில் குறிப்பிட்டுள்ள இணையத்தளங்கள்.



எஸ். ஏ. சுரேஸ் B.Sc. Eng., M.Sc.Eng. (UK)

அகணி என்ற புனைபெயருடன் படைப்புக்களைப் படைத்து வருபவரும் கனடாவில், இலக்கிய உலகில் அகணி சுரேஸ் என்ற பெயரால் அறியப்படுபவர். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர் தாயகத்தில் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பல படைப்புக்களை வெளியிட்டவர். கனடாவில் கவிதைத் தொகுதிகள், அறிவியல் நூல்களை வெளியிட்டவர். விளம்பரம் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வருகிறார்.

உலகம் அழியக்கூடிய வாய்ப்புக்கள்

- விஜே குலத்துங்கம்



காலத்திற்கு காலம் உலகம் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அழியப் போகின்றது என்ற செய்தி வந்து போவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனாலும் அந்தத் திகதிகளில் ஒன்றுமே நடக்கவில்லை. எனினும் உலகம் அழியக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அதை முன்கூட்டியே குறிப்பிட்ட திகதியில் நடக்கும் என எதிர்வு கூற முடியாது. இந்தக் கட்டுரையில் உலகம் அழியக்கூடிய காரணிகள் எவை, அவை எவ்வளவு தூரம் அபாயகரமானவை என்பதைப் பார்ப்போம். பல காரணிகள் இருந்தாலும், இவற்றுள் எது நடக்கக்கூடிய சாத்தியத்தை அதிகமாகக் கொண்டுள்ளது என்பதை நிச்சயமாகக் கூற முடியாது. கட்டுரையின் அளவைக் கருத்தில் கொண்டு இவற்றுள் சிலவற்றை நாம் விரிவாகப் பார்ப்போம்.

முதலில் இதுவரை காலமும் நிகழ்ந்த, நாம் நேரடியாகக் கண்ட, கேள்விப்பட்ட காரணங்களைப் பார்ப்போம். இவற்றுள் முதலாவதாக பூமியுடன் மோதக்கூடிய விண்கற்கள் (Meteorite) பற்றிப் பார்ப்போம். பூமியின் மேற்பரப்பில் 70% சமுத்திரம் போன்ற நீர்த்தேக்கங்களாக உள்ளது. மிகுதியான 30% நிலப்பரப்பில், 10% மாத்திரம் மனிதர்கள் வாழும் பிரதேசமாக உள்ளது. அதாவது மொத்த மேற்பரப்பில் 3% மாத்திரம், மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக உள்ளது.

பூமியின் மேற்பரப்பில் இந்த விண்கற்கள் தொடர்ந்து விழுந்து கொண்டு இருந்தாலும் மக்கள் வாழும் பகுதிகளில் விழும் சாத்தியக்கூறுகள் குறைவு. இந்த விண்கற்களின் அளவு. மிகச் சிறிய கற்களில் இருந்து பல மைல்கள் விட்டமுடைய பெரிய பாறைகளாக இருக்கலாம். சிறிய கற்கள் பூமியின் மேற்பரப்பை அடைய முன்னர் எரிந்து சாம்பலாகிவிடும். ஆனால் பெரிய அளவு உடைய பாறைகள் முழுமையாக எரிய முன்னர் பூமியின் மேற்பரப்பை அடைந்துவிடும். 1908ஆம் ஆண்டு, 200 அடி நீளமான வால் நட்சத்திரத்தின் துண்டு ஒன்று, ரஷ்யாவின் சைபீரியா பிரதேசத்தின், Tunguska பகுதியின் மேல் விழுந்தது. இது Hiroshima வில் போடப்பட்ட அணுக்குண்டை விட 1000 மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது. இதேபோல இன்னுமொரு பாறை 1490ஆம் ஆண்டு சீனாவின் Ch'ing-yang நகரத்தில் விழுந்து 10,000 பேரைக் கொன்றது. இதுபோன்ற நிகழ்வுகள் ஒன்று தொடக்கம், மூன்று நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் என்றும், ஒரு மைலுக்கு அதிகமான விட்டமுடைய பாறைகள் 250,000 வருடங்களுக்கு ஒரு முறை விழும் எனவும் கூறப்படுகின்றது. அப்படியான 5 மைல்கள் நீளமான பாறை ஒன்று பூமியுடன் மோதி 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அனைத்து டைனசோர் விலங்குளை முற்றாக அழித்தது. நெப்டியூன் கிரகத்திற்கு அப்பால் உள்ள Kuiper Belt என்ற பிரதேசத்தில் ஒவ்வொன்றும் 50 மைல்களுக்கு அதிகமான விட்டமுடைய ஒரு லட்சம் பனிக்கட்டி பந்துகள் உள்ளன. இவை காலத்திற்கு காலம் வால் நட்சத்திரமாக பூமியை நோக்கி வருகின்றன. இப்படியான ஒன்று பூமியுடன் மோதினால் கரப்பான் பூச்சி அளவில் உள்ள உயிர் இனங்கள் கூட முற்றாக அழிக்கப்பட்டுவிடும். எனவே இப்படியான அழிவுகள் எப்போது நிகழும் எனக் கூற முடியாது.

அடுத்ததாக நுண்ணுயிர்களான வைரசு, பக்டீரியா ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய அபாயம் பற்றிப் பார்ப்போம். இந்த அழிவுகளை நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். கடந்த நூற்றாண்டில் நான்கு Flu எனப்படும் குளிர்காய்ச்சல் தாக்கங்களையும், HIV மற்றும் SARS எனப்படும் உயிர்களை கொல்லக்கூடிய தொற்று நோய்களின் தாக்கங்களையும் கண்டுள்ளோம். 1918ஆம் ஆண்டு பரவிய Flu காய்ச்சல் முதல் உலக மகா யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களை விட அதிகமானோரைக் கொன்றது. 1918ஆம், 1919ஆம் ஆண்டுகளில் 20 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டார்கள். எய்ட்ஸ் பரவலும் இதே அளவு மக்களைக் கொன்றுள்ளது. 14ஆம் நூற்றாண்டில் பரவிய Black Plague என்ற நோய் நான்கு ஐரோப்பியருக்கு ஒருவர் என்ற அளவில் மக்களை கொன்றது.

முன்னரைவிட தற்போது விஞ்ஞான வளர்ச்சியால் நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை இருந்தாலும் 'Jet' விமானங்களின் வசதியால் உலகம் சுருங்கிவிட்டதால் நாட்டுக்கு நாடு நோய் பரவும் வேகம் அதைவிட அதிகமாக உள்ளது. இந்த நோய்களுக்கு எதிராக, இவற்றை தோற்றுவிக்கக் கூடிய வைரசுக்களுக்கு எதிராக தடுப்பூசிகள் மற்றும் தடுப்பு மருந்துகள் உருவாக்கப்பட்டாலும், இவற்றை எதிர்க்கக்கூடிய இனங்களை அதாவது புதிய strainகளை இந்த வைரசுக்கள் உருவாக்குகின்றமையால், நோய்களைத் தடுப்பது கடினமாகின்றது. புது வகையான நோய்கள் உருவாகும் வாய்ப்புகளும் அதிகமாகின்றன. காடுகளை அழிப்பதினால், காட்டு விலங்குகள் மனிதர் வாழக்கூடிய இடங்களுக்கு அண்மையாக வருவதால், விலங்குகளின் நோய்கள் மனிதருக்கு பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகம். AIDS, பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் போன்றவை இப்படியாக விலங்குகளில் இருந்து மனிதருக்கு தொற்றும் நோய்களாகும். Ebola நோய் இந்த நூற்றாண்டில் மறுபடியும் பரவுகிறது. இதைவிட ஆபத்தான விடயம் இந்த நோய்களை உண்டாக்கும் வைரசுக்கள், பக்ரீயாக்கள் போன்றவற்றை பயங்கரவாத தாக்குதலுக்கு உபயோகிப்பதாகும். ஏற்கனவே சில நாடுகளும், சில பயங்கரவாத அமைப்புகளும் இப்படியான உயிரியல் ஆயுதங்களை தயாரித்து வைத்துள்ளன என அறியப்படுகின்றது. அணு ஆயுதங்கள், எறிகணைகள் போன்றவை விழுந்த இடத்திலும், அந்தக் கணத்திலும்தான் அழிவை ஏற்படுத்தும். ஆனால் உயிரியல் ஆயுதங்கள் தொடர்ந்து தங்கியிருந்து பெருகி அவற்றின் தாக்கத்தைத் தொடர்ந்து கொடுக்கும். ஒரு நாட்டில் இருந்து அண்டைய நாடுகளுக்கும் பரவக் கூடியன. இதனால் பாரிய அழிவுகள் ஏற்படலாம்.

மேற்கூறிய இரண்டு விடயங்களும், ஏற்கனவே அழிவுகளை ஏற்படுத்திய விடயங்களாகும். அடுத்ததாக நாம் பார்ப்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படாத, ஆனால் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமான வேற்றுக் கிரகவாசிகளினால் வரக்கூடிய ஆபத்து. பல்வேறு நாடுகளில் (கனடா உட்பட), பல்வேறு கால கட்டங்களில் மக்கள் வேற்றுக்கிரகவாசிகளின் விண்வெளிக்கலன்களான 'பறக்கும் தட்டு' என்று பொதுவாக அழைக்கப்படும். UFOக்களை (Unidentified Flying Objects) கண்டுள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது. ஒளிப்பதிவுகளும் இவை பற்றியதாக உள்ளன.

இதே நேரத்தில் போலியாகத் தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவுகளும் வெளியிடப்பட்டு உள்ளன. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த

வேற்றுக்கிரகவாசிகளின் விண்கலங்கள், சில நாடுகளில் தரையில் வீழ்ந்த போது அவை அந்தந்த நாட்டு இராணுவத்தினரால் பொது மக்கள் பார்க்க முடியாத விதத்தில் சுற்றி வளைத்து விண்கலங்களை அங்கிருந்து அகற்றிவிட்டு தடயங்களையும் முற்றாக அழித்தும் இருக்கின்றனர். மக்கள் இடையே பய உணர்ச்சி (Panic) ஏற்படாமல் இருக்கவும் சில நாடுகள் மற்றைய நாடுகளுக்கு தாம் கைப்பற்றிய வேற்றுக்கிரகவாசிகளின் விண்கலங்களின் தொழில்நுட்பம் தெரிந்து விடாமல் இருக்கவும் அதை மூடி மறைக்கின்றார்கள் எனவும் கூறப்படுகின்றது.

இந்த வேற்றுக்கிர வாசிகளின் விடயம் உண்மையாக இருக்கும் பட்சத்தில், இதுவும் ஒரு பாரிய அழிவை உண்டாக்கக்கூடிய விடயமாகும். எப்படி பூமியின் மிக அத்தியாவசியமான எரிபொருளான பெட்ரோலியத்தின் அளவு குறைந்து கொண்டு போய் ஒரு காலத்தில் முற்றாக தீர்ந்துவிடுமோ, அதேபோல வேற்றுக்கிரகவாசிகள் உபயோகிக்கும் எரிபொருளும் (எதுவாகவும் இருக்கலாம்) தீர்ந்து போகும் பட்சத்தில் அவர்கள் வேறு கிரகங்களுக்கு அதை தேடிச் செல்லலாம். இந்த வகையில் பூமிக்கும் வந்து செல்லலாம். எங்களது சூரியக் குடும்பத்தில் (Solar System) மற்றைய கிரகங்களில் உயிரினங்கள் இல்லை என்றாலும் கூட, எங்களுடைய சூரியன் போல் பல்லாயிரக்கணக்கான சூரியன்கள் ஆகும். நாம் இரவில் பார்க்கும் நட்சத்திரங்களும் சூரியன்கள் ஆகும். அவை பல்லாயிரக்கணக்கான ஒளி வருடங்கள் தொலைவில் உள்ளன. அப்படியான வெவ்வேறு சூரியன்களுக்கும் கிரகங்களைக் கொண்ட சூரிய குடும்பங்கள் உண்டு. அங்கு பூமியை ஒத்த சூழ்நிலை, காலநிலை கொண்ட கிரகங்கள் இருக்கக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. இந்த வேற்றுக்கிரகவாசிகள் பூமியில் தமக்குத் தேவையானவற்றை எடுக்க முற்பட்டால் பூமியிலிருந்து எதிர்ப்பு கிளம்பி, யுத்தம் தோன்றக் கூடும். ஆனால் எம்மை விட சக்திவாய்ந்த வேற்றுக்கிரகவாசிகள் பூமியிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் கொன்று, தங்களின் தேவையை பூர்த்தி செய்யக்கூடும். ஆனால் இந்த விடயம் இன்னும் கூட சர்ச்சைக்கு உரியதாகவும், உறுதியாகவும் கூற முடியாத விடயமாகவும் உள்ளது.

இவற்றை விட வேறு பல காரணிகளும் உள்ளன. இவற்றுள் அதிகமானவை இதுவரை நடைபெறவில்லை. ஆனால் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன எனக் கூறப்படுகின்றது. இவற்றை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம். இவற்றுள் ஒன்று Gamma Ray வெடிப்பு

ஆகும். இரண்டு வலுவற்ற நட்சத்திரங்கள் அல்லது சூரியன்கள் (நமது சூரியன் அல்லாத) மோதும் போது ஏற்படும் வெடிப்பு அல்லது 'Burst' ஆகும். இந்த Gamma கதிர் வெடிப்பு எமது சூரியனை விட 10 Quadrillion மடங்கு சக்தி வாய்ந்தது. Quadrillion என்பது 1ம் அதற்கு அடுத்தாக 16 பூச்சியங்களும் கொண்ட இலக்கமாகும். இந்த Gamma கதிர்கள் அதிக சக்தியுடைய உயர் அலைவீச்சு உள்ள மின்காந்த கதிர்வீச்சு ஆகும். இதுவரையிலும் இப்படியான வெடிப்புகள் மிகக்கூடிய தூரத்திலேயே ஏற்பட்டுள்ளன. ஆனால் எமது சூரியனில் இருந்து 30 ஒளி வருடங்களுக்கு குறைவான தூரத்தில் நடைபெற்றால் பூமியின் ஒரு பகுதி முற்றாக அழிந்து அதிகமான உயிரினங்கள் கொல்லப்படக் - கூடிய சாத்தியமுண்டு.

மின் கணினிகளின் அபரிமித வளர்ச்சியும், மற்றும் 'ரோபோக்கள்' எனப்படும் இயந்திர மனிதனின் வளர்ச்சியும் ஒரு காலத்தில் உலகை ஆளும் வல்லமையைப் பெற்று, தமக்கு போட்டியாக உள்ள மனிதர்களை அழிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் சேர்ந்து மொத்தம் 19,000 அணுக் குண்டுகளை வைத்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. வேறு சில நாடுகளும் இவற்றை இரகசியமாக தயாரிக்கின்றன. ஒரு நாடு இதை உபயோகப்படுத்த ஆரம்பிக்கும் போது சங்கிலித்தொடர் போல பல நாடுகளும் இவற்றை தன்னிச்சையாகவோ, அல்லது தாமாக இயக்கியோ அணுவாயுதங்களை உபயோகிக்கும் போது, உலகம் பூராகவும் அழியக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இப்படியாக பல்வேறு காரணிகள் உலக அழிவுக்கென இருந்தாலும் அவற்றுள் முக்கியமாக விண்கல் அபாயம் போன்றவை எந்த நேரத்திலும் ஏற்படலாம்.



விஜே குலதுங்கம்

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் பட்ட மேற்படிப்பை ஜப்பானில் நிறைவு செய்துவிட்டு கனடாவிற்கு 1988 இல் புலம்பெயர்ந்தார். 25 ஆண்டுகளாக றோயல் வங்கியில் Business System Analyst ஆக தொழில்புரிகிறார். இவர் ஓர் ஊடகவியலாளர், ஒலி, ஒளிபரப்பாளர், நான்கு ஆண்டுகளுக்கு மேலாக விளம்பரம் பத்திரிகையில் அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த பல ஆக்கங்களை பதிவு செய்துள்ளார். Tvi, CMR, CTR, CTBC தமிழ் ஊடகங்களிலும் தமது தடத்தைப்பதித்துள்ளார்.





1991-2015 'விளம்பரம்' இருபத்தைந்து ஆண்டுகள்

வானியலில் தமிழர் பங்களிப்பு

- கனி

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளின் ஆரம்பத்தின் ஒரு கோடைக் காலம். இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற சி. வி. ராமனின் சகோதரரின் மகனான சுப்பிரமணியன் சந்திரசேகர் என்ற இளம் பட்டதாரி இங்கிலாந்திற்கு கடல் வழியாகப் பயணப்பட்டுக் கொண்டிருந்தார். வானவியலின் விற்பன்னரான சேர் ஆதர் எடிங்ரன் என்பவரின் மேற்-பார்வையின் கீழ்த் தனது படிப்பினைத் தொடர்வதற்காகவே அவர் அப்பயணத்தை மேற்கொண்டார். அக்கடற்பயணக் காலம் இயற்பியல் உலகின் ஒரு திருப்புமுனையாக இருக்கப்போகிறது என்பதனை அத்தமிழ் இளைஞன் அப்போது அறிந்திருக்கவில்லை. பயணத்தின் போது ஓரிரவில் கப்பலின் மேற்தட்டில் நின்று வான்வெளியின் அழகினை இரசித்துக் கொண்டிருந்த சந்திரசேகரை விண்மீன்கள் பார்த்து கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. குட்டிக் குட்டி வெண்ணிற விண்மீன்கள், மஞ்சள் நிற விண்மீன்கள், நீல ஒளிவீசிக் கொண்டிருந்த விண்மீன்கள், இன்னமும் சற்றுப் பருமனாயிருந்த செந்நிற விண்மீன்கள் எனப் பலதரப்பட்ட விண்மீன்களையும் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த சந்திரசேகரின் மனதில் மெல்லிய மங்கலான ஒளியை உமிழ்ந்து கொண்டிந்த சின்னஞ் சிறிய விண்மீன்கள் பற்றிக் கொஞ்சம் வித்தியாசமான சிந்தனை எழுந்தது. 'வெண்குள்ளர்' என விஞ்ஞானிகளால் அழைக்கப்படும் இவ்விண்மீன்கள் மிகவும் சிறியன. பருமனில் எங்களின் புவியினை விட கொஞ்சம்தான் பெரியன.

பெரும்பாலும் வாயுக்களின் திரட்சியினாலேயே விண்மீன்கள் ஆனவை. பெருமளவில் ஐதரசன் வாயுவையே கொண்டிருப்பவை. விண்மீன்களில் வாயுக்களும் மற்றும் சடங்களும் 'பிளாஸ்மா' நிலையி-லேயே காணப்படுகின்றன. இனி, விண்மீன்களில் உள்ள சடங்களின் அணுக்களுக்கு இடையில் உள்ள ஈர்ப்புவிசை, விண்மீனைச் சுருங்க வைக்க முயற்சிக்கும். அதே நேரத்தில் விண்மீன்களில் நின்றும் வெளியாகும் சக்தி மற்றும் அமுக்கம் என்பன விண்மீனை பருமனிற் பெரியதாகப் பண்ண முயற்சித்துக் கொண்டு இருக்கும். எதிரெதிரென இவ்விரு விளைவுகளும் ஒன்றை ஒன்று சமன் செய்ய விண்மீன் தனக்கென ஒரு பருமனைப் பெற்றுச் சக்தியை வீசி ஒளிர்ந்து கொண்டு

இருக்கும். இதுதான் சாதாரணமாக விண்மீன் ஒன்றின் நிலையாகும். இந்த விண்மீன்களின் சமநிலை என்பதில்தான் சந்திரசேகரின் சிந்தனை சற்று வேறுபட்டு ஓடியது. சின்னஞ் சிறிய வெண்குள்ள விண்மீன்களுக்கு இன்னமும் கொஞ்சமோ அல்லது அதிக அளவிலோ ஐதரசனை, அதாவது சடத்தைக் கொடுத்தால் என்ன நிகழும்? அப்படிச் சடத்தினைச் சேர்த்தால் வெண்குள்ளனில் சடத்தின் அளவு அதிகரித்துவிடும். அந்நிலையில் விண்மீனின் உள்ளே ஈர்ப்பு அதிகமாகிவிடும். அதனால் விண்மீன் சின்ன-தாகச் சுருங்கத் தொடங்கும். ஆனால் சற்று நேரத்தில் அமுக்கமும் வெளியாகும் சக்தியும் விண்மீன் மேலும் சுருங்குவதைத் தடுத்துவிடும். இன்னமும் அதிக சடத்தைக் கொடுத்தால் மேலும் சிறியதாக வர முயற்சிக்கும். அமுக்கம் மீண்டும் விண்மீன் சுருங்குவதைத் தடுக்கும். ஆனால் ஒரு நிலையின் கீழ் விண்மீன் சுருங்குவதை அமுக்கத்தால் தடுக்க முடியாது போய்விடும். அதன் பின்னர் விண்மீன் தொடர்ந்து சுருங்கிக் கொண்டே போகும். எதுவரைக்கும் அவ்வெண்குள்ள விண்மீனாற் சுருங்க முடியும்? இக்கேள்விக்கான பதிலும் அதனூடான சிந்தனை விரிவும்தான் அக்காலத்தில் இருந்த விஞ்ஞானிகளை ஆடிப்போகச் செய்தது. கணிதத்திற் பலே கெட்டிக்காரராக இருந்த சந்திரசேகர், தனது மூளையை கசக்கிப் பிழிந்து, அருமையான, ஆனால் இயற்கைக்குச் சற்று ஒவ்வாத முடிவொன்றினைக் கூறினார்.

கதிரவனின் திணிவினைப் போல் 1.4 மடங்கிற்கு மேல் எந்தவொரு வெண்குள்ள விண்மீனும் இருக்க முடியாது என்ற உண்மையை சந்திரசேகர் கணித்துக் கண்டுகொண்டார். இந்த அரிய கண்டுபிடிப்பானது இன்றும் 'சந்திரசேகர் எல்லை' என்று பெருமையாக அழைக்கப்படுகின்றது. விடயம் இத்துடன் முடிந்து விடவில்லை. சந்திரசேகரின் எல்லைக்கும் அப்பால் வெண்குள்ள விண்மீன் திணிவினைக் கொள்ளுமாயின் என்ன நிகழும்? இக்கேள்வியின் விடைதான் விஞ்ஞான உலகினைப் பரபரப்படைய வைத்தது. சந்திரசேகரின் எல்லைக்கும் மேல் வெண்குள்ள விண்மீன் திணிவினைக் கொள்ளுமாயின் வெண்குள்ள விண்மீன் சுருங்கிச் சிறுத்துக் கொண்டே போய் முடிவில் பருமனில் ஒரு புள்ளியாகி, ஒன்றுமில்லாத ஒன்றாக, ஆனால் அந்த விண்மீனின் எல்லாமும் ஒன்றாக ஒடுங்கிய, மிகப் பாரமான ஏதோவாக மாறிவிடும். இப்படியாக அந்த விண்மீன் 'ஏதோவாக' மாறிப் போவதை இயற்கையின் எந்த விளைவாலும் தடுக்கவே முடியாது. அதாவது மிகப் பெரிய பாரமான விண்மீன், தனது சடமெல்லாம் ஒன்றாக ஒடுங்கி, ஒரு புள்ளியாகி, கண்களுக்குப் புலப்படாது, தான் இருந்த இடத்திலேயே ஏதோ ஒன்றாக மாறிவிடும். தனது 6 மாதக் கடற்பயணத்தின் போது இவ் அதிசய முடிவினைச் சந்திரசேகர் பெற்றுக் கொண்டார்.

இங்கிலாந்து வந்து சேர்ந்த சந்திரசேகர், தனது முடிவினை எடிங்ரனி டம் கூற, அவர் வாயடைத்துப் போய்விட்டார். அவரால் இம்முடிவினை நம்பவும் முடியவில்லை, ஏற்காமல் இருக்கவும் முடியவில்லை. சந்திரசே-கரின் இந்த முடிவு காட்டுத்தீயெனப் பரவி, விஞ்ஞானிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அயன்ஸ்ரைன் 'இதனை என்னால் சீரணிக்கவே முடியவில்லை' என்றாராம். ஆனால், அவரின் பொதுச் சார்புக் கொள்கைக்கான சமன்பாட்டின் தீர்வும் சந்திரசேகரின் முடிவினைச் சரியெனக் காட்ட, சந்திரசேகரின் முடிவு, இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விடயம் அத்துடன் நின்று விடவில்லை. விண்மீன் என்று ஒன்றுமே இல்லாத ஏதோவாக மாறிவிட்ட புதிய நிலையை 'ஒருமம்' என்றார்கள். இந்த ஒருமம் என்ற, புரிந்து கொள்ள முடியாத நிலையிலேயே பேரண்டத்தின் சடங்கள் எல்லாம் முடிவடைகின்றன என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அல்லாமலும் பேரண்டத்தின் தோற்றமே இந்த ஒருமம் என்ற நிலையில் இருந்துதான் வந்தது என்பதையும் விஞ்ஞானிகள் இன்று கண்டுகொண்டார்கள். ஆம், ஆழமான ஆய்வுகள் பேரண்டத்தின் ஆரம்பமாகிய 'பிக்பாங்' என்பதும் இப்படியான ஒரும நிலைதான் என்பதைக் காட்டிக்கொடுத்து விட்டது. அதாவது பேரண்டத்-தின் ஆரம்பம் எப்படியானது என்ற புதிரினை அவிழ்த்துவிடுவதற்கும் சந்திரசேகர் என்ற தமிழரின் பங்களிப்புத்தான் முக்கியமானதாக இருந்தது. பிந்நாளில் அமெரிக்கராக மாறிவிட்ட சந்திரசேகரின் உழைப்பிற்கான பரிசாக, அமெரிக்கர்கள், விண்வெளியில் உலவி, கலக்சிகளின் அசைவு-களை அவதானிக்கும் விண்கலத்திற்கு 'சந்திரா' எனப் பெயரிட்டுள்ளார்கள். இந்நாட்களில் விண்வெளி ஆய்வு என்றதுமே எங்கள் நினைவில் வருவது 'நாசா'தான். இந்த நாசாவிலும் பெருமளவில் தமிழர்கள் உயர் நிலை ஆய்வுகளில் இருந்து வானியல் விவகாரங்களில் அதிக அளவு பங்களிப்பது எங்களுக்கெல்லாம் பெருமை தருமொரு விடயம்தான். ஆனால்..... தொடர்வதற்கு முன்னால், நம்முன்னவர்களும் வானியல் அறிவில் சளைத்தவர்கள் இல்லை என்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அறிஞர்கள் சிலர் அவ்வப்போது இந்தக் கருத்துக்களை தரவுக-ளுடன் எடுத்துக் கூறுகின்ற போதும் அது நம்மவர்களிடம் எவ்வளவு தூரத்திற்குச் சென்றிருக்கின்றது என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

இன்று பேரண்டத்தின் பிறப்பின் இரகசியமான பிக்பாங்கை ஏற்றுக்-கொள்வதற்கான அடிப்படை ஆதாரத்தைத் தந்தவர் தமிழரான சந்திரசேகர் என்பதை உலகறியும். ஆனால் இந்த பிக்பாங்கின் நிலைதனையிட்டு இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரே தமிழர்கள் தெளிந்திருந்தனரோ என ஐயுற வேண்டியுள்ளது. ஆச்சரியமாக இருக்கின்றதா? தொல்காப்பியத்தின்

பொருளதிகாரத்தின் அகத்திணை என்னும் பகுதியில் வருமொரு பாடலைப் பாருங்கள்.

முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே

இதற்கு உரையெழுதியோர் அழகாக தமிழ் முத்திரை பொறிக்கக்கூடிய விளக்கத்தைக் கொடுத்திருப்பதைத் தமிழறிஞர் யாவருமே அறிவர். இப்பாட்டினை இன்னொரு கோணத்திற் பாருங்கள். இதன்படி, முதல் என்பது, நிலமும், பொழுதும் இணைந்த ஒன்றெனச் சுலபமாக அறிந்து கொள்ளலாம். நிலம் என்பதை இடம் என்று இன்னமும் விரிவுபடுத்தலாம். இந்த இடம் என்பது வெளியின் ஒரு பகுதி. ஆக, நிலமென்பதை வெளி யெனக் கருதலாம். இனி, பொழுது என்பது நேரமாகும். இவையிரண்டும் இணைந்ததுதான் முதல் எனப் பொருளதிகாரம் கூறுகிறது. அதாவது வெளியும் நேரமும் இணைந்ததே ஆரம்பம் எனப் பொருளதிகாரத்திற் கூறப்பட்டுள்ளது. இப்பொழுதுதான் அந்த ஆச்சரியம் வெளிக் கொண்டு வரப்படுகிறது. எவ்வாறெனில், இதுதான் பேரண்டத்தின் ஆரம்பநிலை என்பதனை எந்தவொரு இயற்பியல்வாதியும் சட்டெனப் புரிந்துகொள்வான். ஏனெனில் பேரண்டத்தின் தோற்றமாகிய 'பிக்பாங்'கில் வெளியும், நேரமும் ஒன்றென முதலாகத் தோன்ற, அதன் பின்னராக அவற்றில் இருந்துதான் பேரண்டத்தின் சகலதும் தோன்றின என்று இயற்பியல் கூறுகின்றது.

அதாவது வெளி என்ற நிலம், பொழுது ஆகிய இவையிரண்டும்தான் பேரண்டத்தின் முதலானதென இயற்பியல் கூறுகின்றது. பிக்பாங் ஒருமமானது இடமும், பொழுதும் ஒன்றாக இருந்த முதல் நிலையாகும். சந்திரசேகர் வெளிப்படுத்தியிருந்த ஒருமம் என்பதான நிலையும் இதுவே. ஆக, பிக்பாங் பற்றிய ஆரம்ப விளக்கம், தொல்காப்பியத்தில்தான் முதன் முதலிற் கூறப்பட்டுள்ளது எனக் கொள்ள வேண்டும். ஆனால் அதை நாங்களும் அறியவில்லை, எந்தவொரு விஞ்ஞானியும் கூட அறிந்திருக்க-வில்லை. இந்த விளக்கத்தினை ஆச்சரியமான தற்செயல் ஒன்றிப்பு எனச் சிலர் கூறலாம். ஆனால் தொல்காப்பியத்தில் ஏராளமான விஞ்ஞானச் சங்கதிகள் 'என்மனார் புலவர்' என்ற குறிப்புகளொடு இருப்பது யாவரும் அறிந்ததே. அவை அந்தந்த இடங்களில் விஞ்ஞானச் செய்திகளாக, தரவுக-ளாக விடப்பட்டுள்ளன. தமிழறிஞர்களினால் அவற்றினைத் தமிழின் வெளிப்பாட்டுக்குள் கொண்டு வருர முடிவதில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடலிலும் 'இயல்புணர்ந் தோரே' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்கலாம்.

புறநானூறு, பரிபாடல் போன்ற சங்க இலக்கியப் பாடல்களில் பல வானியல் விபரங்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வானின் அமைப்பு, விண்மீன்களின் வகைகள், இரவின் வெளிச்சப் பொட்டுகளின் பாகுபாடுகள், பொழுதுகளின் பகுப்புகள், விண்ஊர்திகள், விண்வெளிப் பயணங்கள் பற்றிய குறிப்புகள், இன்னமும் அந்நியர்கள் என இக்காலத்தில் மேலை நாட்டவர்கள் பரபரப்பாகக் கூறும் வேற்றுக் கிரக மனிதர்கள் என்பவை எல்லாம் சாதரண விடயங்களாகச் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. இப்படியாக வானியலில் தமிழரின் பங்களிப்பு அபரிமிதமாக இருந்திருக்கின்றது. ஆனால், அவற்றை நாங்கள்தான் கண்டுகொண்டதுமில்லை, பெரிதுபடுத்தியதுமில்லை. ஏன்? தமிழ் அறிஞர்கள் பெரும்பாலும் இலக்கியங்களில், இலக்கணங்களில் இருந்த தமிழ்ச் சுவையிலேயே சொக்கிப் போகின்றார்கள், கிறங்கிப் போயிருந் – தார்கள். விண்வெளி பற்றிய குறிப்புகளைக் கண்டாலும் அவற்றில் இருந்த தமிழ் இலக்கணக் கட்டமைப்புகளைப் பார்த்து மயங்கினரே தவிர அவற்றிற் கூறப்பட்டிருந்த உண்மைகளைக் கிளறிப் பார்த்ததில்லை. அப்படிப் பார்த்திருந்தால் 'வலவன் இல்லா விமானம்' பற்றிய மர்மம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புவியினருக்குத் தெரிந்திருக்கும். பரிணாமத் தத்துவத்திற்கு டார்வினும், அணுவின் இரகசியங்களுக்கு டால்ரனும் வரும் வரை, 2000 ஆண்டு காலம் காத்திருந்திருக்கத் தேவையில்லை.

தமிழிலக்கியங்களிற் கூறப்பட்டிருக்கும் தமிழரின் அறிவியற் பங்களிப்புகள் அறிவியல் உலகினருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால், மனித இனம் விஞ்ஞானத்தில் இன்று இன்னமும் அதிக முன்னேற்றம் கண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஏன் அறிஞர்கள் இதனைக் கண்டுகொள்ளவில்லை. காரணம், தமிழுக்கான, தமிழருக்கான தகுதியை அவர்கள் அறிந்திருக்கவில்லை. தமிழரின் அறிவியற் கருவூலங்கள் உலகினருக்குக் கிடைக்கக் கூடியதான அளவில் உலக அரங்கில் தமிழ்மொழியின் தகுதி அறிவியல் அறிஞர்களுக்குக் கிட்டவில்லை. ஒரு வேளை அவர்கள் அறிந்திருந்தால், வழக்கொழிந்து புரியாதிருக்கும் சுமேரிய, பாபிலோனிய, எகிப்திய மொழிகளில் தோண்டிப் பார்க்கும் வானியல், அறிவியல் விடயங்களை, கிரேக்கர்களின் நூல்களில் புரட்டிப் படிக்கும் விண்வெளிக் கருத்துக்களை விடவும் அரியதான விடயங்களை தமிழ் இலக்கியங்களில் கண்டிருப்பார்கள். உலகமும் வானியலில் தமிழரின் பங்களிப்பின் மகத்துவத்தினை கூறிக்கொண்டிருக்கும். தமிழரான சுப்பிரமனியன் சந்திரசேகரும் குடியுரிமை பெற்ற அமெரிக்கர் என்றே அறிவியல் உலகினரால் அழைக்கப்படுகிறார். இந்நிலை மாறிட வேண்டுமெனில், தமிழரின் கண்டுபிடிப்புகள் தமிழ் மொழியின் ஊடாக

வரவேண்டும். அப்படியான நிலை வந்தால்தான் வானியலில் மட்டுமல்ல, எந்த அறிவியற் பகுதியிலும் தமிழரின் பங்களிப்பினை உலகம் கண்டு-கொள்ளும். வெறுமனே விண்வெளி ஓடங்களில் புவி பற்றிய தகவல்களை தமிழ்மொழியில் பொறித்துக் கொள்வது போதாது. வானியல் பற்றிய விபரங்களில் தெளிவு பெறுவதற்கும் தமிழ் இலக்கியங்களை அறிவியலாளர்கள் நாடவேண்டும். அதற்கு முன்னராக, நம் தமிழ் அறிஞர்கள், வானியல், அறிவியல் பற்றிய அறிவினையும் வளர்த்து, தமிழ் இலக்கியங்களில் உள்ள அறிவியற் கருவூலங்களை உலகினருக்கு வெளிக்காட்ட வேண்டும். அப்பொழுதுதான் வானியலில் தமிழரின் பங்களிப்பு மேன்மையாகும்.

இது நடக்குமா? தமிழரைப் பொறுத்தவரையில் அறிவியல் உலகின-ருக்கும், இலக்கிய உலகினருக்கும் இடையில் ஒரு பெருவெளி இருக்கின்றது. இவ்வெளி இல்லாதவிடத்தே வானியலில் தமிழரின் பங்களிப்பு எவ்வளவு என்ற உண்மை நிலை வெளிவரும். வெளிவருமா?



கனி மாஸ்டர்

மர்மக் கதைகள் எழுதியவர். கனடாவில் 12 வருடங்களுக்கு மேலாக 'விளம்பரம்' பத்திரிகையில் விஞ்ஞானக் கட்டுரைகள், நாவல் எழுதி வருகிறார். உலகத் தமிழோசை, தமிழர் தகவல் போன்ற சஞ்சிகைகளிலும் இவரது விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்தன. வேற்றுக்கிரக மனிதர்கள், இனம் தெரியாத பறக்கும் தட்டுகள், பிரபஞ்சம், புவியீர்ப்புப் பற்றிய விடயங்கள், வியத்தகு விண்மீன்கள் எனும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். 'பொதிகைப் புதுமலர்கள்' மரபுக் கவிதை நூலில் இவரது விஞ்ஞானக் கவிதைகள் வெளிவந்தன.

வானசாத்திரமும் தமிழர் காலக்கணிப்பும்

- சிவ. ஞானநாயகன்



முதலில் காலக்கணிப்பு பற்றி வேதங்கள் (இருக்கு வேதம்) புராணங்கள் (விஷ்ணு புராணம்) ஆகியன என்ன கூறுகின்றன என்று பார்ப்போம். பூமியின் ஆயுட்காலத்தை இவை ஒரு கற்பம் என்கின்றன.

ஒரு கற்பம் எனப்படுவது 1000 சதுர்யுகம் ஆகும். ஒரு சதுர்யுகம் நான்கு யுகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன கிருதயுகம் எனப்படும் 1,728 ஆயிரம் வருடங்கள், திரேதாயுகம் எனப்படும் 1,296 ஆயிரம் வருடங்கள், துவாபரயுகம் எனப்படும் 864 ஆயிரம் வருடங்கள் மற்றும் கலியுகம் எனப்படும் 432 ஆயிரம் வருடங்கள். அதாவது ஒரு கற்பம் எனப்படும் நாம் வாழும் பூமியின் ஆயுட்காலம் 432 கோடி வருடங்கள் (4.32 பில்லியன் வருடங்கள்) என்கின்றன வேதங்களும், புராணங்களும்.

தற்போது கலியுகத்தின் 5,117 ஆவது வருடம் நடைபெறுகிறது. அதாவது, இப்பூமி தோன்றி 453 சதுர்யுகங்கள் முடிவடைந்து, 454 ஆவது சதுர்யுகத்தில் மூன்று யுகங்களும் முடிவடைந்து, நான்காவது யுகமான கலியுகத்தில் 5,116 வருடங்கள் முடிவடைந்துவிட்டன.

432 கோடி வருடங்கள் கொண்ட பூமியின் ஆயுட்காலத்தில் 197 கோடி (சரியாக சொல்வதானால் 1,972,949,115) வருடங்கள் முடிவடைந்து விட்டன. நடைபெறும் இவ்வருடத்தை விட பூமி முற்றாக அழிவதற்கு இன்னும் 234 கோடி (சரியாக சொல்வதானால் 2,347,050,884) வருடங்கள் இருக்கின்றன.

இந்துமத தத்துவத்தை மூலமாக கொண்ட மதங்களே (சீக்கியம், சமணம், பௌத்தம்) பூமியின் வயதை இவ்வாறு 197 கோடி (1.97 பில்லியன்) வருடங்கள் என்கின்றன. ஆனால் விஞ்ஞானத்தில் முன்னேறிய மேற்கத்தைய நாடுகளின் Abrahamic தத்துவத்தை மூலமாக கொண்ட மதங்களோ (யூத, கிறிஸ்தவ, இஸ்லாம்) பூமி தோன்றி ஆக சில ஆயிரம் ஆண்டுகள் மட்டுமே சென்றுள்ளன என்றே கூறுகின்றன.

தற்போது விஞ்ஞானத்திற்கு வருவோம். பூமியின் வயதை பூமியில் உள்ள கற்களை கதிரியக்க முறையில் ஆராய்ந்து (Radiometric dating) பூமிக்கு 4.54 பில்லியன் வருடங்கள் வயதாக இருக்கலாம் எனக் கண்டு பிடித்துள்ளனர். Stanford University இன் ஆய்வில் அமெரிக்காவின் அரி-சோனாவில் கிடைத்த கல் ஒன்று 4.54 பில்லியன் வருடங்கள் பழமை ஆனது எனவும், மேற்கு அவுஸ்திரேலியாவின் Jack Hills என்ற இடத்தில் எடுத்த கல் ஒன்று 4.40 பில்லியன் வருடங்கள் பழமைவாய்ந்தது எனவும் முடிவுகள் கிடைத்துள்ளன.

தம்மை தாமே பகுத்தறிவுவாதிகள் என்போர் சிலர், எமது காலக்கணிப்பு முறை தொடர்ந்து எண்ணப்பட்டு வரவில்லை எனவும், அவை 60 வருட சுழற்சியே எனவும் பிழையாக கூறி வருகின்றனர். அவர்கள் காலக் கணிப்பை தொடர்ந்து எண்ண வேண்டும் என்று, வள்ளுவர் பிறந்தது என எந்தவித விஞ்ஞான ஆய்வுகளும் செய்யாமல் ஒரு கற்பனைத்திகதியை (தை 15, 31 கி.மு.) கூறி, அதில் இருந்து வள்ளுவர் ஆண்டு என எண்ணுமாறு கேட்கின்றனர். இவ்வள்ளுவர் ஆண்டு என்பது இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் (1921) தமிழ் மக்களை, சுயஆட்சிக்கு தீவிர ஆதரவு அளித்து வந்த பிராமணர்களுக்கு எதிராக பிரிப்பதற்காக ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆதரித்தவர்களால் புகுத்தப்பட்டது.

எமது காலக்கணிப்பு முறையோ பூமி தோன்றிய காலத்தில் இருந்து ஆரம்பித்து தொடர்ந்து எண்ணப்பட்டு வருகிறது. தற்போது கலியுகத்தின் 5,117 ஆவது வருடம் நடைபெறுகிறது என முன்பு கூறியிருந்தேன். இதை தற்போது ஆங்கிலத்தில் பாவிக்கப்படும் Gregorian கலண்டர் முறை மூலம் பின்னோக்கி கணித்துப்பார்த்தால் கலியுக வருடம் கிறிஸ்துவிற்கு முன்னர் 3102 (BCE) இல் ஆரம்பித்துள்ளது எனக்காணலாம். அதாவது தற்போது

வழக்கத்திலுள்ள கலியுக வருட கணிப்புக்கள் கி.மு. 3102 இல் இருந்து தொடர்ந்து எண்ணப்பட்டு (கணிக்கப்பட்டு) வருகின்றன. நாட்களின் பெயர்கள் ஏழும் எவ்வாறு திரும்பத்திரும்ப ஒவ்வொரு கிழமையும் வருகின்றனவோ அதேமாதிரித்தான் வருடங்களின் பெயர்கள் அறுபதும் திரும்பத் திரும்ப 60 வருடங்களுக்கு ஒருமுறை வருகின்றன. ஆனால், வருடங்கள் தொடர்ந்தே எண்ணப்பட்டு வருகின்றன.

வேதங்களும் புராணங்களும் கூறுவதை எதிர்க்கும் பகுத்தறிவு வாதிகள் என்போர் விஞ்ஞானபூர்வமாக கி.மு. 3102 இல் இருந்து கணிக்கப்பட்டு வரும் கலியுக வருடக்கணிப்பை கூட ஏற்க மறுத்து விதண்ட வாதம் புரிவது அவர்களுக்கு விஞ்ஞான அறிவு குறைவு என்பதை வெள்ளிடை மலையாக காட்டுகிறது. இனி ஒரு வருடம் என்பது என்ன? அது எவ்வாறு கணிக்கப்படுகிறது? எனப் பார்ப்போம்.

வருடம்

வருடத்தைப் பற்றி அறிய முன்னர் நாங்கள் இரண்டு விடயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலாவது விடயம் இவ்வருட கணிப்பு முறைக்கும் எந்த ஒரு சமய நம்பிக்கைக்கும் தொடர்பு இல்லை. இது முற்று முழுதாக வானசாத்திர நிகழ்வுகளை கொண்டு விஞ்ஞான-பூர்வமாக கணிக்கப்படுகிறது.

இரண்டாவது விடயம், இந்த வானசாத்திர நிகழ்வின் மூலம் வருடப் பிறப்பு கணிப்பது தமிழர் வாழ்ந்த மற்றும் வாழும் (இலங்கை, தென் இந்தியா, தென்கிழக்கு ஆசியா) இடங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. இதனால் இக்காலக் கணிப்பு முறைக்கும் தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பெரும்பாலான வட இந்திய மக்களால் இந்த வருடப்பிறப்பு கணிப்பு முறை பின்பற்றப்படுவது இல்லை. இதனால் பகுத்தறிவுவாதிகள் என்போர் கூறுகிற எமது காலக்கணிப்பு முறை ஆரியர்களுடையது என்ற வாதமும் பொய்யாகின்றது.

சூரியனைப் பூமி சுற்றிவர சரியாக எடுக்கும் காலம்தான் தமிழ் காலக்-கணிப்பில் வரும் ஒரு வருடம் ஆகும். இது தொடர்பு வேக முறைப்படி (மறுபக்கமுள்ள படம் - 1 பார்க்கவும்) விஞ்ஞானரீதியில் கணிக்கப்படும்.

அண்டவெளியில் முதலாவது புள்ளி (First Point of Aries) என வான-சாத்திரம் குறிக்கும் மேட இராசியின் (Constellations) ஆரம்ப புள்ளியில் இருந்து புறப்படும் சூரியன் மீண்டும் சரியாக அந்தப்புள்ளிக்கு வர எடுக்கும்

படம் – 1



காலமே தமிழர்களுக்கு ஓர் ஆண்டு ஆகும். இவ்வாறு ஒரு முழுச்சுற்று சுற்றுவதற்கு 365 நாட்கள் 5 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் 46 விநாடிகள் எடுக்கின்றன. இதை நாட்களில் கூறப்போனால் சூரியனைப் பூமி ஒரு சுற்று சரியாக சுற்றிவர 365.24237 நாட்கள் எடுக்கின்றன. இதுவே தமிழர்களின் ஒரு வருடம் ஆகும்.

ஆங்கில வருடமும் (Gregorian கலண்டர்) சூரியனைப் பூமி சுற்றுவதைக் கொண்டே கணிப்பதாகக் கருதப்பட்டாலும், அது மனிதர்களால் இலகுவாக கணிப்பதற்காக அண்ணளவாக்கப்பட்ட நாட்கள் மற்றும் மாதங்கள் மூலம் கணிக்கப்படுகின்றது. ஆங்கில வருடம் ஒன்று 365 நாட்களுக்கு ஒருமுறை வருவதாக கணிக்கப்படுகிறதே ஒழிய சூரியனைப் பூமி சுற்றி சரியாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருவதை வைத்து கணிக்கப்படுவது இல்லை. இதனாலேயே ஆங்கில வருடப்பிறப்பு சரியாக மார்கழி 31 ஆம் திகதி இரவு 12 மணிக்கு பிறக்கிறது. இவ்வாறு 365 நாட்கள் என அண்ணளவாக்கப்பட்ட குறைபாட்டாலேயே நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஒரு நாளைக் கூட்டி அவ்வருடம் 366 நாட்கள் கொண்ட லீப் வருடம் (Leap year) என கணிக்கவேண்டியுள்ளது.

மேலே தமிழ் வருடம் கணிக்கும் போது சூரியன் (தொடர்பு வேகப்படி) ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒரு சுற்று சுற்றிவர 365.24237 நாட்கள் எடுக்கின்றது எனப்பார்த்தோம். இப்போது ஆங்கில வருடக்கணிப்பில் லீப் வருட திருத்தத்தை மேற்கொண்டால் அது ஒரு வருடத்தில் 365.25 நாட்கள் என்றே வருகிறது. இதுகூட அண்ணளவுதான். ஏனெனில் அவர்கள் 0.24237 ஐ 0.25 என அதிகரித்து, அண்ணவாக்கியுள்ளனர். இதனால் ஆங்கில வருடக்கணிப்பில் நானூறு வருடத்திற்கு ஒரு தடவை 3 நாட்கள் அதிகரிக்கின்றன.

இதனால் வரும் பிரச்சினையைத் தவிர்க்க ஆங்கில வருடக் கணிப்பில் 100 ஆல் பிரிக்கப்படும் வருடங்களில் லீப் வருடம் வராமலும், 400 ஆல் பிரிக்கப்படும் வருடங்களில் லீப் வருடம் வரலாம் எனவும் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனாலேயே 2000 ஆம் ஆண்டில் லீப் வருடம் வந்தது. ஆனால், 2100 ஆம் ஆண்டில் லீப் வருடம் வராது. சரியாக கூறுவதானால் ஆங்கில வருடக் கணிப்புக்கள் 400 வருடங்களுக்கு ஒருமுறை தான் சரியாக சூரியனைப் பூமி சுற்றுவதுடன் ஒத்துவருகிறது.

பார்த்தீர்களா! இவ்வாறு ஒரு பிரச்சினை தமிழர் ஆண்டுக்கணிப்பில் இல்லை. தமிழ் வருடப்பிறப்பு ஒவ்வொரு வருடமும் சூரியன் ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு வரும் நேரம் அதாவது 365 நாட்கள் 5 மணித்தியாலங்கள் 48 நிமிடங்கள் 46 விநாடிகளுக்கு ஒரு தரம் பிறக்கிறது. இதனால் தமிழ் வருடப்பிறப்பு ஆங்கில வருடப்பிறப்பு போல் அல்லாமல், ஒரு நாளில் எந்நேரத்திலும் வரலாம். சூரியன் ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு சரியாக வரவேண்டும் என்பதால் தமிழ் வருடப்பிறப்பு ஒவ்வொரு வருடமும் இதே நாளில் இதே நேரத்தில் மட்டும் தான் வரும் என கூற முடியாது. தமிழ் வருடப்பிறப்பை வானசாஸ்திர நிகழ்வை விஞ்ஞானரீதியில் கணிப்பதன் மூலம் மட்டுமே துல்லியமாகக் கூறலாம். இப்போது தமிழ் காலக்கணிப்பில் வருடங்களை கணிப்பது பூமி தோன்றியகாலத்தில் இருந்தே தொடர்ந்து எண்ணப்பட்டு வருகிறது எனவும், அவை சூரியனைப் பூமி சுற்றும் விஞ்ஞான நிகழ்வை வைத்தே தொடர்புவேக முறைப்படி கணிக்கப்படுகிறது எனவும் அறிந்து கொண்டீர்கள். இனி தமிழ் மாதங்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன எனப்பார்ப்போம்.

மாதம்

சூரியனைப் பூமி ஒரு முழுச்சுற்று சுற்றிவர 360 பாகை பிரயாணம் செய்ய வேண்டும் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். முதலாவது புள்ளி என வானசாத்திரம் கூறும் மேட இராசியின் ஆரம்பத்தில் இருந்து ஒவ்வொரு 30 பாகையையும் சூரியன் கடக்க எடுக்கும் காலமே தமிழ் காலக்கணிப்பில் ஒரு மாதம் ஆகும். இதனாலேயே சூரியன் பூமி தொடர்பாக ஒரு முழுச்சுற்று சுற்றிவர 12 மாதங்கள் (12 x 30 = 360 பாகை) எடுக்கின்றன. இம்மாதங்களை அடையாளம் காண எம் மூதாதையர் இந்த ஒவ்வொரு 30 பாகை இடைவெளியிலும் தெரியும் நட்சத்திரக் கூட்டங்களின் வடிவத்தில் இப்பாதைக்கு பெயரிட்டு அழைத்தார்கள். இதுவே 12 இராசிகள் (Constellations) ஆகும். சூரியன் இவ்வாறு மேட இராசியில் (சித்திரை) ஆரம்பித்து, ஒவ்வொரு இராசியையும் ஒவ்வொரு மாதத்தில் கடந்து, மீண்டும் மேட இராசிக்கு வர 12 மாதங்கள் எடுக்கின்றன.

சூரியனை பூமி சுற்றும் பாதை வட்டவடிவமாக இல்லாமல், நீள்வட்ட-மாக இருப்பதால், சூரியன் ஒவ்வொரு மாதமும் 30 பாகையை கடந்தாலும், இப்பாதையைக் கடக்க எடுக்கும் நாட்கள் வேறுபடும். இதனாலேயே தமிழ் மாதங்களில் நாட்கள் 29 இல் இருந்து 32 வரை வேறுபடுகின்றன. ஆனாலும், ஒவ்வொரு மாதமும் சூரியன் சரியாக 30 பாகையைக் கடக்கும் காலமாகும். இவ்வாறு சூரியன் ஒவ்வொரு 30 பாகையைக் கடக்கத் தொடங்கும் நேரம், அதாவது ஒவ்வொரு மாதத்திற்கும் (இராசிக்கும்) சூரியன் பிரவேசிக்கும் நேரம் அந்த மாத சங்கிராந்தி எனப்படும்.

ஆங்கில வருடமும் 12 மாதங்களை கொண்டிருந்தாலும், அவற்றின் நாட்கள் மனிதக் கணிப்பின்படி வருகின்றனவே தவிர, எந்த ஒரு இயற்கை நிகழ்விலோ அல்லது வானசாத்திர நிகழ்விலோ தங்கியிருப்பவை அல்ல.

தமிழ் காலக்கணிப்பு முறையில் மாதத்திற்கும் (சூரியன் 30 பாகை கடப்பதற்கும்) வருடத்திற்கும் (சூரியன் 360 பாகையை கடப்பதற்கும்) நேரடித்தொடர்பு உண்டு. ஆனால் நாட்கள் கணிக்கும் முறைக்கும், இவை இரண்டிற்கும் (மாதம், வருடம்) நேரடித்தொடர்பு இல்லை. இதனாலேயே தமிழ் மாதப்பிறப்போ அல்லது தமிழ் வருடப்பிறப்போ ஒரு நாளில் எந்த நேரத்திலும் வரலாம். இனி தமிழ் காலக்கணிப்பில் நாட்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன எனப்பார்ப்போம்.

நாள்

பூமி தன்னைத்தானே சுற்றுவதாலேயே சூரியன் தினமும் உதித்து மறைவது போல் எமக்குத் தெரிகிறது. இந்நிகழ்வில் இருந்தே தமிழ் காலக்கணிப்பில் நாள் கணிக்கப்படுகிறது. தமிழ் காலக்கணிப்பில் சூரிய உதயத்தில் இருந்து மறு நாள் சூரிய உதயம் வரை உள்ள நேரமே ஒரு நாளாகக் கொள்ளப்படுகிறது. சூரிய உதயம் நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடும். இதனால் தமிழ் நாட்களின் ஆரம்பமும் நாட்டுக்கு நாடு என்றும் இடத்திற்கு இடம் என்றும் வேறுபடும். ஆனால், தமிழ் நாட்களின் பிறப்பிற்கும், தமிழ் மாதம் அல்லது தமிழ் வருடக்கணிப்பிற்கும் தொடர்பு இல்லாததால் இது மாத மற்றும் வருடக் கணிப்புக்களைப் பாதிக்காது. நாள் கணிப்பு பூமி தன்னைத்தானே சுற்றும் வானசாத்திர நிகழ்விலும் மாதம் மற்றும் வருடக்கணிப்புக்கள் சூரியனைப் பூமி சுற்றும் வானசாத்திர நிகழ்விலுமாக இரு வெவ்வேறு வானசாத்திர நிகழ்வுகளில் தங்கியிருக் -கின்றன. தமிழ் வருடக்கணிப்புக்கள், நாட்டிற்கு நாடு மாறும் நாட்கணிப்பில் தங்கியிருக்காதபடியால்தான், தமிழ் வருடப்பிறப்பு உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் பிறக்கிறது.

ஆங்கில முறையில் ஒரு நாள் என்பது பூமி தன்னைத்தானே சுற்றும் ஒரு நாள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டாலும் அதில் மனிதக் கணிப்புக்கள் மற்றும் அண்ணளவாக்கல் செய்யப்பட்டு மாற்றப்பட்டுள்ளன. முதலில் பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் நேரம் 24 மணித்தியாலங்கள் அல்ல. பூமி தன்னை ஒரு முழுச்சுற்று சுற்றிவர 23 மணித்தியாலங்கள் 56 நிமிடங்கள் 4.1 விநாடிகள் எடுக்கும். அதனால் ஆங்கில நாட்கணிப்பு ஒரு நாள் சரியாக 24 மணித்தியாலம் என எடுத்த போது அது இயற்கை நிகழ்வில் இருந்து தவறிவிட்டது. இதைவிட ஆங்கில முறையில் ஒரு நாள் என்பது மனிதக் கண்டுபிடிப்பான நடு இரவில் இருந்தே கணிக்கப்படுகிறது.

தமிழ் நாட்களைப் போலவே ஆங்கில நாட்களின் ஆரம்பமும் நாட்டிற்கு நாடும், இடத்திற்கு இடமும் வேறுபடும். ஆனால் ஆங்கில நாட்கணிப்பிற்கும் ஆங்கில மாதம் மற்றும் ஆங்கில வருடக்கணிப்பிற்கும் மனிதர் ஏற்படுத்திய செயற்கையான தொடர்பு இருப்பதால் ஆங்கில வருடப்பிறப்பு உலகம் முழுவதும் வெவ்வேறு நாட்களிலும், நேரங்களிலும் நடைபெறுகிறது.

இப்போது நீங்கள் தமிழ் காலக்கணிப்புகள் எவ்வாறு விஞ்ஞான-பூர்வமாக எவ்வித அண்ணளவு அல்லது சுருக்கக் கணிப்புகள் இல்லாமல் துல்லியமாக வானசாத்திர நிகழ்வுகளைக் கொண்டு கணிக்கப்படுகின்றன என்பதையும், ஆங்கில காலக்கணிப்புக்கள் மனித கணிப்புக்களாலும் பல அண்ணளவு ஆக்கலாலும் கணிக்கப்படுகின்றன என்பதையும் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.



சிவ ஞானநாயகன், M.Sc., P.Eng., PMP, GSC

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர் கனேடிய மத்திய அரசில், பாதுகாப்பு அமைச்சின் நிர்மாணத்துறையில் பொறியியலாளராக பணிபுரிகிறார். விளம்பரம் ஆரம்பித்த காலத்திலிருந்து குறுக்கெழுத்து போட்டியும் பின்னர் பல்வேறுவிதமான விஞ்ஞானம், மற்றும் வானசாஸ்திரம் பற்றிய கட்டுரைகளையும் எழுதிவருபவர். 'உலகத்தமிழோசை', 'தமிழர் தகவல்' போன்ற சஞ்சிகைகளிலும் இவரது விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்தன.





1991-2015 'விளம்பரம்' இருபத்தைந்து ஆண்டுகள்

எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

- டாக்டர் கோபால்



உணவு மருத்துவம் அனுபவரீதியாக கைகண்ட மருத்துவ முறையாகும். நமது உடலில் உள், வெளிக்குறைபாடு இருப்பின் தயங்காது உணவு மருத்துவத்தைக் கைக்கொண்டால் நற்பயன் பெற முடியும்.

நீரிழிவு அதாவது சலரோகம், மதுமேகம் எனப்படும் வியாதியுடை-யோருக்கு சற்கரைக் கொல்லி எனப்படும் குறிஞ்சா இலையை நன்கு சுத்திகரித்துப் பச்சையிலையாக மென்று சாற்றுடன் விழுங்கினால் அல்லது அவற்றின் சாற்றை எடுத்து ஒரு மேசைக்கரண்டி காலையில் அருந்தி வந்தால் நாளடைவில் குணம் பெறமுடியும். மேலும் உண்ணும் உணவுடன் இலைகளை எடுத்து சுண்டி வறைப் பாகம் செய்து சாப்பிட்டு வந்தாலும் பயன்பெறமுடியும். இச்சாறானது இன்சுலின் என்னும் ஹோர்மோனை நன்கு சுரக்கச் செய்து இரத்தத்தில் உள்ள குழுக்கோஸின் அளவை அதிகரிக்காதபடி கட்டுப்படுத்தும் திறமை-யுண்டு. மேலும் பாகற்காய் சாறு இரண்டு மேசைக்கரண்டி கிழமைக்கு இரண்டு வேளை எடுத்து வந்தாலும் குணம் பெறமுடியும். பாகற்காயை பால் கறிப்பாகம் செய்து சாப்பிட்டு வந்தாலும் படிவுண்டு.

இருமலுடன் சளி நிலையுள்ளவர்கள் தூதுவளை இலையை அரையவியல் செய்து உண்பதினால் படிவு நிலை காணப்படும். மாதுளம் பழச்சாற்றுடன் நல்ல தேன் கூட்டிப்பாவித்து வந்தாலும் தக்கபயனைப் பெறமுடியும். பெண்களுக்கு பெரும்பாடு எனப்படும் மாதவிடாய் காலத்தில் இரத்தப்போக்கு அதிகமாக இருந்தால் வாழைப்பூவை சுண்டிப் பாகம் செய்து உணவுடன் சாப்பிட்டு வந்தாலும் தக்கபயனைப் பெறமுடியும்.

பிள்ளைப் பேறு இல்லாதிருக்கும் பெண்கள், கருத்தரிப்பதற்கு செவ்வாழைப்பூவை சுண்டி பாகம் செய்து உணவுடன் சாப்பிட்டு வந்தால் நற்பேறு உண்டாகும். சலக்கடுப்பு, உடற்சூடு, கால் வீக்கம் காணப்படின் செவ்வரத்தம் பூவை பச்சடி (சம்பல்) தயாரித்துப் பாவித்து வந்தால் யாவும் தணிவடைந்து சுகத்துடன் வாழ முடியும். கண் பார்வை நன்கு புலனாக பொன்னாங்காணியை நன்கு நெய்யில் வதக்கி அல்லது சுண்டி சாப்பிட்டுவரின் பார்வை துல்லியமாகும். இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவு அதிகரிக்காதிருக்க வேப்பம் பூ வடகம் சாப்பிட்டு வந்தால் நன்று. தாய்ப்பால் கொடுக்கும் மாதர் ஈரப்பலாக்காய் கறி, வெந்தயம், உள்ளி, முருங்கையிலை கூட்டிப் பாகம் செய்து சாப்பிட்டு வந்தால் பால் நன்கு சுரக்கும். இதனால் வாயு, வயிற்றுப் பொருமல் அற்று விடும். ஆனால் ஆண்கள் அடிக்கடி உண்டால் சொற்பனத்தில் தம்மை அறியாமல் விந்து கழியும் நிலை ஏற்படும்.

வெள்ளை, வெட்டை படுதல் உடையவர்கள் நீற்றுப் பூசனிக்காயை எடுத்து கறிப்பாகம் செய்து சாப்பிட்டு வந்தால் நாளடைவில் தக்க பயனுண்டு. சிறுநீரகத்தில் கற்கள் குடிகொண்டால் முள்ளங்கி, சுரைக்காய் என்பவற்றில் கறிப்பாகம் செய்து பாவித்து வந்தால் குணம் பெறமுடியும். மேலும் வாழைத்தண்டு சாறில் இரண்டு அல்லது மூன்று மேசைக்கரண்டி பருகினால் நற்பயன் கிடைக்கும்.

சிறுநீர் கழியும் போது எரிவு, கடுப்பு இருப்பின், வெள்ளரிப் பழம் பாவிப்பதுடன், வெள்ளரிக்காயை கறிப்பாகம் செய்தும் உணவுடன் கூட்டி உண்டு வர படிவு ஏற்படும்.

அக்கரம் என்று அழைக்கப்படுகின்ற வாய்ப்புண் அகல்வதற்கு அகத்தியிலைச் சொதி உணவுடன் கூட்டி பாவித்தால் நாளடைவில் தணிந்து வரும் நிலையைக் காணலாம். உள்மூலம் உள்ளவர்களாயின் கருணைக்கிழங்கு கறிப்பாகம் செய்து இடையிடையே பாவித்துவரின்

நற்பேறு கிடைக்கும். கிராணி என அழைக்கப்படும் வயிற்றோட்டத்திற்கு விளாம்பழம், வில்வம் பழம் தவறாது பாவித்து வந்தால் நற்பயன் பெறமுடியும். மலச்சிக்கலும் அகலும். மேலும் வாழைத்தண்டு சாறும் இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி கிழமைக்கு இரு தடவை பாவித்து வந்தால் குடல்புண் அகலும். பருப்பு கூட்டி கறிப்பாகம் செய்தும் உண்ணலாம். ஞாபகசக்தி ஏற்பட வல்லாரையை சம்பல் பாகம் செய்து உணவுடன் பாவித்து வரலாம்.

மலச்சிக்கல் இருப்போர் விளாம்பழம் அல்லது வில்வம் பழம் எடுத்து சர்க்கரை சேர்த்துப் பாவித்துவரின் நன்மை கிடைக்கும். உரியவர் தண்ணீரை வேண்டியளவு எடுத்துக்கொள்ள வேண்டும். இரவு படுக்கைக்குச் செல்லும்போதும், துயில் நீங்கி,காலையில் எழும்பும் போதும் தண்ணீர் அருந்துவதினால் மலச்சிக்கல் இன்றி இலகுவாக மலம் கழியும்.

எனவே உணவுப் பொருட்களிலும் வியாதி நீக்க தகுந்த சக்தியுண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் எம்மை நோய் இன்றிப் பாதுகாத்துக் கொள்ள உணவுப்பழக்க முறையையும் கடைப்பிடிக்க வேண்டும்.



டாக்டர் கோபால்

கொழும்பில் அரசினர் ஆயுள் வேதக்கல்லூரியில் டீ.ஏ.எம்.எஸ் பட்டம் பெற்ற வைத்தியர். உள்ளூராட்சி சபையின் அரசாங்க வைத்தியராக முசலி, அனலைதீவு ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் கடமையாற்றியவர். கனடாவில் 'Health Care Practitioners' ஐ உருவாக்கும் நிறுவனத்தில் C.N.H.P பட்டத்தை பெற்று ஆயுள்வேத வைத்தியராக பணியாற்றி வருகிறார்.

வருமுன் பாதுகாப்பு

- டாக்டர் மனோகரி உமாகரன்

உடல் ஆரோக்கியத்திற்கும், வசீகரமாக தோற்றுவதற்கும், உணவு பொருட்களை அரைத்து உண்பதற்கும், நன்றாக பேசுவதற்கும் பற்கள் இன்றியமையாதவையாகும். 'பல் ஆரோக்கியம் உடல் ஆரோக்கியம்' என்பர். பல்லை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலம் உடலில் பல நோய்களை வராமல் இருக்க வழி செய்யலாம்.

பற்களில் ஏற்படும் பொதுவான நோய்களாக விளங்கும் முரசு வியாதிக்கும், பற்சூத்தைகும், பொதுவாக பற்களை சுற்றியுள்ள வெண்படலம் (Plaque) காரணமாக உள்ளது. இந்த வெண்படலம் நுண்ணங்கிகளை (Microbes) கொண்டு உள்ளது. இவற்றில் சில வகையிலான நுண்ணங்கிகள் முரசு வியாதிக்கும், சில வகை நுண்ணங்கிகள் பற்சூத்தை வருவதற்கும் காரணமாக உள்ளன.

நீங்கள் முரசு வியாதிக்கு உள்ளாகினால் முரசு வீக்கம், இரத்தக் கசிவு, (Bleeding Gum), சீழ் கசிவு (Pus), பற்கூச்சம் (Sensitive Teeth), பல் நோ, வாய் துர்நாற்றம் ஆகியன ஏற்படும். தொடர்ந்தும் கவனம் எடுக்காவிடில் பற்களை சுற்றியுள்ள முரசு இணைப்பு (Periodontal Ligament) எலும்புகள் பாதிக்கப்பட்டு பல் அசைவு உருவாகும்.

சிலவகை உடல் நோய்கள், அதாவது நீரிழிவு (Diabetes) தைரோய்ட் (Thyroid), சில மருந்து வகைகளை பாவித்தல், புகைப்பிடித்தல் போன்ற மேலும் பலவகை காரணங்களால் சிலருற்கு முரசு வியாதி அதிகமாக காணப்படும். இவர்கள் பல் மருத்துவரின் உதவியுடன் முரசு வியாதியை குறைக்கலாம்.

பற்களை கவனமாக நேரம் எடுத்து சரியான முறையில் துலக்குவதன் மூலமும் (பற்களை மட்டுமல்லாமல் முரசு ஈறுகளையும்) ஆரோக்கியமான உணவுகளை உண்பதன் மூலமும் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலமும் முரசு வியாதிகளை குறைக்கலாம்.



பற்களில் தங்கியுள்ள உணவுப் பதார்த்தங்களில் நுண்ணங்களின் தாக்கத்தால் உருவாகும் அமிலத்தன்மையானது பல்லை அரித்து பற்சூத்தைக்கு காரணமாக உள்ளது. அதிகளவு சீனிப்பதார்த்தம், அமிலத்தன்மையுள்ள உணவுகள் (உதாரணம் Juice), பற்களை சரியான முறையில் துலக்காமை போன்ற காரணங்கள் பற்சூத்தையை அதிகமாக்கும்.

பற்சூத்தையை தினமும் இரண்டு முறை சரியான முறையில் துலக்குவதன் மூலமும் ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட பின்னும் வாயை கொப்பளிப்பதன் மூலமும், Fluoride உள்ள பற்பசை (Tooth Paste with Fluoride), Xylitol Gum பாவிப்பதன் மூலமும் குறைக்கலாம் ஆரோக்கியமான உணவுகள் பற்சூத்தையை தடுக்கும்.

வாய்ப்புற்று நோய் - இந்நோய் புகைப்பிடித்தல், வெற்றிலை, பாக்கு அதிகளவு பாவித்தல், கூர்மையான பற்கள் போன்ற காரணங்களால் உருவாகலாம். இதன் அறிகுறி வாயில் புண் ஏற்படும். இரண்டு கிழமைகளிற்கு மேல் குணமடையாமல் இருந்தால் மருத்துவரை நாடுவது நன்று.

சிறு வயதில் இருந்து பற்களையிட்டு கவனம் எடுத்தால் வயதானாலும் பற்களைப் பழுதடையாமல் வைத்திருக்கலாம். குழந்தை பிறந்து 6 மாதங்கள் கழிந்த நிலையில் பால் பற்கள் வளர ஆரம்பிக்கும். 2½ - 3 வயதிற்குள் அனேகமாக எல்லா பற்களுமே வளர்ந்திருக்கும். அந்த வயதில் தான் கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக இந்த பருவத்தில் புட்டிப்பால் (Bottle Milk) கொடுப்பார்கள். பாற் போச்சியை குழந்தை வாயில் வைத்தபடியே நித்திரைக்கு செல்ல விடுவார்கள். இதனால் அந்தக் குழந்தைகளின் பற்களில் பால் படிந்து பற்சூத்தை ஏற்படும். குழந்தைகளிற்கு இதை ஏற்படாமல் தடுப்பதற்கு பால் கொடுத்தவுடன் தண்ணீர் கொடுப்பது நன்று. இல்லாவிடில் மெல்லிய ஈரத்துணியில் பற்களை சுத்தம் செய்துவிடலாம்.

சில குழந்தைகள் கை சூப்பும் பழக்கத்தினாலும், வாயினால் மூச்சு எடுப்பதினாலும் பற்களின் சீர்வரிசை ஒழுங்காக இருக்காது. இவற்றை சிறு வயதில் சரி செய்வது நன்று.

சிறு பிள்ளைகளுக்கு பல் துலக்குவது, ஆரோக்கியமாக உண்பது போன்ற பழக்கவழக்கங்களை தெரியப்படுத்துங்கள். சிறுபிள்ளைகளிற்கு 6-9 மாதங்களுக்கு ஒரு முறை பல் சுத்தம் செய்வது நன்மையளிக்கும். ஏனெனில் இவர்கள் இனிப்புப் பதார்த்தங்களை அதிகமாக எடுப்பார்கள். பற்சூத்தை வந்தால் அதை ஆரம்பத்திலேயே குணமாக்குவது நன்மை அளிக்கும்.

வருமுன் காப்பது இலகுவான முறை. பற்களை சுத்தமாக வைத்திருந்து ஆரோக்கியமாக உண்டு, ஆரோக்கியமாக இருப்பதால் பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்கலாம்.

டாக்டர். மனோகரி உமாகரன் BDS (Canada)

பேராதனைப் பல்கலைக்கழக பல் வைத்தியப்பட்டதாரியான இவர் கனடாவில் BDS பட்டம் பெற்று பல் வைத்தியராக பணிபுரிகின்றார்.

நீண்ட நாள் வாழ நினைத்ததை அடைய

- என். செல்வசோதி



வெள்ளி விழா காணும் உங்கள் அபிமான பத்திரிகையில் பதினைந்து ஆண்டுகளாக பல்வேறு நோய்கள் பற்றியும் அவற்றினை மருந்தின்றிக் குணப்படுத்தும் யோகாசன சிகிச்சை முறைகளின் முக்கியத்துவம் பற்றியும் எழுதி வருகின்றேன். இவை எவ்வளவு தூரம் தமிழ் மக்களைச் சென்றடைந்துள்ளன என்பதை எனக்கு மாதம் தோறும் வரும் தொலைபேசிகளின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே இங்கு யோகாசன சிகிச்சை பற்றிய பொதுவான குவியத்தை (Focus) சுருக்கமாக தருகின்றேன்.

மனோதத்துவ அடிப்படையில் ஏற்படும் வியாதிகள் மிகவும் சிக்கலானவை என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. நமது உடலானது சரிவர செயற்படுவதற்கும் அதன் சக்தியை நாங்கள் முழுமையாகப் பெறுவதற்கும் மனம் உடலுடன் ஒத்துழைக்க வேண்டும். மனத்தை அமைதிப்படுத்துவது, புத்திக்கூர்மையை அதிகரிக்கச் செய்வது சிந்தனையைத் தெளிவாக்குவது போன்றவற்றிற்கு இன்றைய மருத்துவ முறையில் தெளிவான வழிமுறைகள் எதுவும் இல்லை. ஆனால் யோகா முறையில் எந்த மருத்துவம் இல்லாமலும் இவற்றை நம் முன்னோர்கள் மிக எளிதாக குணமடையச் செய்துள்ளனர்.

மனமும் உடலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று இன்றைய மருத்துவம் ஒத்துக்கொள்கின்றது. மனநிலை சரியாகவோ அமைதியாகவோ இல்லாதவர்களுக்கு, நீரிழிவு, இரத்த அழுத்தம் ஆஸ்துமா போன்ற உபாதைகள் வந்து சேர்க்கின்றன. இன்றைய வாழ்க்கையில் நாள் முழுவதும் அவசரம், பதட்டம், வேகம், தடுமாற்றம் என்பன நமது உடலை உலுக்கி எடுக்கின்றன. அப்போது நமது நரம்புகள் முறுக்கேறுகின்றன. இரத்த அழுத்தம் எல்லையை மீறும் அளவுக்குச் செல்கின்றது. இதயம் மற்றும் நாடித்துடிப்புகள் அதிகரிக்கின்றன. விருப்பத்திற்கு மாறாக செயல் நிகழும்போது மன உளைச்சல் ஏற்படுகின்றது. இன்றைய நாகரிக உலகில் 80% மக்கள் தினமும் இவ்விதம் ஏதாவது ஒரு நிலையில் பாதிக்கப்படுகின்றனர்.

நாம் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளையும் மனக்குழப்பத்தையும் யாரிடமும் சொல்லாது மனதிற்குள்ளே வைத்து அதனால் உருவாகும் எதிர்மறையான சிந்தனைகளால் உண்டாகும் விபரீதமான உடல் மன கோளாறுகளால் வயிற்றில் அமிலம் கூடி குடல்புண் ஏற்படுதல் தலைவலி மூட்டுவலி கொலஸ்ரோல் போன்றவை நாளடைவில் எமது உடலில் வந்து சேர்ந்து பல சிக்கல்களை ஏற்படுத்தும். இவ்வாறு உருவாகும் நோய்களுக்கு இன்றைய மருத்துவ நிபுணர்கள் நோயின் அடிப்படையான காரணங்களை ஆராய்வதில்லை. பதிலாக நோயின் வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே கேட்டுத்தெரிந்து கொள்கின்றனர். அதாவது சோதனைகள் மூலம் அறிகின்றனர். அவர்கள் செய்யும் வைத்தியமும் அந்த வெளிப்படையான அடையாளங்களைக் குணப்படுத்தும் முயற்சியுடன் நின்றுவிடுகிறது. அவர்கள் தரும் மருந்துகளும் அடிப்படையான சிக்கலிலிருந்து அந்த நோயாளியை விடுவிப்பதில்லை.

உதாரணமாக ஒருவருக்கு இரத்த அழுத்தம் கூடுவதென்றால் அது தொடர்ந்து வரும் மனக்கவலை, மனவெழுச்சியில் சடுதியாக ஏற்படும் மாற்றம்தான் காரணம். அதனால் அவரது உடல் நிலையும் நரம்பு மண்டலங்களும் பாதிக்கப்படுகின்றன. இதற்கு வைத்தியர் மாத்திரையை கொடுத்து இரத்த அழுத்த அளவு கூடாமல் பார்த்துக்-கொள்கிறார். அதாவது உடலின் இயக்கம் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் அடிப்படையான சிக்கலைத் தவிர்க்கவோ உடல் நிலையைப் பலப்படுத்தவோ அது உதவுவதில்லை. இங்குதான் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற யோகப் பயிற்சிமுறைகள் கைகொடுக்கின்றன.

பொதுவாக மருந்துகள் மற்றும் பலவகையான சிகிச்சைகள் மூலம் நெடுநாட்பட்ட நோய்கள் குணம் பெறாதவிடத்து யோகா சிகிச்சையை மேற்கொள்ளும்படி நோயாளிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

யோகாசன பயிற்சி செய்து வருபவர்களுக்கு கோபம், வெறுப்பு, பொறாமை ஆகியன ஏற்படுவதில்லை. ஒரு தனி மனிதனை உயர்த்துவதோடு மட்டுமன்றி ஒரு சமூகத்தின் பண்பையே உயரச் செய்வதற்கும் நமது முன்னோர்கள் கொடுத்த இந்த யோகா சாதனம் பெரிதும் உதவுகிறது. ஒரு நோயாளி இந்த பயிற்சியை தொடர்ந்து செய்து வந்தால் ஒரு சில வாரங்களில் நல்ல பலன் அடைவதை உணர முடியும்.

மனிதனை உயிரோடு எரிப்பது கவலை

நமது உடலானது, பயன்படுத்து அல்லது அதை இழந்து விடுவாய் (Use it or Loose it) என்கின்ற அடிப்படையில் உள்ளது. மனிதனுக்கு இராஜ உறுப்புகள் ஐந்து. அவை மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல். இவை ஐந்து பூத சக்திகளான ஆகாயம், பூமி, நெருப்பு, நீர், காற்று என்பனவற்றோடு நேரடித் தொடர்பில் இருக்கின்றன. இந்த தொடர்புகள் பாதிக்கப்படும்போது நாம் நோய்வாய்ப்படுகிறோம். இந்த நேரடித் தொடர்பை செம்மைப்படுத்துவதே இந்த யோகக்கலை. இதன் மூலம் உடலும் உள்ளமும் ஒருமுகமாக இயங்குகின்றது.

மனிதன் இறந்த பிறகு அவன் உடலை எரிப்பது நெருப்பு. ஆனால் அவனை உயிருடன் இருக்கும் போதே எரிப்பது கவலை என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

'யோகமுடன் வாழ யோகாசனம்'



செல்வசோதி மாஸ்ரர்

'விளம்பரம்' பத்திரிகையில் ஆரோக்கிய வாழ்வு பற்றி கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதிவருபவர். நீண்ட காலமாக யோகாசனம் கற்பித்து வரும் ஆசான். Dip.In.Yoga Thraphy பட்டத்தை Indian School of Yoga Institute (Chennai) இல் பெற்றுள்ளார்.

25TH YEARS OF PUBLISHING VLAMBARAM

25 விளம்பரம்

1991-2015

Celebrating 25th Glorious Years

25 வது ஆண்டின் வெற்றிப் பாதையில்

விளம்பரம்

VLAMBARAM™

அகிலம் போற்றும் 'விளம்பரம்'
இணையத்திலும் இல்லத்திலும்
உள்ளத்திலும் உணர்விலும்
நிலைத்திடும்!



VLAMBARAM™

'Canada's Oldest Tamil Newspaper'

Vlambaram Publications Inc.

GTA Square

Tel: 416.282.8059 | Fax: 416.282.4978

Email: vlambaram@sympatico.ca

www.vlambaram.com

www.**tamilvanakkam**.com

5215 Finch Avenue East, #201, Toronto ON M1S 0C2 Canada

பேரானந்தத்துக்கு ஒரு பயணம்

- பெரி. முத்துராமன்

அமெரிக்காவுக்குப் பயணம், கனடாவுக்குப் பயணம், இலங்கை இந்தியாவுக்குப் பயணம் என்று சொல்லக் கேட்டிருக்கின்றோம். இது என்ன பேரானந்தத்துக்குப் பயணம் என்கிறீர்களா? அதுதான் 'சஸ்பென்ஸ்', நரோத்தமனின் கதையைப் படித்தால் அந்த 'சஸ்பென்ஸ்' தீரும். படிக்கலாமா?

முன்னொரு காலத்தில் நரோத்தமன் என்பவன் வாழ்க்கையில் சிறந்து விளங்கினான். மிகுந்த பொருள் ஈட்டினான். மனைவி, மக்களுடன் மகிழ்ந்தான். பெற்றோரை மறந்தான். நாளடைவில் தான தருமங்கள் செய்யத் தொடங்கினான். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரையும் சென்றான். அதன் பயனாகச் சில சித்திகள் கைவரப்-பெற்றான். அவனுடைய ஈரத் துணிகள் பிடிப்பு ஏதுமின்றி காற்றிலே நின்று உலர்ந்தன.

அதனால் அவனுக்குக் கர்வம் வந்துவிட்டது. ஒரு நாள் அவன் சாலை வழியே செல்கையில் காகம் ஒன்று அவன் தலையில் எச்சமிட்டு விட்டது. அதனால் கோபமுற்று நரோத்தமன் காகத்தைப் பார்த்தான். காகம் எரிந்து சாம்பலாகி விட்டது. அத்துடன் அவனுக்குக் கிடைத்திருந்த துணி காய வைக்கும் சித்தியும் மறைந்து போய் விட்டது. நரோத்தமன் வருத்த முற்றான்.

அப்போது அவன் முன் செய்திருந்த புண்ணியங்களின் பலனால் வானிலிருந்து ஒரு குரல் கேட்டது. 'நரோத்தமா, நீ முகன் என்ற சண்டாளனிடம் செல், உன் வருத்தம் தீரும்' "சரி" என்று முகனைத் தேடி நரோத்தமன் சென்றான்.

முகனுக்கு நரோத்தமனிடம் பேச நேரமில்லை. நரோத்தமன் சென்ற நேரம், வயதான தன் தாய் தந்தையருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான். எனவே நரோத்தமனை பல மணி நேரம் காத்திருக்கச் சொன்னான். நரோத்தமன் கோபமுற்றான். அதை உணர்ந்த முகன், "நரோத்தமா, நான் காகம் அல்ல, அவசரம் என்றால் சுபா என்ற மகா பதிவிரதையான பெண்ணிடம் செல், அவள் உனக்கு விளங்க வைப்பாள்" என்றான்.

சரி என்று சுபாவைச் சென்றடைந்தான். முகன் சென்ற சமயம் சுபா நோய்வாய்ப்பட்டிருந்த தன் கணவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவளும் நரோத்தமனைக் காத்திருக்கச் சொன்னாள். ஒரு பெண்ணும் தன்னைக் காத்திருக்கச் சொல்கிறாளே என்று நரோத்தமன் ஆத்திரம் கொண்டான். அப்போது சுபா, 'நரோத்தமா, நான் காகம் அல்ல, உன் பார்வை பட்டு சாம்பலாக. அவசரம் என்றால் துலாதகன் என்ற வியாபாரியிடம் போ,' என்றாள்.

முகன், சுபா இவர்களுக்கு எல்லாம் தன்னைப் பற்றிய முன் விபரங்கள் எவ்வாறு தெரிந்தன என்று நரோத்தமன் ஆச்சரியம் அடைந்தான். ஆனால் அவனது அகங்காரம் அவனைக் காத்திருக்கச் சம்மதிக்கவில்லை.

சரி என்று இப்போது துலாதகனைத் தேடி நரோத்தமன் போனான். துலாதகன் வாடிக்கையாளர்களைக் கவனிப்பதில் அதிதீவிரமாக இருந்தான். துலாதகன் இரவு 9 மணிக்குக் கடையைச் சாத்திய பிறகுதான் பேச முடியும் என்று உறுதியாக நரோத்தமனிடம் சொல்லி விட்டான். மேலும் அவசரம் என்றால் அத்ரோகன் என்ற வைணவனிடம் செல்லச் சொன்னான்.

இந்த இடத்தில் படிப்பதை நிறுத்துங்கள். நீங்கள் நரோத்தமன் இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் என்று கண்களை மூடி நினைத்துப் பாருங்கள். பிறகு இக்கட்டுரையைத் தொடருங்கள்.

வைணவனை நரோத்தமன் தேடிச் சென்று கடைசியில் பெருமாள் கோயிலில் சந்தித்து விட்டான். நல்ல வேளை, வைணவனிடம் கோபப்பட நரோத்தமனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நரோத்தமனை வைணவன் உடனே கவனிக்கத் தலைப்பட்டான்.

நரோத்தமன் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்ட வைணவன் உள்ளே சென்று விஷ்ணுவை வணங்கச் சொன்னான். என்ன ஆச்சரியம்! விஷ்ணு பகவான் சண்டாளனாக, பதிவிரதையாக, வியாபாரியாக, வைணவராகக் காட்சியளிக்கக் கண்டான்.

அப்போது ஒரு குரல் ஒலித்தது. 'எவன் ஒருவன் பெற்றோரைப் போற்றி அவர்களுக்குத் தேவையானதைச் செய்கின்றானோ, எவன் ஒருவன் இல்லற தர்மத்தை ஒழுக்கத்துடன் நடத்துகின்றானோ, எவன் ஒருவன் தர்மம் தவறாது வணிகம் செய்கின்றானோ, எல்லாவற்றிற்கும் மேலாக, எவன் ஒருவன் புலன்களைத் தன்வசமாக்கி சமநிலையில் வாழ்கின்- றானோ அவனுக்கு உள்ளிருந்தே ஆனந்தம் வருகின்றது. வருத்தம் அவனைத் தீண்டுவதில்லை. ஆகையால் நீ, உன் வீட்டிற்குத் திரும்பிச் சென்று நீ செய்ய மறந்த கடமைகளை உன் வருத்தமுறும் பெற்றோருக்குச் செய். சமநிலையில் வாழ்க்கையைத் தொடர் ஆனந்தம் பெறுவாய்.

இந்த இடத்திலும் ஒரு நிமிடம் படிப்பதை நிறுத்துங்கள். கண்களை மூடி மேலே கேட்ட குரல் ஒலியைச் சிந்தியுங்கள் பிறகு படிப்பதைத் தொடங்குங்கள்.

ஆனந்தத்தைத் தேடும் போது தன் நெஞ்சு பொய்யற்று இருக்க வேண்டும். தன்னெஞ்சறிவது பொய்யற்க! பொய்த்தால் தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்கிறார் வள்ளுவர். இதை வாழ்வில் கைக் கொள்வது எங்ஙனம்?

முதலில் சில அடிப்படை நியதிகளைத் தவறாது கடைபிடிக்க வேண்டும். அவற்றுள் சில:

- பெற்றோரைப் போற்றுதல், பராமரித்தல்
- இல்லற தர்மத்தை ஒழுக்கத்துடன் நடத்துதல்
- தர்மம் தவறாது வணிகம் செய்தல்
- புலன் வழி செல்லாது சமநிலையில் வாழ்தல்
- எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்

வாழ்வில் பொருள் ஈட்டல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அன்பு, அறம், உயிர்களிடத்துக் கருணை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை. அருள் இல்லார்க்கு எவ்வுலகும் இல்லை என்பதுதான் யதார்த்தம். அருள் அமைதியைக் கொடுக்கி-ன்றது. நிம்மதியைக் கொடுக்கின்றது. பேரானந்தத்தைக் கொடுக்கின்றது.

அன்பே சிவம் என்றனர். அன்பை, கட்டுப்படுத்தும் அன்பு, நிபந்தனையற்ற அன்பு என்று இரு வகையாகப் பிரிக்கலாம். நிபந்தனையற்ற அன்பே அருள். அன்பின் முதிர்வே அருள். அதுவே சிவம்.

அழுகின்ற தன் குழந்தைக்குத் தாய் பால் தந்தால் அது அன்பு. தனக்கு முன்பின் தெரியாத அநாதைக் குழந்தைக்கு கருணை மேலீட்டால் வாரியணைத்துப் பால் தந்தால் அது அருள். பிந்தைய செயலில் இன்றும், என்றும் எந்த எதிர்பார்ப்பும் இருப்பதில்லை, இருக்கக்கூடாது.

அன்பின் பரிணாம வளர்ச்சியே அருளாகின்றது. அதுவே ஆனந்தத்தின் பரிணாம வளர்ச்சியாகவும் ஆகின்றது. இயற்கை உங்களை அந்தப் பாதையிலேயே இட்டுச் செல்கின்றது. அடம்பிடித்து செல்ல மறுத்தால் ஆனந்தத் தேடல் தடைப்படுகின்றது. வாழ்க்கை பூரணத்துவம் பெறுவதில்லை. ஆசைகள் அறுபடுவதில்லை. சங்கிலித்தொடர் வாழ்க்கை தொடர்கின்றது.

அன்பின் பரிணாம வளர்ச்சியைப் பார்ப்போம். தாய்க்கும் சேய்க்கும் அல்லது தந்தைக்கும் மகற்கும் இடையே இயல்பிலேயே அன்பு பிறக்கின்றது. இது எதிர்பார்ப்புடைய அன்பு. இலைமறை காயாக அன்பில் சுயநலம் கலந்துள்ளது. நாளடைவில் குழந்தை வளரவளர அன்பு வட்டம் நண்பர்கள் வட்டம் என்று வளர்ந்து கொண்டே போகின்றது. தக்க பருவத்தில் மாற்றுப் பாலினத்தில் ஓர் அன்பு, கவர்ச்சி ஏற்படுகின்றது. இந்த எல்லா அன்பிலேயும் இலைமறை காயாக சற்றேனும் சுயநலம் கலந்துள்ளது. முறையற்ற கவர்ச்சியும், புணர்ச்சியும் காமம் ஆகின்றது. அங்கு அன்பு இருப்பதில்லை.

ஞானம் வரவர சுயநலம் கொண்ட அன்பு சுயநலமற்றது ஆகின்றது. அத்தகைய அன்பு எதையும் எதிர்பார்ப்பதில்லை. தெரிந்தோ, தெரியாமலோ அன்பு பேரமாகப் பேசப்படுவதில்லை. அதுவே அன்பின் முதிர்ச்சி, அந்நிலையே அருளாகும்.

சமுதாயத்தின் மேல், வறியவர்களின் மேல், ஏன் எல்லாவற்றின் மேலும் நம் அன்பு வட்டம் அருளான நிலையில் நிறைந்து விடுகின்றது. அத்தகைய அன்பு மயமே சிவமயமாகின்றது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார் போன்றவர்கள் அருளாளர்கள். சிவமயமானவர்கள், சிவசொருபீகள்.

சிவமயமானால் ஜீவனுக்குள்ளே ஆனந்தம் பெருக்கெடுக்கின்றது. பேரானந்தம் புறப்பொருள்களிலிருந்து வருவதில்லை. நமக்குள்ளிருந்து தான் வருகின்றது. ஆம், சிவமயமானால் அன்புமயமானால் பேரானந்தம் பெருக்கெடுக்கின்றது. நான் முயற்சிக்கின்றேன்.

நீங்கள் எப்படி?



பெரி. முத்துராமன்

பொருளையும் அருளையும் சம்பாதிக்க வழிவகை கூறும் எழுத்தாளர், பேச்சாளர். நிதித்துறையில் தனித்துவம் பெற்றவர். ஆன்மீகத்தில் ஆர்வமுடையவர்.

சத்தியம் இனியும் தவறுதல் சரியோ!

- வள்ளிநாயகி இராமலிங்கம்

அவளைத் தெருவில் பார்த்தபோது ஏதோ ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது. புரிய முடியாத ஏதோ ஒரு மொழியில் பாடிக்கொண்டே நடந்தாள். குரல் இடைக்கிடை மெலிந்தும் கனத்தும் சிற்சில சமயங்களில் பலவித உணர்வுகளை வெளிப்படுத்துவது போலவும் கேட்கிறது. போறவாறவர்கள் கூட நின்று திரும்பிப் பார்த்து விட்டுத்தான் போகிறார்கள். அப்படியானால் விடுப்புப்புடுங்கியாகிய ஆண்மகன் எனக்கு, ஆராய்வூக்கி என மரியாதைப் பண்பான பெயரை வைத்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளராக?

சிறிது தூரம் அவளைத் தொடர்கிறேன். முகத்தையோ, முகபாவங்களையோ பார்க்க முடியாதவாறு முன்தலைமுடி அவ்வளவும் முகத்தை மூடியிருந்தன. அதனூடே இரண்டு பெரிய முழிகள் இலங்கிக் கொண்டிருந்தன.

குறுக்கிலிருந்து முழந்தாளின் சிறிது கீழ்வரை ஒரு நாகரிகமும் கவர்ச்சியும் வாய்ந்த கருஞ்சிவப்பு ஆடை ஒன்று. காலில் ஒரு பாட்டா சிலிப்பர். அவளது உருண்டு கொண்டிருந்த கண்கள் என்மீது நிலைத்தது. பாடல் தொடர்கிறது. 'ஏனடா மனிசா! உன்முன் வைக்கப்பட்ட உணவைப் பார். அதன் ருசியைப் பற்றிப் பாராது நிறத்தைப் பார்த்து மயங்குகிறாயே' சிறிது வன்மம் சேர்ந்த கீழ்மிடறிலிருந்து புறப்பட்ட குரல் போல அப்பாடல் வந்து கொண்டிருந்தது. இப்பாடல் வரிகள் எனக்கான பாடல் தான்.

அவள், நான் பெண்களைக் கொக்கி போட்டுப் பிடிக்கும் காமாந்தக்காரன் (womanizer) என நினைத்து விட்டாளோ. இவளது தோற்றத்தையும் பாவத்தையும் பார்த்து என்னால் இவளை அளவிடமுடிகிறது. அதற்குத்தானே விசேட பயிற்சி எடுத்தும் தொழில் பார்த்துக் கொண்டும் இருக்கிறேன். ஆம், பலவித உணர்ச்சிகளுக்கும் அடிக்கடி மாறக்கூடியவள். எதற்கும் முரண்டு பிடிப்பவள். வயதுக்கேற்ற முதிர்ச்சியடையாதவள் ஆகவும் வெறிநாயின் சீற்றம் கொள்ளக் கூடியவளாகவும் மெலிந்த அழகான தோற்றம் உடையவளாகவும் தனியான ஒரு உலகில் வாழ்பவள் போலவும் தோன்றியது. 'அருவிவெட்டும் தனியள்' எனும் இங்கிலிஸ் கவிதை ஒன்று உள்ளே வந்து போகிறது. இவளோ இந்த ஆரவாரம் நிறைந்த வாகனப்

போக்குவரத்து, மக்கள் நடமாட்டம், கூடிய தெருவில் தனி உலகம் ஒன்றில்....

அவள் என் கண்களிலிருந்து மறைந்து விட்டாள். ஆயினும் என் எண்ண அலைகளிலிருந்து மறையவேயில்லை. என் மனைவி சொல்வது போல் 'எந்த நேரமும் ஊருலகவிசாரங்கள் எல்லாம் உங்கடை தலேக்கை; ஆனால் வீட்டு விசாரங்கள் மட்டும் மண்டைக்குள் ஏறாது'

அப்படித்தான்.

ஏனிந்தக் கோலம் கொண்டாள்? ஒருவேளை பிஞ்சிலே பழுத்தவளா. அப்படியானால் ஒரு விரக்தி? அல்லது ஒரு மரத்துப் போன தன்மை? எவரையும் விழுத்த வேண்டும் எனும் வெறி. பழிவாங்கும் தன்மை ஏதாவது காரணமோ.

வயதிலும் குறைந்த அறிவுசார் தோற்றம்? அது எப்படி நிகழும். சாதாரண பெண்ணாக வளர்ந்து ஓரளவு வயது வந்ததும் ஏதாவது மூளைக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்குமா? அத்தோடு அறிவு சார் தன் வேலையை நிறுத்திக் கொண்டிருக்குமா? அதனால் தான் அறிவு வளர்ச்சி நின்றுவிட்டிருக்குமா. புதிது புதிதாகப்பாடுகிறாளே அறிவு இல்லாமலா? இலங்கும் கண்களால் என்ன தேடுகிறாள்? சோக்கிரற்றீஸ் போல, தான் நினைப்பது போன்றதொரு இலட்சிய மனிதனைத் தேடுகிறாளா?

அவளுடைய மனிதன் எப்படி இருப்பான்? அவனால், தான் அடக்கி ஆளப்படுபவனாக இருக்க வேண்டுமா? அல்லது தன்னால் அவன் அடக்கி ஆளப்படுபவனாக இருக்க வேண்டுமா? இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தால் சப்பென்று வாழ்க்கைச் சக்கரம் உருளமாட்டாதே. பலப்பரீட்சை அதிகமாகி உடைந்து விட்டதோ.

ஏதோ ஒரு வயதில் ஏற்பட்ட தடங்கல், செயற்பாடுகளை மழுங்க வைத்தவனா? செயலிழக்க வைக்கும் பிரமை ஏற்பட்டதா? எண்ணங்கள் அடிக்கடி காளை மாடு போல் துள்ளித்துள்ளி சவால் விடுகிறதா? பாயும் குதிரைபோல் எகிறி எகிறி நின்ற இடத்திலேயே குதிக்கிறதா? மோட்டார் கார் போல் வெகுவேகமாக ஓடுகிறதா?

உடலோ, உணர்வுகளற்ற தேர்போல் மெல்ல மெல்ல அசைகிறதா? அலைகளற்ற ஆழ்கடல் போல் அசைவற்று நிற்கிறதா? இவற்றை அடக்கி, சுய நிலைக்குக் கொண்டு வரவேண்டுமே. அவளை இனிப்பார்க்க முடியாது. ஆயினும் அதேநிலை மற்றவர்க்கும் தொடராமல் இருக்க வேண்டுமே.

எண்ணங்களின் எகிறல்கள் எவரையும் பாதிக்க விடாது காப்பாற்ற வேண்டும். கட்டாக்காலிக்கு - காளைமாட்டுக்கு அது நேர்வழியில் போகவேண்டுமானால் ஒரு நுகத்தடி தேவை. அதில் பூட்டப்பட்ட மாடு குறிக்கோளை நோக்கிப் போகும். பாயும் குதிரைக்கோ கடிவாளம், சேணம் பூட்டி லகானைக் கையில் பிடித்தால் குறிக்கோள் நிறைவேறும் வாய்ப்பு உண்டு. மோட்டார் கார்களுக்கு வேகத்தைக் கூட்டும் கருவியினருகே வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவியாகி பிறேக் (Brake) காணப்படும்.

நுகத்தடியாக, கடிவாளமாக, பிறேக்காக செயற்பட ஏதோ ஒன்று ஒவ்வொரு உயிரிக்கும் தேவையாக உள்ளது.

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் எண்ணச் சிதறல்களைக் கட்டுப்படுத்தும் கருவியாகச் செயற்படுவர். ஒரு வகுப்பறையில் ஆசிரியருக்கு மாணவரும், மாணவருக்கு ஆசிரியரும் வழிப்படுத்துவர்.

அப்படியே ஒவ்வொரு துறைக்கும் கட்டுப்படுத்தும் கருவிகள் இருக்கவே செய்கின்றன. அதேபோல் ஆன்மீகத் துறையில் கூட லௌகீக விடயங்கள் மனிதனை மோசமாகத்தாக்கும் நேரங்களில் அவற்றின் செல்வாக்கினைத் தடுக்கும் வழியாக நாம் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு தியானம் என்பதே. சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்து எண்ணங்களை சிந்தனைகளை ஒழுங்குபடுத்தி நிம்மதியைத் தேடத் தம் கவலைகள் துன்பங்கள் அனைத்தும் பறந்தோடி சிந்தித்தல் தெளிவுறும்.

எனவே ஒவ்வொரு உயிருக்கும் அதன் செயற்பாடுகள் வழி தவறும் போது அவற்றை ஒழுங்காக்கும் செல்நெறியும் கூடவே தோற்றம் பெறுகிறது. ஓர் எல்லையில் அவற்றை உபயோகித்து நேர்வழியில் செல்ல வைக்கும் திறமையும் கூடவே உண்டு.



வள்ளிநாயகி இராமலிங்கம்

காங்கேசன்துறையில் பிறந்த இவர், பல்வேறான புனை பெயர்களில் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், குறுநாவல்கள், நாடகங்கள் எழுதி வருகின்றார். குறமகள் எனும் புனைபெயரில் 'விளம்பரம்' இதழில் நீண்டகாலமாக எழுதிவருகிறார். சமூகசேவையில் நாட்டம் கொண்ட இவர் ஒரு கல்வியலாளர், சொற்பொழிவாளர் மற்றும் எழுத்தாளரும் ஆவார்.

சுமைகளை சுகங்களாக்குங்கள்

- நா. க. சிவராமலிங்கம்



தாய் கருவை வயிற்றில் பத்து மாதம் சுமக்கிறாள். பிறந்தபின் சேயை தந்தை தோளில் சுமக்கிறார். எல்லோரும் ஏதாவது ஒரு சுமையை உள்ளத்திலே சுமந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே அனைவரும் சுமை தாங்கிகளே. சுமைகளை சுகங்களாக்குங்கள்.

எனக்கு மட்டும் ஆண்டவன் இவ்வளவு கஷ்டத்தை கொடுத்திருக்கிறானே! இதுமாதிரி பலர் பல சந்தர்ப்பங்களில் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஏதோ ஆண்டவன் எல்லோருக்கும் அளந்து அளந்து கஷ்டத்தைக் கொடுப்பது போலவும் ஒரு சிலருக்கு மட்டும் அளவேயில்லாமல் கஷ்டத்தை அள்ளி வந்து அவர்கள் வீட்டில் கொட்டி விடுவது போலவும் பேசுவது எவ்வளவு அபத்தமானது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

வெய்யில் என்பது ஒரே அளவாகத்தான் காயும். தெருவில் வருவோர் போவோரை கவனித்துப் பாருங்கள். ஒருவர் என்ன மோசமான வெய்யில் எனக்கூறி நிழல் தேடி ஒதுக்கிடம் தேடுவார். இன்னொருவர் 'சே என்ன ஒரேயடியாக இப்படிக் கொளுத்துது' என்று சொல்லி இளநீர் வாங்கிக் குடிப்பார். மற்றொருவர் தள்ளாடி எதையும் பொருட்படுத்தாமல் தன் வேலையை முடிக்க வேண்டி தெருவில் விறுவிறுவென்று நடந்து கொண்டிருப்பார். இப்போது சொல்லுங்கள் சூரியன் தன் வெப்பத்தை ஒருவருக்கு 22 டிகிரியாகவும் இளநீர் குடித்தவருக்கு 32 டிகிரியாகவும், மயங்கி விழுந்தவருக்கு 40 டிகிரியாகவும் தனித்தனியாகவா பிரித்துக் கொடுத்துள்ளது. இல்லை, தெருவில் விறுவிறுவென நடந்தவருக்கு மட்டும் விசேடமாக குடைபிடித்ததா? சூரியன் தன் கடமையை ஒருவருக்கு கூட்டியும் மற்றவருக்கு குறைத்தும் செய்வதில்லை.

அதேபோலத்தான் ஆண்டவனும் தன் கடமையை செய்து கொண்டிருக்கிறார். முனுசாமிக்கு முப்பது கிலோ, நாராயணசாமிக்கு நாற்பது கிலோ என அவர் கஷ்டங்களை பிரித்தா கொடுக்கிறார். தாங்கும் சக்தி இல்லாத சிலர் கஷ்டம் வந்தபோது கடவுளை திட்டு-கிறார்கள். இன்னும் சிலர் ஐயோ இவ்வளவு கஷ்டமா என்று அங்கலாய்த்து தலையில் கை வைத்து உட்கார்ந்து விடுகிறார்கள். இன்னும் சிலர் தாங்கும் சக்தியின்றி ஒரேயடியாகப் படுத்து விடுகி-றார்கள். மிகுந்த பக்தி கொண்டவர்கள் தான் தாங்கும் சக்தியோடு தடங்கல்களை பொருட்படுத்தாமல் தடையின்றி தம் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்கின்றனர். எனவே கஷ்டங்கள் என்பது கால் நடையாகப் போகிறவர்களுக்கும் உண்டு. காரில் போகிறவர்களுக்கும் உண்டு. அப்படியானால் கோயில் எதற்கு? தெய்வம் எதற்கு என்று வினவலாம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இருக்கும் போது ஒன்றின் அருமை தெரியாது. இல்லாத போதுதான் அதன் அருமை தெரியும். உப்பு என்பது நம்மைப் பொறுத்தவரை சாதாரண விடயம். அதைப்பற்றி பெரிதாக நினைத்துப் பார்த்து ஏங்கமாட்டோம். அதே வேளை மஞ்சட்காமாலை வந்தால் ஒரு மாதம் உப்பில்லாமல் பத்திய உணவு சாப்பிடும் போதுதான் நமக்கு அமுதமாக தெரியும். அதற்காக ஏங்குவோம். இதேபோன்று கடவுளின் அருமையும் கஷ்டத்தில் தான் தெரியும்.

மனித மூளை அபாரமானது. வியத்தகு சாதனைகளை அது புரிந்துள்ளது. காற்றில் ஏறி விண்ணை வெற்றி கொண்டுவிட்டான் மனிதன். கணினியை செயற்கை மூளை எனலாம். எனவே மனிதனது கண்டுபிடிப்புகள் அவனை கைகூப்பித் தொழ வைக்கின்றன. இருந்தும் அவன் கடவுளை நாட வேண்டியுள்ளது.

சைக்கிள் ஓட்டும் சாதாரண மனிதனிலிருந்து ஆகாய விமானத்தை ஓட்டும் பைலட் வரை கடவுளை வணங்க கோயிலுக்கு செல்கிறார்கள் என்பதிலிருந்து அவரவர் நிலைக்கு ஏற்ப ஆண்டவன் ஒவ்வொரு-வருக்கும் ஏதோ ஒரு குறையை வைத்திருப்பது புலனாகிறது. கஷ்டப்படாத மனிதன், கவலையில்லாத மனிதன், தோல்வி காணாத மனிதன் இவ்வுலகில் இல்லவேயில்லை.

சுமைகளை சுகங்களாக நினைக்கும் மனப்பக்குவமும் வந்து விட்டால் போதும். சுமைகள் நாளடைவில் மறைந்தே போகும். அதற்கு ஒரேவழி பக்திதான்.

வாழ்க்கையில் நாமே நமக்கே ஏற்றிக்கொள்ளுதல் சுமைகள் தான். அவை சீனப்பெருஞ்சுவர் போல நீண்டு செல்லும். தூக்க முடியாத அளவிற்கு சுமைகளை தூக்கிக் கொண்டு ஏன் நாம் ஆண்டவன் அடியினை நாடுகின்றோம். அப்பொழுது ஆனந்த சுகம் கிட்டும்.



நா.க. சிவராமலிங்கம்

சென்னை, யாழ். பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர் ஆசிரியராக பணி புரிந்தவர். ரொறொன்ரோ தமிழ் முதியோர் மன்ற தலைவராய் இருந்த சமய சமூக சேவையாளர். ரொறன்ரோ மாநகரசபை தொண்டர் விருது பெற்றவர்.

அன்புக்கு நிகரானது

- கே. ஜி. மாஸ்டர்

ஒவ்வொரு மனிதனதும் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பதை நாம் அறிந்துள்ளோம். இத்தேவைகளின் தரத்தைத் தீர்மானிப்பது அவரவரது பொருளாதார வல்லமை என்பதையும் அறிந்துள்ளோம். ஆனால் இந்தத் தேவைகளின் நிறைவால் மட்டும் ஒரு மனிதன் மகிழ்ச்சியாக வாழ முடிவதில்லையே! ஏன்? இந்தத் தேவைகளில் தன்னிறைவு அடைந்தவர்கள் கூட ஏதோ ஒன்றுக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்களே! அது என்ன? குழந்தைகளைப் பாருங்கள்! அவர்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பெற்றோரால் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்ற போதும், அவற்றுக்கும் மேலாக ஏதோ ஒன்றுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்களே! அப்படியானால் ஒவ்வொரு மனிதனும் வயது வேறுபாடின்றி, ஆண்–பெண் என்ற பால் வேறுபாடின்றி, இன, மத, மொழி, கலாசார வேறுபாடின்றி இந்த அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக எதிர்பார்ப்பது என்ன?

முதலில், ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் திருப்தி (satisfaction) சார்ந்தவையாகவும், மகிழ்ச்சி (happiness) சார்ந்தவை ஆகவும் அமைகின்றன என்பதைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும். பொருள் (material) சார்ந்த ஒன்றைப் பயன்படுத்துவதாலும், அனுபவிப்பதாலும் ஏற்படும் மன நிறைவே திருப்தியாகும். உணவு, உடை, உறையுள் என்பவற்றின் பயன்பாடு மன நிறைவைத் தருவதால் அவை திருப்தி சார்ந்தவைகளாகும். மகிழ்ச்சி என்பது உள்ளுணர்வு சார்ந்தது. அதாவது, மேம்படுத்தப்படும் எமது உள்ளுணர்வே மகிழ்ச்சியாகும்.

இப்போது, திருப்திக்கும் அப்பால் ஒரு மனிதனின் எதிர்பார்ப்பு என்ன என்பதைப் பார்ப்போம். குழந்தைகள் உள்ளடங்கலாக, அனைவருக்கும், உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் தன் மீது அன்பு செலுத்தும் ஒருவரும் அடிப்படைத் தேவையாக அமைகின்றார். இந்த அன்பு செலுத்தும் ஒருவர் பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவராகவே இருக்க வேண்டும் என்பதல்ல. அப்படி இருக்கவும் முடியாது. வாழ்வின் ஒவ்வொரு நகர்விலும் தன்மீது எவராவது ஒருவர் அன்பு செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு மனிதனதும் வாழ்வியல் அடித்தளமாக அமைந்துள்ளது. எவ்வளவு தான் பெற்றோர்கள் குழந்தைகளுக்கும்,

கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் தேவைப்படும் பொருட்-களையும், வசதிகளையும் நிறைவு செய்தாலும், ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தவில்லை என்றால் அவை அனைத்தும் பொருள் சார்ந்த தேவை களைப் பூர்த்திசெய்வனவாக மட்டுமே அமைகின்றன. இவ்வாறான குடும்பங்கள் "உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி" என்ற சுலோகத்துடன், வியாபாரம் செய்யும் நிறுவனங்களுக்கு ஒப்பானவையாகும்.

இப்போது அன்பு செலுத்துதல் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். அன்பு செலுத்துதல் என்பது இருவருக்கிடையிலான இணைப்பின் மூலம் இருவரது உள்ளுணர்வும் மேம்படுத்தப்பட்டு, இருவருமே மகிழ்ச்சி அடைதலாகும். ஏனெனில் உள்ளுணர்வின் மேம்பாடே மகிழ்ச்சி. ஆனால், அன்பு என்றால் என்ன என்பதற்கு திட்டவட்டமான எந்த ஒரு விளக்கமும் கிடையாது, கிடைக்கப் போவதுமில்லை. இருப்பினும் அன்பின் வெளிப்பாடே மகிழ்ச்சி என்பது உறுதியானதாகும். இப்போது அன்பு என்பது என்னவென்று தெரியாத போது ஒருவரது உள்ளுணர்வை மேம்படுத்தி அவரை மகிழ்ச்சி அடையச் செய்வதோடு நாமும் மகிழ்ச்சி அடைவது எப்படிச் சாத்தியமாகும் என்பதை நோக்குவோம்.

பாராட்டு (Appreciation)

ஒவ்வொரு மனிதனும் பாராட்டுக்குரிய தகுதியுடையவன். பாராட்டுதல் என்பது ஒருவரது சிறந்த இயல்புகளை, சிறப்பான செயற்பாடுகளை இனங்கண்டு அவர் முன்னிலையில் அல்லது அவர் அறியக்கூடிய வகையில் நாம் பெருமிதப்பட வைப்பதாகும். இந்தப் பெருமிதமானது ஆனந்தக் கண்ணீர், கனிவான வார்த்தைகள், கட்டியணைத்தல், வெகுமதி என்று எந்த வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்டாலும், இருவரது உள்ளுணர்வும் இயல்பாகவே மேம்படுத்தப்படும் போது இருவருமே மகிழ்ச்சி அடைகிறோம். இங்கே முக்கியமான ஒரு விடயத்தைப் பதிவு செய்யவேண்டியுள்ளது. நாம் ஒவ்வொருவரும் பாராட்டைக் கொடுப்பதற்கும், பெறுவதற்கும் தகுதி உடையவர்கள் என்பதுதான் அது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, நாம் மற்றவர்களைப் பாராட்ட வேண்டும் என்பதை விட மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்பதிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளோம். அதாவது மற்றவர்களை நாம் மகிழ்ச்சிப்படுத்துவதை விட மற்றவர்களால் நாம் மகிழ்ச்சிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலேயே அதிக அக்கறை கொண்டவர்களாக உள்ளோம். இது மிகப் பெரும் வாழ்வியல் தவறாகும்.

அன்பும் பாராட்டும்

அன்பால் உள்ளுணர்வு மேம்படுவது போன்றே பாராட்டுதலும் உள்ளுணர்வை மேம்படுத்துகின்றது. அன்பு கொடுக்கக் கொடுக்கப் பெருகுவதைப் போன்றே, பாராட்டுதலும் கொடுக்கக் கொடுக்கப் பெருகுகின்றது. அன்பின் பரிமாற்றம் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. பாராட்டுதலும் கொடுப்பவரையும், பெறுபவரையும் மகிழ்விக்கிறது. ஆனால், அன்பு என்பது என்னவென்றோ, அன்பைக் கொடுப்பது எவ்வாறு என்றோ ஆணித்தரமான எந்த விளக்கமோ, வழிகாட்டலோ இல்லை. இருக்கவும் முடியாது. ஆனால் அன்புக்கு நிகரானதாக, எம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய, நாமாகவே செயற்படுத்தக்கூடிய 'பாராட்டுதல்' எனும் அற்புதமான வாய்ப்பு இருக்கிறதே, அதைத் தவறவிடலாமா? பயன்படுத்துங்கள்!

முதலில் உங்கள் குடும்பத்தில் ஆரம்பியுங்கள். அதைத் தொடர்ந்து இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, நீங்கள் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவர் மீதும் பயன்படுத்துங்கள். மற்றவர்களை மகிழ்விப்பது தான் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரே ஒரு சூத்திரம் என்பது அப்போது புரியும்.



கே. ஜி. மாஸ்டர், B.Com.

கேஜி மாஸ்டர் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் பொருளியல் பட்டதாரியான இவர் ஆசிரியராகத் தாயகத்தில் கடமையாற்றியவர். பத்திரிகை ஆக்கங்களினூடாகவும், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினூடாகவும் நன்கு அறியப்பட்டவர். தனது வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக்–கொண்டு, வாழ்வியல் சம்பந்தமான விடயங்களில் தன்னைப் பெரிதளவில் ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர்.

பகையும் புகையும்

- புலவர் ஈழத்துச் சிவானந்தன்

பகை கருத்து வேறுபாட்டால் வருவது. அபிப்பிராய பேதத்தாலும், மாறுபட்ட மனோநிலைகளாலும், பகை மூட்டம் கொள்ளும். இது இதயத்தை வேகமாகத் துடிக்க வைக்கும். இரத்த நாளங்களைச் சூடாக்கும். ஆரோக்கியக் குறைவுகளுக்கு வழிகோலி, உடலைச் சோர்வடையச் செய்யும். கெட்ட, போரிடும் உலகத்தை உண்டாக்கும்.

புகை ஒரு புளுகுப் போக்கி. நெஞ்சைக் குதூகலிக்கச் செய்யும் நஞ்சு. ஆனந்தத்தை தந்து ஆயுளை மெல்ல மெல்ல அறுத்து பாடை ஏற்றிப் பயணமாக்கும் பண்பற்ற படாடோபி. அஃறிணைக்கும் பண்புண்டோ? ஆத்திரத்தில் அஃறிணைக்கும் பண்பேற்றிப் பின்பு இறக்கிவிடுவது தமிழ் மரபு. ஒருவர் வாயாலும், மூக்காலும் ஊதி ஊதித்தள்ள அவரை உறிஞ்சித் தள்ளுவது புகை. வெண்சுருட்டு (சிகரட்), கருஞ்சுருட்டு, செஞ்சுருட்டு எனப் புகை போக்கிகள் பலவாகும். வாள் போல் சிகரட்டும் உயிர் அறுக்கும் கத்தியே. நாள் அது ஒன்று போல் காட்டி உயிர் அறுக்கும் வாள் பற்றி வள்ளுவர் சொன்னது புகைப்போருக்குச் சொல்லும் புத்திமதியுமாகும்.

பகை கொள்ளக்கூடாது. யாரோடும் பகை கொள்ளக்கூடாது. பகை சண்டையை உண்டாக்கும். வாய்ச்சண்டையில் தொடங்கி கை, கால் பரிமாறிக் கொள்ளும் உக்கிரமான போர் வரை இழுத்துச் செல்லும் இயல்பு பகை உணர்வுக்கு உண்டு. ஒருவரோடு ஒருவரைப் பகைக்க வைக்கும் கயமையுள்ள சிலருக்குப் பரம சந்தோஷம். கொழுவல் போட்டு பகை மூட்டிக் குளிர்காயும் மக்கள் சிலரா? பலரா? கயவர்களால் பகைகொண்டு சண்டைபோட்டு துன்பப்பட்ட கும்பல்கள் பலவாகும். நேற்று இன்று அல்ல. உலகம் தொடங்கிய காலம் தொட்டு பகை உணர்வும் உலகத்தைப் பாம்பு போல் வளைத்துச் சுற்றி வைத்திருக்கிறது. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அல்ல இவ்வுலகத்து இயற்கை என்கிறது புறநானூறு.

இன்றைய காலச் சூழலைக் கவனித்தால் புகையால் வரும் தீமைக்கு நடந்திருக்கும் பிரசாரம் அதிகம், அதிகம். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்ற ஊடகங்களின் பிரசாரங்கள் நாளும்

பொழுதும் நிறையவே நடந்தவண்ணம் உள்ளது. சினிமாத் துறையிலும் புகைத்தல் உடல் நலத்திற்கு கேடு என்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் போதனை செய்கிறார்கள். நடிகர்களில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் புகை பிடிப்பதைத் தவிர்ப்பது ஒரு ஒழுக்கநெறி என்று வாழ்ந்து காட்டியவர். சங்கிலித் தொடராய் 'தம்' அடித்த இயக்குனர் கே. பாலசந்தர், தான் சினிமாத் துறைக்கு அறிமுகப்படுத்திய நடிகர் ரஜனிகாந்தை தொலைக்காட்சி ஒன்றுக்காய் நேர்காணல் செய்த போது

"நான் சிகரட் பிடிப்பதை நிறுத்திவிட்டேன். இப்பொழுது என் உடல் நல்ல ஆரோக்கியத்தோடு விளங்குகிறது. நீயும் அதனை விட்டுவிட்டால் ஆரோக்கியமாக இருப்பாய்" என்று சொன்ன போது ரஜனிகாந்த் தான் 'கம்மி' பண்ணிவிட்டதாகக் கூறிச் சிரித்தார். இதனைப் பார்வையாளர்கள் கைதட்டி வரவேற்றார்கள்.

பகையினால் வரும் தீமைகள் குறித்தும் பிரசாரங்கள் நடந்திருக் - கின்றன. இவை இலக்கியப் பரப்பிலும் நடந்திருக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் கம்பருடைய இராமாயணம் பகை பற்றிய கருத்துக்-களை இராமன் என்கின்ற கதாபாத்திரத்தினூடாக சொன்னவை பயன்மிக்கவை. கம்பன் விழாக்களிலே யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது என்ற கம்ப சித்திரம் கம்பவாரிதிகளால் காட்டப்படுவது கருத்துக்கினிய விருந்தாகும். இராமனுக்குப் போர் இலட்சியமன்று. சீதையை மீட்பதுதான் இலட்சியம். சீதையை இராவணன் விடுதலை செய்திருந்தால், இராவணனுடைய எல்லாக் குற்றங்களையும் இராமன் மன்னித்திருப்பான் என்று மாலியவான் கூறுகின்றான். இது போன்றே இன்றைய உலக வல்லரசுகள் விடுதலை, சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, ஒத்துப்போதல் என்று நடந்திருந்தால் குண்டுச் சத்தம் நின்றிருக்கும். கொலை வெறி தணிந்திருக்கும்.

பகைமையை தவிர்த்தால் போர் ஒடுங்கும் என்பது கம்பன் கருத்து. கம்பன் கண்ட அரசியல் ஆட்சியில் போர் இல்லாமையை செய்வதற்கு காட்டிய படிமங்கள் பலவாகும். இதனாலேதான் மகான் காந்தி அடிகள் தனது சுதந்திரப் போராட்ட காலங்களில் வாய்ப்பு வரும் போதெல்லாம் பகைமை என்ற உணர்ச்சிக்கு இடங்கொடுக்காமல், உரிமை உணர்ச்-சியை உறுதி செய்யுங்கள் என்றார். இராமராச்சியம் என்று காந்தி பிரகடனப்படுத்தி, ஆட்சியமைப்பில் அபிப்பிராய பேதங்களை, முரண்பாடுகளை கலந்து பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும், அவை குறித்த பகைமை உணர்வு இருக்கக் கூடாது என்று எழுதினார், பேசினார். என்ன நடந்தது?

மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்க மதவெறிகொள்ளும் பகைமையைப் போக்க வேண்டும் என்றார் காந்தியடிகள். மதச்சார்பற்ற விடயங்களில் மட்டுமில்லாமல், மதம் சார்ந்த விடங்களிலும் இறுதித் தீர்ப்பாளராக விளங்க வேண்டியது பகுத்தறிவுதானேயன்றி வறட்டுக் கோட்பாடுகள் அல்ல என்றார். நான் இராமராச்சியம் என்று சொல்லும் போது இந்து மத ஆட்சி என்ற பொருளில் கூறவில்லை. கடவுளின் அரசு என்ற கருத்திலேயே கூறுகின்றேன் என்றார். பகைபோக்கும் காரணிகளில் கடவுளுக்கு முதல் இடம் உண்டு. பகைச்சூழலில், பகை மூட்டங்களின் போது கடவுளே, கடவுளே! இந்தச் சூழ்நிலையில் எங்களைக் காப்பாற்றி அருள வேண்டும் என்று பிரார்திப்பவர்கள் யாரொடும் பகை கொள்ளாத பண்பாளர்கள். காந்தி மகானின் பிரார்த்தனையான 'ரகுபதிராகவ ராஜாராம் பதீத பாவன சீதாராம்' என்ற வரிகள் உலகோரை உள்ளிளுத்தமை ஓர் ஆன்மீக வெற்றி என்றே கொள்ள வேண்டும்.

மதம் இல்லாத அரசியல் ஒரு மரணப் பொறிதான். ஏனெனில் அது ஆன்மாவைக் கொன்று விடுகிறது என்று காந்திஜி கூறினார். அறவழிக்கான ஊற்றாக அவர் மதத்தைப் பார்த்தார். சுதந்திர ஆட்சியை பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் காந்தி ராமராஜ்யம் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தியதும் அவருடைய சித்தத்தின் அழகையும், சிந்தனையின் ஆழத்தையும் காட்டி நிற்பதாகும்.

பொதுமறை என்று போற்றப்படுகின்ற திருக்குறள் நமது உடம்புக் - கும் உள்ளத்திற்கும் மருந்தும் மந்திரமும் தருகின்ற பேரிலக்கியமாகும். இத்திருக்குறளிலே உடலைப் பேணும் வழிமுறைகளையும் வள்ளுவர் சொல்லியுள்ளார். நமக்கு கோபம் வருகிறது. சினம் உண்டாகிறது. நாம் பெரும்பாலும் நட்பையும், உறவையும் வளர்த்துக் கொள்வதைவிட, பகையையும் போராட்டத்தையும் வளர்த்து துன்பப்படுகிறோம். 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' என்ற பழமொழியும் நம்மிடையே உண்டு. இதற்கு என்ன காரணம்? யார் காரணம்? என்று சிந்தித்த திருவள்ளுவர் சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி என்னும் கிருமி எங்கே உ ருவாகிறது என்று கண்டுபிடித்தார். இது ஓர் அற்புதமான கண்டுபிடிப்பாகும்.

நமக்குப் பகைவர்கள் வேறு எங்கும் இல்லை. நம்மிடையே இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தார் ஒரு ஞானி. அந்தப் பகைவர்கள் தொகை ஐந்து பேர் என்றும் கணக்குச் சொன்னார். 'என்னுடன் பிறந்த ஐவரும் பகையே' என்பது அவர் வாக்கியம் நம்முடன் பிறந்த ஐந்து

பகைவர்களும் யார்? யார்? நமது உடம்பு, நமது வாய், நமது கண், நமது மூக்கு, நமது செவிகள் ஆகிய ஐந்துமே நம்முடைய பகைவர்கள், இந்த ஐந்து பகைவர்களுமே நமக்கு வெளியிலே பல பகைவர்களைத் தேடித் தருகிறார்கள். நம்மோடு கூட இருக்கும் பகைவர்களை அடக்கினால் வெளிப்பகைவர்கள் நமக்கு இருக்க மாட்டார்கள். 'கொலைவெறி' என்ற பாட்டும் வந்திராது. நமது ஐந்து பகைவர்களையும் பொறிகள், புலன்கள் என்று கூறிய திருவள்ளுவர், இந்தப் பொறிகளை அவித்து, அவற்றின் சக்தி இல்லாமல் செய்ய வேண்டும் என்றார்.

'பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்' என்றார் வள்ளுவர்.

ஐந்து பொறிகளையும் அதன் வழிவெளியாகும் ஐந்து புலன்களையும் அவிக்கும் ஆற்றல் மூச்சுப்பயிற்சி, யோகாசனம், தியானம் போன்றவற்றிற்கு இருக்கிறது. இது நீண்ட கால அனுபவமும் பயனுமாகும். ஒழுக்க நெறி நின்று மகிழ்ந்து இன்பமுடன் நீண்ட நாள் வாழ்வதற்கு ஐந்து பொறிபுலன்களையும் அடக்கி அவிக்கும்படி சொன்ன திருவள்ளுவரை யோகாசனக் குரு எனலாம்.

பகை வளர்க்கும் உணர்வுகளை உசுப்பிவிடும் ஆணவம் என்னும் மலத்தை வெளியேற்ற முடியாது. வீட்டிலும் நாட்டிலும் குழப்பம் செய்பவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றார்கள். ஆணவ மலத்தை அடக்கி ஆளும் திறன்மிக்கவர்கள் நகையையும், நட்பினையும் வளர்க்கிறார்கள். இவர்களின் இருப்பே சூழலைச் சுத்தமாக்கும். இராமபிரானால் அயோத்தி சுத்திகரிக்கப்பட்டது. இராமர் இருக்கும் இடங்கள் எல்லாம் அயோத்தியாகின. நம்மால் சுத்திகரிக்கப்பட்ட சூழல்கள், வீடுகள் எத்தனை என்று கணக்குப் பார்ப்பதும் ஒரு வாழ்வியலே.

'தீயவை தீய பயத்தலால் - தீயவை
தீயினும் அஞ்சப்படும்' (குறள்)



புலவர் ஈழத்துச்சிவானந்தன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1968இல் புலவர் பட்டம் பெற்றவர். கனடாவிலுள்ள ஆதி அருள்நெறி மன்றத்தின் நிறுவனரான இவர் கனேடியத்தமிழ் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். 'ஈழத்துச் சொற்பொழிவுகள்' என்ற நூலை எழுதியவர். இவர் தமிழ் மொழியிலும், சமயத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்.

சுட்ட பழமும் சுடாத பழமும்

- முனைவர் பார்வதி கந்தசாமி

நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக்கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில் பிராணியை வதைக்காதே

– நாமக்கல் இராமலிங்கம்

இப்பாடல் உலகளாவியரீதியில் வயது போய்க்கொண்டிருக்கும், மூப்படைந்து கொண்டிருக்கும் குழந்தைகள் போல பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கும் முதியோர் அனைவருக்கும் பொருந்தும். வயதானபோது முதியோர் பலர் குழந்தைகளாக மாறிவிடுவதை நாம் அவதானிக்கிறோம். ஔவையார் தடி ஊன்றிய நிலையில் நின்றபடி, மரத்தில் இருந்த சிறுவன் முருகனிடம் பழம் தரும்படி கேட்க, அவனோ "பாட்டி! உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா அல்லது சுடாத பழம் வேண்டுமா" என்று கேட்டான் என்ற கதை–யைப் பலரும் கேட்டிருப்பீர்கள். சுடாத பழங்களான நாங்கள் முதுமையில் சுட்ட பழங்கள் ஆகிவிடுவோமா? விழுமியங்கள் போற்றிப் பேணப்பட்ட இந்தியப் பெருங்கண்டத்திலேயே முதுமை பெரும் அவலங்களைச் சந்திப்பதைச் செய்திகளில் படிக்கிறோம். தொலைக்காட்சிகளில் பார்க்கிறோம்.

புகையிரத நிலையங்களில் தனிமையில் விடப்பட்ட முதுமை, வீதியோரங்களிலும் புகையிரத மேடைகளிலும் முடங்கிக்கிடக்கும் முதுமை, வயிற்றுக் கொடுமைக்காக குப்பைத் தொட்டிகளை நாடும் முதுமை, அரலி விதைகளை அரைத்து உயிர்போக்கும் முதுமை என முதுமை தளம்புகிறது, தள்ளாடுகிறது, எப்போது சாப்பிட்டுக்கு ஆள் வரும் எனக் காத்திருந்து, கொடுத்துப் பசியாற்றிய முதுமைக்கு தம் வயிறு பசியால் துடிக்க, கண்கள் சோர எப்பொழுது சாப்பாடு வரும் என வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பதே நியதியாகிவிட்ட முதுமைகளின் பட்டியல் பெருகுகின்றது.

தமிழர் பண்பாட்டைப் பொறுத்த அளவில் ஆபிரிக்கர், சீனர் ஆகியோரின் பண்பாட்டைப் போலவே, முதியோர் பொதுவாக மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவர்களாக உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். முதிய, முது,

முதுமை போன்ற சொற்கள் உயர்ந்த, மேன்மையான, சான்றாண்மையுடைய என்பதான பொருள்களைத் தருவதிலிருந்து, முதியோர்களுக்கான மதிப்பு தமிழ் சமுதாயத்தில் தொடர்ந்து போற்றப்பட்டு வந்திருப்பதைக் காணலாம். காய் முற்றி, நல்ல பழம் ஆகுவது முதிர்ந்த பின்னரே! அத்தகைய அனுபவத்தால் பழுத்த பழங்கள்தான் எங்கள் முதுசொத்து. ஆபிரிக்க, சீன, ஜப்பான், கனடாப் பூர்வீகக் குடிகளிடையே முதுமைக்குக் கொடுக்கப்படும் மதிப்பு அளப்பரியது. முதியவர்களை எம் மூதாதையர்களை எங்கள் பெற்றோர் எவ்வாறு பாதுகாத்தனர். முதுமையில் அவர்களைக் குழந்தைகளாகப் பாதுகாத்தனர். பால் வார்த்தனர், கொள்ளி வைத்தனர், சடங்குகளைச் செய்தனர். மாளையங்கள் செய்தனர். ஆனால், இன்றைய பரம்பரையினர் இவற்றைச் செய்வார்களா என்ற கவலை முதியோர் பலரிடமும் கருக்கொண்டுள்ளது. புலம்பெயர்ந்த சூழலிலே தமிழ் முதுமை துன்பங்களை அனுபவிக்கத் தொடங்கிவிட்டது.

கனடாவில் உள்ள தமிழ் முதியோர் பற்றிய நிலமைகளை அவதானிக்கும் போது மூன்று அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.
(1) முதியோர்களின் தேவைகள் பற்றிய நோக்கு (2) முதியோர் சந்திக்கும் பிரச்சினைகள் (3) முதியோர் மதிப்புடன் முதுமை எய்துவதற்கான வழி வகைகள்.

(1) முதியோர்களின் தேவைகள் பற்றிய நோக்கு

கனடாவுக்கு வந்த முதியவர்கள் பலர் பல்வேறுபட்ட இன்னல்களை அனுபவிக்கின்றனர். சில முதியவர்கள் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கு நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்கும் போது பலருக்கு முதுமை சுமையானது என்ற எண்ணம் ஏற்படுகிறது. அவர்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருப்பதற்கு பின்வரும் காரணிகள் அவதானத்துக்கு உரியன: (1) கனேடிய சட்டதிட்டங்களால் பாதிக்கப்படுதல், பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு மாத்திரம் பொருத்தமான சேவைகள், மருத்துவ தங்கிடங்கள் போன்றவற்றில் நிகழ்வது போன்ற உதாரணங்கள் (2) பாதுகாக்க வேண்டிய பிள்ளைகளாலும் உறவுகளாலும் ஏற்படும் அனர்த்-தங்கள் (3) கனடாவில் கிடைக்கக்கூடிய சேவைகளை அறியாதிருத்தல்.

கனேடிய சட்டதிட்டங்கள் பொதுவாக புதிய குடிவரவாளர் சமூகத்தை வெகுவாகப் பாதிப்பதைப் பலரும் அறிவர். கூட அவர்களை உதாசீனம் செய்வதும் பல்வேறு குழு ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளன. பேராசிரியர்களான மேசன், ஹைமன், சடவோய், றோஸ்மேரி மாயர், பைஸர், நளினி பண்டலங்காட், லோறா சிமிச், வப்பு, சேபாலி குருகே, பார்வதி

கந்தசாமி ஆகியோர் செய்த ஆய்வுகளில் தமிழ் முதியோர் சந்திக்கும் அவலங்கள் தெரியவந்துள்ளன. கனேடிய அரசாங்கம் குடிவரவாள முதியோரை அலட்சியப்படுத்திச் சட்டங்களைத் தொடர்ந்து இறுக்கமாக்கிக் கொண்டே வருகின்றது. பத்து வருடங்கள் முதியோரை 'ஸ்பொன்ஸரில்' எடுத்துக் – கொண்டவர்கள் மருந்து உட்பட்ட சகல செலவுகளையும் பொறுப்பேற்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன்தான் கனடாவுக்குள் நுழையும் அனுமதியை வழங்கியது. இன்று 'சுப்பர் விசா' என்ற அனுமதியில் வந்த முதியோரும் 'ஸ்பொன்ஸர்' செய்த குடும்பங்களும் படும் அவலங்கள் அளவு கடந்தவை. பெற்றோரை ஊரில் தனியாகத் தவிக்க விட்டு ஏங்கும் குடும்பங்கள் பல. ஸ்பொன்ஸர் செய்தவர்கள் தங்கள் பெற்றோருக்கான வரிச் சலுகையைக்கூடப் பெற முடியாது. முதியோரின் தேவைகள் எவை என்பதை உறவுகளும் அறிந்து கொள்ள முயற்சிக்காத ஓர் அசமந்தப் போக்கு காணப்படுகிறது. முதியோர் தேவைகளை அறிந்தும் பூர்த்தி செய்ய முடியாத இக்கட்டான நிலையிலும் உறவுகள் அந்தரிக்கின்றனர்.

(2) முதியோர் சந்திக்கும் பிரச்சினைகள்

இராணுவச் சித்திரவதைகளையும், பெண்கள் மீதான துன்புறுத்தல்–களையுமே பலரும் நினைவிற்குக் கொண்டுவருவது வழக்கம். குடும்ப வன்முறை அல்லது குடும்பத் துன்புறுத்தல் என்று கூறும் போது பெண்களே பலருடைய மனங்களில் அதிகமாகத் தோன்றுகின்றனர். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. விபச்சாரிகள் உட்பட பெண்கள்தான் மிக மோசமாக வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற கருத்தில் சமூக, சர்வதேச மட்டத்தில் ஒருமைப்பாடு உண்டு. குடும்ப வன்முறையில் கணவரால் கொலையுண்ட பெண்கள் கனடா உட்பட்ட மேற்கு நாடுகளிலும், இந்தியா, இலங்கை போன்ற தமிழ்த் தொட்டில்களிலும் அதிகமே. குடும்ப மட்டத் துன்புறுத்தல் என்பது குழந்தை முதல் வயோதிபர் வரையிலான பெண்கள் உள்ளிட்ட துன்புறுத்தல்களைக் குறிக்கும்.

கனடாவிலும் மற்றும் மேற்கு நாடுகளிலும் வாழும் தமிழ் முதியோர்கள் பலர், உடலியல், உளவியல் அல்லது உணர்வியல்ரீதியிலான துன்புறுத்–தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர், கவனிக்காது விடப்படுகின்றனர், கைவிடப்படுகின்றனர். பலர் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப் – படுகின்றனர். அவர்கள் பொருளாதார, பண்பாட்டு, அமைப்பு அல்லது நிறுவன, அரசரீதியிலான துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர். அகதிகள் என்ற கையறு நிலையும், இடப்பெயர்வும் உயிர், சொத்து இழப்புக்களும் இவர்கள் துன்பங்களுக்கு மேலும் உரம் ஊட்டுவனவாக உள்ளன. ஆனால், முதுமையை விரட்ட வேண்டிய செயற்பாடுகள் மந்தமாகவே உள்ளன.

ஆலயங்கள் இருந்தும் அழைத்துச் செல்ல ஆளில்லை. மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்குவதற்காக சங்கங்கள் இருந்தும் அங்கே போவதற்கு அனுமதி இல்லை. கோரமான பனிப் புயல்கள் நடுவே பைத்தியங்களாக ஒடுங்க வைக்கும் கட்டிடக் காடுகளிலும், பராமரிப்பு இல்லாத பராமரிப்பு இல்லங்களிலும் 'கிடு,கிடு' குளிரில் பாதாள அறைகளிலும் முடங்கும் முதியவர்கள், பெற்றார் இல்லாது பிள்ளைகளை வளர்க்கும் முதியவர்கள் எனப் பலவிதமாகத் துன்பங்களை முதியோர் அநுபவிக்க வேண்டியுள்ளனர். மதுபோதைக்கு அடிமையான ஆண் முதியோர்களால் அவர்களது மனைவிமார், சில சமயங்களில் அவர்கள் உறவுகளும் இன்னல்களுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாகின்றனர்.

முதுபெண்கள் சிலர் மதுவுக்கு அடிமையாவது பற்றி வைத்திய கலாநிதி சூரியபாலன் கவலை தெரிவித்திருந்தார். இது சமூகத்திலும் அவதானிக்கப்பட்டுள்ளது. சூதாட்டத்திலும் சில முதியோர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். சில சங்கங்களும் சூதாட்டத்திற்கு அடிமையாகும் நிலை பற்றிய சிந்தனை-யின்றி, முதியோரை இலவச பஸ் கிடைக்கும் காரணத்திற்காக அங்கு கூட்டிச்செல்கின்றன. அவர்களுக்கு ஒரு உல்லாசப்பயணம் என எண்ணி போதைவஸ்துவுக்கு அடிமையாதலைவிட மிகப் பாரதூரமான விளைவை ஏற்படுத்தக் கூடிய சூதாட்டத்திற்கு அடிமையாக்கி, அவர்களது குடும்பங்களில் புயலை வீச வைக்கும் கைங்கரியத்தை விளங்கிக் கொள்ளாமல் இலவசத் -தைப் பயன்படுத்த வைக்கின்றன. இன்று அக்கெடுதலை உணர்ந்துள்ளனர். இலவச வசதிகளை செய்பவர்கள் தங்களுக்குப் பொருள் சேர்க்கத் தேடி அவர்களிடம் போகின்றனர். பஞ்சபாண்டவர் சூதாடி தங்கள் மாங்கனி பாஞ்சாலியையும் விற்கும் அளவிற்குச் சென்றது எதனால்? தமிழ்ச் சமூகமே சற்றுச் சிந்தியுங்கள்.

"என்னை மகள் தன்னோடை ஸ்காபரோவிலை இருந்து தன்ரை குழந்தைகளைப் பார்க்கட்டாம். தகப்பனை பிராம்ரனிலை மகனோடை இருந்து அவற்றை பிள்ளையளைப் பள்ளிக்கூடத்துக்கு விட்டு எடுக்கட்டாம். மகள் விடாப்பிடியாக நின்று என்னை வெளியேற்றினா. கறிச் சட்டியாலை தலையிலை அடிச்சா. மருமகன் காலால் உதைத்தார், வயித்திலை உதைத்தார், மகள் சட்டியால் தலையில் அடித்தாள், காலால் உதைத்தாள், கறியைத் தலையில் கொட்டினாள், மகன் தள்ளி விழுத்தினான், கத்தியைக் காட்டினான், மருமகள், மகன் பனியில் விட்டுக் கதவைப் பூட்டினார்கள்" என்ற கதைகள் சமூகத்தில் மலிவாகவே உண்டு.

துன்புறுத்தல் என்றதும் இராணுவச் சித்திரவதைகளையும், பெண்கள் மீதான துன்புறுத்தல்களையும் பலரும் நினைவிற்குக் கொண்டுவருவது

வழக்கம். ஆனால், அவர்கள் சந்தோசமாய் தம் பணத்தைக் கூடச் செலவழித்து வாழ முடியாதவர்களாகி வெலவெலத்துப் போகின்றனர். வங்கி அட்டைகள் அவர்கள் சொத்துக்களாக இருப்பது அதிர்ஷ்டம். கட்டிடக் காட்டுக்குள்ளேயே அடிமை வாழ்வை வாழ்கின்றனர். காலநிலைக்கும் ஸ்பொன்ஸர் செய்தவர்களுக்கும் அடிமைப்பட்டு வாழ்வதாக உணர்கின்றனர். எங்கள் பண்பாடு என்று கூறும்போது நாம் பாரம்பரியமாக எமது நம்பிக்கைகளையும், வாழ்வியல் அனுபவங்களையும், ஊகங்களையும், சடங்கு சம்பிரதாயங்களையும் எம்முள் பகிர்ந்து வாழ்வதையே கருதுவோம். இலங்கையில் வாழ்ந்தவர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப் பார்க்க வேண்டும் என்பது எழுதா மறை.

இவ்வாறு முதுமையில் மனிதர் தனிமைப்படுத்தப்பட்டுத் திண்டாட்டம் அடையச் செய்யப்படுகின்றனர். அவர்கள் முதுமையில் பாலியல் உணர்வுகள் அற்றவர்களாக அவர்களுடைய பிள்ளைகளால் கருதப்படுகின்றனர். முதுமையில் அவர்களின் நோய் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பனி வயல்களையோ, வரம்புகளையோ உழ முடியாதவர்களாகவும் கடக்க முடியாதவர்களாகவும் திண்டாடுகின்றனர். 46–66 சதவீதத்தினர் பிள்ளைகளில் தங்கி வாழ விரும்பவில்லை (பைஸல் ஆய்வு 1988). றொபின் மேஸன் 1999 ஆய்வில் திறந்த வீடுகளில் வாழ்ந்த எமக்கு பூட்டிய கதவு, அடைக்கப்பட்ட யன்னல்கள் உள்ள வீடுகளில் வாழ்வது விரசமானது எனக் கட்டிடக் காட்டில் அடைக்கப்பட்ட வாழ்வை வெறுத்தமையை அறிய முடிந்தது. ஊர் என்பது நிரந்தரம் என்ற கருத்துடன் இணைந்த உறைவிடமாகவே எம்மிடம் இன்றும் உறைந்துள்ளது. கனேடியக் காலநிலையை அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் வீட்டிற்கு வெளியே அவர்கள் உலகம் இருப்பதால் வீட்டிற்குள் இருப்பவர்களைப் பற்றிய கவலை தேவையற்றதாகவும் தெரிகிறது. நோய்வாய்ப்பட்டாலும் வைத்தியரிடம் கூட்டிச்செல்லக் கூட முடிவதில்லை. பஸ் பயணச் சீட்டுக்குக் கூட பிள்ளைகளிடம் இரக்க வேண்டிய கையாலாகாத்தனம் பல முதியோருக்கு மனக் கோணலை ஏற்படுத்துகின்றது. சிலர் வையப்படுகின்றனர். உடலியல், உளவியல் துன்பத்துக்கு உள்ளாக்கப் படுகின்றனர்.

இம் முதியோர்களிலும் ஆண்களைவிட அதிகளவிலான துன்பத்துக்கு பெண்கள் உள்ளாகின்றார்கள். சமைத்தல், சுத்தம் செய்தல், பாடசாலைக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்தல், உணவு ஊட்டுதல், கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குதல், குழந்தைகளைப் பராமரித்தல், நோயாளரைப் பராமரித்தல், பனியில் உழல்தல் முதலாம் பல வேலைகள் பெண் முதுமைகளை உலுப்புகின்றன. முதிய பெண்களில் பலர் அடி, உதை வாங்குபவர்களாகவும் உள்ளனர். தங்கள் கணவன்மாரால் பாலியல் வற்புறுத்தல்களுக்கும் பாலியல்

வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். முதுமையானவர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்கக்கூடிய வசதிகள் மிக அரிதாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக புதுக் குடிவரவாளர்களுக்கும் வெள்ளைத்தோல் அற்றவர்களுக்கும் இவ்வாய்ப்புக்கள் மிகக் குறைவு. மொழியறிவு இல்லாமையும் குறைபாடுகளுக்கான ஒரு காரணமாகும். தனியாக இருக்கும் முதியவர்களும் நீண்ட காலப் பராமரிப்பு நிலையங்களில் இருப்பவர்களும் அநுபவிக்கும் துன்பங்கள் வேறு விதமானவை. இவர்களில் குறிப்பாக, நீண்ட காலப் பராமரிப்பு நிலையங்களில் இருப்பவர்கள் பண்பாட்டுரீதியிலான தடைகளையும் இனத் துவேசங்களையும் எதிர்கொள்கின்றனர். பல் உடைபட்ட முதுமையும் இனத்துவேசத்தின் சாட்சியங்கள். ஆங்கில மொழி அறிவின்மையைச் சாட்டாக வைத்துச் சேவை தவிர்த்துக் கொள்ளப்பட்டவர்களும் உண்டு.

சேவை பற்றிய அறிவின்மை

சங்கங்களில் சேர்ந்த முதியவர்கள் தடைகளை வென்ற முன் உதாரணர்கள். ஆனால் பல முதியவர்களுக்கு இவ்வாறு தடைகளை உடைக்கப் பயமும், தயக்கமும் அத்துடன் சமூகத்தவர், உறவினர், அயலவர் என்ன சொல்லுவார்களோ என்ற பழிச்சொல்லுக்கான பயமும் உண்டு. தனித்து வாழும் முதியோர் பலர் மன ஆரோக்கியத்துடன் சுதந்திரம் பாதிக்கப்படாது வாழ்கின்றனர். மன, உடல் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். கூடிச் சுற்றுலா போகின்றனர். சில பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கான வசதிகளை நன்றாகவே செய்கிறார்கள். சிலர் முதியோர்களுக்குத் தடைச் சட்டங்களை வகுக்கிறார்கள்.

முதியோருக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள் பற்றி இன்னமும் போதிய அளவுக்கு அறிவு பரப்பப்படவில்லை. முதியோருக்கான சேவையில் ஈடுபடும் நிறுவனங்கள் சில பண்பாட்டுத் தேவைக்கு ஏற்ற சேவைகளை வழங்குவது இல்லை. சுகாதார சேவையையும், மொழிபெயர்ப்புச் சேவையையும் வழங்குவதில் அக்கறை எடுப்பதில்லை. மொழிபெயர்ப்பாளருடன் மனோவைத்திய நிபுணர் எத்தகைய சேவையை வழங்க முடியும்? கிடைக்கக்கூடிய தமிழ்ச் சேவைகள் பற்றிக் கூட அறியாத பலர் சமூகத்தில் உள்ளனர். குக் கிராமங்களில் வாழ்வது போன்ற வாழ்க்கை நகரமயமாக்கப்பட்ட நிலையிலும் சிலரது தனிமைப்படுத்தப்பட்ட அன்நியப்படுத்தப்பட்ட வாழ்விடங்களில் மனிதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது இருப்பது விசனத்துக்குரியது. பணம் பெருக்குவதில் புலன் செலுத்தும் உலகமயமாதல் பண்பாட்டு வேர்களை அறுத்து விடுகின்றன. 211 என்ற இலவச இலக்கம் இருந்தும் அதைப் பயன்படுத்திப் பல சேவைகளைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள-

லாம். ஆனால் இதற்கும் பொறுமையும் சேவை எண்ணமும் வேண்டும். நோய் முற்றிய பின் குணப்படுத்தல் இலகுவானதா?

முதியோர் மதிப்புடன் முதுமை எய்துவதற்கான வழி வகைகள்

பெற்றாரை எதிர்த்துப் பேசுவதோ, தோளுக்கு மேல் வளர்ந்ததும் தந்தையை நேரே முகங்கொள்வதையோ தவிர்த்து வாழ்ந்த பரம்பரையினர்தான் எங்கள் முதியோர். அவர்கள் எதிர்காலச் சந்ததியின் அடித்தளங்கள். சோழர் அரசவையில் ஒரு நாள் ஒரு வாதம் நடைபெற்ற போது அதைத் தீர்ப்பதற்குக் கரிகாலச் சோழன் முன்வந்தான். ஆனால், அவன் சிறுவனாக இருந்தபடியால் தான் கூறுவதை சபையோர் கேட்கமாட்டார்கள் என எண்ணினான். அதனால் முதியவர் போன்று வேடமணிந்து சரியான தீர்ப்பை வழங்கி அச்சிக்கலைத் தீர்த்து வைக்கவேண்டியிருந்தது. இதைப் போலவே சிறுவர்களுக்கான நல்வழி மூதுரை போன்ற அறநெறிகளை வரலாற்று ரீதியில் 'ஔவை' என்ற சுட்ட பழம் கேட்ட பாட்டி மூலமே பெற்றிருக்கின்றோம். இதிலிருந்து தமிழினப் பண்பாட்டில் முதியோர்க்கு இருந்து வந்த சிறப்புமிகு மதிப்பை விளங்கிக் – கொள்ளலாம். அண்ணை, அக்கா, அப்பு, ஆச்சி என்ற வார்த்தைகள் சமூகத்தவரால் தம்மைவிட வயது முதிர்ந்தவர்களைக் குறிக்க அனைவராலும் பயன்படுத்தப்பட்டது.

முதுமை என்பதை வளம் குன்றிய வயோதிபமாகப் பார்க்காது, வாழ்க்கையின் முழுமையாகவும், பூரண அனுபவமாகவும், முதிர்ச்சியாகவும் நோக்கும் பண்பும் இருந்துள்ளது. இதனால் மூத்தோர்களைப் பட்டறிவிலும் பண்பாட்டிலும் இளையோர்களுக்கு வழிகாட்டிகளாக மதிக்கும் வழக்கமும் ஈழத்தில் இன்று வரையும் ஓரளவிற்காவது தொடர்கின்றது. ஆபிரிக்க, சீன சமூகங்களில் அவர்கள் குடும்பத் தலைவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். எனினும், ஆண் வயோதிபருக்கே அந்த முக்கியத்துவம் அங்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

இளைய சந்ததியினர் முதுதமிழரை மதிப்பதற்குப் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமானது. மருத்துவ வசதிகள் பொருத்தமாகவும், உடனடியாகவும் வழங்–கப்பட வேண்டும். படிகள் முதியோருக்குப் பாதகமாக இருப்பதைப் பல சந்தர்ப்பங்களில் காணலாம். படிகளில் தடம் புரள்வதும், பனியில் சறுக்கி விழுந்து முறிவதும் தொடர்கதை. இத்தகைய விபத்துக்கள் தடுக்கப்படக் கூடியவை. தமிழ் முதியோர் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருத்தமானதும், தமிழ் மொழியிலானதுமான சேவைகளைப் பெறுவதற்கு சங்கங்கள் இணைந்து வாதாட வேண்டும். இது முதியோரின் மனித உரிமை! முதியோரின் பண மோசடி செய்வோர் மீது பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கீழே

தரப்படும் நிறுவனம் முதியோருக்காக வாதாடும் சட்ட நிறுவனம். வசதியற்–நோருக்கு இலவசமாகவும் தமிழிலும் சேவைகள் வழங்குகிறது. விபரம் வருமாறு:

Advocacy Centre for Eldrerly:
2 Carlton Street, Toronto, ON M5B 1J3 - 416-598-2656

தெற்காசிய சட்ட நிறுவனமும் சட்ட, சமூக நல ஆலோசனைகளைத் தமிழிலும் வழங்குகிறது. இலவசமாகவும் வழங்குகிறது. சமூகத்திலும் சில நிறுவனங்களில் உலவு சென்றும் வழங்குகிறது. விபரம் வருமாறு:
45 Sheppard Ave. E., North York, ON M2N 5W9 - 416-487-6371

வசந்தம் என்ற தமிழ் நிறுவனமும் மது போதைக்கு அடிமையானவர் – களுக்கும், முதியோருக்கும் சேவைகளை வழங்குகிறது. விபரம் வருமாறு:
Vasantham
2660 Eglinton Avenue East
Scarborough, ON. M1K 2S3
416-847-4172

இவை தவிர, தமிழ் ஈழச் சங்கம் மற்றும் ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் போன்றனவும் சேவைகளை வழங்குகின்றன. பல சேவை நிறுவனங்களில் தமிழர் இன்று சேவையில் இருப்பதால், 211 என்ற இலவச தொலைபேசி இலக்கம் கொண்ட தொலைபேசித் தகவல் நிலையத்தை அழைத்து, பொதுச் சேவைகள் பற்றிய தகவல்களை 24 மணித்தியாலமும் இலவசமாகக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். முதுமை போற்றும் பண்பாட்டை எங்கள் குழந்தை – களுக்கும் கடத்தி, அவர்களையும் எங்களை வயது வந்த நிலையில் பார்க்கும் மனத்திட்பம் உடையவராக மாற்றுவோம்.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை



கலாநிதி பார்வதி கந்தசாமி

ஸ்ரன்ஃபோர்ட் (Stanford) பல்கலைக்கழகம், ரொறன்ரோ பல்கலைக்கழகம் மற்றும் யோர்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் மொழிக் கற்கைகளைக் கற்பித்துள்ளார். வித்யாலங்கார பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் பல் கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகவும் விளங்கினார். கட்டுரை யாளர், எழுத்தாளர், நாடக இயக்குனர், தயாரிப்பாளர். இலங்கையின் அகதிகள் மீதான உளவியல் சுகாதாரப் பிரச்சனைகள் மீது இவர் எழுதிய கட்டுரைகள் சர்வதேச சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. ரொறொன்ரோவில் ஒரு தமிழ் சுகவாழ்வு நிலையமான வசந்தத்தின் ஸ்தாபகராகவும் இவர் விளங்குகிறார்.

ரொறன்ரோவில் தமிழர் மத்தியில்
கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியும் சந்திக்கும் சவால்களும்

- பேராசிரியர் இ. பாலசுந்தரம்

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (குறள் 397)

என்ற குறள்மொழியில் எந்நாட்டிற்குச் சென்றாலும் கல்வி பயன்தரும் என்பதை வள்ளுவர் விளக்குகின்றார். கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழரும், அவர்தம் இளைய தலைமுறையினரும் இந்நாட்டில் கல்வி பயில்வதில் ஆர்வம் கொண்டு, நல்ல முன்னேற்றமும், நற்பயனும் அடைந்து வருகின்றனர் என்பது மகிழ்வைத் தருகின்றது.

கனடா நாட்டில் பல்லின மக்களது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு சம – வாய்ப்பும், வசதிகளும் வழங்கப்படுவதோடு, அரசியல் யாப்பிலும் அவை உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஈழத்தமிழர் கடந்த நான்கு தசாப்தங்களாகப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த தமிழரில் பெரும்பாலா–னோர் ரொறன்ரோ பெரும்பாகத்திலே குடியமர்ந்தனர். பொதுவாக ஈழத்தமிழர் கல்வியையே மூலதனமாகக் கொண்டு வாழ்பவர்களாவர். அந்த அடிப்படையில் ரொறன்ரோவில் புலம்பெயர்ந்த கல்வித் தகைமையுடையோர் மேலும் இங்குள்ள கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்று, கனேடிய கல்விச் சான்றிதழ்களும், உரிய தொழில் வாய்ப்புகளும் பெற்றுத் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருவதோடு, கனடாவின் பல்துறை அபிவிருத்திகளிலும் பங்குகொண்டு, இந்நாட்டுக்காக உழைத்து வருகின்றனர். இங்கு பிறந்த இளைய தலைமுறையினர் இந்நாட்டுக் கல்விமுறையில் கற்று, கல்வி நிலையங்களில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். இக்கல்வியின் பயனாக ஈழத்தமிழர் தம் பொருண்மிய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து வருகின்றனர். அதேவேளை, கல்வியில் பல சவால்களையும் அவர்கள் எதிர்கொண்டு வந்துள்ளனர் என்பதும் அறியத்தக்கவையாகும்.

இவ்வகையில் முதலில் கல்விமானாகிய பேராசிரியர் இலகுப்பிள்ளை அவர்களின் கல்விச் சாதனைகள் குறிப்பிடத்தக்கதாகும். 1966ஆம் ஆண்டில்

புலமைப் பரிசில் பெற்று ரொறன்ரோப் பல்கலைக்கழத்திற்கு வந்த இலகுப்பிள்ளை அவர்கள், B.Sc., Ph.D பட்டங்கள் பெற்று, 1976–2000ஆம் ஆண்டு ரொறன்ரோ பல்கலைக்கழகத்திலும், கால்ரன் பல்கலைக்கழகத்திலும் பௌதிகவியல் பேராசிரியராகக் கடமையாற்றிய கல்விமானாவார். கனடா அரசாங்கம் இவரை கனடிய அணுசக்திக் கட்டுப்பாட்டுச் சபையின் சிரேஷ்ட விஞ்ஞான ஆலோசகராக நியமித்தமை ஈழத்தமிழருக்குப் பெருமையாகும். அத்துடன் அணுசக்திக் கதிர்வீச்சின் தாக்கம் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவில் இவர் ஓர் உறுப்பினராகவும் கடமையாற்றினார். ஒட்டாவா பல்கலைக்கழக சுற்றாடல் பொருண்மிய ஆய்வு நிறுவனத்தின் ஆலோசகர் பதவியை இவருக்கு வழங்கிக் கௌரவித்தமையும் ஈழத்தமிழரின் ஆரம்ப காலக் கல்விச் சாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அடுத்ததாக, அண்மையில் காலம்சென்ற பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் குறிப்பிடத்தக்க கல்விச் சாதனையாளர் ஆவார். இவர் 1980களில் புலமைப்பரிசில் பெற்று, பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்–தில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர். பின்னர் 1990களின் ஆரம்பத்தில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறை விரிவுரை–யாளரானார். தொடர்ந்து பேராசிரியராகவும், பீடாதிபதியாகவும், தென்னாசியக் கல்வி நிறுவன இயக்குனராகவும் பல பதவிகளில் தன்னாளுமையை வெளிப்படுத்திய பேராசிரியர் அவர்களின் கல்விச் சாதனைகளோ அளப்பரியன. தாயகக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்து "Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka" என்ற தலைப்பில் மொழியாக்கம் செய்து, ஈழத்தமிழ் இலக்கியப் படைப்புக்களை ஆங்கில மொழி வாசகர்களுக்கு அறிமுகம் செய்தவர். 'In our Translated World' என்ற நூலின் தொகுப்பாசிரியரும் இவரே. மேலும், சங்கத் தமிழ் இலக்கியங்களில் நெடுநல்வாடை என்ற நூலை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். பல ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றில் 'Counter Realism and Indo Anglian Fiction'-(2002), 'Movable Margins: The Shifting Spaces of Canadian Literature'-(2005) என்பன சிலவாகும். உலகின் கல்வி மையங்கள் பலவற்றின் புலமைப் – பரிசில்கள் பெற்றவர். பல்கலைக்கழகங்கள் பலவற்றில் சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்தியவர். இந்திய ஆங்கில இலக்கிய வரலாறு என்ற நூலை எழுதி நிறைவேற்றும் வேளையில் அவர் திடீரென இவ்வுலகை நீத்தமை பேரிழப்பே. அவர் கலை, இலக்கியம், மொழி ஆகிய துறைகளில் ஆற்றிய பணிகளுக்கு கனடியப் புகழ்பெற்ற 'Fellow of the Royal Society of Canada' என்ற விருது வழங்கப்பட்டது. மொன்றியலில் இடம்பெற்ற அவ்விருது விழாவில் கலந்துகொண்ட மகிழ்ச்சியுடன் அவர் இவ்வுலக வாழ்வை அன்றிரவே நிறைவு செய்தார் என்பது வேதனைக்குரியதாகும். தமிழ் இலக்கியத்திலும், ஆங்கிலத்துறையிலும் புகழ் பெற்று விளங்கிய ஆங்கிலப் பேராசிரியர்

செல்வா கனகநாயகத்தின் வெற்றிடத்தை எம்மவர் மத்தியிலிருந்து நிரப்புதல் என்பதும் பெரும் சவாலாகும். இலங்கையில் 1983இல் இடம்பெற்ற இனக்கலவரத்தினாலும் மற்றும் அரசியல் காரணங்களாலும் எண்பதுகளில் பெருந்தொகையான ஈழத்தமிழர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வரலாயினர். இவர்களது 30 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றில் இந்நாட்டில் இவர்களின் மூன்று தலைமுறையினர் இடம்பெறலாயினர். தாயகத்திலிருந்து வந்த பெற்றோர் முதலாம் தலைமுறையினர். இங்கு வளரிளம் பருவத்திலே வந்து கஷ்டப்பட்டுப் படித்து தொழில்புரிந்து இங்கேயே திருமணம் செய்துகொண்டோர் 2ஆம் தலைமுறையினர். இவர்களது பிள்ளைகள் 3ஆம் தலைமுறையினராவர்.

முதலாந் தலைமுறையினர் பலரிடம் கல்வித் தகைமைகளும், தொழில் அனுபவங்களும் இருந்தபோதிலும், மிகப் பெரும்பாலானோருக்கு இங்கே தம் கல்விக்கேற்ற தொழில் பெறுவதில் ஆங்கிலம் பெருந்தடையாக இருந்தது. அவர்களால் உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது பெரும் சவாலாயிற்று. கனடா தராதரங்களுக்கு அமைவாக தமது கல்வித் தகைமைகளை தரப்பாடு செய்ய முடியாதவாறு பல தடைகளும் தொடக்க காலத்தில் அவர்களுக்கு இருந்ததோடு, அவர்கள் வாழ்க்கைப் போராட்டங்களுடன் வாழ வேண்டிய–தாயிற்று. இதனால் அவர்களிற் பெரும்பாலானோர் அலுவலகப் பணிகளுக்கான வாய்ப்பற்று, உடலுழைப்புச் சார்ந்த தொழில்களைச் செய்து தம் குடும்பங்களைப் பேண வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். அதே வேளை, தாயகத்திலிருந்து வந்த பதின்மவயதுடைய இரண்டாம் தலைமுறை–யினர் உயர் பாடசாலைகளில் சேர்ந்தனர். அப்போது அவர்களுக்கு ஆங்கில மொழி வழிக் கல்வி முறை சவாலாக அமைந்தது. பெரும்பாலான மாணவர் தொடக்கத்தில் ஆங்கிலத்தை 2ஆம் மொழியாகக் கற்பிக்கும் வகுப்பிலேயே சேர்க்கப்பட்டனர். அவ்வகுப்புக்களில் அவர்கள் ஆங்கிலத் திறன்களைப் பெற்ற பின்னரே சகல பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்க வாய்ப்பளிக் –கப்பட்டது. அப்போது ஆங்கிலத் திறன்களை விரைவாகப் பெற்றுக்கொள்ளாத மாணவர் கற்றற் குறைபாடுள்ளவர் (Learning disabled students) என தவறாக அடையாளம் காணப்பட்டதோடு, அவர்களது உயர் கல்வியும் தடைப்படுவ–தாயிற்று. இப்போது அந்நிலை இல்லை எனலாம். ஆங்கிலத்தை இலக்கண சுத்தியாகக் கற்பதற்கு ஏழு ஆண்டுகள் ஆகும் என்பர். ஆனால், தமிழ் மாணவர் மிகக் குறைந்த காலத்தில் பெருமுயற்சி எடுத்து கற்றனர். அவர்கள் அச்சவால்களை எதிர்கொண்டு கல்வியில் அதீத ஈடுபாட்டுடன் கற்று, பல்கலைக்கழகம் மற்றும் சமூகக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறும் குறிக்கோ–ளுடன் பயின்றனர். தம்மால் சாதிக்க முடியாததைத் தம் பிள்ளைகள் சாதிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் பெற்றோரும் தம் பிள்ளைகளின் கல்வியில் பெரிதும் அக்கறை கொண்டவர்களாய், அவர்களின் கல்விக்குப் பெருந்துணையாகச் செயற்பட்டனர்.

கனடா வாழ் தமிழ் இளைய தலைமுறையினரில் பலர் சட்டத்துறையில் கல்வி கற்று, அந்தத் துறையில் கடமையாற்றி வருகின்றனர். இவர்களைவிட மூத்த தலைமுறையினராக பலர் இங்கு வந்து மேலும் தமது கல்வித்தகைமைகளை மேம்படுத்திக்கொண்டு, தம்துறைகளில் சிறந்து விளங்குவதும் இந்நாட்டில் கல்வி வாய்ப்புகளின் பிரதிபலன்களாகும். இவ்வாறே வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் கணக்கியலாளர்கள் தமது கல்வித்தகைமைகளை மேம்படுத்திக்கொண்டு, தம்துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்

மூன்றாம் தலைமுறையினர் இங்கே பிறந்து, இந்நாட்டின் கல்வி முறையிலே ஆரம்பக் கல்வியைத் தொடங்கிக் கற்று, கல்வியில் பல சாதனைகளை ஈட்டி வருகின்றனர். அத்துடன், தமது கல்வியின் பயனாக உலக அரசியல் அறிந்தவர்களாக அவர்கள் மிளிர்வதோடு தாயக அரசியலிலும். தாயக மக்களின் நலன்களிலும் அக்கறை உடையவர்களாகச் செயற்பட்டு வருவதும் ஒரு புதிய திருப்பமாகும். 1990களில் பெருந்தொகையான தமிழ் மாணவர் பாடசாலைகளில் பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்புகளில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். 2000களில் பெருந்தொகையான மாணவர் ஒட்டாவா மற்றும் கால்ரன், ரொறன்ரோ பல்கலைக்கழகங்களில் அனுமதிபெற்று பட்டங்களும் பெற்றனர். இதனிடையே, ரொறன்ரோவில் வாழ்ந்த தமிழ் இளைஞரிடையே ஏற்பட்ட குழு மோதல்கள் பல மாணவரின் உயிர்களைப் பலி எடுத்ததோடு, பல மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும் தடையாகவும் அமைந்த சோக வரலாற்றுச் செய்தியையும் மறக்க முடியாது. 2000ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் குறிப்பாக ரொறன்ரோவிலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களிலும் மிகப் பெருந்தொகையான மாணவர் ஆண்டு தோறும் அனுமதி பெற்று பல்வேறு துறைகளில் பட்டங்கள் பெற்று வருதோடு, கல்வியில் சாதனைகளும் ஈட்டுகின்றனர். இவ்வாறு கனடாவின் கல்வி வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்ட தமிழ் இளைய தலைமுறையினர் பல்கலைக்கழகங்களில் உயர்நிலைக் கல்வித் தராதரங்களைப் பெற்று, அரச அலுவலகங்கள், தனியார் துறைகள், பல்கலைக்கழகங்கள் முதலிய முக்கிய இடங்களில் உயர் பதவிகளில் உள்ளமை விதந்து குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

15 ஆண்டுகள் ரொறன்ரோவில் அரச பாலர் பாடசாலைகளிலும், உயர் பாடசாலைகளிலும் பாடசாலைக் குடியமர்வுச் சேவை ஆலோசகராகக் கடமையாற்றிய அனுபவ, அவதானிப்புகளின் அடிப்படையில் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களிலும், விருது வழங்கும் விழாக்களிலும் தமிழ் மாணவரது எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. தமிழ் மாணவர் பாடசாலைகளிலுள்ள பல்வேறு மாணவர் கழகங்களில் தலைவர்களாகவும், கல்லூரிச்

சஞ்சிகைகளின் பொறுப்பு ஆசிரியர்களாவும், பாடசாலை நிர்வாகத்தின் நம்பிக்கைளுக்குப் பாத்திரமானவர்களாகவும் செயற்பட்டுவருதல் தமிழ் மாணவர் பெற்றுவரும் கல்விச் சாதனையின் பயன்பாடாகும்.

பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள IB Program, Gifted program, Leadership Program, Tops Program, Advanced Program முதலான பல அதிவிசேட கல்வித்துறைகளில் தமிழ் மாணவரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும், அவற்றின் மூலம் அவர்கள் புலமைப்பரிசுகளும், விருதுகளும் பெறுதல் அதிகரித்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. கனடாவில் கல்வி கற்று, கனேடிய அரசியலிலும் இளைய தலைமுறையினர் பங்குபற்றி வருகிறார்கள் என்பதும் வியப்பைத் தருகின்றது. இன்றைய நிலையில் நாடாளு மன்ற உறுப்பினர், மாநகரசபை உறுப்பினர், இரு கல்விச்சபை உறுப்பினர், கனடாவின் தேசிய அரசியல் கட்சியின் தலைவர் என எமது இளைய தலைமுறையினர் இடம் பெற்றுள்ளமை மூன்று தசாப்தங்களில் கல்வியால் தமிழர் ஈட்டிய அரசியல் துறை சாதனையாகும்.

இந்நாட்டுக் கல்வியின் பயனாக தமிழ் மாணவர் உலக நோக்கில் சிந்திக்கும் திறன்கள் பெற்றுள்ளனர். உதாரணமாக இந்நாட்டில் மருத்துவக் கல்விக்குப் பல்கலைக்கழக அனுமதி பெறத் தவறிய மாணவர் அமெரிக்கா, இலண்டன், இங்கிலாந்து, இந்தியா முதலான நாடுகளுக்குச் சென்று மருத்துவம் கற்றுத் திரும்பிவந்து, தாம் பெற்ற மருத்துவக் கல்வியை கனேடியத் தராதரத்திற்கு ஏற்பத் தேர்வுகள் செய்து மருத்துவராகவும், தம் தராதரத்திற் – கேற்ப தாம் விரும்பிய வேறு வேலை வாய்ப்புகளைப் பெற்றும் தம் வாழ்க்கையை வளம்படுத்தி வருகின்றனர்.

உளவியல் துறை, மகப்பேற்று மருத்துவம் முதலான பல துறைகளிலும் ஈழத்துத் தமிழ் மருத்துவர் பெயர்பெற்று விளங்குவதைக் குறிப்பிட வேண்டும். ரொறன்ரோவில் பல தமிழ் பல் மருத்துவர்கள் சிகிச்சை நிலையங்களை அமைத்து மிகச் சிறந்த முறையில் சேவை புரிந்து வருகிறார்கள். கனடாவில் தம் கல்வியை முழுமையாக மேற்கொண்ட இளைய தலைமுறையினரில் பலர் பல்துறை மருத்துவர்களாக ஒன்ராறியோ மாகாணத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் தொழில் புரிவதைப் பார்க்கும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. எமது இளைய தலைமுறையினரான இம்மருத்துவர் எதிர்காலத்தில் கனடாவின் தலைசிறந்த மருத்துவர் வரிசையில் நிச்சயம் இடம்பெறுவர் என்பதை உறுதியாகக் கூறலாம்.

மத்திய அரசின் பல்கலாசாரமொழிக் கொள்கையின் அடிப்படையில் ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தமிழ் மொழிக்

கல்வி குறிப்பிடத்தக்க வகையில் பயனளித்து வருகிறது. 1990 களில் தமிழ் வகுப்புகள் அரச கல்விச் சபைப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டன. தொடக்கத்தில் ரொறன்ரோ கல்விச்சபையிலும் அதனைத் தொடர்ந்து பீல், யோர்க், டுரம் முதலாக பல கல்விச் சபைகளிலும் தமிழ் மொழிக் கல்வி பாடசாலை நாட்களிலும் சனிக்கிழமைகளிலும் கற்பிக்கப்படுகிறது. தற்போது சுமார் 7,000க்கு மேற்பட்ட தமிழ் மாணவர் தமிழ் மொழிக் கல்வியை அரச பாடசாலைகளில் கற்று வருகின்றனர் என அறியப்படுகிறது. இவற்றோடு அறிவகம், கனடாத் தமிழ் கல்லூரி, சைவ ஆலயங்கள், மற்றும் தனியார் பாடசாலைகள் ஆகியவற்றிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. 1996 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மொழியில் திறமைச்சித்தி பெறும் வாய்ப்புகளையும் ஒன்ராரியோ கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கு தமிழ் திறமைச்சித்திகளையும் பயன்படுத்தும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. ஆயினும், தமிழ் பயிலும் மாணவரின் எண்ணிக்கை ஆண்டு தோறும் குறைவடைந்து வருகின்றது. அதனால் அரச பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறையும் போது, தமிழ் வகுப்புக்கள் மூடப்பட்டு-வருகின்றன என்ற சோக நிலையையும் சுட்டிக்காட்டுதல் அவசியமாகிறது.

கனடாவில் தமிழ்ப் பெண்களின் கல்வி நிலை தனித்து நோக்கப்பட வேண்டியதாகும். 1980களில் புலம்பெயர்ந்து வந்த தாய்மார்களுக்கு ஆங்கிலம் சிறிதளவு தெரிந்திருந்த போதிலும் அவர்களுக்கு ஆங்கிலம் பெரும் சவாலா-கவே இருந்தது. அவர்கள் ஆங்கிலத்தில் தொடர்புகொள்ள வேண்டிய இடங்களில் துணிந்து பேசும் திறனற்று, பிறர் உதவிகளை நாட வேண்டிய நிலையில் காணப்பட்டனர். ஆனால், கனடா அரசினால் இலவசமாக நடத்தப்படும் ESL, LINC ஆகிய வகுப்புக்களுக்கும் சமூகக் கல்லூரிகளுக்கும் சென்று ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் திறன்களை வளர்த்துக் கொண்ட தாய்மார் தம் பிள்ளைகளின் பாடசாலைகளிலும், தாம் வேலை செய்யும் இடங்களிலும் துணிச்சலுடன் ஆங்கிலத்தில் தம் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர் என்பது இந்நாட்டில் அவர்கள் பெற்ற கல்விப் பயன்பாடாகும். இளைய தலைமுறைப் பெண்கள் பாடசாலைக் கல்வியிலும், பல்கலைக்கழகக் கல்வியிலும் விதந்து கூறத்தக்க வகையில் சாதனை படைத்து வருகிறார்கள். இளைய தலைமுறைப் பெண்கள் இந்நாட்டில் கல்வி கற்று, மருத்துவ நிபுணர்களாக, ஆய்வுத்துறை நிபுணர்களாக, சட்டத்துறை வல்லுநர்களாக, தொழில்நுட்பத் துறை நிபுணர்களாக, முகாமைத்துவ பணிப்பாளர்களாக, நிதித்துறை ஆலோசகர்களாகப் பல்துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றமை எமது சமூகத்தில் தமிழ்ப் பெண்கள் பெற்ற கல்வியின் உச்சப் பயன்பாட்டைக் கோடிட்டுக் காட்டுகிறது. அத்துடன் ஆண்களுக்குச் சமமாக வாகனம் ஓட்டும் கல்வியையும் பெண்கள் இங்கே கற்று துணிச்சலுடன் வாகனம் ஓட்டும் திறனுடையவர்களாகச் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கதே.

கனடா அரசு முதியோர் கல்வி, முதியோர் பராமரிப்பு என்பனவற்றை மிகவும் பாராட்டத்தக்க வகையில் வழங்கி வருகின்றது. தமிழ் முதியோர் கல்வியிலும் கலை பண்பாடு–சமூக உணர்விலும் சிறந்து விளங்குவதற்கு இங்குள்ள முதியோர் மன்றங்கள் வழங்கும் பல்வகையான முதியோர் கல்விச் சேவைகளே காரணமாகும். அவர்கள் பல்லினப் பட்டுணர்வுடையவர்களாச் செயற்படுகிறார்கள் பல்கலாச்சார நிகழ்வுகளில் பங்கு பெறுகிறார்கள். ஆங்கில மொழியுடன் கணினிப் பயிற்சியும் பெறுகிறார்கள். அவர்களுக்கான உடல்நலம் பேணல், யோகப் பயிற்சி என்பனவும் இந்நாட்டுக் கல்விச் சேவைகளின் பயன்பாடேயாகும்.

கனேடியத் தமிழ் மாணவர்களுக்கான அமைப்பாக விளங்கும் 'கனடியத் தமிழ் இளைஞர் முன்னேற்ற நிலையம்' (CanTYD) மேற்கொண்டு வரும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தமிழ் இளைய தலைமுறையினருக்கான நல்லதோர் எதிர்காலத்தைக் குறித்துக் காட்டுகின்றது. சட்டம், மருத்துவம், வணிகம், கல்வி, சமூகவியல், கணினி, அச்சகம், படத்தயாரிப்பு, சிறுகைத் – தொழில் முதலான பல்வேறு துறைகளிலே தமிழர் தம் கல்வித் திறமைகளின் மூலம் கனேடிய தேசிய நீரோட்டத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்து வருகின்றனர். கனடா தமிழரது தொழில்நுட்பப் பங்களிப்பு, பொருளாதார முயற்சிகள், பண்பாட்டு விடயங்கள், தமிழ் இலக்கிய ஆக்கங்கள் என்பன கனேடிய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு உயிரோட்டங்களுக்குக் காத்திரமான பங்களிப்புச்செய்து வருகின்றன. தேசிய மட்டத்தில் இவர்கள் விருதுகளும், பாராட்டுதல்களும் பெற்றுவருகின்றனர். பல்வகை காப்புறுதிச் சேவைகள், வீடு விற்பனை, நிதி நிர்வாக சேவை எனப் பல்வேறு துறை–களிலும் பலர் இங்கு கல்விகற்று, குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்கு–வதற்கும் இத்துறைகள் சார்ந்த கல்வி வசதிகள் இங்கு வழங்கப்படுவதே காரணமாகும். தமிழர்களின் பொருண்மிய வளம் பெருகுவதற்கு அடிப்படை–யாக அமைவது கல்வியே. ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் தமிழ் மாணவர் கல்வியில் பெரும் சாதனைகள் படைத்து வருகின்றனர். மேலும், இவர்கள் வணிக முகாமைத்துவம், நிதி நிர்வாகம் முதலான கல்வித்துறைகளில் மேம்படும்போது தமிழரது பொருண்மிய வளர்ச்சி பன்மடங்காகி கனடிய பொருண்மியத்தை மேம்படுத்தும் பணியிலும் இவர்கள் பங்களிப்புச் செய்யும் வாய்ப்புக்கள் தொலை தூரத்தில் இல்லை என எதிர்பார்க்கலாம்.

ஈழத்தவரான வைத்தியக் கலாநிதி உமேஷ் கனகராயர் இங்கிலாந்தில் மேற்பட்டப் படிப்பினை மேற்கொண்டு, அங்கிருந்து மேலும் புலமைப்பரிசில் பெற்று ரொறன்ரோ சிறுவர் மருத்துவமனையில் ஆய்வுகள் செய்வதற்காக 1981இல் கனடாவுக்கு வந்தார். பின்னர் அல்பேட்டா சிறுவர் மருத்துவமனை – யிலும், கல்கரி மருத்துவமனையிலும் கடமையாற்றினார். அதன் பின்னர்

1987இல் பிராம்டன் பீல் ஞாபகார்த்த மருத்துவ மனையில் கடமை ஆற்றிய போது, அவர் 1997இல் பிராம்டன் மருத்துவமனை 'உயர் சாதனை விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் 'ஆபத்தான குழந்தைகளுக்கு' உதவுவதற்காக வாரத்தின் ஏழு நாட்களும், 24 மணி நேரமும் இயங்கும் 'Well Baby Clinic' ஒன்றினை மிஸிஸாகா சமூகத்திற்காக பிறம்லியில் உருவாக்கியமை இவரது முக்கிய சாதனையாக மருத்துவ சங்கம் கணித்தது. ஒன்ராறியோவில் கடமையாற்றிய 24,000 மருத்துவர்களில் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, குழந்தைகள் மருத்துவப் பிரிவின் தலைமை மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் உமேஷ் அவர்களும் தெரிவானார். இம் மூவருக்கும் "Excellence in Quality Management of Medical Care Award" என்ற உயர் விருது வழங்கப்பட்டது. இந்த உயர்விருதினைப் பெற்ற முதலாவது ஆசிய நாட்டவர் என்ற சிறப்பினையும் இவர் பெற்றார். இப்பணிகளுடன், ரொறன்றோ பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றிய டாக்டர் உமேஷின் சாதனை கனேடியத் தமிழர் சமூகத்திற்குப் பெருமைதருவதாகும்.

1998ஆம் ஆண்டில் கனடா தமிழ் மக்களினதும் ஈழத்தமிழ் மக்களினதும் உடல் உள நலத் தேவைகளை இயன்றவரை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற சேவை நோக்குடன், ரொறன்ரோவினை மையமாகக்கொண்ட தமிழ் மருத்துவர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்தவர்கள் இணைந்து MIFT (Medical Institute for Tamils) என்ற பெயரில் தமிழர் மருத்துவ அமைப்பை உருவாக்கினர். டாக்டர் பிகராடோ, மறைந்த டாக்டர் சூரியபாலன் முதலானோர் தமிழ் ஊடகங்கள் வாயிலாக மருத்துவ அறிவூட்டல் கட்டுரைகளை எழுதி வந்தனர். பொது மக்களுக்காக மருத்துவக் கருத்தரங்குகளை ஆண்டுதோறும் நடத்திவருகின்றனர். இவ்வாறாகக் கனடாவில் வாழும் தமிழரின் கல்வி வளர்ச்சி வியக்கத்தக்கதாக முன்னேற்றமடைந்து வருகின்றது. பல்கலைக்கழகங்களிலும், சமூகக் கல்லூரிகளிலும் பட்டங்கள் பெற்ற தமிழ்க் கல்வியாளர்கள் பல்துறைகளிலும் சாதித்துவரும் சாதனைகள் இந்நாட்டின் கல்விப் பயன்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைகின்றன.



பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறை முன்னைநாள் பேராசிரியர். பொதுநலவாய நாடுகளின் சிரேஷ்ட புலமைப் – பரிசில் பெற்று ஷெவ்வீல்ட் பல்கலைக்கழக நாட்டார் வழக்கியல் ஆய்வு நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டவர். 12 ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். ரொறன்ரோ பாடசாலைகளில் குடியமர்வு ஆலோசகராகக் கடமை ஆற்றிய இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் செயற்படுகிறார். ரொறன்ரோவில் பல்வேறு கலை – பண்பாட்டு அமைப்புக்களின் தலைவராகவும் போஷகராகவும் செயற்படுகிறார். கனேடிய அரசாங்கமும், சமூக நிறுவனங்களும் இவருக்குப் பல விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

- ஆரணி

கல்வி என்பது மனிதர்களுக்கு மிக முக்கியமானது. எல்லா செல்வங்களையும் விட சிறந்த செல்வம் கல்விச்செல்வம். கல்வியை பெற முன்நாளில் குருகுலத்திற்கு பிள்ளைகள் சென்றனர். இப்பொழுது பள்ளிக்கூடங்களுக்கு செல்கின்றனர்.

நாட்டிற்கு நாடு பள்ளிக்கூடங்கள் நடத்தப்படும் முறை மாறுகிறது. கனடாவிலேயோ மாகாணத்திற்கு மாகாணம் பள்ளிக்கூடம் நடத்தப்படும் முறை மாறுகிறது. பிரட்டிஷ் கொலம்பியாவில் ஒருமுறை, ஒன்ராரியோவில் வேறு ஒரு முறை, அல்பேட்டாவில் இன்னொரு முறை. இவற்றைவிட கியூபெக்கில் மிகவும் வித்தியாசமான முறையாக கனடாவில் பலவிதமாக பாடங்கள் படிப்பிக்கப்படுகின்றன.

உதாரணத்திற்கு கனடாவின் பல மாகாணங்களில் 16 வயது வரை பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால் மனிற்ரோபா, ஒன்ராறியோ, மற்றும் நியூ பிறவுன்ஸ்விக் இல் 18 வயது வரை பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் இருக்க வேண்டும். படிப்பு தொடங்குவது 4 வயதிலிருந்து 7 வயது வரை மாகாணத்திற்கு மாகாணம் மாறுபடும். கனடாவின் பெரும்பாலான மாகாணங்களில் ஒரு வருடத்தில் 190 நாட்கள் பள்ளிக்கூடம் நடைபெறவேண்டும். ஆனால் கியூபெக்கில் 180 நாட்கள் மட்டுமே பள்ளிக்கூடம் நடைபெறும். ஒன்ராரியோவில் பன்னிரண்டாம் வகுப்பிற்கு பிறகு இன்னும் ஒரு வருடம் மாணவர்களுக்கு தேவைப்பட்டால் உயர்தர பாடசாலையில் படிக்கலாம். உயர்தர பாடசாலை படிப்பு முடிந்தவுடன் மாணவர்கள் விரும்பினால் வேலைக்கு செல்லலாம். அல்லது மேற்படிப்பிற்கு College அல்லது University இற்கு செல்லலாம்.

இக் கட்டுரையில் Elementary மற்றும் Secondary பள்ளிக்கூடங்களை மட்டும் பார்ப்போம்.

கனடாவில் இடத்தை பொறுத்து ஆங்கிலத்திலோ, பிரஞ்சிலோ ஒரு மாணவர் படிக்கலாம். ஒரு மாணவர் தனது படிப்பை கத்தோலிக்க, தனியார் மற்றும் பொதுப்பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ தொடங்-

கலாம். கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம் பள்ளிக்கூடம் நடத்தும் முறை மாறினாலும் ஒரே மாகாணத்தில் பள்ளிக்கூடத்திற்கு பள்ளிக்-கூடம் நிறைய வித்தியாசங்கள் உண்டு. கனடாவில் மூன்று மாகாணங்-களில் வாழ்ந்து ஏழு பாடசாலைகளிலும் பல ஆசிரியர்களிடமும் படித்ததால் நான் பொதுவாக சில விடயங்களை கூறுகிறேன். ஒரு வகுப்பில் பெரும்பாலாக மூன்று வகையான மாணவர்கள் இருக்கின்-றனர். எதிர்பார்ப்பிற்கும் மேலானவர்கள், நடுத்தரமானவர்கள் மற்றும் எதிர்பார்ப்பிற்கு கீழானவர்கள் என இவர்களை கூறலாம். பொதுவாக ஆசிரியர்கள் நடுவில் இருப்பவர்களை மனதில் வைத்துத்தான் படிப்பிப்பார்கள். எனவே பாடம் விளங்கியவர்களுக்கு Boring ஆகவும் விளங்காதவர்களுக்கு கஷ்டமானதாகவும் இது அமைகிறது. இந்த இரு பகுதியினரும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த பள்ளிக்கூடம் மட்டும் போதாது. சிலவேளை 'Extreme' சந்தர்ப்பங்களில் பள்ளிக்கூடம் தனிவகுப்பு ஆசிரியர்களை இவர்களுக்கு ஒழுங்குபடுத்துவார்கள். ஆனால் பொதுவாக வீட்டில் தான் மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்க்க முடியும்.

முதல் பகுதியில் இருப்பவர்கள் வீட்டில் மேலதிக/அதிக பயிற்சி செய்யவும், அடுத்துவரும் பாடத்தை முதலே செய்து பார்க்கவும், இப்போது செய்யும் பாடத்தில் ஆழமாக பயிற்சி செய்து பழகவும் முடியும். இல்லாவிட்டால் படிப்பு இலகுவானது என்று நினைத்து 'Homework' செய்யும், மற்றும் படிக்கும் பழக்கத்தை மறந்து விட்டு பிறகு கஷ்டப் படுவார்கள். மூன்றாம் பகுதியில் இருப்பவர்கள் வீட்டில் மற்றவர்களிடம் கட்டாயமாக உதவி பெறவேண்டும். அல்லது தெரியாத விடயங்கள் எல்லாம் ஒன்றிற்கு மேல் ஒன்றாக கூடி, படிப்பு மிகவும் கஷ்டமாகிவிடும்.

இவ்வாறு பள்ளிக்கூடத்திலும், வீட்டிலும் படித்தாலும் தனியே பள்ளிக்கூட விடயங்களை மட்டுமே நம்பி இருக்கக்கூடாது. ஒரு சில Extracurricular விடயங்களில் சேர வேண்டும். ஏன் என்றால் பிற்காலத்-தில் அவை உதவியாக இருக்கும். தொடக்கத்தில் சில விளையாட்டுக்-களிலோ, சில கலைகள் பயில்வதிலோ நேரத்தை செலவிடலாம். இவ்வாறு சிலவற்றை பழகினால் சிறிது காலத்திற்கு பின் பிடிக்காததை விட்டு விட்டு பிடித்த ஒரு விளையாட்டையோ, ஒரு கலையையோ படித்து முடிக்கலாம். இதனால் ஒருவர் தனியே பள்ளிக்கூட பாடங்களில் மட்டும் தங்கி இல்லாமல் பல விடயங்கள் தெரிந்தவராக இருக்கலாம். அத்தோடு இதனைப் பிறகு உயர்தர பாடசாலை வகுப்புகளில் Credit எடுக்கவோ, பின்னர் Scholarship எடுப்பதற்கோ அல்லது Volunteer நேரத்திற்கு பிரயோசமான வேலை செய்யவோ பயன்படுத்தலாம். பள்ளி

வேலையை விட இவ்வாறு வேறு விடயங்கள் அறிந்து இருந்தால் அது பல பிரச்சினைகளில் உதவியாக இருக்கும். Elementary வகுப்பிலிருந்தே இவ்வாறு விளையாட்டையோ அல்லது வேறு கலைகளையோ பயிலத் தொடங்கினால் அது Stress Management மற்றும் Time Management இற்கும் உதவியாக இருக்கும்.

உயர்தரப்பாடசாலைக்கு (Secondary) வந்தவுடன் முதற்கூறிய மூன்று வித மாண- வர்கள் ஒரு வகுப்பில் இருக்கமாட்டார்கள். ஏன் என்றால் உயர்தரப்பாடசாலையில் பல வகையான வகுப்புகள் உண்டு. Academic, Applied, Locally Developed எனவும் சிலவேளை IB, Advanced Placement போன்ற பிரிவுகளில் வகுப்புகளும் உண்டு. எனவே மாணவர்கள் தங்கள் தகுதிகளுக்கு ஏற்ப விரும்பிய பிரிவில் தமக்கு விரும்பிய மற்றும் தேவையான பாடங்களை படிக்கலாம். ஆசிரியர்களுக்கு இடையேயும், பள்ளிக்கூடங்களுக்கு இடையேயும், இடத்திற்கு இடமும் பள்ளிக்கூட முறையில் வித்தியாசம் இருந்தாலும் பொதுவாக ஒழுங்காக பள்ளிக் கூடத்திற்கு சென்றும், ஒழுங்காக வீட்டு வேலையை செய்தும், சில Extracurricular வேலைகளையும் செய்து வந்தால் அது மாணவர்களுக்கு போதும் எனலாம்.

பள்ளிக்கூடத்தில் தான் மாணவர்கள் பலரைச் சந்திக்கின்றனர். பலர் உயர்தரப்பாடசாலையை அடைந்தவுடன் ஒரு சிலருடன் தான் பழகுவார்கள். பலருடன் பழகினால் அவர்கள் பாடத்திலும், பிரச்சினை-யிலும் உதவியாக இருப்பார்கள். பலர் வேறு இன, மொழி கூடுதலாக வாழும் இடங்களில் இருந்தாலும் தம் இனமொழி ஆட்களையே நண்பர்களாக தேர்ந்து எடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் எல்லா இனத்தவருடனும் பழகினால், அதுபல விடயங்களில் உதவியாக இருக்கும். மற்ற இனங்களைப் பற்றி அறியலாம், பலவிதமான கலா-சாரங்களைப்பற்றி அறியலாம், பிற்காலத்தில் பல இனமக்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கும் இது உதவியாக இருக்கும்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. - திருக்குறள்



ஆரணி ஞானநாயகன்

பதினோராம் வகுப்பில் IB Programஇல் கல்விபயிலும் பதின்ம வயது ஆரணி, ஜனவரி 15, 2011 ஆம் திகதி 'விளம்பரம்' இதழில் இருந்து சிறுவர் பகுதிக்கு கதைகள், கட்டுரைகள் மற்றும் சினிமா விமர்சனங்கள் எழுதி வருகிறார்.

தவறு கற்பிக்கும் பாடம்

- லலிதா புரூடி

நாம் செய்யும் தவறு, தன்னடக்கத்தையும், எம்மைக் குணப்-படுத்தும் சந்தர்ப்பத்தையும் எமக்குத் தரும் என்னும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

வழக்கமாக நாம் விடும் பிழைகளை ஒப்புக்கொள்ளாததால் எமது நேரத்துடன், சக்தியையும் வீணாக்கி எமது மகிழ்ச்சியையும் இழக்கிறோம். பென்சில் எழுத்தை அழிக்கலாம். கணினி எழுத்தை அழிக்கலாம், வெட்டி ஒட்டலாம். பரீட்சைகளை மீண்டும் மீண்டும் செய்யலாம். அளவு சரியில்லாத உடைகளைக் கடையில் மாற்றிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட பிழைகளையெல்லாம் சரிசெய்யத் தெரிந்த எமக்கு, எமது தவறுகளை ஒப்புக்கொண்டு திருந்த முயற்சிப்பது மட்டும் பெரியதோர் சவாலாகவே இருக்கின்றது. சிலவேளை சிறுவயதில் செய்த தப்புக்களுக்காக நாம் தண்டிக்கப்பட்டிருக்கலாம். அல்லது மற்றவர் எம்மைக் குறைகூறி விமர்சித்திருக்கலாம். நல்லவர்களாக நாம் வளர-வேண்டுமென்ற ஆர்வத்தில் எம்மை வளர்த்தவர்கள், நாம் தவறுகளே செய்யாதிருக்க வேண்டுமென்று விரும்பியிருக்கலாம். தவறுகளை ஒப்புக்கொள்வது பாதுகாப்பான விடயமல்ல என நாம் நம்பலாம். மனிதர் செய்யும் தவறுகளினால் ஏற்பட்ட சோகம், துன்பம், கஷ்டமான சவால்கள் "நான் பிழை செய்து விட்டேன்" என ஒப்புக்கொள்வதைத் தடுக்கின்றது. எமது குற்றங் குறைகளை நாம் ஒப்புக்கொள்வது எம் ஆன்மீகச் சக்தியை வளர்த்து எமது ஆளுமையையும் வளர்ச்சியடையச் செய்கின்றது.

தவறு செய்வது, கற்றுக்கொள்ளவும், குறைகளைச் சரிப்படுத்திக் குணப்படுத்திக் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பத்தினை எமக்குத் தருகின்றது. எத்தனையோ சாதனைகளைச் சாதித்த, எவ்வளவு வயது முதிர்ந்தவராக இருந்தாலும், எவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்தாலும், நாம் யாவரும் சர்வசாதாரண மானிடர் தான் என்பதை எமது தவறுகள் நிரூபிக்கின்றன. அடக்கத்தையும், விடயங்களையும், எளிமையையும் நாம் விடும் தவறுகள் எமக்குக் கற்பிக்கின்றன. எம் தவறுகள்தான் எம் வரையறைகளை நாம் புரிந்துகொள்ள எமக்கு உதவுகின்றன. எம்மைப் பற்றிய முழுவதையும், எம்மால் இன்னும்

என்னென்ன சாதிக்க முடியும் என்பதைப் பற்றியும் நாம் மேலும் மேலும் கற்றுக்கொள்ளலாம் என எம் தவறுகள் எமக்கு ஞாபகப்படுத்துகின்றன. தன்னடக்கத்துடன் எமது பிழைகளை நாம் உணர்ந்து ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொள்ளும்போது, மற்றவர்களைச் சீர்தூக்கிப் பார்த்து எடை போடும் எமது தீயபழக்கம் குணமாகி, நாம், எம்மிலும் மற்றவர் மேலும் கொள்ளும் இரக்கம், பரிவு, பச்சாதாபம், எமது இறைசரணாகதி யாவும் வளர்ச்சியடைகின்றன.

தவறுகளை ஒப்புக்கொள்வது இதுவரை பயம், அவமானம் வெட்கம், வியாகூலம் போன்ற எதிர்மறை உணர்வுகளை எமக்குத் தந்திருக்கலாம். நாம் தெய்வப்பிறவியல்ல, சாதாரண மானிடன் தான். எமது மானிடத்தை தழுவி, நாம் ஏதாவது பிழை செய்திருந்தால் அதை ஒப்புக்கொள்ளு - வோம். எப்போதோ நாம் செய்த தவறுகளின் தீய விளைவுகளின் பாதிப்பு இப்போதும் தொடர்ந்தால், அதை ஒப்புக்கொண்டு இறைவனை சரணடைந்து மன்னிப்பு கேட்போம்.



லலிதா புரூடி

எழுபத்தியெட்டு வயதான லலிதா புரூடி அம்மையார் தமிழ், ஆங்கில எழுத்தாளர், ஓவியர், சமூக முன்னேற்ற ஆர்வலர். கடந்த 20 ஆண்டுகளாக வானொலி ஒலிபரப்பாளர். யாழ். உளவளத்துணை நிலையம் சாந்திகம் 1987 ஸ்தாபகர்களுள் ஒருவர். யாழ். சுண்டிக்குளி அன்னையர் முன்னணி தலைவியாய் இருந்தவர். யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் 'Beacon Of Hop' நிலையத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவர். 1994 முதல் Older Womens Network எழுத்தாளர் இணைய அங்கத்தவர்.

இளம் சமூகமும்-பெற்றோரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

- சிந்தனைப்பூக்கள் பத்மநாதன்



சமூகப் பிரக்ஞை உள்ள எவரும் எமது இளம் சமூத்தினரையும் பெற்றோரையும் தமது உள்ளத்தில் இருத்தி தினமும் அவர்களது வளர்ச்சி பற்றியே எண்ணி வருவர். புலம்பெயர்ந்து வந்துள்ள எல்லோருக்குமே சில பொதுவான பிரச்சினைகள் தோன்றுவது இயல்பாகும். தாயகத்தில் தோன்றிய இனப்பிரச்சினைகள் காரணமாக வலிசுமந்த மேனியராய் இங்கு வந்த எம்மவர்கள் தங்களது புத்திக்-கூர்மையை மட்டுமன்றி மனப்பாரங்களையும் மனக்குமுறல்களையும் கூடவே கொண்டு வந்தனர். யாருக்கும் சொல்லி ஆறுதல் பெறமுடியாத சிறுவர்கள், பெற்றோர்கள், இளம்பிராயத்தினர், முதியவர்கள் எல்லோருமே கனடாவின் அற்புதமான வரவேற்பு அறைக்குள் வந்து சேர்ந்து விட்டனர். எல்லோருக்குமே வேவ்வேறு வகையான அனுபவங்கள், எதிர்பார்ப்புகள், சவால்கள், பய உணர்வுகள் எல்லாமே தோன்றி அடிக்கடி அவர்களை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கின்றன.

எமது இளம் சமூகத்தினருக்கு ஆங்கிலமொழி மூலம் இலவசமாக கல்விகற்று, படித்த படிப்புக்கு ஏற்ற தொழில் பெறும் நாடுகளில் கனடா முன்னணி வகிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தினை குறைந்த அளவினரே பயன்படுத்தினாலும் கூடிய அளவினர் சிலர் பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளனர். படித்து வருகின்ற மாணவர்கள் இனம்புரியாத சில

பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர் என்பதனை அவர்களோடு உரையாடும் போது புரிகிறது. தமது பிள்ளைகள் கல்வித்துறையில் மேம்பட்டு பல்வேறு கல்வித்தகைமைகளும், சாதனைகளும் புரியப் போகிறார்கள் என்பதற்காகவே பெற்றோர்கள் பல தியாகங்களை செய்கிறார்கள். அவற்றை பல பிள்ளைகள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதே மன நெருடலாக உள்ளது. இளம் சமூகம் என்பதற்கு சரியான வயதெல்லையை கூறமுடியாது. எனினும் பதின்ம வயதுக்கு முன்பாகவும் பின்பாகவும் உள்ள பிள்ளைகளை இதற்குள் அடக்க முடிகிறது. இவர்கள் பக்குவமற்ற இளவயதினராவர். நல்லது கெட்டதை சீர்தூக்கி தீர்மானங்களை எடுக்க முடியாத பிராயத்தினராக இவர்கள் இருப்பர். ஒரே வகுப்பறைகளில் பல நாடுகளிலிருந்து வந்த பலமொழி கலாசாரப் பின்னணியுடன் வந்தவர்களுடனேயே கலந்து படிக்கின்றார்கள். இவர்களுக்கு இதனால் பல சவால்களும், அழுத்தங்-களும் ஏற்படவே செய்யும். இவர்களது பலவீனங்களால் தவறான முடிவுகளுக்கும் வரக்கூடியவர்களாக இருப்பர்.

'இளம் வயதினர்கள் பற்றி பெற்றோர்கள் விளங்கிக் கொள்ளாதது தான் இளையோர் பிரச்சினை' என்ற தத்துவ விசாரணை முன்னிற்கின்றது. புலம்பெயர்ந்து வந்துள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடனேயே இங்கு வந்துள்ளனர். தாயகத்திலிருந்து வந்த பெற்றோர்களின் மனநிலை அப்படியே இருக்க பாடசாலைக்கு செல்லுகின்ற இளம் பிராயத்தினர் புதுப்புதுப் பிரச்சினைகளுடன் வாழ ஆரம்பிக்கின்றனர். பொதுவாக இளம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினை தலைமுறை இடைவெளி (Generation Gap) ஆகும்.

தலைமுறை இடைவெளி என்பதுடன் கலாசார அதிர்ச்சி (Culture Shock) என்பதும் முக்கியமாகும். இளம் வயதினரின் மொழி, உணவுப் பழக்கம், உடைகளின் தெரிவு, நட்புமுறை என்பன முக்கியமாகும். பெற்றோர்களுக்கு மாறாக எல்லாவற்றையும் செய்ய முற்படும்போது வீடுகளில் முரண்பாடு (Conflict) தானாகவே தோன்றும். இத்தகைய பிரச்சினைகள் அதிகரிக்கும் போது மனநிலை பாதிப்பு (Moodiness) ஏற்படுவதும் படிப்படியாக கவலை அல்லது நம்பிக்கையீனம் (Sadness or Hopelessness), எரிச்சல் அல்லது கோபம், அடிக்கடி அழுதல், குடும்பத்திடமிருந்து பிரிந்து செல்லல் போன்றவற்றிற்கு உட்படுவர். உணவு உண்ணுவதிலும், நித்திரை கொள்வதிலும் மாறாக நடந்து கொள்வர். உற்சாகமோ, முயற்சியோ இல்லாதவர்களாக இருப்பர். சிலருக்கு மன அழுத்தம், மனச் சோர்வு (Depression) ஏற்பட்டு விடுகிறது. இதனால் தொலைக்காட்சி, கணினி தொடர்பு, வலையாக்கம், செல்லிட

தொலைபேசி என்பவற்றிற்கு அடிமையாகி விடுவர். கனடாவில் 3.7 மில்லியன் இளையோர்கள் உளச்சோர்வு, மன அழுத்தம் என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2006 இல் கனடிய நல ஆய்வு செய்யப்பட்டவேளை 15-18 வயதினர்களில் உளச்சோர்வு உள்ளவர்கள் 7.6% ஆவர். இதில் ஆண்கள் 4.3%, பெண்கள் 11.7% ஆவர். 20 ஆண்பிள்ளைகளில் ஒருவரும் 10 பெண்களில் ஒருவரும் இப்பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். இதற்கு காரணம் பெற்றோர்களின் அரவணைப்பு இன்மை, தவறான நட்பு, பாலியல் உணர்வு, பல்வேறு பாடசாலை அடாவடித்தனங்கள் (Bullying), துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் (Child Abuse) போன்றனவாகும்.

மேற்படி உளச்சோர்வுக்கு உள்ளானவர்கள் பாடசாலைகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவர். வீடுகளை விட்டு ஓடிவிடுவர். மது பாவனை, போதைவஸ்து பாவனையில் ஈடுபடுவர். ஊக்கக்குறைவும், தீர்மானிக்க முடியாமையும் ஏற்படும். இவர்கள் பொதுச்சொத்துக்களை நாசமாக்க முனைவர். இளம் குற்றவாளிகளாக மாறுவர். மீளமுடியாத உளப்பிரச்சினைக்கு உட்படுவர். சிலவேளை தற்கொலை செய்யவும் முற்படுவர். இதனை ஒரு சாதாரணமாக கதைத்துக்கொண்டு செய்தும் விடுவர். மாத்திரைகளை அருந்தியோ அல்லது தூக்குப் போட்டோ தம்மை மாய்த்தும் விடுவர். இவற்றுக்கெல்லாம் காரணம் பெற்றோர்கள் தான் என்றால் அவர்கள் ஒத்துக்கொள்ள மறுப்பர். நண்பர்களேதான் பொறுப்பினை ஏற்கவேண்டும் என்பர். எனவே இளம் வயதினரின் உளவியல் சீர்குலைப்பு (Psychological Disorder) பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது.

இளம் சமூகம் தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) என்னும் ஒரு தாழ்வுச் சிக்கலுக்கு உட்பட்டுள்ளது. உண்மையில் இது ஒரு உளவியல் பிரச்சினையாகும். நிறம், மதம், மொழி, நடைஉடைபாவனை போன்ற விடயங்களில் சில வேளைகளில் ஏற்படும் புறக்கணிப்புகள் இத்தகைய சூழ்நிலைக்கு கொண்டு செல்லலாம். இனவாதம் தலை தூக்கி நிற்கின்ற சூழ்நிலையில் சில சந்தர்ப்பங்களில் பழிவாங்கும் நோக்கில் இளையோர் இருந்துள்ளனர். பொதுவாக இளையோர் எதற்கும் துணிந்து செயல்படுபவர். கல்வியில் பாதிப்புற்று இரண்டு வேலைக்கு செல்லும் சூழ்நிலையில் பல இளையோர்கள் சமூக நெருக்குதல்களுக்கு உட்பட்டுள்ளனர். வெளியே சொல்ல முடியாத மனவிரக்தியுடன் பழிவாங்கும் உணர்வும் இவர்களிடம் குடிகொண்டுள்ளது. 'எமக்கு படிக்க விருப்பம், வீட்டில் படிக்க விடுகிறார்கள் இல்லை. இரண்டு பெண் சகோதரிகளுக்காக வேலை செய்ய

வேண்டியுள்ளது' என்று கண்கலங்கி கூறிய பலரை சந்திக்க முடிந்தது. வீட்டில் உள்ள பணத்தேவை பல இளைஞர்களின் படிப்பு ஆசைக்கு உலைவைக்கிறது.

எமது இளம் சமூகத்தில் பல குழுக்கள் (Gangs) கடந்த காலங்-களில் இருந்துள்ளன. பலர் சேர்ந்து குற்ற வேலைகளில் ஈடுபடுதலே இச்செயல் குழுக்களாகும். சிலவேளைகளில் ஒரு மகிழ்ச்சிக்குரிய வேலையாகவும், சிலசந்தப்பங்களில் சட்டத்திற்கு மாறாகவும் செய்துள்ளனர். 13-30 வயதுக்கு உட்பட்டவர்கள் பலர் மாடிக்கட்டிங்-களிலும், வீதி ஓரங்களிலும் தமது கூட்டங்களை கூடி கொலை செய்தல், சண்டை பிடித்தல், சுட்டு மிரட்டுதல், கிரிக்கெட் மட்டைகளால் அடித்தல் போன்றவற்றை மேற்கொண்டனர். இவை தற்போது குறைந்து வருகின்றன. வன்முறைகள் இல்லாது போய்விடினும் வேறுவேறு விதங்களில் இளம் குற்றவாளிகள் உருவாகாமலும் இல்லை.

இளம் சமூத்தினரிற்கு உள நெருக்கடி (Psychological Crisis) ஏற்படுவதற்கு முற்றுமுழுதாக பெற்றோர் மட்டும் காரணம் இல்லை. உள நெருக்கடிளுக்கு பல இளம் வயதினர்களின் பெற்றோர்கள் மட்டுமல்லாமல் புறச்சூழ்நிலைகளும் காரணமாகலாம். இங்குள்ள பல இளம் சமூகத்தினர் பெற்றோர்கள் இன்றி வெவ்வேறு உறவினர், நண்பர்களின் வீடுகளில் வாழ்கின்றனர். பெற்றோர் தாயகத்தில் வாழ, இவர்கள் மட்டுமே உழைத்துத்தாம் வாங்கிய கடன்களை தீர்க்க வேண்டும். சகோதரிகள் இங்கு இருந்தால் அவர்களுக்காகவும் பணம் சேர்க்க வேண்டும். ஒரு புறத்தில் பல்கலைக்கழகம் செல்பவர்களும், வாய்ப்புக்களின்றி குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்பவர்களும், காதல் விவகாரங்களில் ஈடுபட்டு விரக்தியடைந்து போனவர்களுமாக இவர்கள் உளர்.

எமது இளம் சந்ததியினர்கள் இனம் புரியாத ஏக்கஉணர்வு உள்ளவர்களாகியுளர். தமது எதிர்காலம், வேலை, திருமணம் என்பன பற்றியெல்லாம் சிந்திக்கின்றனர். பாடசாலைகளில் கற்பித்தது தனிமனித வாழ்வுக்கே உதவுகிறது. குடும்ப உறவு முறைகள் படிப்படியாக மறைந்து போகிறன. சமூக இறுக்கம் மாற்றமடைந்து பாதுகாப்பற்ற பிரிவு நிலைச்சிக்கல் (Anxiety Separation) ஏற்படுகிறது. வழிகாட்டல் இன்மையால் நடைஉடைபாவனை மாற்றமடைந்து நடிகர்கள் போலவும் சிலர் மாறிவிடுகின்றனர். பெற்றோரை வெறுக்க முடியாமலும் சுதந்திரமாக வாழமுடியாமலும், அவசரமுடிவுகள் எடுத்து குழப்பமடை-வதிலும் அவர்கள் பல சமூக உளவியல் பிரச்சினைக்கு உட்பட்டுள்ளனர்.

இன்றுள்ள இளம் வயதினர்களிடம் இப்பிரச்சினைகள் பற்றி வினவியபொழுது அவர்கள் கூறும் பதில்கள் விசித்திரமானவை. பெற்றோர்கள் எம்மை நம்புவதில்லை. விளங்கிக் கொள்வதில்லை, கருத்துப்பரிமாற்றம் செய்வதில்லை, கதைப்பதும் கூட இல்லை. குறைகூறுவதே அதிகம் என்கின்றனர். இவர்கள் கருத்துப்படி தாங்கள் தவறில்லாதவர்கள் (Infallible), குறைகாண முடியாதவர்கள் (Invulnerable) வெல்ல முடியாதவர்கள் (Invincible) என்று நம்புகின்றனர். இதுபற்றி பெற்றோர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதே அவர்களின் கருத்து. மக்லீன்ஸ் பத்திரிகையில் 'Teen Trouble' என்ற கட்டுரையில் பாலியல், போதைபொருள் பாவனை, களவு செய்தல் என்பவற்றில் இவர்கள் ஈடுபடுவது பற்றி ஆய்ந்துள்ளனர்.

பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் பலவாகும். இளம் பிள்ளைகளைப் போலவே பெற்றோர்களுக்கும் உளச்சோர்வு (Depression) ஏற்படுவதாக கருதப்படுகிறது. தமது அறிவுரைகளை பிள்ளைகள் கேட்கவில்லை. தங்கள் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்கள் கட்டுப்பாட்டில் அவர்கள் இல்லை என்பதே அவர்களது பிரச்சினையாகும். சில குடும்பங்கள் வன்முறைகளின் தொட்டில் (Cradle of violence) போல உள்ளது. வேற்றுநாட்டு பிள்ளைகளுடன் சேர்ந்து அவர்களைப்போலவே தங்களுடன் நடக்கிறார்கள். கோபித்து முறைத்துப் பார்க்கிறார்கள். புரியாத மொழியில் கத்துகிறார்கள். கண்ட கண்ட பொருத்தமற்ற உடுப்புக்களை போடுகிறார்கள். தலைமயிரை கூட பல்வேறு முறைகளில் வெட்டி வருகிறார்கள். காதுகளில் தோடு அணிகிறார்கள். அடிக்கடி பிறந்த நாள் விழா போன்ற ஏதோ காரணங்களை பொய்யாகக் கூறிவிட்டு வெளியே போய்வருகிறார்கள். தனக்குப் பிடித்த காதலன் / காதலியை கொண்டுவரப்போவதாக மிரட்டுகிறார்கள் என்றெல்லாம் கண்ணீர் மல்கக் கூறி நிற்கின்றனர்.

சில இளம்பிள்ளைகள் வீட்டில் தாய் தகப்பன் பிரச்சினைப்பட்டால் 911 இலக்கத்திற்கு அடிக்கப் போவதாக பயமுறுத்துவர். இதனால் இவர்களுக்கு பெற்றோர் பயந்து வாழ நேரிடுகிறது. அத்துடன் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவதும் சிலர் போதை வஸ்து பாவிப்பதும் அறியப்பட்டுள்ளது. பிள்ளைகளின் பொறுக்க முடியாத தொல்லைகளால் சீற்றம், வெறுப்பு, கவலை என்பன ஏற்பட்டு பெற்றோர் குழப்பங்கள், போராட்டங்களுடன் வாழ நேர்கிறது. தமது பிள்ளைகள் நண்பர்களுடன் சேர்ந்து வன்குழுக்களில் (Gangs) சேர்ந்து விடுவாரோ, காதல் விவகாரத்தில் ஈடுபட்டு படிப்பை குழப்பி விடுவாரோ என்றெல்லாம் ஏக்கம் கொள்வர். ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளை

களுக்கும் பிரச்சினைகள் வேறுபட்டாலும் அனைத்துமே பெற்றோரின் மனதினை தாக்குவதாகவே இருக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளை புரியவில்லையா? அல்லது பிள்ளைகள் உண்மையிலேயே மாறி விட்டார்களா? சமூகம்தான் காரணமா? சட்டம் இவர்களுக்கு உதவுகிறதா? பாடசாலைகள்தான் பொறுப்பா? என்று உளவியலாளரும், சமூக நிறுவனங்களும் குழப்பமடைந்துள்ளன. இதனை விளக்க Barbara Colorosa என்ற ஆய்வாளர் 'இது எல்லோருக்கும் போராதகாலம் போல் தோன்றுகின்றது.' என்று கூறியுள்ளார்.

இளம் சமூகம் தங்களது பெற்றோர்களின் நிலை, சமூகப்பற்று, சமூக நியமம் (Social Norms), எதிர்காலம், படைப்பாற்றல் பற்றி தெரிந்து கொள்வது மிக அவசியம். அதேபோலவே பெற்றோர்களிடம் தன்னுறுதி நிலை (Assertiveness), கட்டுப்பாடு (Control), ஒழுங்காட்சி (Disipline), பேச்சுவார்த்தை (Negotiation), முன்னுதாரணமாக செயல்படல் (Role Model), உறவுகள் (Relationship) என்பன முக்கியமாகின்றன.

'பெற்றோர்களே பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள்' 'Parents are the Child's first teacher' என்ற வரிகள் பாடசாலைகளில் பொறிக்கப்பட்டு பெற்றோர்களிடமே கூடிய பொறுப்பினை விட்டுள்ளன. அத்துடன் 'பிழையான பிள்ளை வளர்ப்பு பிள்ளைகளின் நடவடிக்கைகளுக்கு காரணமாகலாம்' (Parents must be accountable for kids' actions) என்ற கூற்றினை ரொறொன்ரோ பல்கலைக்கழக அரசியல் பொருளாதார ஆசிரியர் ஜோன் கிறிஸ்போ கூறியுள்ளதை எல்லோரும் நினைவு கூரவேண்டியுள்ளது.



'சிந்தனைப்பூக்கள்' எஸ். பத்மநாதன்

பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கோப்பாய் ஆசிரியர் கல்லூரியிலும் துணை விரிவுரையாளராக கடமை புரிந்தவர். 'வீரகேசரி', 'ஈழநாடு', 'தினபதி' பத்திரிகைகளில் புவியியல், கல்வி துறையிலான கட்டுரைகள் பலவற்றை எழுதியவர். சிறுகதை எழுத்தாளரான இவர் 'விளம்பரம்', 'வீடு', 'கதிரொளி' பத்திரிகைகளில் பல ஆய்வுக்கட்டுரைகளையும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் தொடர்ச்சியாகவும், தூறல் சஞ்சிகையில் தொடராகவும் எழுதி வருகின்றார்.

போரின் பின்னர் தமிழர் வாழ்வு

- விகிர்தன்

போர் என்பது கொடூரமானது. மனித வாழ்வில் பெரும் அழிவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்துவது. இதனை எவருமே மறுதலிக்க முடியாது.

தற்போதும், உலகின் பல்வேறு நாடுகளில் போர்கள் நடைபெற்றுத்தான் வருகின்றன. அந்தப் போர்களுக்கான காரணங்களையும், நியாயப்படுத்தல்-களையும் போரிடுபவர்கள் – போரின் காரணகர்த்தாக்கள் கூறி வருகின்றனர். பொதுவான நீதியின் – மனிதாபிமானத்தின் தளங்களிலிருந்து சிந்திக்கும் போது, அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. போராடுகின்ற-வர்கள் அனைவரையும் போராளிகள் என்றழைக்க இயலாமலுள்ளது.

மதங்களை முன்னிறுத்தி போரிடுகின்ற தரப்பினர் அனைவருமே கடவுளின் பெயரால் போர் மேற்கொள்ளப்படுவதாக பிரகடனம் செய்கிறார்கள். குறித்த மதங்களைச் சார்ந்த பெரும்பான்மையான மக்களே அதனை ஏற்றுக்கொள்வ-தில்லை. அந்த மதங்களே அவர்களை வெறுக்கின்றன. சிரச்சேதம் செய்வது, உயிரோடு எரித்துக் கொல்வது, கல்லால் எறிந்து கொல்வது, பிஞ்சுக் குழந்தைகளைக்கூட சுட்டுத்தள்ளுவது முதலான கொடூரங்களை உலகப் பரப்பில் அவதானித்துக் கொண்டுதானிருக்கின்றோம். இவ்வாறான கொடுமைகளை செய்பவர்கள் கூட தங்கள் செயல்களை நியாயப்படுத்தியே வருகின்றனர்.

எனினும், விடுதலைக்கான போராட்டங்களும் இந்த உலகில் நடை-பெற்றுத்தான் வந்துள்ளன. சில போராட்டங்கள் வெற்றிபெற்றுள்ளன. சில போராட்டங்கள் தோல்வியை தழுவியுள்ளன. ஜனநாயக ரீதியிலான மக்களின் குரல்கள் நசுக்கப்படும்போது அப்போராட்டங்கள் வேறு வழியின்றி மாற்று வடிவங்களைப் பெறுகின்றன. அறவழியில் போராடத் தலைப்படுகின்ற மனி தர்களை ஆயுதம் கொண்டு ஒடுக்குகின்றபோது, வேறு வழியின்றி, எதிரி பயன்படுத்துகின்ற அதே ஆயுதத்தையே கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

அவ்வாறு தோன்றியதே இலங்கையில் தமிழர்கள் மேற்கொண்ட ஆயுதப் போராட்டம். இந்த நியாயப்பாட்டை இலங்கையிலுள்ள சிங்களவர்களில் பலரும் கூட ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். உலகத் தரப்புகளும்

ஒத்துக்கொண்டுள்ளன. இலங்கையில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்று வந்த தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சிகளையும், தேய்வுகளையும், வெற்றிகளையும் தோல்விகளையும், தியாகங்களையும், துரோகங்களையும் என பல்வேறு வழிகளை கடந்து வந்தது. 30 வருடங்களாக நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டம் இறுதியாக 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடிக்கப்பட்டது. போர் முடிவிற்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டாலும், போராட்டங்கள் இன்னும் முற்றுப்பெறவில்லை. நாளாந்தம் தமிழ் மக்கள் ஏதோவொரு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். உள்நாடும், வெளிநாடுகளும் இணைந்து ஒரு ஆயுதப் போராட்டத்தை முற்றுப்பெற செய்ததைப் போல, இப்போது நடைபெறும் மக்கள் போராட்டங்களை ஒடுக்க முடியாதுள்ளது. அறவழிப் போராட்டம் ஒடுக்கப்பட்டதால் ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்று, பின்னர் அது முடிவிற்குள்ளான நிலையில் மீண்டும் அறவழிப் போராட்டம் தோற்றம் பெற்றுள்ளதன் நியாயப்பாட்டை உலகம் தற்போது உணர்ந்து வருகின்றது.

முப்பது வருட காலமாக நடைபெற்று வந்த போர் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டு வந்த இழப்புக்களுக்கும் அப்பால், இறுதிக் காலகட்டத்தில் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத வகையில் மோசமான இழப்புக்கள் ஏற்பட்டன. போரின் பின்னர், மக்கள் தங்கள் நிலங்களில் குடியேறி வாழத் தொடங்கிய பின்னரும் போரின் காயங்கள், உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் வலியை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. போரினால் இழக்கப்பட்ட உயிர்களை மீளப்பெற முடியாதெனினும், ஏனைய இழப்புக்களிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை எழச் செய்திருக்க முடியும். போரை முடித்த தரப்பினரே பொறுப்புடனும், தவறுகள் – குற்றங்களுக்கான பரிகாரமாகவும் அதனைச் செய்திருக்க முடியும். ஆனால், அவர்கள் அதனை செய்யவில்லை. செய்ய விரும்பவும் இல்லை. போர் வெற்றியைக் கொண்டாடி, போரினால் வலிசுமந்த மக்களுக்கு வேதனைகளையே பரிசளித்தனர். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வேதனைகளை, துயரங்களை வெளியுலகிற்கு வெளிப்படுத்த ஜனநாயக முறையிலான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் போரின் பின்னர் ஏற்பட்டது. இந்த ஜனநாயகப் போராட்டங்களுக்கும் புலிச்சாயம் பூசப்பட்டது.

போர் முடிவடைந்து இப்போது ஆறு வருடங்கள் கடந்து விட்டன. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் சரியான வகையில் மேற் கொள்ளப்படவில்லை. மக்களின் பாதிப்புக்கள் தொடர்பில் தெளிவான ஆய்வுகள் கூட மேற்கொள்ளப்படவில்லை. போரின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கைகள் கூட இன்னும் சரியாக கணக்கிடப்படவில்லை. காணாமல் போனவர்கள் தொடர்பிலான பதிவுகள்,

விசாரணைகள் இழுத்தடிப்பு நிலையில் தொடர்கின்றதே தவிர தீர்க்கமான முடிவுகள் நடவடிக்கைகள் இல்லை. கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் தொடர்பிலான பிரச்சினைகள் தீர்வின்றி நகரும் நிலையில் உயிரோடிருப்பவர்களின் வாழ்வாதாரம் பற்றிய சவால்களும் பாரியதாக உள்ளன. யுத்தத்தினால் காயமுற்று, இயங்க முடியாத நிலையில் பலர் இருக்கின்றனர். அவர்கள் முன்னர் உழைப்பாளிகளாக – தங்கள் குடும்பங்களை நிர்வகிப்பவர்களாக இருந்தனர். இப்போது அவர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து செய்வதறியாது தவித்து நிற்கின்றன.

வடக்கு, கிழக்கில் சுமார் 90 ஆயிரம் வரையிலான கணவனை இழந்த பெண்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் யுத்தத்தின் போது தங்கள் கணவர்களை இழந்த பெண்கள். இவர்களின் குடும்பங்கள் துயரமான வாழ்வையே மேற்கொண்டு வருகின்றன. இவர்களின் வாழ்வாதாரத்தை கவனிப்பதற்கான எந்த திட்டங்களும் வகுக்கப்படவில்லை.

போரினால் உறவுகளையும், தங்கள் அவயவங்களையும் இழந்து தவிக்கும் மக்களும் உடைமைகளை இழந்து பூச்சியத்திலிருந்து வாழ்க்கையை தொடங்கிய மக்களும் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்தே தற்போது வாழ்ந்து வருகின்றனர். போரின் பின்னால் தங்கள் வாழ்க்கையை தொடங்கிய மக்களில் பெரும்பாலான மக்கள் இன்று கடன் சுமையில் மூழ்கி செய்வதறியாது கலங்கி நிற்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வடக்கு வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அனைவருமே இறுதிக்கட்டப் போரிலே சிக்குண்டவர்கள். அவர்களின் தொழிலாக விவசாயமே முன்னிலை வகித்தது. அடுத்ததாக கடற்தொழில், வர்த்தகம் என்பன அடங்கும். போரின் பின்னர் தங்கள் பொருளாதார வாழ்வை தொடங்க அவர்களிடம் முதலீடு இருக்கவில்லை. பலர் வங்கிகளில் கடன்களைப் பெற்று, தொழில்களை ஆரம்பித்தனர். போரின் பின்னர் நிகழ்ந்த வெளியார் வருகை காரணமாக அவர்களின் தொழில்களில் வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, பெற்ற கடன்களையும் மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. உதாரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், போரிலே பாதிக்கப்படாத அல்லது, குறித்த பிரதேசத்துடன் முன்னர் தொடர்பில்லாத பலர் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். கிளிநொச்சி நகரிலிருந்த கடைக் கட்டடங்களை பெருந்தொகை பணத்தை முற்பணமான செலுத்திப் பெற்று, தங்களின் வர்த்தகத்தை நடத்துகின்றனர். இவர்களுடன் போட்டியிட முடியாத நிலை கிளிநொச்சியின் நிரந்தர வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் கடன் பெற்று ஆரம்பித்த வர்த்தக நடவடிக்கைகள் நட்டத்திலேயே சென்றதால், வங்கிகளில் பெற்ற கடனை செலுத்த முடியாத அவல நிலைக்கும் ஆளாகியுள்ளனர். உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட, தொழில் நடவடிக்கைகளுக்கான வாகனங்களை

கடனடிப்படையில் கொள்வனவு செய்தவர்களுக்கு அதன் மூலமாக இலாபம் பெற முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வாகனங்கள் பல கடன் கொடுத்த நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்டு விட்டன. வாகனங்களும் இல்லை, மாதந்தோறும் கட்டிய பணமும் இல்லை என்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களுக்கு தொழில்களில்லை, அதனால் அவர்களிடம் பணப் புழக்கம் இல்லை. அப்பிரதேசத்தின் கொள்வனவு சக்திக்கு அதிகமாக வணிக நிலையங்கள். அதிலும், வெளியாரினது ஆதிக்கம். இந்நிலையில், உள்ளூர் மக்களின் தொழில் முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன. போரினால் அனைத்து சொத்துக்களும் இழக்கப்பட்ட நிலையில், தொழில்களைத் தொடங்குவதற்கு கடன் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை, தொடங்கப்பட்ட தொழில்களில் நட்டம். இவ்வாறான நிலையிமையில் போரின் பாதிப்புக்களிலிருந்து அம்மக்கள் எவ்வாறு மேலெழுவது? இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்புகின்ற தருணத்தில், பல்வேறு பதிவுகளை அரசு, மற்றும், அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டன. இப்பதிவுகளுக்காகவே மக்கள் நீண்ட வரிசைகளில் காலத்தை செலவிட்டனர். அப்பதிவுகளில், போரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள், முன்னைய தொழில் விபரங்கள், அத்தொழிலை மீளவும் மேற் கொள்வதனால் அதற்கு தேவையான மூலதனம் போன்ற விபரங்கள் பதிவு செய்யப்பட்டதோடு, தொழில்களை மேற்கொள்வதற்காக உதவிகள், இழப்பீட்டு தொகை வழங்கல் போன்றவற்றிற்காகவே இப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால், பின்னர் எதுவுமே நடைபெறவில்லை. போரின் பின்னர் அப்பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்-கான இளைஞர், யுவதிகள் படைத்தரப்பினரிடம் வேலைவாய்ப்புகளுக்காக உள்வாங்கப்படும் நிலைமை ஏற்பட்டது. படைக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்ற காலங்களில் வறுமை நிலை காரணமாக பல இளைஞர் யுவதிகள் அதற்கு இணங்க வேண்டி ஏற்பட்டது.

CST எனப்படும் சிவில் பாதுகாப்பு படைகளாக, இராணுவம் நடத்தும் பண்ணைகளில் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் பணிபுரிகின்றனர்.

இது குறித்து மோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் கூட, அவர்களுக்கு வேறு வழிகள் இல்லை.

போரின் பின்னர், மீள்குடியமர்த்தப்பட்ட காலங்களில் இப்பிரதேசங்களின் வறுமை நிலையை பயன்படுத்தி கொழும்பு மற்றும், தென்னிலங்கை பகுதிகளிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்கு தமிழ் யுவதிகளை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டன. சில தமிழ் அரசியல்வாதிகளின் தலையீட்டால் அது தடுத்து நிறுத்தப்பட்டாலும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அங்கு அனுப்பவும் துணிந்தனர். அவ்வாறு சென்ற பல யுவதிகள் பின்னர் அங்குள்ள நிலைமைகள் மோசம் என்பதால் தப்பி

வந்துவிட்டனர். இவ்வாறு, பொருளாதாரச் சிக்கல்களும், வறுமையும் போரின் பின்னால் மக்களை மோசமாக அலைக்கழிக்கின்றன. சீரழிவான பாதைகளுக்கும் இட்டுச் செல்கின்றன. வன்னி விவசாயத்திற்கான மண். முன்னர் விவசாயிகளே அப்பிரதேசங்களில் வசதி படைத்தவர்களாக வாழ்ந்தனர். அக்காலங்களில், அரசாங்க உத்தியோகம் செய்பவர்களும் விவசாயத்தை ஒரு பகுதி நேர தொழிலாக மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்கு விவசாயம் செய்யலாம் என்பதற்காக அவர்கள் மாற்றலாகி வருவதும் உண்டு. இப்போது அந்த நிலை அற்றுப்போயுள்ளது. தொழில்முறை விவசாயிகளே தங்கள் தொழிலை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். விவசாயத்திற்கான உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளதோடு, உற்பத்தியாகும் நெல்லை நல்ல விலைக்கு சந்தைப்படுத்துவதிலும் சிரமங்கள் உள்ளன. தொழில்களைத் தொடங்குவதற்காக கடனாளிகளாக பலர் ஆகிவிட்ட நிலைமையை மேலே குறிப்பிட்டேன். அது மட்டுமல்லாமல், வன்னியில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட அனைவருமே இன்று கடனாளிகளாக மாறி விட்டுள்ளமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும். கடுமையாக நடைபெற்ற இறுதிப் போரில் மக்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தும் அழிந்து போயின. மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னரே, அவர்கள் குடியிருப்பதற்கான வீடுகள் அமைக்கப்படும் பணிகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பித்தன.

ஆனாலும், அந்நிறுவனங்கள் சுயமாக முடிவெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. ஆய்வுகளை மேற்கொண்டு, எவ்வாறான வீடுகள் – எந்தளவு பெறுமதியில் அமைக்க வேண்டும் என்பதில் அரச தலையீடுகள் இருந்தன. இதனால் சுமாராக, சிறிய வீடு ஒன்றை அமைக்க மூன்றரை இலட்ச ரூபா பயனாளி ஒருவருக்கு வழங்கப்பட்டது. குறிப்பிட்ட நிறுவனம் கூறும் வகை-யிலான அளவிலும், ஒழுங்கிலும் அவ்வீடுகளை அமைப்பதற்கு அவர்கள் வழங்கும் தொகை போதாது. கட்டம் கட்டமாகவே பணம் வழங்கப்படும். வீட்டை முழுமையாக பூர்த்தி செய்ததுமே முழுத் தொகை வழங்கப்படும். எனவே, வீட்டை முழுமையாக்குவதற்கு அம்மக்கள் கடன் பெற வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் வீட்டுத்திட்ட பயனாளிகள் அனைவருமே இன்று கடனாளிகளாக மாறியுள்ளனர். மீளக்குடியமர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் தற்போது தங்கள் வீடுகளை அமைத்துக் கொண்டாலும் அதற்குள் கடனாளிகளாக நிம்மதியின்றியே வாழ்கின்றனர். மீளக்குடியமரத் தொடங்கிய காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு பணி ஐந்தரை வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் முழுமையாக முடிவுறாத நிலையிலேயே உள்ளது.

போரின் பின்னர் தமிழர் வாழ்வு என்ற வகையில், முதலில் நான் இங்கு குறிப்பிடுவது, போர் நடைபெற்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் நிலை

பற்றியதே. அதனிலும், முதலில் அவர்களின் பொருளாதார நிலைமைகள் பற்றி குறிப்பிடுவதற்கு காரணம், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பொருளாதாரமே முதன்மை பிரச்சினையாக உள்ளது என்பதை விளக்குவதற்கே ஆகும். பொருளாதார சிக்கல்களே சிலரை சீரழிவான வழிகளுக்கும் இட்டுச் செல்கிறன. போரின் பின்னர் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவே இல்லை. அதைவிடவும் போர் முடிவுற்றதும் எஞ்சியிருந்த மக்களின் உடைமைகள் அனைத்துமே சூறையாடப்பட்டுவிட்டன. அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள் அவர்களது உடைந்த வீடுகளின் மரந்தடிகள் உள்ளிட்ட அனைத்துமே மீள்குடி அமர்வு இடம்பெறும் காலத்திற்கு முன்னதாக பாதுகாப்பிற்கு பொறுப்பானவர் – களினாலேயே அபகரிக்கப்பட்டன. வாகனங்கள் பலவும், அவற்றின் பாகங்களும், மக்கள் விட்டுச் சென்ற இரும்பு பொருட்களும் கோடிக்கணக்கில் பெறுமதியானவை. அவை அனைத்துமே கொள்ளையிடப்பட்டன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட மோசடிகள் குறித்து முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணைகளும் நடைபெற்று வருகின்ற நிலையில், போரின் பின்னர் வன்னியில் இடம்பெற்ற இந்த கொள்ளைகள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கூட எந்த முறைப்பாடுகளை– யும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறு, போரின் பின்னரான காலகட்டத்தில், பொருளாதாரப் பிரச்சினையுடன் சேர்ந்து அச்சம் நிறைந்த வாழ்வினை அன்றாடம் தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பொருளா– தாரச் சிக்கல்களுக்கு அடுத்த விடயமாக இதுவே உள்ளது. புனர்வாழ்வு முகாமிலிருந்து வெளியே வந்துள்ள முன்னாள் போராளிகளே அதிகளவு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர். முதலில் அவர்கள் சமூகத்துடன் இணைந்து கொள்வதென்பதே சவாலானதாக அமைந்தது. அவர்களின் தொழில் வாய்ப்புகளும் சவாலானதாகவே இருந்தன.

போர் முடிவுற்று ஆறு வருடங்கள் கடந்த நிலையில், ஒரு வருடம், இரு வருடங்கள் என புனர்வாழ்வு சிறையிலிருந்து விட்டு வந்த இவர்களுக்கான பொருளாதாரம் மற்றும், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான பொறிமுறை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. அதே வேளை, அவர்கள் புலனாய்– வாளர்களால் அன்றாடம் அவதானிக்கப்படுபவர்களாகவும், அச்சுறுத்தப்படுபவர்க– ளாகவும் இருந்து வருகின்றனர். முன்னாள் போராளிகளின் மனைவிமார்களும் இவ்வாறு அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். இவற்றை யாரிடம் முறையிடுவது என்பதும், முறையிட்டால் மேலும் ஆபத்துகளுக்குள்ளாக நேரலாம் என்ற நிலையுமே காணப்படுகின்றது. ஆட்சிமாற்றம் ஏற்பட்டு அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வன்னிக்கு வருகை தந்த போது இந்த விடயம் முதல்முறை–

யாக வெளிப்படுத்தப்பட்டது. தாங்கள் அச்சுறுத்தப்படுவதாகவும், தாங்கள் இல்லாத வேளைகளில் தங்கள் வீடுகளுக்குச் செல்லும் புலனாய்வாளர்க-ளால் தங்கள் மனைவிமார் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தப்படுவ-தாகவும் முன்னாள் போராளிகள் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர். முன்னாள் போராளிகளுக்கு அடுத்ததாக அச்சுறுத்தப்படுபவர்களாக ஊடகவியலாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களை அச்சுறுத்துவதன் மூலம் உண்மைகள் வெளிவருவதை தடுப்பதே சம்பந்தப்பட்டவர்களின் நோக்கமாகும். மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரும் பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்களை சட்ட ரீதியாக தடைசெய்ய முடியாது என்பதால், ஊடகவிய-லாளர்களை, ஊடகங்களில் பணிபுரிபவர்களைத் தாக்கி அவர்களின் செயற்பாடுகளை முடக்கலாம் என்கிற நோக்கத்தில் பல சம்பவங்கள் போர் முடிவுற்றதன் பின்னர் தமிழ் பிரதேசங்களில் நடைபெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் அதிகாலையில் பத்திரிகைகளை கடைகளுக்கு விநியோகம் செய்யச் செல்லும் பணியாளர்கள் இரும்புக் கம்பிகளால் கூட கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். முகத்தை மூடும் தலைக் கவசங்களை அணிந்து வந்து இவ்வாறு தாக்குதல் நடத்துகின்றவர்கள் யார் என்று தெரிந்திருந்தும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள் -ளப்படுவதில்லை. போர்க் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் பல நடைபெற்றிருந்தாலும் போரின் பின்னரும் இவை தொடர்கின்றன. தமிழ் மக்கள் காணாமல் போன தங்கள் உறவுகளை தேடித் தருமாறும், தங்களது காணிகளை விடுவித்து தங்களை மீள்குடியேற அனுமதிக்குமாறும் விடுக் -கப்படும் கோரிக்கைகள் கவனத்திலெடுக்கப்படாத நிலையில், ஜனநாயக வழியில் கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அவர்கள் ஈடுபடுகின்ற போது அவர்களும் அச்சுறுத்தப்படுகின்றனர். குறித்த நிகழ்வுக-ளுக்கு வரும் புலனாய்வாளர்களால் அம்மக்கள் புகைப்படமெடுக்கப்பட்டு மிரட்டப்படுகின்றார்கள். இவ்வாறான போராட்டங்கள் நடைபெறுகின்ற போது, அது விடுதலைப்புலிகளின் பின்னணியோடு நடைபெறுவதாக காட்ட புலிக்கொடிகளை ஏந்தி சிலர் வருகின்றனர். இவர்களை மக்கள் பின்தொடர் கின்றபோது, படைமுகாம்களுக்குள் நுழைகின்றனர். இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

போரின் பின்னர் மக்கள் பலர் உளப் பாதிப்புக்களுடன் வாழ்வதற்கு முக்கியமான இரண்டு காரணிகள் யாதெனில், பொருளாதாரமின்மையும் அச்சமுமே என்றால் அது மிகையாகாது. இவையிரண்டிற்கும் நிவாரணம் கிடைக்கின்ற போது போரால் பாதிக்கப்பட்ட மக்கள் எழுந்து, நிமிர்ந்து நிற்கும் நிலை உருவாகும். அவர்களுக்கான உளவள சிகிச்சைகள் கூட தேவைப்-

படாது. போரின் பின்னர் உள்ள, தமிழ் மக்களின் வாழ்வு நிலை பற்றி ஆராய்கின்ற போது, போர் நடந்த மண்ணில் வாழ்ந்த – வாழ்ந்து கொண்டி-ருக்கின்ற மக்களின் வாழ்க்கையினையே இங்கு மையப்படுத்த வேண்டிய முதன்மையான தேவை உள்ளது. எனினும், போர் முடிவுற்றதன் பின்னர் தமிழர்கள் முழுவதுமாகவே தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்ற பேரினவாத மனோபாவம் காரணமாக இலங்கை முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய தமிழ் மக்கள் மனத் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகியிருக்கின்றார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கம் உதவா விடினும் புலம்பெயர் தமிழ் உறவுகளின் உதவியுடன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயல்கின்ற போதும் அதற்கும் தடை விதிக்கப்படுகின்றது. தமிழ் பிரதேசங்களில் தொழில் மையங்களை ஏற்படுத்தி அப்பிரதேசங்களில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள பலர் விரும்புவதாக கூறப்படுகின்-றது. வட மாகாணசபை அமைந்ததன் பின்னர் இதற்கானதோர் பொறி முறையை ஏற்படுத்த வடக்கின் முதலமைச்சர் முன்னாள் ஜனாதிபதியுடன் நேரடியாக தொடர்பு கொண்டும் கூட அனுமதி வழங்கப்படவில்லை.

புலம்பெயர் மக்கள் பாதிக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக அனுப்புகின்ற உதவிகளை புலிகளின் நிதியாக சித்திரிக்கும் தரப்பினரும் முன்னைய அரசாங்கத்திலிருந்து குழப்பங்களை ஏற்படுத்தி வந்தனர்.

தற்போது ஆட்சி மாறியுள்ள (ஜனவரி 08, 2015) சூழலில் புதிய திட்டங்களை – புதிய அணுகுமுறைகளை மேற்கொண்டு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும். யாவரும் ஆதரவு கொடுக்க வேண்டும்.



வடக்கு - கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னான பெண்களின் நிலை

- எஸ். கே. விக்னேஸ்வரன்

கொழும்பிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் எல்லாம் முன்னைப் போலல்லாது ஒருசில மணி நேரங்களில் போக முடிகிறது. காப்பற் போடப்பட்ட நெடுஞ்சாலைகளில் தினம் ஆயிரக்கணக்கான வாகனங்கள் அங்குமிங்குமாக வேகமாகப் பயணிக்கின்றன. யுத்தத்தால் சிதையுண்ட இந்தப்பிரதேசங்களை நோக்கி பெருமளவில் உல்லாசப் பயணிகள் செல்கின்றனர். ரெயில் சேவையும் ஆரம்பமாகிவிட்டது. உடைந்த வீதிகளின் புனரமைப்புக்கள் துரித கதியில் நடந்துகொண்டிருக்கின்றன. நகர்ப்புறங்களில் புதிய கட்டடங்களும் கடைத்தெருக்களும் உருவாகி வருகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீளப் புதுப்பிக்கப்படு – கின்றன. வங்கிகள் கையடக்க தொலைபேசி இலத்திரனியல் உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் என்று கொழும்பின் பிரபல தொழில் நிறுவனங்கள் தங்கள் கிளைகளை அங்கே திறந்துவிட்டி– ருக்கின்றன. மதுபானக்கடைகள் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடு – களுக்கும் குறைவில்லை. ஒரு அவசரப் பயணத்தை இந்தப் பகுதிகளுக்கு மேற்கொண்டுவிட்டுத் திரும்பும் ஒருவருடைய கண்ணில் பதிகின்ற முக்கியமான காட்சிகள் இவை. எல்லாம் யுத்தமுடிவுக்கு முன்னிருந்த நிலமையை தலை கீழாக மாற்றிவிட்ட நல்ல மாற்றங்கள் இவை என்று அவரால் சந்தோசப்ப– டாமல் இருக்க முடியாது. வடக்கின் வசந்தமும் கிழக்கின் உதயமும் மக்களது வாழ்வில் புதிய நம்பிக்கைகளையும் விடிவுக்கான ஆரம்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதாக அவை நம்பவைக்கும்.

ஆனால் அந்த அழகிய காட்சிகள் தெரியும் பிரதான வீதிகளைத் தாண்டி சற்று உள்ளகமாக நிதானமாகப் பயணிக்கும் ஒருவருக்கு அங்குள்ள மக்களை சந்திக்கவும் பேசவும் வாய்ப்புக் கிடைக்குமானால் இந்த வெளிப்பகட்டின் பின்னால் உறைந்திருக்கும் ஆழ்ந்த சோகம் நிறைந்த நிலமைகளை அறிய முடியும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது உறவுகள், உடைமைகள் மற்றும் வாழ்வாதாரத்துக்கான தொழில்கள் என்பவற்றை இழந்து நிற்கும் மக்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர் கொள்வதில் அபிவிருத்திகளும் யுத்தமற்ற சூழலும் ஆற்றியுள்ள பங்களிப்பு எவ்வளவு தூரம் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பது தெரியவரும். உடைந்து சிதிலமாக இருக்கும்

வீடுகளையும் காடுபத்திப் போயுள்ள நிலங்களையும் மீளப் புனரமைப்பது என்பது ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளதும் வேலையாட்களும் அவர்க – ளுக்கு ஊதியம் கொடுக்கக் கூடிய பணவசதியும் உள்ளவர்களைத் தவிர மற்றவர்களின் நிலமை பரிதாபத்திற்குரியதாகவே உள்ளதும் தெரியவரும். துரதிர்ஸ்டவசமாக இத்தகைய வசதியற்றவர்களின் தொகையே அங்கு அதிகமாக உள்ளது. அதிலும் பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக் கொண்ட குடும்பங்–களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தக் குடும்பங்களின் உடனடித் தேவையான அன்றாட உணவு, உடை, உறை – விடத்திற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் அதேவேளை தமது இருப்பிடங்களின் புனர் நிர்மாணத்தையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் பலத்த நெருக்கடிகளுடன் வருடக்கணக்காக திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதுவே இன்றுவரை அங்குள்ள மீள்கட்டுமானத்திற்கு உள்ள மிகப்பெரும் சவாலாக இருக்கின்றது. இந்த நிலையில் அங்குள்ள பெண்களின் நிலை– என்பது யுத்தகாலத்திய நிலைகளை விட சற்றும் மேலானதென்று சொல்லிவிட முடியாத நிலையிலேயே இருக்கின்றது.

முழு உலகத்தின் கவனத்தையும் இலங்கையின்பால் ஈர்த்திருந்த முப்ப– தாண்டுகளுக்கு மேலாக நடந்துவந்த பாரிய உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் ஓடிவிட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்தில் முழுமையான செயலற்ற நிலைக்குத் தள்ளிய 2009 ஆம் ஆண்டு நடந்த முள்ளி வாய்க்கால் இறுதியுத்தம் வடக்குக் கிழக்கில் முழுமையாக யுத்தத்தை ஓய்வுக்குக் கொண்டுவந்தது. பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற முழக்கத்துடன் இந்தியா, சீனா, அமெரிக்க என்ற பலவேறு நாடுகளின் பூரண ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்றல்களுடன் நடந்து முடிந்த இந்த யுத்தத்தின் வெற்றி வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லீம் மக்களது நிம்மதியான வாழ்வுக்கு ஒரு ஆரம்பமாக அமையும் என்று அரசாங்கதரப்பில் அறிவிக்கப்பட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டு நிவாரணம், புனர் நிர்மாண உதவிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடங்கும் என்றும் அரசதரப்பால் பல தடவை உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. ஆயினும் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்து இழப்புக்கள், இடப்பெயர்வுகள், அங்கவீனங்கள் என்பவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீளக் கட்டி அமைப்பதற்கு ஏற்ற விதத்தில் அங்கு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. புனர்வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கான விசேட கவனிப்புடன் கூடிய திட்டங்களின் அவசியம் அரசாங்கத்தினாலும் சரி அரசியல்வாதிகளாலும் சரி சரிவரப் புரிந்து கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. வீதி அபிவிருத்தியிலும் கட்டிடப் புனர் நிர்மாணத்திலும் காட்டப்படும் அக்கறைகளில் ஓரளவு கூட பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டங்களைத் தீட்டுவதில்

கவனம் செலுத்தப்பட்டதாக தெரியவில்லை. நிவாரணம் வழங்குதல் நடை-முறையில் இருந்தபோதும் அது உயிர்வாழ்தலுக்கான மிக அடிப்படையான தேவைகளிற்கு மிகக் குறைந்தபட்ச அளவிலான உதவிகளை மட்டுமே வழங்குவதாக உள்ளன.

இத்தகைய ஒரு பின்னணியில், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற குடும்பங்களின் நிலை இலங்கையின் மற்றைய பிரதேசங்களின் நிலையினி-ன்றும் வேறுபட்டது என்பது முக்கிய கவனத்துக்குரிய ஒன்றாகும். வடக்குக் கிழக்கு கிட்டத்தட்ட கணவரை இழந்த 89,000 பெண்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இதன் அர்த்தம் என்னவென்றால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்க-ளாக உள்ளன என்பதே. வடமாகாணத்தில் மட்டும் 40,000 பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் இருப்பதாக அறியப்படுகிறது (MRGI-2013) பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் அதிகமாகக் காணப்படுவதும், யுத்தத்தில் பங்காற்றி தற்போது குடும்ப வாழ்க்கைக்குள் இணைந்துள்ள முன்னாள் போராளிகளான பெண்களும் அதிகமாக உள்ள பிரதேசங்கள் என்ற வகையில் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி என்பது விசேட கவனத்தைக் கோரி நிற்கும் ஒன்றாகும்.

யுத்தத்தின் பின்னர் யுத்தம் நடந்த பிரதேசங்களில் வாழும் பெண்கள் ஆண்களை விட சமூகம் மற்றும் குடும்பம் சார்ந்த பல பிரத்தியேக பிரச்சி-னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் யுத்தத்தில் பிள்ளைகளையோ கணவரையோ காதலரையோ சகோதரரையோ பெற்றோரையோ அல்லது எல்லேரையுமோ இழந்தவர்கள் என்ற நிலையைக் கொண்டிருக்கின்றனர். 2008–2009 காலப் – பகுதியில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் அளவிலான பெண்கள் கைதுசெய்யப்பட்டு இருந்தனர். இவர்களில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பலநூறு பெண்களுக்குமேல் பலத்த காயங்களுக்கு உட்பட்டிருந்தனர். மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் உடல் உள ரீதியான வடுக்களுக்கு உள்ளாக்கப்-பட்டிருக்கின்றனர் என்று 2013 இல் வெளியான அறிக்கை ஒன்று கூறுகிறது. 2009 இறுதி யுத்தத்தின் பின் இடைக்காலத் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 280,000 பேர்களில் விடுவிக்கப்பட்டவர்களில் இவ்வாறு உடல் உளப் பாதிப்புகளுக்கு உள்ளான பெண்களும் அடங்குவர் (MRGI–2013). உண்மையில் இந்தப் பாதிப்புக்குள்ளான பெண்களில் பெரும்பான்மையானோர் கணவனையோ அல்லது உதவக் கூடிய ஆண் துணையான சகோதரர்களையோ உறவினர்களையோ கூட இழந்தவர்களாக இருப்பது ஒரு முக்கிய கவனத்துக்குரிய உண்மையாகும். இதனால் தவிர்க்க முடியாமல் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்திற்கும் குழந்தைகளுக்கும்

முழுமையான பொறுப்பேற்கும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது அவர்கள் முன்னெப்போதுமில்லாத விதத்தில் பெருமளவில் புதிய சமூக பொருளாதார பண்பாட்டு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைமையை உருவாக்கிவிட்டுள்ளது. யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களிலான அபிவிருத்திப் பணி இந்த விடயத்தை முக்கிய கவனத்துக்குரியதாகக் கொள்வது மிக முக்கியமானதாகும். அத்துடன் இந்த அபிவிருத்தி நடவடிக்கை என்பது வெறுமனே நிவாரணங்களை வழங்கல் வீடு கட்டுவதற்கும் மீள்குடியேற்றத் - திற்கும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்தல் என்பதோடு மட்டுமல்லாமல் வாழ்வா- தாரத்திற்கு அவசியமான வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுத்தல், உடல் உள ரீதியான மேம்பாட்டுக்கு வழி சமைத்துக் கொடுத்தல், சமூக மட்டத்திலும் அதிகார மட்டத்திலுமான பெண்கள் மீதான அணுகுமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள், சட்ட ரீதியிலான பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கப்படல் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையவேண்டும். ஆயினும் யுத்தத்தின் பின்னான எந்த அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளும் இத்தகைய ஒரு நீண்ட கால நோக்கில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை என்றே சொல்லவேண்டும். இதன் விளைவுகளைப் புரிந்து கொள்ள இப்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மூன்று முக்கிய பகுதிகளாக வகைப்படுத்தி நோக்குதல் பொருத்தமாக இருக்கும்.

1. பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகள்

2012 அளவில் தமது சொந்த வாழ்விடங்களுக்கு திரும்ப அனுமதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 240,000 பேரில் 51 சதவீதமானவர்கள் (அண்ணளவாக 125,000 பேர்) பெண்கள் என்று ஒரு கணிப்பீடு கூறுகிறது (ICAN- Spring 2013). இவ்வாறு தம் வதிவிடங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டவர்கள் சட்டபூர்வமாக தமது வதிவிடங்களில் குடியேறும் உரிமைகளைக் கொண்டவர்களாக இருந்தபோதும் அவர்களது குடியேறல்கள் பெரும்பாலும் உள்ளூர் அதிகாரிகளது அல்லது முகாம்களைப் பராமரித்த தனிப்பட்ட அமைப்புகளதும் தயவில் தங்கியிருக்க வேண்டியிருந்தன. பெரும்பாலான வீடுகள் முற்றாக சிதைந்த வடிவிலோ உடனடிப் பாவனைக்குரிய நிலையில் இல்லாமலே இருந்தன. இவற்றைப் புனரமைத்து வாழ்வதற்குரிய நிலமைகளை ஏற்படுத்துவதில் பெண்கள் எதிர்கொண்ட, கொள்கின்ற பிரச்சினைகள் அதிகமானவை. இந்தப் பெண்க- ளில் பலரும் தாங்களே குடும்பத் தலைவர்களாகவும் இருப்பதன் காரணமாக பலவிதமான உளவியல் நெருக்கடிகளுக்கும், பாலியல் துஸ்பிரயோகங்களுக்- கும் மற்றும் வன்முறைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர் என்று இலங்கை மருத்துவர் சங்கத்தின் (கொழும்பு 2011) ஆய்வொன்று தெரிவிக்கின்றது. இந்த ஆய்வின் முடிவாக அவர்கள் தெரிவித்துள்ள அவதானங்கள் முக்கிய கவனத்துக்குரியன.

1. பாதிக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலும் 20–44 வயதுக்குட்பட்டவர்கள்
2. இத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்துபவர்கள் பெரும்பாலும் உறவினர்களான ஆண்களாகவே உள்ளனர்
3. வன்முறைகள் பெரும்பாலும் குடும்பச் சூழல்களிலேயே நடைபெற்றுள்ளன.
4. அதிகாரிகள் இத்தகைய தகவல்களைத் திரட்டக்கூடியவர்களாகவோ பாலியல் மற்றும் பாலினம் சார் வன்முறைகள் தொடர்பான தகவகளை பராமரிக்கக் கூடிய வசதிகளைக் கொண்டவர்களாகவோ இல்லை.

இத்தகைய ஒரு நிலையிலே மீளக் குடியேறிய பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களில் உள்ள பெண்களின் பாதுகாப்பு என்பது முக்கியமான பிரச்சினையாக உள்ளது. குழந்தைகளையும் வயோதிபர்களையும் குடும்பத்திலுள்ள அங்கவீனமடைந்தவர்களையும் பராமரிப்பதுடன் தமது நாளாந்த தேவைகளுக்காக வெளியேயும் அவர்களுக்கு வேலைகள் இருக்கின்றன. உதாரணமாக வேலை தேடுதல், வேலைக்குச் செல்லல், பொருட்களை வாங்குவதற்காகவும் அரசாங்க அதிகார நிறுவனங்களில் சென்று செய்ய வேண்டிய வேலைகளுக்காகவும் செல்லல் என்று பல வெளி வேலைகள் அவர்களுக்கு வீட்டுக்கு வெளியே இருக்கின்றன. இந்த வேலைகளின்போது பெண்கள் பாலியல் ரீதியிலான தொந்தரவுக்கு உள்ளாதல் சமூகத்தின் அவமதிப்பு, ஒதுக்கல் போன்ற பல சவால்கள் அவர்கள் முன் உள்ளன. அதிலும் யுத்த முனையிலிருந்து மீண்ட முன்னாள் போராளிகள் மற்றும் அங்கவீனமடைந்த குடும்பத்தலைவிகளின் நிலை சொல்லும் தரமற்றவை. இவர்கள் தமது குடும்பங்களில் தனித்திருத்தல் காரணமாக திருடர்கள், பாலியல் நோக்கங்களுக்காக அணுகுவோர், காணி, கிணறு, எரிபொருள் போன்றவற்றை தமக்கென உருவாக்கிக் கொள்வதில் ஏற்படும் சர்ச்சைகளால் வரும் மிரட்டல்களை எதிர்கொள்ளுதல் எனபவற்றில் அவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்கக் கூடிய நிலமைகள் அரிதாகவே இருக்கின்றன. தவிரவும் அவர்கள் தமக்குரிய மாற்றுத் திறன்களைப் பயன்படுத்தி கௌரவமாக வாழ்வதற்கு யுத்தகாலத்தில் இருந்த பயிற்சி வகுப்புக்களும் வேலை வாய்ப்பும் கூட இப்போது இல்லை என்கிறார்கள். ஆடை தைத்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், இலத்திரனியல் உதிரிப்பாகங்களைத் திருத்துதல், கணினித்துறையில் வேலை செய்தல், கூலி வேலை செய்தல் போன்ற தொழில்களை செய்யக்கூடியவர்களுக்குக் கூட நிரந்தரமான வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடிய ஏற்பாடுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராயிருப்பதாலும் தனித்து இத்தகைய முழுக் குடும்பத்தின் பொறுப்புக்களை நிர்வகித்த அனுபவம் குறைந்தவர்களாக இருப்பதாலும் எளிதில் சுரண்டப்படும் நிலைக்கு உள்ளாகக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களது பாதுகாப்பு என்பது

பெரிதும் அயலிலுள்ள அல்லது தெரிந்த ஆண்களின் துணையில் தங்கியிருக்கிறது. அவர்களுக்கு போதிய பாதுகாப்பற்ற நிலையில் இத்தகைய சந்தர்ப்பங்கள் அவர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன.

தொண்டு நிறுவனங்கள் சில ஓரளவு உதவிகளைச் செய்கின்ற போதும் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இவை மிகவும் சிறியளவிலானவை மட்டுமல்லாமல் இத்தகைய நிறுவனங்களை தொடர்பு கொள்வதிலும் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தவிரவும் இந்த நிறுவனங்களால் பாதுகாப்புத் தொடர்பாக எதுவும் செய்யக்கூடியதாக இல்லை. மொத்தத்தில் பெண்களை தலைவர்களாகக் கொண்ட இந்தக் குடும்பங்கள் கௌரவமானதும் பாதுகாப்பானதுமான ஒரு வாழ்க்கையை நடத்துவது அவர்களுக்கு தினமும் சவாலுக்குரிய ஒரு பிரச்சினையாக, ஒரு கண்ணுக்கெட்டாத தூரத்திலுள்ள கனவாகவே உள்ளது. இவை தவிர யுத்தத்தின் பின்னான நிலமை முன்னரை விட சில இடங்களில் மோசமாக மாறிவிட்டுள்ளன. 'யுத்தத்தின் பின்னர் எங்கு பார்த்தாலும் இராணுவம் திரிகிறது. அவர்கள் பஸ்களிலும் ஏறி வருகிறார்கள். இவை தனியாகப் போகின்ற பெண்களுக்கு அச்சமூட்டுபவையாக இருக்கின்றன' என்று மன்னாரைச் சேர்ந்த ஒரு பெண் கூறியதாக ஒரு செய்திக் குறிப்புக் கூறுகிறது (ipsnewsnet/2013/7)

2. வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

குடும்பப் பொறுப்பை தனியாகத் தலையில் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்களுக்கு குழந்தைகளைப் பராமரித்தல் அடுத்த கட்ட நடவடிக்கைகளான வேலை வாய்ப்பு குழந்தைகளின் கல்வி, குடும்பத்தில் ஊனமுற்றவர்கள், வயோதிபர்களைப் பராமரித்தல் என்று அனைத்தும் அவர்கள் பொறுப்பாகவே அமைந்து விடுகின்றன. இதனால் அவர்கள் மீதான சுமை அவர்களது சக்திக்கு மேற்பட்டதாக அமைந்துவிடுகிறது. வடக்குக் கிழக்கில் வாழும் 89,000க்கும் மேற்பட்ட பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களில் பெருமளமானவர்கள் வேலை அற்றவர்களாக அல்லது நிரந்தர வேலை வாய்ப்பற்றவர்கள் என்ற நிலையிலேயே உள்ளனர். இதற்கு மேலாக விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிப் பெண்களில் பலர் தங்கள் குடும்பங்களுடனோ உறவினர்களுடனோ இணைந்துள்ளபோதும் புதிய சூழலுடன் தம்மை இணைத்துக் கொள்வதில் பெரும் சவாலை எதிர்கொள்கின்றர். போராளிகளாய் இருந்தபோது அவர்களுக்கு இருந்த மதிப்பும் கௌரவமும் மறைந்து சமூகத்தின் முன் அவர்கள் தாமும் சாதாரண பெண்கள் தானென நிரூபிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் – பட்டுள்ளார்கள். இந்த நிலை அவர்களது வேலை வாய்ப்பு, பாதுகாப்பு போன்ற

விடயங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வேலை வாய்ப்பை வழங்கக் கூடியவர்கள் அவர்கள் முன்னாள் போராளிகள் என்பதற்காகவே வேலை வழங்குவதற்குத் தயங்குகின்றனர். அவர்களுக்கு வேலை வழங்குவது தமக்குத் தேவையில்லாத பிரச்சினைகளைத் தரலாம் என்று பயப்படுகின்றனர். இந்த நிலமை முன்னாள் போராளிப் பெண்களுக்கு அங்குள்ள மற்றப் பெண்களை விட மேலதிகமாக உள்ள பிரத்தியேகமான ஒரு சவாலாக உள்ளது. தொழில் வாய்ப்புக் குறைந்த நிலையிலுள்ள இப்பெண்களின் வறுமைக்கு எதிரான போராட்டத்திற்கு இன்னமும் நிவாரணம் மற்றும் அரசு-சார்பற்ற அமைப்புக்களின் உதவி தேவைப்படுகிறது. வெளிநாடுகளிலுள்ள உறவினர்கள் நண்பர்கள் தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகச் சேர்ந்தும் இப்பெண்கள் தமக்கான வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கான சில உதவிகளைச் செய்து கொடுத்துள்ளனர். ஆயினும் இந்த நடவடிக்கைகள் ஒரு பரந்த அளவிலான பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவதற்கான முயற்சிகளாக வளர்ந்து விட்டதாக கொள்ளமுடியாது. உண்மையில் அரச தரப்பிடமோ மாகாண அரசாங்கத்திடமோ இவை பற்றிய எந்தக் குறிப்பான திட்டமும் இல்லை.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியானது அவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குதல் என்ற மட்டத்திற்கு அப்பால் செல்வ-தில்லை. நிவாரணப் பொருட்கள் அன்றாட வாழ்க்கையை சமாளிக்கவே போதாதவையாக இருக்கின்றன. கணவர்களை எப்படி இழந்தார்கள் என்பது குறித்த சரியான தகவல்கள் பலரிடம் இல்லை. உயிரோடு இருக்கிறார்களா இறந்துவிட்டார்களா என்று தெரியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். யுத்தத்தில் இறந்தும் யுத்தத்தில் கொல்லப்பட்டாரெனக் கூறி மரணசான்றிதழ் பெறமுடியாதுள்ள நிலையும் நிலவுகிறது. அரசாங்கம் யுத்தத்தில் எந்த பொதுசனமும் கொல்லப்படவில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்-பதால் மரணசான்றிதழ் பெறுவதில் பல சிக்கல்கள் நிலவுகின்றன. இது பெற்றுக்கொள்ளக் கூடிய சில சட்டபூர்வமான கொடுப்பனவுகளைப் பெறுவதிலும் நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கிறது. அரசியல் செல்வாக்கு, அதிகாரிகளுடனான தொடர்பு என்பவற்றைக் கொண்ட தரகர்களால் அப் பெண்கள் வேலைவாய்ப்பு போன்ற காரணங்களுக்காக மேலும் சுரண்டப் படுகிறார்கள் அல்லது ஏமாற்றப்படுகிறார்கள். தொடர்ச்சியான வருமானத்திற்கு வழிசெய்யக்கூடிய வேலைகள் ஆங்காங்கே சில கிராமங்களில் சில பெண்கள் அமைப்பினரால் ஓரளவுக்கு முன்னெடுக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் இவை அனைத்தும் ஆனைப்பசிக்குச் சோளம்பொரி போட்ட நிலமையைத்தான் கொண்டுள்ளன.

சுயதொழிலாக சிறு கடை, சிறு தோட்டம், கால்நடை வளர்ப்பு என்பவற்றைச் செய்கின்ற பெண்கள் கூட தம்மிடம் பொருட்களை வாங்க வரும் ஆண்கள் தமது பொருளாதார நிலமையைத் தெரிந்துகொண்டு மலிவான விலையில் பொருட்களைப் பெற முயற்சிப்பதாக குறிப்பிடுகிறார்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் ஆகவும் குறைவான கூலியை கொடுத்துச் சுரண்டுவதும் நடைபெற்று வருகிறது. தமது வயதான பெற்றோர்களுக்காகவோ குழந்தைகளுக்காகவோ இவற்றைச் சகித்துக் கொண்டு அவர்கள் இயங்கினாலும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எந்த வாய்ப்பும் இன்றி மேலும் மேலும் வறுமைக்குள் தவிக்க வேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

3. சமூக கலாசார நெருக்கடிகள்

பாதிக்கப்பட்ட பெண்களை வதைக்கும் இன்னொரு நெருக்கடி சமூக கலாசார நம்பிக்கைகள், ஒழுங்குகள் சார்ந்த நெருக்கடியாகும். தனியாக இருக்கும் கணவரை இழந்த பெண்கள் வீட்டை விட்டு தனியே வெளியே செல்லல், யாராவது ஆண்களுடன் பேசுதல், விருப்பமான உடை அணிதல் போன்ற விடயங்கள் அவர்களை நடத்தை கெட்டவர்களாக அவதூறு செய்வதற்குப் போதுமானவையாக அமைந்து விடுகின்றன. சாதி, பிரதேசம் சார்ந்த காரணங்களின் அடிப்படையிலும் அவர்களது சுயாதீனமான தொழில் தெரிவு விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. கணவரை இழந்த பெண்கள் இவ்வகுவாக பாலியல் ரீதியாக அவமதிக்கப்படுவதற்குரிய இலக்குகளாக அமைந்துவிடுகின்றனர். தவிர்க்க முடியாத நிலையில் தூர இடங்களுக்குப் போய் வேலை செய்யும் இளம் பெண்கள் அவர்களது உறவினர்களாலேயே அவமானப்படுத்தப்படுவதும் கேள்விக்கு உள்ளாக்கப்படுவதும் தொடரும் சிக்கல்களாக உள்ளன. குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் சேர்ந்து வாழ்கின்ற கிழக்கு மாகாணப் பிரதேசத்தில் இதனை அதிகமாகக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு திருமண வாய்ப்பு, வேலை வாய்ப்பு, சமூக அங்கீகாரம், சுயகௌரவம் என்பவை நிறைந்த வாழ்வை அமைத்துக் கொள்வது அவர்களுக்குப் பெரும் சிக்கலாகவே உள்ளது. சமூக கலாசார மட்டத்திலான ஆதரவும் பாதுகாப்பும் அவர்களுக்கு சாதகமாக இல்லை.

இதேவேளை, ஒரு காலத்தில் தமது உயிரை அர்ப்பணிக்கத் தயாராகி போராட்டத்தில் இணைந்திருந்த முன்னாள் பெண் போராளிகளும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் திருமண வாழ்வில் இணைந்து கொள்வதில் மிகப்பெரும் புறக்கணிப்பை எதிர்கொள்கிறார்கள். ஆயுதமேந்திய பெண்கள் குடும்ப வாழ்வுக்கு உதவாதவர்கள் என்பது மிக வெளிப்படையாகவே நம்பப்படுகிறது. அவர்கள் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றவர்கள் அல்ல

என்பதற்கு அவர்கள் ஏற்கெனவே ஆண் தொடர்புகள் அற்றவர்களாக இருந்திருக்க மாட்டார்கள் என்று நினைப்பதே காரணமாகும். இதுதவிர அவர்கள் பிற ஆண்களுடன் உறவு கொண்டவர்களாக இருந்திராவிட்டாலும் எல்லாச் சாதிகளுடனும் ஒன்றாகத் திரிந்தவர்கள் பழகியவர்கள் என்பதால் அவர்களை நல்ல சாதியிலுள்ளவர்கள் எப்படித் திருமணம் செய்ய முடியும் என்று கருதும் நிலையும் அங்கு நிலவுவதாக கட்டுரையாளருக்கு தெரிந்த ஒரு பத்திரிகையாளர் தெரிவித்தார். எல்லாம் இழந்த கையறுநிலை வாழ்க்கை வாழும் நிலையிலும் கூட, தேசிய விடுதலைக்காகப் போராடிய ஒரு மக்கள் பிரிவில் இத்தகைய சமூக கலாசார இறுக்கங்கள் இன்னமும் நிலவுவது ஒரு முரண்நகையான உண்மை.

இவற்றைவிட இன்னொரு முக்கியமான விடயத்தையும் குறிப்பிட வேண்டும். வடக்குக் கிழக்கில் யுத்தத்துக்குப் பின்னான காலப்பகுதியில் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு உள்ளனர். யுத்தம், உறவுகளின் இறப்பு, இடையறாது தொடர்ந்த இடப்பெயர்வு என்பவற்றின் காரணமாக உளவியல் ரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்-களின் எண்ணிக்கை நாட்டின் மற்றெந்தப் பிரதேசங்களைவிடவும் வன்னியில் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகளைப் பராமரிப்பதற்கான வைத்திய வசதிகளும் போதியளவில் இல்லை. வைத்தியர்கள் வைத்தியசாலைக்கு வெளியில் சென்று சிகிச்சை வழங்கும் செயற்பாட்டை அரச மேலதிகாரிகள் அங்கீகரிக்க மறுத்து வருகிறார்கள் என்று தெரிவிக்கிறார் ஒரு மனநல வைத்தியர்.

ஆக யுத்தத்திற்குப் பின்னான வடக்குக் கிழக்கிலுள்ள பெண்களின் நிலையானது யுத்தம் இல்லை என்ற ஒரேயொரு வித்தியாசத்தைத் தவிர எந்தவிதத்திலும் முன்னேறிய ஒரு விடயமாகக் கொள்வதற்கில்லை. அவர்கள் பாதுகாப்பானதும் சுதந்திரமானதுமான தமது அன்றாட வாழ்வை சுயமாக நடத்தக் கூடியவிதமான கௌரவமான வாழ்வுக்கு எல்லாவிதத்திலும் உரித்துடையவர்கள். அவர்கள் வாழும் பிரதேசத்து ஆட்சியமைப்புக்கள், மாகாண ஆட்சி அதிகாரங்கள் மற்றும் மத்திய அரசு என்று அனைத்து மட்டங்களிலும் இந்த நிலை ஒரு தேசிய மட்ட முக்கியத்துவம் கொண்ட நிலையாகக் கணக்கிலெடுக்கப்பட்டு அணுகப்பட வேண்டும். எல்லா மட்ட அரசியல் சமூக அமைப்புக்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உரிய விகிதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கு குறிப்பாக இதற்கென மாகாண மத்திய அரச மட்டங்களில் கவனம் குவிக்கப்பட்டு சிறப்பான செயலணிகள் உருவாக்கப்பட வேண்டும். இந்தச் செயலணிகள் பெருமளவிலான பெண் அங்கத்தவரைக் கொண்டதாக அமைய வேண்டும். இவற்றின் மூலமாக,

1. நிரந்தர வாழ்வாதாரங்களை ஏற்படுத்தக்கூடிய வேலை வாய்ப்புக்களை பிரதேச கிராமிய வளங்கள், உற்பத்திகள், தொழில் முதலீடுகள் சார்ந்து உருவாக்கப்படல்.
2. அங்கவீனம் ஏற்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி, தொழிற்பயிற்சி வகுப்புக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல்.
3. விவசாயம் சிறுகைத்தொழில் போன்ற சுய உற்பத்தியிலீடுபடும் பெண்களது உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தை விலையைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதும் தனியார் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கெள்ளுதல்.
4. பெண்கள் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் நடமாடவும் உள்ள உரிமையைப் பாதுகாக்கவும் பாலியற் துன்புறுத்தல்கள் அவமானப் படுத்தல்களை முறைப்பாடு செய்யவும் பாதுகாப்பான சட்டபூர்வமான (பொலிஸ் நிலையம் அல்ல) ஏற்பாடு ஒன்றைச் செய்வதும் இம்முறைப்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அதற்கான சட்ட உதவிகளை வழங்கவுமான அமைப்பாக இது அமைத்தல்.

போன்ற விடயங்களை செயற்படுத்த வேண்டும்.

யுத்தப் பிரதேசத்தில் வாழும் பெண்களில் 80 சதவிகிதம் பெண்கள் ஆண் துணையற்றவர்களாக இருக்கின்றார்கள் என்றும் இவர்களில் 70 சதவிகிதமா–னோர் குடும்பத் தலைவர்களாக உள்ளனர் என்றும் (ICAN-spring–2013) அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. எனவே உதவிகளும் நிவாரணங்களும் வழங்கிச் சீர்செய்துவிடக் கூடிய சாதாரண பிரச்சினை அல்ல இது. இத்தகைய ஒரு திட்டமிட்ட செயற்பாடு மூலமே இப்பெண்கள் சமூகவாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவரமுடியும்.



எஸ். கே. விக்னேஸ்வரன்

சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர். பத்திரிகையாளர். சிறுகதை, கவிதை, அரசியல், இலக்கிய விமர்சனம், பத்தி எழுத்து மற்றும் மொழிபெயர்ப்பு என்று பல தளங்களில் தொடர்ந்து செயற்பட்டு வருபவர். 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே" என்ற குழந்தை வளர்ப்பு தொடர்பான இவரது மொழிபெயர்ப்பு நூலின் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

எமக்கான திரைப்பட மொழி சாத்தியமானதா?

- ரதன்

திரைப்பட மொழி என்றால் என்ன? பல்வேறு விளக்கங்கள் இதற்கு உண்டு. அ.யேசுராசாவின் "திரையும் அரங்கும்" என்ற நூலில் கொடுக்கப்-பட்டுள்ள விளக்கமிது. "திரைப்படம் காட்சியை ஒளியை அடிப்படையாகக் கொண்ட "கட்புல ஊடகமாக" உள்ளது. திரைப்படத்துக்கு காட்சிரூப மொழியில் காட்சி (shot), கட்டம் (scene), அங்கம் (Sequence) என்பன அமைகின்றன. இவற்றை முறையே வாக்கியம், பந்தி, அத்தியாயம் எனச் சொல்லலாம்". இதையொத்த கருத்து ஒன்றை இயக்குனர் டக்ளஸ் ரம்புல் தெரிவிக்கின்றார். "புகைப்படங்கள் தொடர்ச்சியாக வேகமாக வெளிப்படுவதை காண்பிக்கப்படுவதே சினிமா. ஒரு புகைப்படத்தை என்ன செய்ய வேண்டும் என்று விளங்கிக்கொண்டால் மிகுதிப் படத்துக்கு என்ன செய்யலாம் எனத்தெரியும் என்கின்றார். கதை சொல்வதற்கான உத்தி என்ற விளக்கமும் உண்டு. சினிமாவின் திரைக்கதையை ஒரு பிரிவாகவும், இதன் தொழில் நுட்பத்தை நுண்ணிய பிரிவாகவும் பிரித்தும் பார்ப்பது உண்டு. திரைக்கதை, ஒலி, ஒளிப்பதிவு, எடிட்டிங், பாத்திரங்கள் போன்றவை சினிமா மொழியின் முக்கிய கூறுகள்.

சினிமா ஆய்வாளர் ராஜன் குறை சினிமா என்பது ஒரு மொழியல்ல என தனது "ஒரு கதாநாயகனின் மரணம்" என்ற நூலில் விளக்குகின்றார். "நீங்கள் நல்லவர் என்ற சொற்றொடர் யாரைப் பார்த்து உச்சரிக்கப்படுகின்றதோ அவரைக் குறித்த கூற்றாக மாறுகின்றது. ஆனால் நீங்கள் நல்லவர் என்ற சொற்றொடரின் கருத்து யாரைப் பார்த்துக் கூறினாலும் மாறாது. நல்லவர் என்ற சொல்லுக்கான கருத்தை சமூகம் ஏற்கனவே தீர்மானித்து விட்டது. அதனை மாற்ற முடியாது. ஆனால் திரையில் யாரைப் பார்த்துக் கூறுகின்றீர்களோ அவரே நல்லவர். ஒரு மொழியின் வார்த்தை பொருளுடன் இணைவது சமூக ஒப்பந்தத்தால்: எனவே அந்த அர்த்தம் பொதுத் தன்மை கொண்டது. ஒரு பிம்பம் புலனாவது புலன் அனுபவத்தால்: எனவே அந்த பிம்பம் குறிப்பானது." என்கின்றார். மேலும் ராஜன் குறை அமைப்பு மையவாதத்தின் அடிப்படையில் "அர்த்தங்களை உருவாக்கும் அனைத்துமே மொழிதான் என்று ஆய்வாளர் கிறிஸ்டியன் மெட்சை மேற்கோள்காட்டி விளக்குகின்றார். பின்னர் அதே ஆய்வாளர் குறிப்பிட்ட சினிமா வார்த்தைகளற்ற மொழி எனவும் கூறுகின்றார். Language without language system என்பதே அது.

சினிமா மொழியானது பல்வேறு வடிவங்களில் பல்வேறு காலகட்டங்களில் பரிணமித்துள்ளது. மொழி பல நூற்றாண்டு கால வரலாறுகொண்டது. ஆனால் சினிமா நூறாண்டுகளிலேயே பல சாதனைகளை புரிந்துள்ளது. ஒவ்வொரு போரின் பின்னரும் பல புதிய பரிமாணங்களைக் கொண்ட சினிமா உருவாக் – கப்படுகின்றது. நாற்பதுகளில் இத்தாலியில் நியோ ரியலிச வடிவம் தோன்றுகின்றது. இதனடிப்படையில் தோன்றிய படங்களில் விக்ரோரியா டி சிக்காவின் பைசிக்கிள் தீவ்ஸ் இன்றும் பலரால் வியக்கப்படும் படமாக மலர்ந்துள்ளது. இதன் பின்னர் ஐம்பதுகளில் நியுவேவ் சினிமா பிரான்சில் உருவாகின்றது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் சத்யஜித்ரே, மிருணாள் சென் போன்றவர்கள் உருவாகின்றார்கள். உலகின் பல பாகங்களிலும் பல புதிய இயக்குனர்கள் உருவாகின்றார்கள். ஒவ்வொரு ஒடுக்கு முறையிலிருந்தும் பல புதிய படங்கள் உருவாகின்றன. ஈரான், துருக்கி, லத்தீன் அமெரிக்கா போன்ற ஒவ்வொரு பிரதேசங்களும் தங்களது வலியை திரைமொழி ஊடாக வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் தமிழ்நாட்டில் திராவிட பிரச்சாரத்துக்காக பராசக்தி தொடங்கி பல படங்கள் வெளியாகின்றன. இவை திரைப்பட மொழியின் பரிமாணங்களை பயன்படுத்தாமல் வசனத்தையும் உணர்ச்சியையும் மையமாகக் கொண்டிருந் – தன. இதனையே பாலச்சந்தரும் கதையும் வசனமுமாக மாற்றியிருந்தார். அமெரிக்கா தனது வியட்நாம் போரின் தோல்வியை ரம்போ போன்ற படங்களின் ஊடாக வெற்றியாக மக்கள் மனதில் திணித்தது. அப்படியிருந்தும் போரில் பங்குபற்றிய ஒலிவர் ஸ்ரோன் மற்றும் ஸ்ரான்லி கியுபிரிக் போன்றவர்கள் போரின் மறுபக்கத்தையும் அமெரிக்காவின் நியாயமற்ற தன்மையையும் வெளிப்படுத்தினர். மத்திய கிழக்கு யுத்தத்துக்காக வெகு அண்மையில் அமெரிக்கன் ஸ்னைப்பர் என்ற படம் வெளியானது. அதே போன்று வட கொரிய தலைவரைக் கேலி செய்து இன்ரவியு என்ற படமும் வெளியாகியி – ருந்தது. தொடர்ச்சியாக அமெரிக்கா தனது போர் லாபங்களுக்கும் பிரச்சாரத்துக்குமாக பல படங்களை வெளியிட்டிருந்தது. அமெரிக்க அரசு நிறுவனங்கள் இப்படங்களுக்கான நிதியுதவியையும் வழங்கிவருகின்றனர்.

தலைமறைவுப் படங்கள் எனக் குறிப்பிடப்படும் படங்கள் பொதுவாக அரசுக்கு எதிரான போராட்டக் காலங்களில் தலைமறைவாக எடுக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்காக ஒதுக்குப்புறமான இடங்களில் திரையிடப்படும். இதில் பங்குபற்றும் கலைஞர்கள் அரசால் தடைசெய்யப்பட்டவர்களாகவோ, தேடப்படுபவர்களாகவோ இருப்பார்கள். திரைப்படங்களை உருவாக்கியமைக் – காக பல இயக்குனர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். கொலம்பியாவில் சார்ல் அல்வார், சிலியில் கூசுமன் போன்ற பலர் தமது படங்கள் வெளிப்படுத்திய கருத்துக்களுக்காக சிறையிலடைக்கப்பட்டனர். ஈரானிய இயக்குனரான Jafar

Panahi வீட்டுக் காவலில் இருந்த போது This is not a Film என்ற படத்தை இயக்கினார். இதனை ஒரு பென் டிரைவ்வினுள் பதிவாக்கி ஒரு கேக்கினுள் வைத்து ஈரானிய எல்லை கடந்து இன்று சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. இவருக்கு திரைப்படங்கள் எடுப்பதற்கு ஈரான் 20 வருட தடை விதித்திருந்தது.

இவ்வாறான ஒடுக்குமுறைக்குள்ளிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ள நாங்கள் எங்களது பயணத்தையும் கொடுமைகளையும் வெளிப்படுத்த சினிமா என்ற ஊடகத்தை பயன்படுத்தினோமா என்பதே எங்கள் முன்னுள்ள கேள்வி. எம்மீதான போர் பல வெளிகளை திறந்து விட்டுள்ளது. தமிழ்க் கவிதை மரபில் பல மாற்றங்களை இலங்கைத் தமிழ்க் கவிஞர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதை பல ஆய்வாளார்களும் சுட்டிக்காட்டுகின்றார்கள். சிறுகதை, நாவல் போன்றனவும் புதிய பரிமாணத்தில் வெளிப்பட்டுள்ளன. நாடகங்கள் போருக்கு முன்பாக வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்தபோதும் போர் நடைபெற்ற காலங்களில் வேறொரு நிலையை அடைந்தன. தெரு நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள் போன்ற பல வடிவங்கள் வளர்ச்சி பெற்றன. இதன் தாக்கம் புலம் பெயர்ந்த பின்னரும் வெளிப்பட்டது. கனடாவில் மேடையேற்றப்படும் நாடகங் – கள் பொதுவாக அரங்கு நிறைந்த காட்சிகளாகவே காண்பிக்கப்படுகின்றன. சீரிய நவீன நாடகங்களையே இங்கு குறிப்பிடுகின்றேன். பல பரீட்சார்த்த முயற்சிகளும் நடைபெற்றுள்ளன.

கனடாவைப் பொறுத்தவரை கடந்த 25 வருடங்களில் சுமார் 50க்கு மேற்பட்ட முழு நீளத் திரைப்படங்களும், நூற்றுக்கு மேற்பட்ட குறும் படங்களும் வெளியாகியுள்ளன. தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பிரதேசங்களிலும் முழு நீளத் திரைப்படங்களும் குறும்படங்களும் தொடர்ச்சியாக வெளியாகின்றன. புலம்பெயர் தேசங்களில் பல குறும்பட விழாக்கள் வருடா வருடம் நடை– பெற்றுவருகின்றன. விம்பம், சங்கிலியன் போன்ற திரைப்பட விழாக்கள் ஐரோப்பாவில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. கனடாவிலும் மூன்றுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் குறும்பட விழாக்களை நடத்தியுள்ளன. சுயாதீன கலை திரைப்பட மையம் தொடர்ச்சியாக குறும்பட விழாக்களை நடத்திவரு– கின்றது. பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. சீரிய உலக சினிமாக்கள் திரையிடப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளன. கனடா மற்றும் ஐரோப்பிய நாடு– களில் இவற்றை பல அமைப்புக்கள் முன்னெடுத்துச் செயல்படுத்தியுள்ளன. புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளில் இரண்டு நாடுகளில் நடத்தப்படும் சர்வதேச திரைப்பட விழாக்கள் உலகப் பிரசித்திபெற்றவை. பிரான்சின் கான்ஸ், கனடாவின் ரொறொன்ரோ திரைப்பட விழாக்கள் முறையே உலகின் முதலாவது, இரண்டாவது சிறந்த திரைப்பட விழாக்கள் ஆகும். இங்கு உலகின் தலைசிறந்த படங்களை பார்க்கும் சந்தர்ப்பம் புலம்பெயர்

படைப்பாளிகளுக்கு கிடைக்கின்றன. பல சிறந்த திரைப்படக் கல்லூரிகள் உள்ளன. நூலகங்களில் உலகின் சிறந்த படங்களின் வீடியோக்கள் உள்ளன. இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் சீரிய சினிமா பற்றிய கட்டுரைகளை பிரசுரித்துள்ளன. ஒரு சிறந்த படைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப படிநிலைகள் அறிவு நிலைகள் யாவும் புலம்பெயர் பிரதேசங்களில் அதிகமாகவேயுள்ளன. இவையனைத்தும் இருந்தும் சர்வதேச திரைப்பட விழாக்களை சந்தித்த திரைப்படங்களை விரல் விட்டு எண்ணலாம். இது ஏன்? அல்லது நல்ல படங்கள் என ஒரு சிலவற்றையே வரிசைப்படுத்தலாம்.

ஒரு திரைப்படத்துக்கு திரைப்பட மொழி என்பதுடன் திரையில் பேசப்படும் மொழியும் உண்டு. பல கனடிய-புலம் பெயர் திரைப்படங்களில் இம் மொழி - யானது எமது பேசுமொழியாக இல்லாமல் இந்திய தமிழ் மொழியாகவுள்ளது. இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். இந்திய தமிழ் வணிக சஞ்சிகை-களில் தமது ஆக்கம் இடம்பெறவேண்டுமென்பதற்காக ஆக்கத்தின் மொழியை இந்திய தமிழ் மொழியில் பல ஆக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில் எமது மொழியில் எழுதப்பட்ட தரமான ஆக்கங்கள் தமிழ்நாட்டில் பிரசுரமாகியுள்ளன. இன்று எமது பேசு மொழியில் எழுதப்பட்ட பல நாவல்கள் தமிழ்நாட்டில் பெருவரவேற்பை பெற்றுள்ளன. அ.முத்துலிங்கம், சோபா சக்தி போன்றவர்களின் படைப்புக்கள் தமிழ்நாட்டில் சாதாரண வாசகரில் இருந்து புத்திஜீவி வரை சென்றடைந்துள்ளது. ஆனால் இன்னமும் சினிமாவில் மாத்திரம் இன்றும் எமது பேசுமொழியை பேச ஏன் தயங்குகின் - றார்கள்? பிரித்தானிய காலனித்துவம் வேரூன்றியபோது ஆங்கிலமும் வேரூன்றியது போல் இங்கும் இந்திய தமிழ் வேரூன்றிவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு இந்தியத் தமிழ் மொழி பேசுவது மிக மோசமானது. இது படத்தின் யதார்த்தன்மையை மழுங்கடித்துவிடுகின்றது. சினிமா என்பது வெறும் காட்சிப்பொருளல்ல என்கிறார் அமெரிக்க நடிகரான கிறிஸ்டியன் பேல். புலம்பெயர் இயக்குனர்கள் ஒரு காட்சிப் பொருளாகத்தான் காட்ட முற்படுகின்றார்கள்.

பல படங்களின் கருத்தியலும் ஏனோ தானோ என ஒரு குறிப்பிட்ட கருத்தையும் வெளிப்படுத்தாத தன்மையையும் காணக் கூடியதாகவுள்ளது. படு பிற்போக்குத்தனமான கருத்துக்களும் வெளிப்படுகின்றன. பெரும்பாலான படங்களில் இந்திய தமிழ் சினிமாவின் தாக்கத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. ஒரு சில முழு நீளப் படங்களை விட பெரும்பாலானவை மிக மோசமான மசாலாப் படங்களே. இவை புலம்பெயர் வாழ்வியலையும் பதியவில்லை. போரின் வலிகளையும் பதிவு செய்யவில்லை. மேற்கு நாடுகளில் உள்ள தொழில்நுட்ப வளர்ச்சியையும் இப்படங்களில் காணமுடியாதுள்ளது. பின்னணி

இசைக்கும் பாடலிசைக்கும் கூட வித்தியாசம் தெரிவதில்லை. பெரும்பாலான படங்களில் பின்னணி இசை மிகமோசமாகவேயுள்ளது. எமது பண்பாட்டினையும் இப்படங்கள் வெளிப்படுத்தவில்லை. பண்பாடு என்றால் என்ன என்ற கேள்விக்கு பேராசிரியர் சிவத்தம்பி தனது "தமிழ்ப் பண்பாட்டில் சினிமா" என்ற நூலில் கொடுக்கப்பட்ட விளக்கத்தை இங்கு குறிப்பிடுவது நல்லது "பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருள்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும்." இப்பொழுது புலம்பெயர்வில் வெளிவந்த முழுநீளத் திரைப்படங்களில் பெரும்பாலானவற்றில் ஈழப் பண்பாட்டையும், புலம்பெயர் பண்பாட்டினையும், இந்தியப் பண்பாட்டினையும் அரை குறையாக வெளிப்படுத்துகின்றார்கள். புலம்பெயர் கலாசார விழுமியங்களை புலம்பெயர் படங்கள் வெளிப்படுத்தும் முறை சிந்தனை தளங்களற்ற மிக மோசமான கருத்தியலாகவே வெளிப்படுகின்றது. பெரும்பாலான புலம்பெயர் படங்களின் அடிப்படை புனைவு இந்திய தமிழ் மசாலா படங்களின் அடிப்படையிலிருந்து தோன்றுகின்றது. கதாநாயக வழிபாடு என்பதும் விதிவிலக்கல்ல. புலம்பெயர் முழுநீளப் படங்களை மையமாக வைத்து புலம்பெயர் வாழ்வியலையோ அல்லது எமது தேசிய பிரச்சினைகளையோ, புலம்பெயர் அரசியலையோ இனங்காணமுடியாதுள்ளது.

இப்படிப்பட்ட மசாலாப் படங்களை ஏன் பார்வையாளர்கள் பார்வையிட வேண்டும். பொழுதுபோக்கு அம்சங்களுக்காகவெனின் அவை கூட முறையாக வெளிப்படவில்லை. சமூக மாற்றத்துக்காகவா; மருந்துக்குக் கூட அங்கில்லை. தமிழ் தேசிய வெளிப்பாட்டிற்காகவா ? எதற்காக இப் படங்களை பார்வையாளர்கள் பார்க்க வேண்டும். புலம்பெயர் முழு நீளப் படங்களில் பெரும்பாலானவை மிக மோசமான படங்கள். தயாரிப்பு, வெளியீடு, விநியோகம், முதலீடு போன்ற விடயங்களை விட படத்தின் மிக மோசமான கருத்தியலே இப்படங்கள் மக்களை சென்றடையாமைக்கு முக்கிய காரணம். 'ஆணி வேர்' என்ற படம் புலம்பெயர் நாடுகளில் பெருவாரியாக வரவேற்கப்பட்டது. இப்படத்தில் பல குறைகள் இருந்தாலும் தேசிய உணர்வை வெளிப்படுத்தியமைக்காகவே இவ்வரவேற்பிருந்தது. இலங்கையில் போர் நடைபெற்று கொண்டிருந்த காலங்களில் விடுதலைப் புலிகளால் பல நல்ல குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சி குன்றிய பிரதேசத்திலிருந்து நேர்த்தியான படங்கள் வெளியாகின. அவற்றின் நூறில் ஒரு பகுதியைக் கூட இப்படங்களில் காணமுடியாமல் உள்ளது. பல இயக்குனர்கள் கனவுலக நாயகர்களாக தங்களை மிதக்கவிட்டு காட்சிகளையும், படிமங்களையும் கூட கனவில் மிதக்கவிடுகின்றார்கள். இது இப்படங்கள் வெகுசனப் பண்பாட்டிற்கு உள்ளும் இவர்களது படங்கள் அடங்காது உள்ளன.

"மெய்யான திரைப்பட வெளிப்பாட்டினைப் பெற கேமராவும் மைக்ரோஃபோனும் நீரையும் நெருப்பையும் கடக்க வேண்டும். இதுதான் ஒரு சரியான திரைப்படத்தை உருவாக்குகிறது. ஆனால், திரைக்கதை இதைச் செய்வதற்கான திறனைக் கொண்டிருக்கவேண்டும்." என்கின்றார் அகிரா குரோசாவா. திரைக்கதை புலம்பெயர் படைப்புகளின் மிக மோசமான அம்சமாகவுள்ளது. குற்றங்கள் கொண்டாட்டத்திற்கானவை அல்ல என்ற சிட்டி ஒப் கொட் இயக்குனர் / பெர்னான்டோ மெரலாஸ் தனது படத்தில் தொழில் முறை நடிகர்களை நடிக்கவைக்கவில்லை. மாறாக அப்பகுதி மக்களில் இருந்தே நடிகர்களைத் தேர்வு செய்கின்றார். இவர்களெல்லாம் திட்டமிட்டு திரைக்கதையை சிறப்பாக அமைத்து சிறந்த படங்களை படைத்துள்ளார்கள்.

பரீட்சார்த்தமாக வெளிப்பட்ட ஒரு சில படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களை சென்றடைந்துள்ளன. இன்று இவ்வாறான படங்களை ஊக்குவிப்பதன் மூலமே மாற்றத்தை கொண்டுவரலாம். ஆனால் மசாலாப் படங்கள் தயாரிப்பவர்கள் திரையரங்கில்லை, மக்கள் வருகின்றார்களில்லை என கவலை கொண்டுள்ளார்கள். இவர்களால் கனடிய தமிழ்த்திரையுல – கையோ புலம்பெயர் உலகையோ அடுத்த கட்டத்துக்கு உயர்த்த முடியாது.

இவற்றிற்கு மாறாக குறும்படங்கள் நம்பிக்கையளிக்கின்றன. பெரும்பாலான குறும்படங்கள் சீரிய படங்களாக பெண்ணியம், போரின் வலிகள், புலம்பெயர் வாழ்வியல், உளவியல் பிரச்சினைனகள், புலம்பெயர்ந்த பொழுது முகவர்களால் மற்றும் எல்லைகளில் சந்தித்த துயரங்கள், தொழில்ரீதியான கடினங்கள் சிறுவர்கள் முதியோர் பிரச்சினைகளை மையப்படுத்துகின்றன. சுமதி ரூபன், ரூபன், லெனின் சிவம், சதா பிரணவன், அஜீவன், பிரேம் கதிர், ஜனா கே. சிவா, ரஞ்சிற் யோசப், ஐ.வி. ஜனா, நோர்வே சுபாஸ், யேசன் பிரதீபன், வரன் ரபேல், அருண் என இப்பட்டியல் விரிந்து செல்கின்றது. போரின் மறுபக்கத்தையும் இக்குறும்படங்கள் வெளிப்படுத்த தவறவில்லை. அத்துடன் இப்படங்களில் காட்சிகள் கலாபூர்வமாக, தர்க்கரீதியாக, யதார்த்தமாக உள்ளன. நடிகர்கள் கூட இயல்பாக நடித்துள்ளார்கள். தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூட இப்படங்களில் காணலாம். பல குறும்படங்கள் மிகக் குறைந்த பொருட் செலவிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. குறும்பட விழாக்களே இப்படைப்பாளி–களை ஊக்குவிக்கின்றார்கள். சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக புலம்பெயர் நாடுகளில் குறும்படவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது இந்தியாவில் இருந்து வந்த குறும்படங்களே விருதுகளை வென்றன. பிற்காலங்களில் புலம்பெயர் படங்கள் அவ்விடத்தைப் பெற்றுக்கொண்டன. தமிழ் நாட்டில் நெய்வேலி உட்பட்ட குறும்படவிழாக்களில் புலம்பெயர் குறும்படங்கள் பெரு வரவேற்பை பெற்றன. கான்ஸ், வெனிஸ், பேர்லின் போன்ற சர்வதேச திரைப்பட

விழாக்களில் புலம்பெயர் தமிழர்களின் குறும்படங்கள் திரையிடப்பட்டன. இவை உலகின் மிகச் சிறந்த பத்து திரைப்பட விழாக்களுக்குள் அடங்கும்.

ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்டு முதல் பரிசை ஒரு தமிழ்க் குறும்படம் பெற்றுக் கொண்டது. Chris Chan Fui Chong இயக்கிய புளொக் பி என்ற படம் 2008ம் ஆண்டில் அவ்விருதைப் பெற்றது. ரேணுகா ஜெயபாலன் இயக்கிய Big Girl என்ற ஆங்கிலக் குறும்படம் ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டதுடன் சுமார் 35 சர்வதேச திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட்டது. சுதா சண் இயக்கிய குறும்படம் ஒன்ராரியோ பாடசாலைகளுக்கான குறும்படப் போட்டியில் முதலிடம் பெற்றது. இவை சிறுதுளிகள். நம்பிக்கையிக்கும் பெரு மழை. தமிழ்நாட்டின் நான்கு தொலைக்காட்சிகள் (விஜய், கலைஞர், சன், ஜெயா) புலம்பெயர் மக்கள் மீது செலுத்தும் ஆதிக்கம் என்பது மக்களை நல்ல சினிமா மீதும் கலை மீதும் திரும்ப முடியாமல் செய்து விட்டுள்ளது. புலம்பெயர் மக்களில் இரசனை, விருப்பு, வெறுப்பு என்பனவற்றின் மீதும் இவை ஆதிக்கம் செலுத்துகின்றன. சீரியலில் ஒருவர் இறந்தால் வீட்டில் செத்தவீடு கொண் – டாடுமளவிற்கு இவற்றின் ஆதிக்கம் உள்ளது. புலம்பெயர்வில் நல்ல சினிமா தோன்ற விடாமல் உள்ளமைக்கு பிரதான காரணங்களில் தொலைக்காட்சி நிறுவனங்கள் மிக முக்கிய காரணமாகும். படைப்பாளிகளுக்கான தேடல் என்பது மிக முக்கியம். கனடாவில் உள்ள சில தமிழ் இயக்குனர்களிடம் அவர்கள் பார்க்கும் படங்கள் பற்றி வினவியபோது ஒரு சில இயக்குனர்களை விட பெரும்பாலானவர்கள் தமிழ் மசாலாப் படங்களைத்தான் பார்க்கின்றார்கள். புலம்பெயர் படங்களைப் பார்க்கும் பொழுது இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

புலம்பெயர் சினிமா "எமக்கான திரைப்பட மொழியை உருவாக்குமா?" என்ற கேள்வியை முன்வைத்து புலம்பெயர் சினிமாவை நன்கறிந்தவரும், பல சினிமா மற்றும் அரசியல் நூல்களை எழுதியவருமான ஜமுனா ராஜேந்திரனிடம் இரு வருடங்களுக்கு முன்பு கனடா வந்திருந்த போது விளம்பரத்துக்காக வழங்கிய பேட்டியில் இருந்து

"ஈழத் தமிழர்களுக்கு என திரைமொழி உருவாகி இருக்கிறதா எனும் பிரச்சினைக்கு வருவோம். உலகெங்கிலும் திரைப்படத்தினை உருவாக்கும் ஆதாரமான தொழில்நுட்பக் கருவிகள் என்பது ஒன்றுதான். ஒரு சில படத்தொகுப்பு மென்பொருள்களைத்தான் எவரும் தேர்வு செய்ய வேண்டும். பிற்பாடு, தனித்த, பிரத்யேகமான திரைமொழி என்பது எவ்வாறு உருவாகிறது? ஒருவரது வாழ்நிலம், பருவகாலங்கள், சொலவடைகள், உடல்மொழி, அவர்களுக்கு மட்டுமே உரிய தனித்த பிரச்சினைகள், அவர்களைச் சுற்றிய சப்தங்கள், அவர்கள் மட்டுமே எதிர்கொள்ளும் சவால்கள் என்பவற்றை ஒரு

சமூகத்தின் படைப்பாளி எப்போது பற்றிப் பிடிக்கிறானோ அப்போதே அவன் தனது சமூகத்திற்கு மட்டுமே உரியதான திரைமொழியை உருவாக்குகிறான். ரஸ்யாவின் ஐன்ஸ்டைன், கியூபாவின் கிதராஸ் அலியா, செனிகலின் செம்பேன் ஒஸ்மான், வங்காளத்தின் சத்யஜித் ரே, கிரீஸின் தியோ ஆஞ்ஜல பெலோஸ், இங்கிலாந்தின் கென்லோச் போன்றோரிடம் அவர்களுக்கே உரித்தான திரைமொழியை ஒருவர் கண்டடைய முடியும். இந்த நிலையில் இருந்து நோக்கும்போது அருந்ததி, ஜீவன் துவங்கி சதா பிரணவன், லெனின் சிவம், ஐ.வி. ஜனா போன்றவர்களின் திரைப்படங்களில் புகலிட ஈழ சினி மாவுக்கான தனித்த திரைமொழி உருவாகி வந்திருக்கிறது என்று நான் சொல்வேன். இன்னும் கணிசமான குறும்படங்களைக் கொடுத்தவர் எனும் அளவில் சதா பிரணவனின் படங்களில் அது துலக்கமாக இருக்கிறது என்றும் சொல்வேன்."

இதே கேள்விக்கு இலங்கையில் தமிழ்க் குறும்படங்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்களித்தவரும் இயக்குனரும் ஸ்கிரிப்ட் நெட் அமைப்பின் இயக்குனர்களில் ஒருவருமான ஞானதாசின் பதில் இது

உண்மையில் எமக்கான திரைமொழியை உருவாக்குவதில் எவ்வளவு தூரம் பெற்றுள்ளோம் என்பது பற்றி எனக்கு ஒரு தெளிவான பதிலைச் சொல்ல முடியாது. ஏனெனில் எமக்கான திரைமொழி என்பது அவ்வளவு ஸ்தூலமான விடயமல்ல. இது வலு நுட்பமான விளைவு. தொடர்ச்சியான எமது திரைப்படச் செயற்பாட்டின் ஊடாக அது எம்மையறியாமல் நிகழக் கூடியது, நிகழ வேண்டியது. எமது திரைப்பட மொழிக்கான முற் தீர்மானங்கள் எதையும் நாம் வரையறை செய்ய முடியாது.

அந்த வகையில், எமது படைப்புகள் (ஈழம், புலம்) இது இயல்பாக நிகழ்ந்து வருவதை நான் அதானிக்கிறேன். உண்மையில் பெரும்பாலான படைப்பாளிகள் ஏதோ ஒரு வகையில் பெரும்பாலும் இதை சுயநினைவோடு செய்வதில்லை. இன்னும் சரியாகச் சொன்னால், பெரும்பாலான படைப்புகள் இந்தியச் சினிமாவினதோ அல்லது மேற்குலகச் சினிமாவினதோ அல்லது வேறு ஒரு தேசத்துச் சினிமாவினதோ போலச் செய்தல்களாகவே எமது படைப்புகள் இருந்து வருகின்றன. ஆனால் அவர்களை அறியாமல் தனி த்துவங்கள் தலைகாட்டவே செய்கின்றன. ஏனெனில் அவர்கள், ஒரு புதிய சமூகத்தின், உலகச் சினிமா கண்டிராத புதிய மக்கள் கூட்டத்தின் கதை-களைச் சொல்கிறார்கள். ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை. பாத்திரங்களின் அக புற முரண்களுக்காக காரணிகள் தனித்துவமானவை. உறவுமுறை தனித்துவமானது. குடும்பக் கட்டடைப்பு தனித்துவமானது. அந்த வகையில் தனித்துவமான பிரச்சினைகளைப் பேசும் போது தனித்துவங்கள்

தானாக வெளிப்படுவது இயல்பானது. (நான் இந்தியப் படங்களை அப்பிடியே செய்யும் நம்மவரின் முயற்சிகள் பற்றி நான் இங்கு கருத்தில் எடுக்கவில்லை)

மிச்சிக்கன் பல்கலைக் கழக திரைப்படத்துறை பேராசிரியர் சொர்ணவேல் புலம்பெயர் சினிமா பற்றி இக்கட்டுரைக்களித்த கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

நமது தமிழ் சூழலில் புலம்பெயர்ந்த வாழ்வைச் சொல்லும் முக்கியமான படங்கள் குறும்படங்களிலும் (சதா பிரணவன், சுஜீத்ஜி, ஐ.வி. ஜனா, மற்றும் அழகியலில் தனித்து நிற்கும் அஜீவன்) மற்றும் நெடும் படங்களிலும் (லெனின் சிவத்தின் 1999 மற்றும் 'ஏ கன் அண்ட் ஏ ரிங்,' அருந்ததியின் புலம்பெயர் சூழலில் முதல் முயற்சியான 'முகம்', புதியவனின் 'மண்') சமீப காலங்களில் காணக் கிடைகின்றன. அதற்கான ஒரு பிரத்யேக உருவ உள்ளடக்கத்திற்கான தேடல் இவர்களது படங்களிலுள்ளது, வரவிருக்கும் சுமதி ரூபனின் படமும் அத்தகைய ஒரு முயற்சியின் நீட்சியாக உள்ளது. எனக்கு காணக் கிடைத்த இப்படங்களின் பட்டியல் விரிவானதல்ல. நிழல் சஞ்சிகையின் ஆசிரியரும் புலம்பெயர் சினிமா தமிழகத்துக்கு அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்களித்தவருமான திருநாவுக்கரசு "புலம்பெயர் சினிமா என்பது தனித்த ஒரு வகையினம். இதில் தமிழர்கள் எடுக்கும் படங்கள் தாங்கள் பட்ட பாடுகளை-யும் இனி புலம்பெயர் வாழ்வையும் முதலில் கொண்டு வந்திருக்கிறர்களா என்பதைத்தான் முதலில் பார்க்கவேண்டும். சினிமாவுக்கான மொழி என்பது உலகம் முழுவதும் ஒன்றுதான் இதில் நமக்கான இடத்தை உண்டாக்க வேண்டும்." என்கின்றார்.

விம்பம் அமைப்பின் இயக்குனர் திரு. கிருஸ்ணராஜாவும் முழு நீளத் திரைப்படங்களின் தரத்தைப் பற்றி கவலை தெரிவித்தார். அதே சமயம் குறும்படப் படைப்பாளிகளின் அடுத்த கட்டத்தைப் பற்றிய கவலையும் அவரிடம் உள்ளது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள்" (Non resident Indians) பலர் ஆங்கிலத்தில் படமெடுக்கின்றார்கள். தீபா மேத்தா, மீரா நாயர், குரின்டர் சடா போன்ற இயக்குனர்கள் ஆங்கிலத்தில் படங்களை இயக்குகின்றனர். இவர்களது படங்கள் பெரு வரவேற்பை பெற்றுள்ளன. முன்னர் குறிப்பிட்ட ரேணுகா ஜெயபாலனும் ஆங்கிலத்தில் தான் படமெடுக்கின்றார். நயனி-வத்சலாதேவி தியாகராஜா போன்ற பல இளைஞி, இளைஞர்கள் ஆங்கிலப் படங்களிலேயே தமது கவனத்தை காட்டுகின்றார்கள். ஆனால் இவர்களுக் -கான சிறப்பம்சம் இவர்கள் தங்களது அடையாளத்தை, தாங்கள் சந்தித்த துயரங்களை வலிகளை தமது படைப்புக்களில் வெளிப்படுத்துகின்றார்கள். எமக்கான திரைப்பட மொழியின் உருவாக்கம் இவர்களிடமிருந்தும், புலம்பெயர் குறும்பட படைப்பாளிகளிடமிருந்தே விரிவடையும்.

பிற்குறிப்பு

1. புலம்பெயர் படைப்பாளிகள் விவரணத் திரைப்படங்கள் எடுப்பதில் பெரும் அக்கறை காட்டவில்லை. சில அமைப்புக்களுக்காகவும், அரசு சார் நிறுவனங்களுக்காகவும் ஆங்காங்கே சில விவரணத் திரைப்படங்கள் உளவியல் சார்ந்தும் வேறு சில வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகவும் கொண்டு வெளிவந்துள்ளன. இவற்றைத் தவிர குறிப்பிடத்தக்களவில் விவரணத் திரைப்படங்கள் வெளிவரவில்லை. எமது படைப்பாளிகள் விவரணத் திரைப்படங்களில் அதிகளவு அக்கறை காட்டவேண்டும். எமது வாழ்வியலை மையமாகவைத்து பெருவோட்ட மக்கள் எமது இடுவுகளை பிரதான கருவாகக் கொண்டு சில படங்களை எடுத்துள்ளனர். இந்நிலை மாறவேண்டும்.

2. இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது போப்பாண்டவர் ஆமேனியர்கள் மீதான துருக்கியர் சுமார் நூறாண்டுகளுக்கு முற்பட்ட படுகொலைகள் ஜெனோசைட் எனக் குறிப்பிட்டுள்ளார். துருக்கி புலம்பெயர் ஆமேனியர்களே போப்பாண்டவரின் இக் கருத்துக்கு காரணம் எனக் கூறியுள்ளது. மூன்றாம் தலைமுறை ஆமேனியரான அற்றம் எகோயனால் எடுக்கப்பட்ட ஆரட் மற்றும் கலண்டர் படங்கள் ஆமேனியர் மீதான படுகொலைகளை உலகிற்கு மீண்டும் வெளிப்படுத்தியது. ஆல்ஜீரியர்கள் மீது பிரான்ஸ் படைகள் நடத்திய கொடுமைகளை மையமாக வைத்து வெளியிடப்பட்ட The Battle of Algeirs படம் பிரான்சை உலகின் முன் தலைகுனிய வைத்தது. எமது படைப்பாளிகளாலும் எமது மக்களின் வலிகளை வெளிப்படுத்த முடியும். செய்வார்களா?





ரதன்

விளம்பரத்தில் தொடர்ச்சியாக சினிமா மற்றும் அரசியல் கட்டுரைகளை கடந்த 15 வருடங்களாக எழுதிவருகின்றார். பல திரைப்பட விழாக்களில் நடுவராக கடமையாற்றியுள்ளார். 'காலச்சுவடு', 'நிழல்', 'கணையாழி', உயிர்நிழல் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. கடந்த 15 வருடங்களாக ரொறொன்ரோவில் சர்வதேச தமிழ்த்திரைப்பட விழாவை நடத்திவருகின்றார். அரசியல் விமர்சகர், கவிஞர், சிறுகதையாசிரியர், நாடகர். இரண்டு சினிமா நூல்களை எழுதியுள்ளார். ரி.வி.ஐ தொலைக்காட்சியில் நல்ல குறும் படங்களை ஒளிபரப்பியுள்ளார்.

மாறிவரும் நகைச்சுவை உணர்வும் வெளிப்பாடும்

- 'கலகலப்பு' தீசன்

சிரிப்பதனால் மனிதன் நீண்டகாலம் உயிர் வாழ்கிறான். மனிதனுக்கு கடவுளால் அளிக்கப்பட்ட பெரிய கொடை சிரிப்பு.



சினிமா பிரபலமாகாத காலத்தில் நாடகம், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாட்டுக்கூத்து போன்றவை பாடசாலைகளில், கோவில் வீதிகளில், கிராமங்களில் நடைபெறும்போது மக்கள் கூடுதலாக ரசிப்பது நகைச்சுவையைத் தான். நகைச்சுவை நடிகர்களையும் கோமாளிகளையும் சிறியோர் முதல் முதியோர் வரை பார்த்து தம்மை மறந்து வாய்விட்டு சிரித்தனர்.

'வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப்போகும்'. அந்தச் சிரிப்பெல்லாம் எங்கே? நவரசம் எனும்பொழுது அதிலொன்றாக இருப்பது சிரிப்பு. இன்று பலர் சிரிக்க மறந்து விட்டனர். தொழில்நுட்ப வளர்ச்சி, புலம்பெயர்ந்த நாட்டில் திட்டமிடப்படாத பிஸியான வாழ்க்கை.

ஓலைக் குடிசைகளிலும் அதற்கும் மேலாக கல் வீடுகளிலும் பெற்றோர், உற்றார், உறவினர், சுற்றம் சூழ வாழ்ந்த மக்கள் புலம்பெயர் நாட்டில் குடும்ப ஒன்றிணைவு (ஸ்பொன்சர்) என மகிழ்வுடன் வந்தனர். ஆனால் இன்று தனிமையில் வாழ்கின்றனர். விமான நிலையத்தில் வந்திறங்கும் பொழுதே பலரின் சந்தோஷம் நாடு கடத்தப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் ஒருவர் புதிதாக வந்தால் அவரின் வீட்டுக்கு செல்வது, அவரை நாம் விருந்துக்கு அழைப்பது, கலகலப்பாக கதைத்து சிரிப்பது, பழைய கதைகளை கதைத்து நண்பர் உறவினர்களுடன் கூடிய காலங்கள் ஓடியே விட்டது.

சிரித்தால் துன்பம் குறையும். 'இடுக்கண் வருங்கால் நகுக'
ஆனால் இன்றோ? தனிமையிலே இனிமை காண முடியுமா? என்ற நிலையில் பலர் இருக்கிறார்கள்.

இன்று முக்கியமாக தொழில்நுட்ப வளர்ச்சியில் அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நிமிடமும் உடனுக்குடன் படங்கள், வீடியோக்கள் மூலம் உலகம் முழுவதும் பரவி விடுகிறது. படம் எடுப்பதும் உடனுக்குடன் அதனை இணையத்தளங்களில் பரவச்செய்வதும் மட்டுமல்ல பார்வையாளர்களின் ரசனை படம் எடுப்பதிலும் ரெக்ஸ் பண்ணுவதிலும் இருப்பதால் நிகழ்ச்சிகளை ரசிப்பதில்லை. பக்கத்தில் இருப்பவர் யார் என அறியவோ கதைக்கவோ நேரமில்லை. கதைத்தால் தானே சிரிப்பு வரும்.

"சிந்தித்தால் சிரிப்பு வரும்"

கலை நிகழ்ச்சிகளுக்கு ரிக்கற் எடுத்துப் போகாமல் உடனேயே பேஸ் புக்கிலும் வெப் சைற்றிலும் பார்க்கலாம் என நினைத்து வீட்டில் தனிமை-யிலிருந்து மன அழுத்தத்தையும் ரத்த அழுத்தத்தையும் கூட்டுபவர்கள்தான் அதிகம். அதற்கு மருந்து....

மீண்டும் உடற்பயிற்சி, சிரிப்பு தெரப்பி (laughing therepy). பலர் ஒன்றுகூடி தாமாகவே சிரிப்பது நினைக்கவே சிரிப்பாக இருக்கிறது.

"இருக்குமிடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத்தங்கமே"

இலங்கையில் தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் நகைச்சுவை முக்கிய பங்கெடுத்தது. அந்த நகைச்சுவையை மற்றவர்களு-டன் பகிரும்போது தொடர்ந்து சிரிக்கக்கூடியதாக இருந்தது. சிரிக்க வைத்தார்கள் சிரித்தோம்.

நூற்றுக்கு மேற்பட்ட மேடைகள் கண்ட அடங்காப்பிடாரி, வெளிக்கிடடி விசுவமடுவிற்கு, புழுகர் பொன்னையா, கோமாளிகள் கும்மாளம், ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிள்ளை போன்ற நாடகங்களும், செங்கை ஆழியானின் ஆச்சி பயணம் போறா எனும் நகைச்சுவை தொடர் வாசித்து சிரிக்காதவர்கள் இல்லை. 'சிரித்திரன்' ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள் வீரகேசரி, மித்திரன், ஜோதி ஆகியவற்றில் தந்த 'சவாரித்தம்பர்' 'மைனர் மச்சான்', 1970 ஆம் ஆண்டுகளில் எனது கலகலப்பு நகைச்சுவை இதழ் மாணவர் இளைஞர்கள் பாடசாலைப் புத்தகத்தை விட விரும்பிப்படித்த இதழாகும்.

"நீ சிரித்தால் தீபாவளி"

படித்தவர், பாமரர் என்றில்லாமல் நகைச்சுவையை யாவரும் விரும்புவார்கள். மேடை நாடகங்களுக்கு அடுத்து சினிமா வளர வளர

சினிமா நகைச்சுவைகள் தொலைக்காட்சியில் முக்கிய இடம்பிடித்தது.

ஆனால் நகைச்சுவை என்ற பெயரில் தரமுள்ள சிலேடைப் பேச்சுக்கள் மாறி அர்த்தமற்ற, ரசனையற்ற, விரசமான, இரட்டை அர்த்தமுள்ள வசனங்கள் முன்னணி வகிக்கின்றன. குடும்பமாக இருந்து பார்க்க முடியாமல் இருக்கிறது. தொற்று வியாதி போல எவ்வித பயமுமின்றி மேடை, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் இரட்டை அர்த்தமுள்ள வசனங்கள், விரசமான வார்த்தைகள் பற்றிக்கொண்டன.

"சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே"

ஈழ மக்கள், என்று இடம்பெயர்வு, புலம்பெயர்வு என ஆரம்பித்தனரோ வாழ்க்கையில் பல கலை கலாசார மாற்றங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனால் எந்த இனமும் சிரிக்கத் தவறவில்லை.

கனடாவைப் பொறுத்தமட்டில் பொது நிகழ்வுகளில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அரசியல், சமய, சமூக, நகைச்சுவை நாடகங்கள் முக்கிய இடம்பெற்றன. 5, 10, 15, 20, 30 டொலர் ரிக்கற், 5, 6 மணித்தியாலங்கள் மக்களின் ரசனைக்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகள் அமைந்தன. இவற்றுள் நகைச்சுவை நாடகங்களுக்கென பலர் முத்திரை பதித்தனர்.

நாடகக் கலைஞர்கள் மேடை நாடகங்களில் முக்கிய அங்கம் வகித்தனர். இன்றும் நடித்துக்கொண்டிருக்கின்றனர். மறைந்தும் நாம் மறக்காத அண்ணை றைற் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களின் நகைச்சுவை, தனி நடிப்பு, மேடை நாடகம், வானொலியில் நாடகம், தொலைக்காட்சி நாடகம் போன்றவை இன்றும் நினைத்து சிரிக்கக் கூடியவை. ரி.வி.ஐ யில் Y.T. லிங்கம் நிகழ்ச்சியில் நூற்றுக்கு மேற்பட்ட நகைச்சுவை கலைஞர்களை இனம்கண்டு உலகம் முழுவதும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

காலமாற்றத்தில் மேடைநிகழ்சிகள், நடனம், திரையிசை நடனம் போன்றவை கூடிய பங்கு வகிக்கத் தொடங்கியது மட்டுமல்லாமல் நாடகங்கள் குறிப்பாக சமூக, நகைச்சுவை நாடகங்கள் எவ்வளவு பயிற்சி எடுத்தும், மேக்கப் போட்டும் நேரம் போதாமையால் மேடையேறாது விட்டன.

"சிரித்தாலும் கண்ணீர் வரும். அழுதாலும் கண்ணீர் வரும்"

சிலருக்கு பாவை தெரியாததால் அதனை ரசிக்க முடிவதில்லை.

நண்பர்களுடன் கதைத்து சிரிக்க நேரமில்லை. மனம் விட்டு, வாய் விட்டு சிரிப்பவர்கள் இல்லை. இங்கு குறிப்பிடுவது பொது நிகழ்ச்சி மட்டுமல்ல. வீடுகளுக்கு சென்றாலும் இதேநிலமை தான். மாணவர்கள் பாடசாலை பாடத்திட்டம் அல்லது இன்ரநெற், ஈ மெயிலில் நேரம் செலவிடுவதால் வீட்டிற்கு வரும் உற்றார் உறவினருடன் கதைத்து சிரிக்க நேரமில்லாது போய்விடுகிறது.

கவலை தரும் சீரியல் நாடகங்கள் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் விருந்தினருக்கு தேனீர் கொடுப்பதே ரி.வி. யில் விளம்பர இடைவேளை வரும் போதுதான்.

ஒருவர் வீட்டிற்கு நாம் விருந்தாளியாகப் போனாலும் அல்லது எமது வீட்டிற்கு விருந்தாளியாக வந்தாலும் இன்முகம் காட்டி வரவேற்பதும் வரவேற்கப்படுவதும் சர்வ சாதாரணம். ஆனால் இன்று விருந்தாளி வரும்போதே செல்போனுடனும் வீட்டுக்காரர் ஐ பொட்டுடனும் தான். வரவேற்பு இல்லை, முகமலர்வு இல்லை, குதூகலமில்லை, கலகலப்பில்லை.

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான். பத்திரிகைகள், வார வெளியீடுகளில் தொடர்ந்து வாசிக்க முடியாவிட்டாலும் பலர் வாசிப்பது சிறு நகைச்சுவை துணுக்குகள், கட்டுரைகள். அதுவும் கனடாவைப் பொறுத்தமட்டில் எத்தனை இலவசப் பத்திரிகைகள், தொழில்நுட்ப வளர்ச்சி வாசிக்க சந்தர்ப்பமோ, நேரமோ கிடைப்பதில்லை. எதை நினைத்து சிரிப்பது எதைச் சொல்லி சிரிப்பது. சிரிப்பதற்கு நேரமில்லையெனும் அளவிற்கு மக்கள் தங்களை மாற்றிக்கொண்டார்கள்.

சினம் – ஆத்திரம் இதுதான் இன்றுள்ள மக்களின் நிலை.
சிரிப்பதற்கு பயிற்சி தேவையில்லை. சிரியுங்கள்....சிரித்து வாழவேண்டும்.

சிரித்தோம் – சிரிக்கிறோம் – சிரிப்போம்!



'கலகலப்பு' தீசன்

விளம்பரம் பத்திரிகையில் நகைச்சுவையில் தனக்கென ஒரு பாணியில் கடந்த பல ஆண்டுகளாக எழுதி வருகிறார். நீண்டகாலமாக இலங்கையிலும் கனடா–விலும் மேடை, வானொலி, தொலைக்காட்சி, நாடக நடிகர், நாடக தயாரிப்பாளர். 1970ஆம் 'கலகலப்பு' பத்திரிகையை வெளியிட்டவர். 2003இல் நடிப்பு, கதை, வசனம், தயாரிப்புடன் 'கலகலப்பு' திரைப்படத்தையும் வெளியிட்டவர்.

ரொறொன்ரோ பெரும்பாகத் தமிழர் மத்தியில் ஏற்பட்ட

வர்த்தகத்துறை வளர்ச்சியும் வாழ்க்கை மாற்றங்களும்

- துறையூரான்

'தேமதுரத் தமிழோசை உலகெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'
– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

முன்னுரை

பாரதி கண்ட கனவை நனவாக்கும் பணியில் முன்னணியில் இருப்பவர்கள் ஈழத்தமிழர் எனின் புகழ்ச்சியில்லை. சென்றவிடங்களி-லெல்லாம் மொழியையும், கலாச்சாரப் பின்னணிக் கலைகளையும், சமயத்தையும் பேணுவதிலும் வளர்ப்பதிலும் முன்னணியில் இருக்கின்-றனர். பிறந்த பதியில் படிப்படியாகப் பிடியை இழக்கும் தறுவாயில் புகலிடங்களில் கால் பதித்து வேரூன்றி ஆல் போல் தழைத்து வாழ்வதில் சாதனை படைக்கிறார்கள். இவர்களின் வாழ்வும், வளமும் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளன. வர்த்தகமுயற்சிகள் எவ்வாறு வளர்ந்து வருகின்றன என்பதைப் பற்றிய ஒரு கண்ணோட்டமாகவே இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாகத் தமிழர் பெருவாரியாக வாழ்ந்து கொண்டிரு-க்கும் ரொறொன்ரோ பெரும்பாகத்தைப் பற்றியே நாம் கருத்தில் எடுக்கவுள்ளோம். எனினும் மார்க்கம், பீல் - பிரம்டன், மிசிசாகா, டுர்காம் - ஏஜக்ஸ், பிக்கறிங், ஒஷாவா பகுதிகளிலும் அண்மைக்காலங்களில் அதிகமானோர் வாழத் தலைப்பட்டுள்ளனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

தமிழர்களின் ஆரம்பக்குடியேற்றம்

ரொறொன்ரோ பெரும்பகுதியில் வாழும் சிறுபான்மையினர்களுள் (visible minority) மிகவும் வேகமாக வளரும் இனமாக ஈழத்தமிழர் உள்ளனர். தற்போது கனடாவில் 400,000 பேர் வாழ்கின்றனர் என அண்ணளவாகக் கூறலாம். இவர்களுள் 300,000 பேர் ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் அண்டைய பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களின் கனடா வருகை 1940களில் இருந்து ஆரம்பமாகின்றது.

புலமைப்பரிசில் பெற்றும், தொழில் வாய்ப்புப் பெற்றும் இங்கு வரத் தொடங்கினர். புலமைப்பரிசில் பெற்றோரில் சிலர் இங்கேயே தங்கி வேலை பார்க்க ஆரம்பித்தனர். அவ்வாறே குறித்த காலத்துக்கு வேலை பார்க்கும் நோக்கோடு வந்தோரும் இங்குள்ள வசதிகளையும், வாய்ப்புகளையும் கண்டு இங்கேயே தங்கி விட்டனர். வந்தோரை வாழ வைக்கும் நாடு கனடா எனில் அது வீண் புகழ்ச்சியில்லை.

இலங்கையில் 1983இல் நடைபெற்ற இனக் கலவரத்தினால் ஏறக்குறைய 500,000 பேர் கனடா, ஐக்கிய இராச்சியம் (இங்கிலாந்து), அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்குக் குடி பெயர்ந்தனர். இவர்களுள் பெரும்பாலானோர் கனடாவுக்கு வந்தனர். கடந்த 30 ஆண்டுகளில் பெரும்பாலானோர் குடிபெயர்ந்துள்ளனர். இலங்கை, இந்தியா, மலேசியாவுக்கு அப்பால் கூடுதலாகத் தமிழர் வாழும் நாடாகக் கனடா விளங்குகிறது. இக்குறுகிய காலத்தில் வர்த்தகம், பொருளாதாரம், கல்வி, அரசியல், சமூகம் ஆகிய பல்வேறு துறைகளில் கனேடிய வாழ்க்கை முறையில் தமது இருப்பை நிலை நாட்டியுள்ளனர்.

தமிழர் வர்த்தக சமூகம் எதிர்பாராத முன்னேற்றத்தை அடைந்து உள்ளது. ரொறொன்ரோப் பெரும்பாகத்தில் பலதரப்பட்ட வர்த்தக சேவை நிறுவனங்கள் ஏறக்குறைய 700 உள்ளன. தமிழர்களே இவற்றுக்கு உரிமையுடையவர்களாயுள்ளனர். இவற்றைத் தவிரப் பிற தனியார் நிறுவனங்களில் பல தமிழர்கள் உயர் பதவிகளில் கடமை புரிகின்றனர் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவற்றுள் 1990ஆம் ஆண்டு முதல் 'தமிழர் மத்தியில்' என்ற சமூக வழிகாட்டி வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 'தமிழன் வழிகாட்டி' என்ற கைநூல் 1995இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 'வணிகம்' என்ன விளம்பரக் கைநூல் வெளியிடப்படுகிறது. 1991 முதல் 2001 வரைக்கும் கனடாவில் குடியேறிய அதி கூடிய 10 நாடுகளிலிருந்து வந்தோர்களில் சிறி லங்காவும் ஒன்றாகும். இதன் விகிதசாரம் 6.4% எனக் கணிக்கப்பட்டு உள்ளது. கனடா புள்ளி விபரவியலின்படி தெற்காசிய நாடுகளிலிருந்து கனடாவுக்கும் குடிபெயர்வோரின் எண்ணிக்கை 2017இல் 72%த்துக்கும் 137% சதவீதத்துக்கும் இடையில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறெனின் கனடாத் தமிழரின் சனத்தொகை 450,000 க்கும் 550,000 க்கும் இடையில் அதிகரிக்குமெனக் கூறப்படுகிறது.

அதன் 2014ஆம் ஆண்டு விளம்பரப் பட்டியலின்படி ரொறொன்ரோப் பெரும்பாகத்தில் மிக முக்கியமான வர்த்தக சேவைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வீடு விற்பனை முகவர்	1090	பயண முகவர்	29
காப்புறுதி	92	சமூக சேவை நிறுவனங்கள்	26
சட்டத்தரணிகள்	74	பெண்கள் அலங்காரம்	28
வீட்டு அடமானம் (ஈடு)	63	பொருட்கள் காவுதல்	26
வீடு மீளமைப்பு	52	கோவில்கள்	25
கணக்காளர்	50	பத்திரிகைகள்	21
கலியாண மண்டபங்கள்	45	புகைப்படம் எடுப்போர்	21
வைத்தியர்	42	நகைமாடங்கள்	21
பல் வைத்தியர்	41	உஷ்ணமூட்டல்	16
நுண் கலைகள் கற்பிப்போர்	38	மளிகை கடைகள்	16
பிரத்தியேக போதனை நிறுவனம் (Tutions)	37	வானொலிகள்	10
கார் பழுது பார்த்தல்	32	தொலைக்காட்சிகள் நிறுவனங்கள்	11
உணவு வழங்குதல்	30	திரைச்சேலை, ஜன்னல் மூடிகள்	14
கார் பழக்குவோர்	29	ஓட்டாண்டிநிலை (வங்குரோத்து)	10
சிறுவர்கல்வி நிதியம் (RESP)	29		

மேற்கூறிய நிறுவனங்களின் பட்டியலிலிருந்து தமிழ் மக்களின் வாழ்வியல் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் அறியலாம்.

இச்சந்தர்ப்பத்தில் 1995இல் தஞ்சாவூர், தமிழ் நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழர் மரநாட்டு மலரில் 'ரொறொன்ரோவில் தமிழர்' என்ற எனது கட்டுரையில் வெளிவந்த வணிக நிலையங்களின் புள்ளிவிபரங்களைப் பார்த்தால் ஏறக்குறைய இருபது ஆண்டுகளில் எவ்வளவு முன்னேற்றம் இடம் பெற்றுள்ளது என்பதை அறியக்கூடியதாய் உளது. 1990இல் ஆரம்பிக்கப்பட்ட 'தமிழர் மத்தியில்' என்ற வர்த்தகக் கையேடு 1994ஆம் ஆண்டில் 12 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்தது. இன்று 'தமிழன் வழிகாட்டி' (2014) வெளியீடு 856 வர்த்தக விளம்பரங்களைக் கொண்ட பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. 1993இல் 516 வணிக நிலையங்கள் இருந்தன. தற்போது 680 விளம்பரங்கொடுத்த நிறுவனங்கள் உள்ளன. இதைத் தவிர வழிகாட்டியில் விளம்பரங் கொடுக்காத பல்வேறு நிலையங்கள் உள்ளன. அண்ணளவாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இங்கு சேவைகளை வழங்குகின்றன எனத் துணிந்து கூறலாம். இலங்கைக்கு வெளியே கூடுதலான இலங்கைத் தமிழர்களையும் தமிழர் நிறுவனங்களையும் ரொறொன்ரோ கொண்டுள்ளது. இதற்குக் கனேடிய அரசின் தாராள மனப்பான்மையே காரணம் எனலாம்.

இனித் தமிழ்ச் சமூகத்தினரின் வாழ்க்கை மாற்றங்களைப் பற்றிப் பார்ப்போம். வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும்மென்ற கட்டுக்-கோப்பில் தாயகத்தில் வாழ்ந்தனர் எம் முன்னோர். ஆங்கிலக் கல்வியும் நாகரிகப் பின்னணியும் நம்மவரிடையே பல மாற்றங்களை ஏற்படுத்தின. சமயக் கல்வியும் தமிழ்ப்பற்றும் படிப்படியாக இளைய சமுதாயத்தின-ரிடம் குன்றத் தொடங்கின. தாயகப் போர்ச்சூழல் காரணமாகத் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்பதற்கு இணங்க பணவசதி படைத்தோரும், பணத்தைப் பல வழிகளில் பெற்றோரும், படிப்பை முடிக்காதவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அவ்வாறான சூழலில் அகதிநிலை கோரியோரில் பெரும்பாலானோரை கனடா அரவணைத்து வாழ்வளித்தது.

ஆரம்பத்தில் தாயக நினைவுகளோடும் உறவினரைப் பிரிந்த ஏக்கங்களோடும், வேலை பிரதானமெனப் பெரும்பாலானோர் ஓடி ஓடி உழைத்தனர். சிறுகச் சிறுகச் சேர்த்து, உறவினரை 'ஸ்பொன்சர்' செய்தும், பணங்கொடுத்து மறைமுகமாகவுங் கனடாவுக்கு அழைத்து வந்தனர். இவ்வாறு வந்தவர்களும் பொறுப்புடன் நடந்து கொண்டனர். முற்றிலும் புதிய சூழ்நிலை, குடும்பப் பிரிவு, உரிய கல்வி, மொழிப்பிரச்-சினை, இன்னும் பல புறக் காரணிகள், தாயகத்தில் போர்ச்சூழலில் வளர்ந்து புலம்பெயர்ந்த குறிப்பாக இளைஞரிடையே இருந்த மனக் குழப்பங்கள் புதிய சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவித்திருந்தன.

இச் சூழ்நிலை சில பாதகமான குழு மோதல்கள் போன்ற தோற்றப்-பாடுகளை உருவாக்கி முத்திரை குத்தல் நிகழ்வுகளும் ஆங்காங்கே நகரின் மத்தியில் நிகழ ஆரம்பித்தன. இலங்கைத் தமிழர் படித்தவர்கள், பண்பானவர்கள், உழைப்பாளிகள் எனப் பெரும்பான்மையினர் கருதிய நிலையில் பொத்தல்கள் விழ ஆரம்பித்தன. ஒருசில இளைஞர்களின் மனோநிலையும் நடத்தைகளும் இங்கிருந்த காவல்துறையினருக்கும் பிறருக்கும் கவலையை ஏற்படுத்தின. இதனால் தமிழ்ச் சமூகத்துக்கு அவப்பெயர் ஏற்பட்டது. பல சமூக நிறுவனங்கள் காவல் துறையின-ரோடும் அரசாங்க நிறுவனங்களோடும் இணைந்து செயற்பட ஆரம்பித்தன. இவர்களின் தீவிர நடவடிக்கைகளினால் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டோர் சிறைகளில் தள்ளப்பட்டனர். சிலர் யாருக்குந் தெரியாமல் நாடு கடத்தப்பட்டனர். பின்பு இந்நிலை கொஞ்சம் தணிந்து இளைஞர் மத்தியில் மாற்றங்கள் வெகுவாக நிகழ ஆரம்பித்தன.

தற்போது கனடாவில் பிறந்து வளர்ந்த சமுதாயம் பல சாதனை-களைப் படைத்து வருகிறது. பிரபலமான கனேடியப் பல்கலைக்கழகங்-களில் ஆண்டு தோறும் பெரும்பாலான தமிழ் இளைஞர்களும்

யுவதிகளும் சேர்ந்து கல்வி கற்கிறார்கள். இவர்களது விகிதாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பல்வேறு துறைகளிலும் எம்மவர்கள் பொறுப்பான பதவிகளில் உள்ளனர். மைக்குறோ சொவ்ற், கூகிள், பேஸ்புக், றொஜெர்ஸ், பெல் கனடா போன்ற உலகப் புகழ்பெற்ற ஸ்தாபனங்களில் தமிழர்கள் முக்கிய பதவிகளில் பணி ஆற்றுகின்றனர். தமிழ்ப் பெண்கள் ஆண்களை விட நாம் சளைத்தவர்களில்லை எனப் பல பதவிகளில் வகித்துக்காட்டுகின்றனர். எமது இனத்தவருக்கு இங்கு கல்வி, பொருளாதார வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. இவற்றை நன்கு பயன்படுத்திப் பெரும்பாலானோர் வளமாக வாழ்கின்றனர்.

தாயகத்தில் கால்நடையாகவும், பேரூந்திலும் சென்ற எம்மவர் பலர் காரில் ஆரம்பித்து வான், ஜீப் என்று உல்லாச வாகனங்களில் பவனி வருகின்றனர். இரண்டு இலட்சம் டொலரில் வீடு வாங்குவதற்குத் தயங்கிய காலம் மலையேறி இரண்டு மில்லியனுக்கு மேல் வீடு வாங்கும் நிலைக்கு நம்மவர் பலர் உயர்ந்துள்ளனர். வர்த்தக நிறுவனங்களின் எண்ணிக்கையை நன்கு அவதானித்தால் எமது சமூகத்தினர் எவ்வகை விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும். தாயகத்திலிருந்து வந்து குடியேறிய பெற்றோரின் மனோநிலைக்கும் இங்கு பிறந்து வளர்ந்த இளைய சந்ததியினரின் மனோநிலைக்கும் நிறைய வேறுபாடுகள் உள. இதனால் பல சமுதாய மாறுபாடுகள் தோன்றியுள்ளன. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, உறவு - களுக்கு உதவுதல், திருமணம் பந்தம், பெற்றோர் - பிள்ளைகள் உறவு, சமூக நிகழ்வுகளின் மாற்றம், பணத்தைச் சேகரிக்கும் பண்பு, பெரியோரை மதித்தல் போன்ற எமது பண்டைய பண்புகள் மாற்றம் பெறுகின்றன. பணத்துக்கும், சொகுசு வாழ்க்கைக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் உல்லாசப் பிரயாணங்களும், ஆடம்பரக் கல்யாணங்களும், அரங்கேற்றங்களும் ஏராளமான பொருட்செலவில் செய்யப்படுகின்றன. இனம் விட்டு வேற்றினக் திருமணங்களும் நடைபெறுகின்றன. எம்மதமும் சம்மதம், எவ்வினமும் நம்மினமே என்ற மனப்பான்மையில் எம் இளைய சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல் ஞாபகத்துக்கு வருகின்றது.

கனேடிய அரசியலிலும் பொது வாழ்விலும் எம்மவர் சாதனை புரிய ஆரம்பித்துள்ளனர். 2011இல் நடந்த தேர்தலில் நாடாளுமன்ற முதல் தமிழராக ராதிகா சிற்சபைஈசன் ஸ்காபரோ றூஜ்றிவர் வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இது எம்மவரின் அரசியல் வாழ்வில் ஒரு மைல் கல்லாகும். இதற்கு முன்னர் மார்க்கம் 7ஆம் வட்டார நகரசபைப் பிரதிநிதியாக லோகன் கணபதி தெரிவு செய்யப்-

பட்டார். அவ்வாறே மார்க்கம் கல்விச்சபை உறுப்பினராக நீதன் சண்முகராஜாவும் பின்னர் ஜனிற்றா நாதனும் தெரிவு செய்யப்பட்டனர். அண்மைய நகரசபைத் தேர்தலில் லோகன் கணபதி, மூன்றாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் அண்மையில் தேர்தலில் பல்வேறு பதவிகளுக்கு 30 தமிழர்கள் போட்டியிட்டனர். எனினும் மூவரே வெற்றி பெற்றனர். லோகன், ஜனிற்றாவைத் தவிர பார்த்திபன் கந்தவேள், ரொறொன்ரோ கல்விச்சபை உறுப்பினராகத் தெரிவானார். கனேடியத்தமிழ் காங்கிரஸ் உட்பட சில நிறுவனங்கள் தற்போது கனேடியத் தமிழருக்கு நகரசபை, மாகாணசபை, மத்தியசபை நிலைகளில் ஆதரவு தேடும் நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. தாயகப் போரின் பின்னால் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்து இளைஞர் மன்றம், தமிழ், கிறிஸ்தவக் கோயில்களும் இங்கு ஆரம்பிக்-கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர பல சமூகசேவை நிறுவனங்களும், பாடசாலை பழைய மாணவர் சங்கங்களும், ஊர்ச்சங்கங்களும் தாயக மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிதி உதவிகள் வழங்கி வருகின்றன.

உலக மட்டத்தில் பிரபலமான சில தமிழர்களும் இங்குள்ளனர். பிரபல எழுத்தாளரான சியாம் செல்லத்துரை, ரென்னிஸ் வீராங்கனை சோனியா ஜெயசீலன், கிரிக்கெற் வீரர் சஞ்சேயன் துரைசிங்கம், ரேபிள் ரென்னிஸ் வீரர் பிரதீபன் பீற்றர்போல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பிரதீபன் கனேடிய தேசியக்குழு அங்கத்தவராகக் கடந்த 12 ஆண்டுகள் இருந்தவர். 2008 கோடைகால ஒலிம்பிக்கில் (பீஜிங்) கனடாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர். இவ்வாறு தமிழர் புகலிடத்துக்கு பெருமை சேர்க்கின்றனர்.

ஒன்ராரியோ மாகாண அரசு 'தமிழ் பாரம்பரிய' மாதமாக ஜனவரி மாதத்தை ஒரு சட்ட மூலமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதிலிருந்து தமிழினத்தின் மதிப்பும் பங்களிப்பும் நன்கு புலனாகின்றது.

உசாத்துணை
1. Tamil Canadian Wikipedia
2. 8 ஆவது உலகத்தமிழ் மாநாடு தஞ்சவூர் மலர் - 1995



சின்னையா சிவநேசன்

துறையூரான் என்னும் புனைபெயரையுடைய இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராக இருந்தவர். கனடாவில் ரொறொன்ரோ மாவட்டப் பாடசாலை ஆலோசகராகவும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவராகவும் இருந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரை, சிறுகதை, நாடகம், விமர்சனம், கவிதை ஆகியவற்றை சஞ்சிகைகள், பத்திரிகைகளில் எழுதி வருகிறார். மற்றும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நேர்காணல்கள், நாடகங்கள், பேச்சுக்கள் பட்டிமன்றங்களென பல துறைகளில் பணியாற்றி வருகின்றார்.

கனடிய தமிழர் வாழ்வில் காப்புறுதி

- சிவ பஞ்சலிங்கம்

'காப்புறுதி' என்றால் 'ஒருவர் வாழ்வில் ஏற்படும் விபத்துக்களாலும், அதனை தொடர்ந்து வரும் பாதிப்புக்களாலும் ஏற்படும் இழப்புக்கு வழங்கும் ஒரு பாதுகாப்பு' என சுருக்கமாக வரைவிலக்கணம் கூறலாம்.

பலரும் சேர்ந்து 'காப்புறுதி கம்பனி' என்ற ஒரு பெட்டகத்தினுள் சிறுசிறு தொகை பணத்தினை மாதா மாதம் போடுகின்றோம். இப்பணம் அத்துறை சார்ந்த நிபுணர்களினால் நிர்வகிக்கப்படுகின்றது. பல்வேறு வகையான முதலீட்டு திட்டங்களில் அப்பணம் வளர்த்து எடுக்கப்படுகி - ன்றது. அதில் முதலீடு செய்த மக்களுக்கு பாதிப்புக்கள் எவையும் ஏற்படா வண்ணம் அரசும், சட்டங்களும் அதற்கு ஒரு பாதுகாப்பு அரணாக காவல் காக்கின்றது. காப்புறுதி என்ற பெட்டகத்தினுள் முதலீடு செய்த ஒருவரின் வாழ்வில் விபத்துக்கள், பாதிப்புக்கள் என்ற நிலைமை வரும்போது காப்புறுதி தேடிவந்து பாதுகாப்பு வழங்குகிறது.

பண்டைய தமிழர் வாழ்வில் காப்புறுதி முறைகள்

நவீன காலத்தில் ஒவ்வொரு காப்புறுதி ஒப்பந்தங்களுக்கும்:

- ஒவ்வொரு விதமான கணிதவியல் கோட்பாடுகள்
- சட்ட ஒழுங்குவிதிகள்
- அரச கண்காணிப்புகள்
- திறமையான நிர்வாகப் பிரிவுகள்
- காப்புறுதிப் பணத்தினை வளர்த்து எடுக்கும் முதலீட்டு நிபுணர்கள்
- மோசடிகளைத் துப்புத் துலக்கும் நிபுணர்கள் குழு
- தவறு நடந்தால் நியாயம் வழங்கும் நியாயமன்றங்கள்
- கல்வித் தகைமைகள், பயிற்சிகளுடன் அரச அனுமதிப்பத்திரம் பெற்று விற்பனைத் தொழில் செய்யும் முகவர் குழு

போன்றவை சுற்றி நின்று செயல்பாட்டைக் கவனிக்கின்றன.

ஆனால், பண்டைய கால காப்புறுதி முறை என்பது மேற்குறிப்பிடப்பட்ட எதுவிதமான நவீன கால விடயங்களும் அற்ற, ஒரு

மாறுபட்ட வடிவில் மக்களின் கூட்டு வாழ்வில் நாடுகளுக்கு நாடு, அவற்றின் சமூக அமைப்புகளுக்கு ஏற்ற மாதிரி, மாறுபட்ட வடிவில் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தன. அவ்வாறான மரபுரீதியான காப்புறுதி முறைகளை தாயக மண்ணிலிருந்து பின்வரும் உதாரணங்களுடன் குறிப்பிடலாம்:

1. தொழில் செய்யும் இடங்களில் ஊழியர் ஒருவர் மரணமடைந்து - விட்டால், தொழில் செய்யும் சகலரும் தங்கள் ஊதியத்தில் ஒரு சிறு தொகையினைக் கூட்டாக ஒன்றுதிரட்டி, அவரின் குடும்பத்தவர்களுக்கு வழங்கி வருவது ஒரு மரபுமுறை சார்ந்த விடயமாகும். இந்த மரபுமுறை என்பது பண்டைய தமிழர்கள் வாழ்வில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் உள்ள கம்பனிகளிலும், தொழிற்சாலைகளிலும் இன்றும் நடைபெற்று வரும் ஒரு வழமை என்பது பலரும் அனுபவவாயிலாக அறிந்திருப்போம். இது ஆயுள் காப்புறுதியின் மரபு முறை பேணப்பட்டு வருவதற்கு ஒத்த விடயமாகும்.

2. பண்டைய கால வாழ்வு முறை என்பது சந்ததி சந்ததியாக ஒவ்வொரு கிராமங்களிலும், பிரதேசங்களிலும் கூட்டாகவும், தொகுதி தொகுதியாகவும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருவது ஆகும். அவர்களில் எவராவது ஒருவர் நோய்வாய்பட்டவரைப் பார்க்கப் போகும் போது அவரின் உடல் தேறுவதற்குரிய ஏதாவது ஓர் ஊட்டச்சத்து உணவு மற்றும் பழம் என ஏதாவது ஒன்றினை வாங்கிச் சென்று தங்களின் அன்பு, ஆறுதல், அனுசரணைகளை வழங்குவது அல்லது ஒரு சிறு பணத்தொ - கையினைக் கையில் வழங்கி அவர்களின் நிவாரணத்திற்கு கைகொடுப்பது ஒரு மரபு முறையாகும். இது ஆபத்தான நோய்களுக்கான காப்புறுதித் திட்டம் (Critical Illness Insurance) போன்ற ஒரு பாரம்பரிய முறையாகும்.

3. இல்லறம் புகும் திருமணத் தம்பதிகளின் வாழ்வுக்கு நன்கொடை-களையும் அன்பளிப்புகளையும் வழங்குவதும் ஒரு பாரம்பரிய காப்புறுதி முறையாகும்.

4. புது வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்பவருக்கு உருவாகும் செலவுகளுக்கு ஈடாக அழைக்கப்பட்டவர்கள் யாவரும் சிறு சிறு நன்கொடை வழங்குவதும் ஒரு பாரம்பரிய காப்புறுதி முறையாகும்.

5. சொத்துகளின், வாகனங்கள் ஆகியவற்றின் இழப்புகளில் துயருற்றவருக்கு பலரும் ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் கடன் வழங்கி, உதவி செய்வதும் ஒரு மரபுரீதியான காப்புறுதி போன்ற விடயமேயாகும்.

6. கூட்டாகச் சேர்ந்து சீட்டுப்பிடிப்பது என்ற மரபுரீதியான கோட்பாடு என்பதனைச் சகலரும் நேர்மையான முறையில் ஒத்தாசை வழங்கி கையாண்டு வந்தால், அது காப்புறுதிக் கம்பனிகளின் முதலீட்டுத்

திட்டங்களுக்கு (Segregated Funds Administrated by Insurance Companies) நிகரானதாகும்.

இலங்கையில் காப்புறுதியின் வரலாறு:

'இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்' (Sri Lanka Insurance Corporation Ltd.) என்னும் பெயரில் 1962ஆம் ஆண்டில் இலங்கை நாடாளுமன்றத்தில் முதன் முதலில் சட்டமூலமாக்கப்பட்டது. காப்புறுதிக்கு எனச் சட்டங்கள் உருவாக்கி, அங்கீகரிக்கப்பட்டு, நிர்வாகமயமாக்கப்பட்டன. இலங்கை அரசின் நிதி அமைச்சின் ஒரு பிரிவாக இயங்கி வந்த இக்கூட்டுத்தாபனம் 2012 தை மாதம் 50ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

1980ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினை (National Insurance Corporation) உருவாக்குவதற்கு வழிவகுத்ததுடன், 1988ஆம் ஆண்டு தனியார் கம்பனிகளுக்கும் காப்புறுதி நிறுவனங்களை நடத்தும் உரிமைகள் வழங்கப்பட்டன.

இந்தியாவில் காப்புறுதியின் வரலாறு:

- சுதந்திரத்திற்கு முற்பட்ட அந்நியர்களின் ஆட்சி காலம்.
- சுதந்திரத்திற்கு பிற்பட்ட (1947) இந்தியர்களின் காலம்.

இந்தியாவில் காப்புறுதியின் வரலாறு மேற்கூறிய இரு வகைக்குள் அடங்குகின்றன.

1818ஆம் ஆண்டு 'Oriental Life Insurance Company' என்னும் பெயரில் கல்கத்தா நகரில் இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேயர்களையும், இந்தியச் செல்வந்தர்களையும் இணைத்து முதலாவது காப்புறுதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 1870இல் பம்பாய் நகரில் 'Bombay Mutual Assurance' என்ற பெயரில் காப்புறுதிக் கம்பனி தாபனமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 1906ஆம் ஆண்டு 'National Insurance Company' தமக்கு என சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் உருவாக்கி, ஆபத்துகளுக்கு கைகொடுக்கும் ஒரு நிறுவனம் என்றாவறு தனியாரின் கூட்டுக் கம்பனியாக நடத்தி வந்தது.

சுதந்திரத்திற்கு பின்னர் 1956ஆம் ஆண்டு இந்தியாவின் சகல மாநிலங் - களிலும் இயங்கிய இந்தியர்களின் சுமார் 154 காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் 16 வெளிநாட்டவர்களின் சுமார் 75 தனியார் நிறுவனங்கள் யாவும் LIC - 'Life Insurance Corporation' என்னும் பெயரில் மருத்துவ ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனமாகவும், GIC - 'General Insuracne Corporation' என்னும் பெயரில் வாகன, வர்த்தக, வீடுகள், சொத்துக்களின்

காப்புறுதி ஒப்பந்தங்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனமாகவும் தேசிய மயமாக்கப்பட்டன. தேசியமயமாக்கப்பட்ட இவ்விரு நிறுவனங்களின் சட்ட ஒழுங்குகள் பற்றிய வரைபுகள் 1972ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

திருக்குறள் உட்பட சங்ககால இலக்கியங்களில் காப்புறுதி என்ற பதத்தினை நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும் மக்களின் பண்டையகால கூட்டு வாழ்வு முறைகள் மற்றும் அந்த வாழ்வு முறைகள் ஒருவருக்கொருவர் கைகொடுக்கும் உதவிகள் எப்படியெல்லாம் உறவுகளையும், வாழ்வுகளையும் மேலோங்க செய்தன என்பன அழகாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இக்கூட்டு வாழ்வு முறைகளுக்குள் அன்று காப்புறுதித்திட்டங்கள் என்பது எழுதாத ஒரு சட்டமாகவும், ஒரு மரபுரீதியான முறையாகவும் மறைமுகமாக பேணப்பட்டு வந்தன என்பதில் எதுவித சந்தேகமும் ஏற்படமாட்டாது.

கனடியத்தமிழர் வாழ்வில் காப்புறுதி

கனடியத்தமிழர் வாழ்வு பரந்துபட்டு ஒரு நிலையான வளர்ச்சிப் பாதையில் செல்லும்போது, அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் 'பாதுகாப்பு' என்பது ஒரு கவசமாக தேவைப்படுகிறது. விபத்துக்கள், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மக்களின் வாழ்வை கீழே விழவிடாது அவர்களை எப்படி வெவ்வேறு வகையான காப்புறுதி உடன்படிக்கைகள் பாதுகாத்தது என்பதற்கு உதாரணமாக பல வருட தொழில்துறை வாழ்வில் நாங்கள் சந்தித்த அனுபவங்களை ஓர் எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடலாம்.

அவையாவன:

• வாழ வேண்டிய நடு வயதில் தம்பதிகளில் ஒருவருக்கு ஏற்பட்ட எதிர்பாராத உயிர் இழப்பினால் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பில் இருந்து மீள அவர்கள் கைவசம் வைத்திருந்த 'ஆயுள் காப்புறுதி' (Life Insurance) கைகொடுத்து உதவியது. ஆயுள் காப்புறுதியில் கிடைத்த பணம் ஒரு முதலீடாக இருந்து அவர்களின் குடும்பத்தின் பணச்சுமையை தாங்கிக்கொண்டு அவர்களை நிம்மதியாக வாழப்பண்ணியது.

• தொழிலில் கண்ணும் கருத்துமாக இருந்த ஒரு கடுமையான உழைப்பாளியின் வாழ்வில் குறுக்கிட்ட இருதய சத்திரசிகிச்சை (Heart Bypass Surgery) அவரது செயல்பாட்டின் பாதிப்பங்கினை முடமாக்கிவிட்டது. ஆரோக்கியமாக இருக்கும்போது அவர் ஒப்பந்தம் செய்து வைத்திருந்த 'கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் கிடைத்த (Critical Illness Insurance) பெரும் தொகை பணத்தினை வழங்கி அவரை சற்று ஓய்வுபெற வைத்தது.

• மாதா மாதம் நல்ல சம்பளத்தில் பணி புரிந்துவரும் ஒரு பல் வைத்தியர் எதிர்பாராது இடறி நிலத்தில் விழுந்தபோது மணிக்கட்டில் (Hand Wrist) ஏற்பட்ட முறிவு பல மாதங்களுக்கு தொழில் செய்ய முடியாத நிலை-மையை உருவாக்கியது. இதனால் மாத வருமான இழப்பு ஏற்பட்டபோது அதே மாதச்சம்பளத்தினை அந்தப் பாதிப்பிலிருந்து மீளும்வரை அவருக்கு ஏற்கனவே செய்து வைத்திருந்த 'உடல் இயலாமைக்கான காப்புறுதி திட்டம்' (Disability Insurance) கை கொடுத்து உதவியது.

• ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு உறவினரின் கொண்டாட்டம் ஒன்றுக்கு பயணம் செய்தபோது ஏற்கனவே சற்று நோய் வாய்ப்பட்டிருந்த ஒருவர் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டார். அவரை உடல் நிலைமை நிரந்தமாக வைத்தியசாலையில் படுக்க வைத்துவிட்டது. ஆனால் ஐரோப்பிய நாட்டுக்கு புறப்பட முன்பு கனடாவில் அவர் கைச்சாத்திட்டு எடுத்துச்சென்ற 'பிரயாணிகள் காப்புறுதி ஒப்பந்தம்' (Travel Insurance) அந்த நாட்டின் எல்லா வைத்திய செலவுகளுக்கும் ஈடுகொடுத்து அவரை பாதுகாத்து விட்டது.

• ஒரு குடியிருப்பு மனையின் சமையலறையிலிருந்து எழுந்த தீ அவரது வீடு, வீட்டுக்குள்ளிருந்த உடைமைகள் யாவற்றினையும் அழித்ததோடு மட்டுமல்லாது தொடர்ந்திருந்த அயலாரின் வீட்டின் ஒரு பகுதியினையும் பாதித்துவிட்டது. சிலமணி நேரங்கள் கலங்கினாலும் அவர்களின் 'வீட்டுக் காப்புறுதி' (Home Insurance) அவர்களை அமைதி நிலைமைக்கு கொண்டுவந்து விட்டது.

1. எதிர்பாராமல் ஏற்பட்ட நிர்க்கதியான இந்த நிலைமையில் தற்காலிக-மாக ஹொட்டல் ஒன்றில் தங்க ஏற்பாடு செய்து அவர்களின் அவசர செலவுக்கும் காப்புறுதி நிறுவனம் பணம் வழங்கியது.
2. தொடர்ந்து பூரணமாக வீடு நிர்மாணித்து கொடுக்கும்வரை வாடகை குடியிருப்பில் சில மாதங்கள் வாழ்வதற்கு காப்புறுதி நிறுவனம் மாதாமாதம் வாடகைப் பணம் வழங்கி உதவியது.
3. எரியுண்ட உடமைகளின் பெறுமதிக்கு நட்டஈடு வழங்கியது.
4. அயல் வீட்டுக்காரரின் பாதிப்புகளுக்கும் ஒரு தீர்வு வழங்கி உதவியது.
5. இறுதியில் அதே இடத்தில் புதிய வீடு ஏற்கனவே இருந்ததுபோல் கட்டிக் கொடுக்கப்பட்டது.

சில இடங்களில் வீட்டினை உருவாக்க பணம் வழங்கியது. சில இடங்களில் காப்புறுதி நிறுவனமே அவ்விடத்தின் பெறுமதிக்கேத்தினைக் கொடுத்து இடத்தினை வாங்கும். அவர்களுக்கு அந்தக் காப்புறுதி இல்லாவிட்டால் அந்த நிகழ்வு சொல்லணா துயரமாக இருந்திருக்கும்.

• சிறிய, பாரிய வாகன விபத்துகளை பலரும் எதிர்கொண்ட அனுபவங்கள் கனடாத் தமிழர் வாழ்வில் பலருக்கும் இருக்கும். அவ்வாறு பாதிப்பினை எதிர்கொண்டவருக்கு அவரது 'வாகன காப்புறுதி' (Auto Insurance) கை கொடுக்கின்றது. இது வாகனம் செலுத்தும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டிய காப்புறுதி ஒப்பந்தம் ஆகும்.

இந்த விபத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பின்வரும் வழிகளில் வாகன காப்புறுதி நட்டஈடு வழங் கின்றது.

1. முற்றாக சேதமடைந்த வாகனத்தின் பெறுமதிக்கு நட்டஈடு.
2. தற்காலிகமாக அன்றாட வாழ்வில் இயங்க முடியாத நிலையில் இருப்பவர்களுக்குரிய மருத்துவ செலவுகள் உட்பட மேலும் பல சிறு தொகைகள் வெவ்வேறு பிரிவுகளில் நட்டஈடு.
3. உடல் காயம் என்பது நிரந்தரமாக வாழ்வினை முடமாக்கினால் அதற்குரிய மருத்துவ செலவுகளுக்கான நட்டஈடு.
4. நிரந்தர வருமான இழப்பீற்கு நட்டஈடு.
5. விபத்தில் மூன்றாம் நபரின் பாதிப்புக்கு அவர்கள் காரணமாகவிருந்து அவர்களுக்கு எதிராக பல மில்லியன் டொலர் நட்டஈடு கோரி வழக்கு தொடர்ந்திருந்தால் அவை யாவற்றினையும் காப்புறுதி கம்பனியே பொறுப்பு ஏற்கிறது.

விபத்துக்கு உள்ளானவர் தமக்கு ஏற்பட்ட பாதிப்பிலும் ஒருவகை நிம்மதியினை இதன்மூலம் அடைகிறார்.

• தமிழரின் வர்த்தக நிலையம் ஒன்றின் கண்ணாடிகள் ஒரு நடுஇரவில் சில விஷமிகளினால் உடைத்து நொறுக்கப்பட்டு திருட்டுகளும் நடந்தது. அங்கு வர்த்தகம் சில நாட்கள் தடைபட்டு விட்டது. மறுநாள் காப்புறுதி கம்பனிக்கு தகவல் கொடுத்ததும் 'காப்புறுதி மதிப்பீட்டாளர்' (Insurance Adjuster) நேரடியாக வந்து இழப்பீடுகளை மதிப்பீடு செய்து வழங்கப்போகும் நட்டஈட்டு தொகையினையும் அவருக்கு அறிவித்து விட்டார். மேலதிகமாக அவரது 'வர்த்தக பாதுகாப்பு காப்புறுதி' (Business Protection Insurance) மற்றும் 'தடங்கிய வர்த்தக வருமானத்திற்கு மேலதி இழப்பீடு' (Business Interuption Replacemment Income Benefit) காப்புறுதிகள் அவருக்கு இழப்பீடு வழங்கி வர்த்தகத்தினை அமிழ்ந்து போகவிடாது பாதுகாத்தன.

• தொழில்துறை சார்ந்தோரின் (Professionals) பணியில் வாடிக்கையாளர் எவராவது பாதிப்படைந்து அங்கு தொழில்துறை சார்ந்தவருக்கு எதிராக நீதித்துறையின் தீர்ப்பு பெருந்தொகை பணமாக இருந்தால் 'தொழில் துறை சார்ந்தோரின் பொறுப்பு காப்புறுதி' (Professional Liability insurance)

பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈட்டினை வழங்கி தொழில் துறை சார்ந்தோரின் இழப்பை பாதுகாத்து விடுகிறது.

'காப்புறுதி' என்பது எந்த வகையிலும் ஏமாற்றமில்லாத ஓர் உடன்படிக்கையா?

'காப்புறுதி' உடன்படிக்கை என்பது ஏமாற்றமில்லாததா என்பதற்கு எடுத்துக்காட்டாக காப்புறுதியின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்று பின்வருமாறு ஆங்கிலத்தில் வரைவிலக்கணமாக குறிப்பிடப்படுகின்றது.

'Follow up utmost good faith in agreement. No disappointment'

அதாவது உடன்படிக்கை ஒன்றின் தகவல்களை வழங்கி ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது நேர்மை, உண்மை, விசுவாசம் என்ற நிலைமைக்கு அப்பால் ஒரு படிமேல் சென்று அதி உச்ச நிலையில் எதுவிதமான ஒழிவு மறைவுமின்றி உண்மையான தகவல்களை வழங்கி கைச்சாத்திடுங்கள். காப்பறுதி என்றும் கைகொடுத்து பாதுகாக்க தவறாது என்பதே இதன் கோட்பாடு ஆகும். சிலநேரங்களில் இந்த அடிப்படை கோட்பாட்டினை உதாசீனம் செய்து விட்டால் அது ஒப்பந்தம் செய்தவருக்கு நட்டஈடு கோரும் போது ஏமாற்றமாக அமைந்துவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு.

இதேபோல் மேலும் சிலசந்தர்ப்பங்களில் காப்புறுதி என்ற பாதுகாப்புக்-கவசம் வாடிக்கையாளனை பாதுகாக்கத்தவறியது. மாத அல்லது வருட கட்டுப்பணத்தினை செலுத்தவேண்டிய காலத்தில் செலுத்தத் தவறும் போதும் ஏற்கனவே சட்ட ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டவாறு காப்புறுதி இரத்தாகிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. காப்புறுதி ஒப்பந்தம் சட்டரீதியாக இரத்தாகி மறுநாள் பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் நட்டஈடுகள் கிடைக்காது.

ஆயுள் காப்புறுதியில் மட்டும் ஒருமாத காலம் பணம் செலுத்த தவறினாலும் அந்த ஒப்பந்தம் வலிமையாக இருந்து அந்த ஒருமாத காலம் முடிவடைந்ததும் ஓர் அறிவுப்புடன் ஒப்பந்தம் இரத்தாகி விடும்.

ஒவ்வொரு காப்புறுதி ஒப்பந்தமும் சட்டங்கள் ஒழுங்கு விதிகளினால் உருவாக்கப்பட்டு உடன்படிக்கைகளில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். இவையாவும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு என்றும் கண்காணிக்-கப்பட்டு கொண்டிருக்கும். ஒவ்வொரு படிமுறையிலும் எந்தவகையான ஆபத்துகளுக்கு எவ்வளவு தொகைவரை பாதுகாப்பு உண்டு என்பது தெளிவான வரைவிலக்கணமாக குறிப்பிடப்பட்டிருக்கும். எந்தெந்த நிலையில் நட்டஈடு கிடைக்கமாட்டாது என்பதும் (Exclusions) தெளிவுபடுத்தப் -பட்டிருக்கும். வரைவிலக்கணத்தினையும் சட்ட ஒழுங்கு விதிகளையும் புரிந்து கொள்ளாத நிலைமை காப்புறுதி பாதுகாக்கத் தவறியது என்ற

எண்ணக்கருவினையும் உருவாக்கிவிடும். காப்புறுதி ஒப்பந்தங்களை மக்கள் மத்தியில் சந்தைப்படுத்தும் முகவர்கள் (Insurance Agents & Brokers) மற்றும் காப்புறுதி கணிப்பீடுகள், கோட்பாடுகளை உருவாக்குபவர்கள் (Insurance Acturist), காப்புறுதி சட்டங்களை வரைவிலக்கணப்படுத்துபவர்கள் (Insurance Legitimate Group) யாவரும் அந்தந்த துறை சார்ந்த கல்வியில் தேர்ச்சி பெற்று, தொழில் அனுமதிப் பத்திரம் (Professional Licence) வழங்கப்பட்டு தொழிலில் அரசாங்கத்தினால் கண்காணிக்கப்பட்டு கொண்டிருப்பார்கள்.

எதிர்பாராதவிதமாக காப்புறுதி கம்பனிகள் மற்றும் முகவர்களின் தவறுகள் ஏதாவது சட்டத்தின் முன்பு நிரூபிக்கப்படும்போது நீதிமன்றங்கள் நியாயம் வழங்கும். காப்புறுதி செய்த வாடிக்கையாளரை காப்புறுதி கம்பனி நட்டம் ஏற்படும் நிலைமைக்கு கொண்டு சென்றுள்ளதா என்பதனை நிதி அமைச்சு என்றும் கண்காணித்து கொண்டேயிருக்கும். அவ்வாறு பாதகமான நிலைமைக்கு காப்புறுதி நிறுவனம் செல்லும் நிலை வந்தால் அரசினால் காப்புறுதி செய்த வாடிக்கையாளர் பாதிக்காத வண்ணம் இன்னொரு கம்பனிக்கு ஒப்பந்தங்கள் மாற்றப்படும். கம்பனி எதிர்பாராது வங்குரோத்து நிலைமைக்கு சென்றால் அந்த நிலைமையை பாதுகாப்பதற்கும் ஒரு நிறுவனம் தயார் நிலையில் இருக்கும்.

காப்புறுதி கம்பனிகளோடு ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால், அதனால் ஏற்படும் முறைப்பாட்டினை எடுத்துச் சென்று தீர்வு காண்பதற்கு ஒரு நியாய மன்றம் ஒவ்வொரு கம்பனிகளுக்குள்ளும் இயங்குகிறது. அங்கும் தீர்வு கிடைக்காவிட்டால் மேல் முறையீடு செய்ய அரச நியாய மன்றம் ஒன்று எல்லா கம்பனிகளுக்கும் பொதுவாக செயல்பட்டு வருகின்றது. இவை யாவற்றுக்கும் மேலால் நீதிமன்றம் வரை நியாயம் கேட்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. முன்னேறி வரும் கனடா தமிழரின் வாழ்வில் காப்புறுதி என்பது விபத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. அக்காப்புறுதி கனடாவின் காப்புறுதி சட்டங்களினால் பாதுகாக்கப்படுகிறது. அதில் ஏதும் தவறு ஏற்படாமல் இருக்க நீதிதுறையும் கண்காணிக்கிறது.



சிவ பஞ்சலிங்கம்

சென்னை பல்கலைக்கழக பட்டதாரியான இவர் காப்புறுதி முகவராக பணிபுரிந்து வருகிறார். ஒன்ராறியோ மாகாண போக்குவரத்து அமைச்சின் போதனாசிரியர் அனுமதிப்பத்திரம் பெற்று சாரதிப்பயிற்றுனராக பணியாற்றுகிறார். 'விளம்பரம்' பத்திரிகையின் நீண்டகால எடுத்தாளர்.

தமிழ் இலக்கியத் தோட்டம்

- அ. முத்துலிங்கம்

சில வருடங்களுக்கு முன்னர் ரொறொன்ரோவில் கில்லர் விருது விழாவுக்கு போயிருந்தேன். கனடாவில் மிகவும் மதிக்கப்படும் இலக்கிய விருது அது. ஆங்கிலத்தில் எழுதப்படும் அதிசிறந்த புனைவுக்கு வருடா-வருடம் கனடாவில் வழங்கப்படுவது. விருது பெறும் எழுத்தாளருக்கு பணமுடிப்பாக 100,000 டொலர் வழங்கப்படும். அந்த தடவை விருது பரிசீலனைக்காக 97 புத்தகங்கள் வந்திருந்தன. நடுவர் குழுவினர் இந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக வாசித்து முடித்து முடிவெடுத்ததாக நடுவர் குழு அங்கத்தவர் ஒருவர் சொன்னார். இரண்டாவது சுற்றில் பட்டியல் 5 நூல்களாகக் குறுக்கப்பட்டது. நீண்ட விவாதங்களுக்கு பின்னர் ஒருவர் பரிசுக்கு தகுதியானவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மிக விமரிசையாகவும் ஒழுங்குடனும் நடந்த இந்த விழா என்னை பிரமிக்க வைத்தது. கனடாவில் இயங்கும் பல்வேறு பத்திரிகைகளும், ரேடியோக்களும், தொலைக்காட்சி நிறுவனங்களும் அங்கே குழுமியிருந்தன. பரிசு பெற்ற எழுத்தாளரை ஊடகங்கள் உடனுக்குடனே பேட்டி கண்டன. ஓர் எழுத்தாளருக்கு கொடுக்கப்பட்ட அந்த மரியாதை என் மனதிலே நின்றது. விருது எனக்கு கிடைத்ததுபோல மகிழ்ச்சியாகவும் இருந்தது. இதேபோல அமெரிக்காவில் மிகவும் மதிக்கப்படுவது புலிட்ஸர் விருது. அங்கேயும் வருடாவருடம் சிறந்த எழுத்தாளருக்கு விருது வழங்கப்படுகிறது. இங்கிலாந்தில் புக்கர் விருது இருக்கிறது. அதிசிறந்த பொதுநலவாய நாட்டு எழுத்தாளருக்கு இந்த விருது வருடம்தோறும் வழங்கப்படுகிறது. சல்மான் ருஷ்டி, அருந்ததி ராய், அரவிந் அடிகா, கிரான் தேசாய் போன்றவர்கள் இந்த விருதை பெற்றிருக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் ஆங்கில எழுத்-தாளர்களுக்கு இலக்கியத்துக்கு நோபல் பரிசு உண்டு. எந்த மொழியிலும் படைக்கலாம். ஆனால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால்தான் அது நோபல் பரிசுக்கு தகுதியாகும். ஓர்ஹான் பார்முக் துருக்கிய மொழியில்-தான் நாவல் எழுதினார். அது ஆங்கிலத்தில் My Name is Red என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் அவருக்கு நோபல் பரிசு கிடைத்து உலகப் புகழ் பெற்றார். இன்று தமிழர்கள் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள். இது தவிர புலம்பெயர்ந்த தமிழர்கள் 10 லட்சம் பேர் நியூசீலாந்தில் (தென் துருவம்) இருந்து நியூஃபவுண்ட்லாண்ட் (வட துருவம்) வரை பரவி வாழ்கிறார்கள்.

இந்தியாவில் வாழும் தமிழர்களுடைய இலக்கியப் படைப்புகளுக்கு இந்தியாவில் பரிசு கிடைக்கிறது. இலங்கை படைப்பாளிகளுக்கு இலங்கையில் பரிசு உண்டு. சிங்கப்பூர், மலேசிய தமிழ் படைப்பாளிகளுக்கு அந்தந்த நாடுகளில் பரிசுகள் கிடைக்கின்றன. ஆனால் உலகம் முழுக்க பரந்திருக்கும் தமிழர்களின் படைப்புகளை ஊக்குவிப்பதற்கு பொதுவான பரிசு ஒன்றில்லை. இந்தக் குறையை நிவர்த்திசெய்ய நிறுவப்பட்டதுதான் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம். 2001ம் ஆண்டு தொடங்கப்பட்ட அமைப்பு 2010ம் ஆண்டு அறக்கட்டளையாக மாறியது. கனடாவில் தமிழ் இலக்கியத்துக்காக அறக்கட்டளை அங்கீகாரம் பெற்றது தமிழ் இலக்கியத் தோட்டம் ஒன்றுதான்.

கல்வியாளர்கள் எழுத்தாளர்கள் வாசகர்கள் கொடையாளிகளின் ஆதரவுடன் உலக அளவில் தமிழை வளர்ப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இது. அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ் ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசு வழங்குவது. நூலகங்களுக்கு இலவச நூல்கள் அளிப்பது போன்ற சேவைகள் இதனுடைய பொதுவான நோக்கம். இந்த அமைப்பின் முக்கியமான பணி வருடா வருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கிய சேவையாளர் ஒருவருக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கி கௌரவிப்பதாகும். இயல் விருது என்றழைக்கப்படும் இந்த விருது பாராட்டுக் கேடயமும் 2500 டொலர் பணப்பரிசும் கொண்டது.

இது தவிர புனைவு, அபுனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில்நுட்பம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்கும் சிறந்த மாணவருக்கு புலமைப்பரிசில் உண்டு. மறைந்து வரும் நாட்டுக்கூத்து போன்ற கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. வருடாவருடம் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்கிறது. 2013ம் வருடம் கனடாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான Toronto Star. இலக்கியத்தோட்டம் பற்றி இப்படி எழுதியது.

Think of it as the Booker Prize for Tamil literature. That's how Appadurai Muttulingam explains the Tamil Literary Garden Awards, which recognize the best and the brightest of the year's Tamil literature from around the world. The Tamil Literary Garden project is one of a kind, the only international organization devoted to the promotion of Tamil literature and studies, Muttulingam said. It is involved in lecture series and conferences, including the Festival of South Asian Letters and Artists taking place later this spring at the University of Toronto's Munk Centre.

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விவகாரங்கள் அனைத்தும் வெளிப் – படையான முறையிலே செயலாற்றப்படுகின்றன. இயல் விருதுக்கான விண்ணப்பங்களைக் கோரி விளம்பரங்கள் இணைய தளங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுகின்றன. இருபது பேர் கொண்ட உலக– ளாவிய ஆலோசகர்கள் குழுவிலிருந்து ஐந்து நடுவர்கள் வருடா வருடம் நடுவர்களாக பணியாற்றுகிறார்கள். நடுவர்கள் விண்ணப்பங்களில் பரிந்துரைக்கப்பட்ட நபர்களை பரிசீலனை செய்து தங்கள் முடிவுகளை வெளியிடுவார்கள். வழக்கமாக இயல்விருது அறிவிப்பு வருடக் கடைசியில் வெளியிடப்படும். இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிருந்து இதுவரை 15 பேருக்கு இயல் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடங்களில் இயல்விருது பெற்றவர்கள்.

2001 சுந்தர ராமசாமி – இந்தியா
2002 கே. கணேஷ் – இலங்கை
2003 வெங்கட் சாமிநாதன் – இந்தியா
2004 இ. பத்மநாப ஐயர் – இங்கிலாந்து
2005 ஜோர்ஜ் எல் ஹார்ட் – அமெரிக்கா
2006 ஏ. சி. தாசீசியஸ் – சுவிட்சர்லாந்து
2007 லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம் – இங்கிலாந்து
2008 அம்பை (சி.எஸ். லக்ஷ்மி) – இந்தியா
2009 கோவை ஞானி – இந்தியா
2009 ஐராவதம் மகாதேவன் – இந்தியா
2010 எஸ். பொன்னுத்துரை – அவுஸ்திரேலியா
2011 எஸ். ராமகிருஷ்ணன் – இந்தியா
2012 நாஞ்சில் நாடன் – இந்தியா
2013 சு. தியோடர் பாஸ்கரன் – இந்தியா
2013 டொமினிக் ஜீவா – இலங்கை

இலக்கியத் தோட்டத்திற்கு நிதி ஆதரவு உலகளாவிய தமிழ் ஆர்வலர்– களிடமிருந்து கிடைக்கிறது. அமெரிக்கா, கனடா, துபாய், இங்கிலாந்து, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளவர்கள் தொடர்ந்து ஆதரவு தருகிறார்கள். இதுதவிர கனடா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளி– லிருந்து தொடர்ந்து ஆதரவளித்துவரும் நிறுவனங்களும் உள்ளன.

Trillium Foundation
New Horizon
TD Bank
Cavinkare (India)
Toronto Arts Council
Royal Bank
Fidelity Investments

இயல் விருதுவைத் தவிர வேறு முக்கிய விருதுகளும் வருடா வருடம் வழங்கப்படுகின்றன. அந்தந்த வருடம் உலகளாவிய ரீதியில் வெளியான சிறந்த புனைவு, அபுனைவு, கவிதை நூல்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றுக்கு பரிசுகள் தரப்படுகின்றன. இரண்டு விருதுகள் மொழிபெயர்ப்பு பிரிவில் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒன்று தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு (அல்லது வேறு மொழிக்கு), மற்றது ஆங்கிலத்திலிருந்து (அல்லது வேறு மொழியிலிருந்து) தமிழுக்கு. சென்ற வருடம் இந்த பரிசை பெற்றவர் அமெரிக்காவில் வசிக்கும் வைதேகி ஹெர்பர்ட் என்னும் பெண்மணி. இப்போது இவர் சங்க இலக்கியத்தில் உள்ள அத்தனை நூல்களையும் (எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய 18 நூல்கள்) மொழிபெயர்த்து இருக்கிறார். இதுவரை தனியொருவரால் 18 நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது இதுவே முதல் தடவை. இவரை பாராட்டி தமிழ் இலக்கியத் தோட்டம் விருது வழங்கிய பின்னர் பல பத்திரிகைகளும் பி.பி.சி உட்பட பல உலக வானொலிகளும் இவரை பேட்டி கண்டன.

இது தவிர முக்கியமான ஒரு விருது கணிமை விருது. இது மறைந்த எழுத்தாளர் சுந்தர ராமசாமி அவர்கள் பெயரில் வழங்கப்படுகிறது. தமிழர்-கள் பலர் தமிழ் கணிமை முன்னேற்றத்துக்கு உலகம் முழுவதும் ஒருவித பயனும் எதிர்பார்க்காமல் தன்னார்வமாக உழைக்கிறார்கள். அவர்களை ஒருவரும் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் இல்லாவிட்டால் தமிழ் இத்தனை வேகமாக கணினியில் வளரமுடியாது. தமிழ் கணிமைக்காக உலகளாவிய விதத்தில் வழங்கப்படும் ஒரே விருது இதுதான்.

இளம் மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை தூண்டும் விதமாக ஒரு விருது சேர்க்கப்பட்டிருக்கிறது. மாணவர் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு வழங்கப்படும் இந்தப் பரிசு 1000 டொலர் பணமுடிச்சு கொண்டது. 2014ம் வருடம் இந்தப் பரிசு ஒரு ரூமேனியப் பெண்ணுக்கு கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு வார்த்தை தமிழில் பேசவோ எழுதவோ தெரியாது. ஆனால் தமிழ் ஆராய்ச்சியில் அவர் ஆர்வம் கொண்டிருந்தது நடுவர் குழுவினரை வியப்பில் ஆழ்த்தியது. ரூமேனியாவில் இருந்து இந்தப் பெண் ரொறொன்ரோ வந்து பரிசினைப் பெற்றுக்கொண்டார். இந்த பரிசினை தொடர்ந்து பல பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் வானொலிகளும் அவரை பேட்டிகண்டன.

தமிழ் இலக்கியத் தோட்டம் செய்த இன்னொரு முக்கியமான பணி சமீபத்தில் சமகால உலகத் தமிழ் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி-பெயர்த்து வெளியிட்டது. IN OUR TRANSLATED WORLD என்ற தலைப்பில் வெளியான இந்த நூல் உலகளாவிய பாராட்டை பெற்றது. கனடாவில்

உள்ள புகழ்பெற்ற TSAR பதிப்பகம் வெளியிட்ட தொகுப்பில் 78 தமிழ் கவிஞர்களின் கவிதைகள் தேர்வுசெய்யப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டன. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புலம்பெயர்ந்த நாட்டுக் கவிஞர்கள் பங்களிப்பில் வெளிவந்த நூல் இது. ம.லெ. தங்கப்பா, அனுஷ்யா ராமஸ்வாமி, மைதிலி தயாநிதி ஆகியோர் மொழிபெயர்த்தனர். காலம் சென்ற செல்வா கனகநாயகம் தொகுப்பாசிரியராக இருந்து சிறப்பாக நூலை வெளியிட்டார். இதன் அமோக வரவேற்பை பார்த்து ஆனந்த விகடன் வாரப்பத்திரிகை இதன் மறுபிரசுரத்தை இந்தியாவில் வெளியிடுகிறது.

இன்று 15 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் தமிழ் இலக்கியத் தோட்டம் இன்னும் நிறைய செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதற்கு புதிய அங்கத்தவர்களும் ஆர்வலர்களும் தேவை. உலக அறிஞர்-களின் ஆசியும் அறிவுரையும் தேவை. இளைய தலைமுறை தன்னார்வத் தொண்டர்கள் தேவை. இன்னும் சிறப்பாக செயலாற்ற நிதி தேவை. டெலிபோனை முதல் முதலாக கண்டுபிடித்தபோது அப்பொழுது மிகப் பிரபலமாயிருந்த அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன் சொன்னார். 'இந்தப் புதுக் கருவி மனிதனுக்கு தேவையா? மனிதனுடைய குரல் இப்போதே தூரத்துக்கு கேட்கிறதுதானே. அவர் நகைச்சுவையாக சொன்னாரோ தெரியாது. ஆனால் தமிழ் இலக்கியத் தோட்டம் திருப்தி கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இன்னும் அகலமாக தமிழ் ஆர்வத்தையும் இலக்கியத்தையும் பரப்ப வேண்டும். உலகை இணைத்து இன்னும் வேகமாக செயல்பட – வேண்டும். அதன் எதிர்கால வெற்றி உலகத்து தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் கையில் தங்கியிருக்கிறது.



அ. முத்துலிங்கம்

அறுபதுகளில் எழுத ஆரம்பித்து இன்றும் இவருடைய பணி தொடர்கிறது. சிறுகதை, கட்டுரை, நேர்காணல், நாடகம், விமர்சனம், நாவல் என எழுதிவருகிறார். இவர் 'ஜோதி விநாயகம்' பரிசு, லில்லி 'தேவசிகாமணிப்' பரிசு, தமிழ்நாடு அரசாங்க முதல் பரிசு, இந்திய ஸ்டேட் வங்கியின் முதல் பரிசு, இலங்கை அரசு 'சாகித்தியப்' பரிசு, கனடா 'தமிழர் தகவல்' நாற்பதாண்டு சாதனை விருது, திருப்பூர் தமிழ்ச்சங்கம் பரிசு, 'விகடன்' விருது 2012, SRM பல்கலைக் கழக படைப்பிலக்கிய விருது – 2013, கனடா, மார்க்கம் நகரசபை இலக்கியத் துறையில் வழங்கிய கலாசார விருது 2014 ஆகியவற்றைப் பெற்றிருக்கிறார்.

கனடாவில் தமிழ் நாடக வளர்ச்சி

- கலாநிதி வி. கந்தவனம்

நாடகத்தை முத்தமிழில் ஒன்றாக வைத்து முன்னோர் போற்றிவந்தனர். முந்திவந்த செவியைப் பிந்திவந்த கொம்பு மறைப்பது இயல்பு. அது போல முந்திவந்த கூத்தைப் பிந்திவந்த சினிமா இக்காலத்தில் மறைத்து, வளர்ந்து கொண்டே செல்கிறது. கனடாவிலும் அதே நிலைமைதான். இசைக்கலை மற்றும் பரதக்கலை அரங்கேறும் அளவுக்கு, நாடகங்கள் அரங்காடல் செய்யப்படுவதில்லை.

முத்தமிழில் நாடகக் கலை வளர்ச்சியில் ஆர்வம்காட்டுபவர்கள் கூழுக்குட் போட்ட பயறு போன்றே உள்ளனர். இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. நாடகம் பலவகையான ஆயத்தங்களையும், அதிக நேரத்தையும் வேண்டிநிற்கும் கலை என்பது வெளிப்படை. நாடகத்தால் பெருமளவு பொருட்செலவும் ஏற்படுகின்றது. செலவுக்கேற்ற வருவாயும் இல்லை. வருவாய் தராத எதிலுமே எவரும் ஈடுபடுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததொன்று.

கூடவே, வசதியான அரங்கம் இல்லாத இடங்களில் தற்கால நாடகம் ஏற மறுக்கின்றது. வசதியான அரங்கங்களுக்கும் அதிக பணம் வேண்டியிருக்கிறது.

நாடகர்

இத்தனைக்கும் மத்தியில் நாடகக் கலைஞர் சிலர் நாடகக் கலைக்கு நல்வாழ்வளிக்க முனைந்து நிற்பது, கோடை மழையில் நனைந்து தோயும் சுகத்தை ஆர்வலருக்குத் தருவதாக உள்ளது.

கனடாவில் தமிழ் நாடகக் கலையிற் பலர் ஈடுபட்டுவருகின்றனர். ப. விக்னேஸ்வரன், க.சு.பாலச்சந்திரன், காசிநாதர் சுப்புலட்சுமி, ஞானம் லம்பேட், துஷ்யந்தி ஞானப்பிரகாசம், நீரா சிற்சபைஈசன், பா.அ. ஜயகரன், இளையபாரதி, நா. சாந்திநாதன், செல்வன், புராந்தகன், சேகர் தம்பிராஜா, செழியன், சகாப்தன், கணபதி ரவீந்திரன், ரூபி யோகதாசன், சுரேஷ்ராஜா, பார்வதி கந்தசாமி, பொன்னையா விவேகானந்தன், திருமதி மாலா விவேகானந்தன், அமல்குமார் சின்னத்தம்பி, சகிலா தவராஜா, கந்தையா

இரத்தினசிங்கம், விமலேஸ்வரி விஸ்வலிங்கம், திருமதி மகா மகேஸ்வரன், கந்தையா இராஜன், சிவானந்தம் தினேஷ், சிவலிங்கம் கோபி, மீரா இராசையா, ராதிகா சிற்சபைஈசன், க. நவம், சொர்ணலிங்கம், அ. கேதீஸ்வரன், ஸ்ரீமுருகன், கலகலப்புத் தீசன், எஸ்.எம். தனபால், அருட்செல்வி கொட்வின், வை. திவ்வியராஜன், வி. கந்தவனம், சுமதி ரூபன், சின்னையா சிவநேசன், பி.ஜே. டிலிப்குமார், அன்ரன் பீலிக்ஸ், சித்திரா பீலிக்ஸ், எஸ். அச்சுதன்பிள்ளை, பி.எஸ். சுதாகர், நா. ஜெகநாதன், கோதை அமுதன், நா. முருகையா, சபேசன், எஸ்.தி. செந்தில்நாதன், உலகநாதன், இ. இரா–சரத்தினம், பொன். அருந்தவநாதன், திருமதி பூங்கொடி அருந்தவநாதன், மனுவல் யேசுதாசன், டாக்டர் கதிர் துரைசிங்கம், திருமதி விமலா மகேந்திரன், க. சிவதாசன், சிவாஜி மகேந்திரா, திருலோகநாதன், மா. உதயகுமார், கோன்வால் செல்வராஜா என இவர்கள் பட்டியல் பெரிது.

இந்நாடகர் தனியாகவும், அமைப்புரீதியாகவும் நாடக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதுவும் கவனிக்கத்தக்கது.

அமைப்புக்கள்

நாடகங்களை வளர்த்து வரும் அமைப்புக்கள் என்கின்றபோது தேடகம், மனவெளி கலையாற்றுக் குழு, நாளை நாடக அரங்கப் பட்டறை, உயிர்ப்பு நாடகப் பட்டறை, கருமையம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வானவில் நிருவாகக் குழு, சங்கமம் நாடக விழாக்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் சங்கங்கள், திருமறைக் கலா மன்றம், உலகத் தமிழரது கலை பண்பாட்டுக் கழகம், கனடிய தமிழ்க் கலைஞர் சங்கம், மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், மொன்றியல் தமிழர் ஒளி, மொன்றியல் குப்பிழான் விக்னேஸ்வரா கலைவாணி நாடக மன்றம், மொன்றியல் ஆத்மஜோதி கல்வி நிலையம், தாய் வீடு நாடகக் குழு போன்ற அமைப்புக்கள் நினைவுக்கு வருகின்றன.

இவைகளுள் முன்னோடியான அமைப்பு தமிழர் வகைதுறைவள நிலையம் (தேடகம்) என்ற அமைப்பாகும். அடுத்து மனவெளி அரங்காடற் குழுவினரும், நாளை நாடக அரங்கப் பட்டறை நாடகரும் கனடாவின் நாடக வளர்ச்சிக்கு காத்திரமான தொண்டாற்றியிருக்கின்றனர். (இவற்றின் அரங்காடல்களும் அரங்காடல்களின் வகைதுறைகளும், தாக்கங்களும், பிரச்சனைகளும் தனியாக நோக்கப்பட வேண்டியவை) எனினும், இவ் அமைப்புகள் எதுவும் தொழில் மட்டத்தில் நாடகங்களை நடத்தவில்லை என்பதும், இன்னமும் ஆர்வம் மற்றும் பொழுதுபோக்கு நிலையிலேயே செயற்பட்டு வருகின்றனவென்பதும் கவனிக்கப்பட வேண்டியன.

வானொலி நாடகங்கள்

கனடாவில் தமிழோசை, Radio Asia, CTBC, கீதவாணி, CMR, CTR போன்ற வானொலிகளில் தரமான நாடகங்கள் அவ்வப்போது ஒலிபரப்பப்படுவதுண்டு. அவற்றுள் 'தமிழோசையில்' ஒலிபரப்பான பிரபல நாடகர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களின் 'வாழ்ந்து பார்க்கலாம்', CMRஇல் ஒலிபரப்பான கலைஞர் க.சு. பாலச்சந்திரன் அவர்களின் 'மனமே மனமே' என்ற தொடர் நாடகம், CTBCஇல் ஒலிபரப்பான 'தாய் மண்' என்ற கலைஞர் இளையபாரதியின் நாடகம், கீதவாணியில் ஒலிபரப்பான கலைவேந்தன் கணபதி ரவீந்திரனின் 'ஓர் ஓவியம் காவியமாகிறது' என்ற தொடர் நாடகம் போன்றவை பிரபலியமானவை.

வானொலி நடிகர்களாக ப. விக்னேஸ்வரன், க.சு. பாலச்சந்திரன், இளையபாரதி, திலகா தில்லைநாதன், ஆர்.எஸ். சோதிநாதன் (அமரர்), அருட்செல்வி கொட்வின், எம். கலாதரன், சிவஞானச்செல்வம் சரவணபவ சர்மா, சங்கீதா நவநீதசிங்கம், சிவா சங்கரப்பிள்ளை, திருமதி பேரம்பலம், மயூரன் மோகன், பரமயோகன், திருமதி தனலட்சுமி சபாநடேசன், கணபதி ரவீந்திரன், ரூபி யோகதாசன், வி. கந்தவனம் போன்றவர்களைக் குறிப்பிடல் வேண்டும்.

தொலைக்காட்சி நாடகங்கள்

தொலைக்காட்சிகளிலும் நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. Tvi ஒளிபரப்புச் செய்த கலைவாணி இராஜகுமாரனின் 'நாற்சார் வீட்டினிலே' (இயக்கம் ப. விக்னேஸ்வரன்) மற்றும் கா.சு. பாலச்சந்தினின் 'நீதன் நேதன் நாதன்' என்பன பெயர் பெற்றவை.

கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் Tamil One தொலைக்காட்சி தொடங்கப்பட்ட நாள் முதலாக ஞாயிறு தோறும் 'இதுதான்டா இம்சை' என்ற நாடகத்தை கடந்த ஏழு ஆண்டுகளாக நடத்தி வருகின்றார். எனினும், இது தொடர் நாடகம் அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு உரிப்பொருளைக் கொண்ட தனி நாடகத் தன்மையது. ஒரு சிறப்பு என்னவென்றால், காட்சி முடிவில் நாடகத்தின் குறைநிறைகள் பற்றியும், அது ஏற்படுத்திய அல்லது ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைப் பற்றியும், நடிகரின் நடிப்புத் திறமைகள் பற்றியும் நேயர்களின் கருத்துப்பரிமாற்றம் நடைபெறுகிறது. இது நல்லதொரு முயற்சி.

நாடக வளர்ச்சி

இவர்களது முயற்சிகளால் கனடாவில் நாடகம் வளர்ந்துள்ளதா என்ற கேள்வி ஒன்று வாசகர் மத்தியில் எழுதல்கூடும். இந்தக் கேள்விக்கு கனடாவில் வசதிகள் உயர்வாக இருப்பினும், எமது பொருளாதாரம் உயர்வாக இல்லை என்னும் விடை ஒன்று உண்டு.

நாடகத்துக்குரிய அரங்கில் நாடகம் ஆடப்படுதல் வேண்டும் என்பதனை மனவெளிக் குழுவினர் நன்கு உணர்ந்ததாற் போலும் தமது அரங்காடல்-களை மார்க்கம் கலையரங்கில் நடத்தி வருகிறார்கள். கால் பந்து, மனைப் பந்து, குத்துச் சண்டை என்று விளையாட்டுகளுக்கேற்பத் தனித்தனி மைதானங்கள் அமைக்கப்படுவதைப் போல ஆடற்கலைகளுக்கென்றே அமைக்கப்பட்டது மார்க்கம் அரங்கு. செலவுதான்! அதனைச் சமாளிக்கவே நுழைவுச் சீட்டுகள்! வேறு பொருளாதர நோக்கங்கள் மனவெளியாருக்கோ, அங்கு அரங்காடலை நடத்தும் பிற நாடகக் குழுக்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை.

நாடகம் உன்னதமான ஒரு கலை. எல்லாக் கலையும் இதன்பாலுள. இதன்பால் இல்லாத வேறு எக்கலையும் இல்லையால், பொழுதுபோகாத-வர்க்கு இது நல்லதொரு பொழுதுபோக்காகும். கலைச்சுவைஞருக்கு இது பெரும் கன்னல் விருந்து. புதுமை காண விரும்புவார்க்கு இது ஒரு புதையற் பூங்காவாகும்

அதிகமான பொழுதுபோக்கு நாடகங்களைக் கலைவேந்தன் கணபதி ரவீந்திரனும், சுரேஷ் ராஜாவும் அரங்காடியிருக்கின்றனர். பொழுதுபோக் -குக்கு மட்டுமன்றி, நாடகம் கருத்துப் பரிமாற்றத்துக்கும் கவர்ச்சியான ஓர் ஊடகமாகவும் விளங்குகின்றது. சமுதாய விழுமியங்களை வளர்க்கவும், வரலாற்றுப் பெருமைகளை உணர்த்தவும், சீர்திருத்தக் கருத்துக்களை விதைக்கவும் நாடகம் பெரும் பங்காற்றியிருக்கிறது, ஆற்றியும் வருகின்றது.

கனடிய நாடகரும் தமது அரங்காடல்கள் மூலம் மனிதாபிமானத்தை-யும், மனித உரிமைகளையும், நீதி நியாயங்களையும் நிலைநாட்டும் வகையில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்கும், அரசியல் அட்டூழியங்களுக்கும் எதிராகக் குரல்கொடுத்து வருவது வரவேற்கத்தக்கது. தாயக விடுதலை உணர்வாளர்களால் 2000-2009க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் தமிழீழத் தாயகம் பற்றிய உணர்வலை-களை மக்களுக்கு ஊட்டுவதில் வெற்றிகண்டன என்பதில் ஐயமில்லை.

எனினும், வளர்ச்சி என்பது பொழுதுபோக்குப் பயன்பாட்டையும், சமுதாயப் பிரச்சினைகளுக்கும், அரசியல் அட்டுழியங்களுக்கும் குரல்கொடுப்பதையும் வைத்துக் கணிக்கப்படுவதல்ல. நாடகங்களின் தனித்துவத்தன்மைகளையும், அரங்கேற்றல் நுணுக்கமுறைகளையும் பெரும் – பான்மை மக்கள் அளிக்கும் ஆதரவையும் வைத்து மதிக்கப்படுகின்றது.

நிறைவாக, சில கருத்துக்களை முன்வைத்து இக்கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன்.

1. தழுவல் நாடகங்களை அல்லது மொழிபெயர்ப்பு நாடகங்களை அரங்காடல் செய்வதால், எமது கனடியத் தமிழ் நாடகம் வளர்ச்சியடைந்து விடாது. எமது நாடகங்களைப் பிற இனத்தவர் மொழிபெயர்த்து, அரங்காடி அவை பற்றி ஆய்வுகள் நடத்தும் சூழ்நிலையிலேயே எமது நாடக முயற்சிகளில் எமக்கு ஒரு மனநிறைவு வரும்.

2. இரசிகர் கூட்டம் இன்னும் பெருகுதல் வேண்டும். அமெரிக்காவில் இரசிகர் தொகையை வைத்தே ஒரு கலையின் அல்லது கலைஞரின் வளர்ச்சியையும், செல்வாக்கையும் மதிப்பீடு செய்வது வழக்கமாகிவிட்டது.

3. சிறுவர் நாடகத் துறை பற்றி எமது நாடகர் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. பல பாடசாலைகளில் நாடகம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. எத்தனை பெற்றோர் நாடகத்தைப் படிக்கும்படி தமது பிள்ளைகளை ஊக்குவிக்கின்றனர்?

4. பிரபல நாடகர் தாசீசியஸ் இங்குவந்த போது நாடகப் பட்டறை நடத்தியதும், ப. ஸ்ரீஸ்கந்தன் இலண்டனிலிருந்து மகேந்திராவின் குழுவை இங்கு அழைத்ததும், அவர்களின் நாடகங்களை அரங்கேற்றியதும், மகேந்திரா நாடகக் கருத்தரங்கு நடத்தியதுமெல்லாம் நாம் நடிப்புத் துறையில் பின்தங்கியிருக்கிறோமா என்ற கேள்வியை என்னுள்ளே எழுப்பியது உண்மை.



கவிஞர் வி. கந்தவனம், B.A., T.C.C., Dip.Ed., Dip.Eng., Dip.Drama and Theatre, Ph.D.

1988 முதல் கனடாவில் வாழ்ந்துவரும் கந்தவனம் மாஸ்ரர் கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைமைப் பதவியைப் பல ஆண்டுகள் சிறப்பித்தவர். ஆத்மஜோதி தியான நிலையத்தின் தலைவராகவும் இந்து சமயப் பேரவைத் தலைவராகவும் பல அமைப்புகளின் காப்பாளராகவும் இருந்து சமூக, சமய, தமிழ் இலக்கியப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவரது 12 Short Stories, Lasting Light ஆகிய ஆங்கில நூல்கள் கனேடிய பாடப்புத்தகசபையினால் சிரேஷ்ட வகுப்புகளுக்குத் துணை நூல்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கனடாவில் பரதக்கலையும் இசைக்கலையும்

- த. சிவபாலு



மனித வாழ்வில் இசை, நடனம் ஆகிய இரண்டும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இசைக்கலையும், பரதக்கலையும் தமிழர்களின் மிக முக்கியமான கலைகளாகக் கருதப்படுகின்றன. துன்பத்திலிருந்து விடுபடவும், இன்பத்தை அனுபவிக்கவும் இசை பயன்படுகின்றது. 'எதுகை மோனை ஓசைக்கிடையேயான ஒத்திசைவு சுவை நயம் தரும் கருத்துடையதாக ஒழுங்கமைத்தலே இசை' எனப்படுகின்றது. பொதுவாக ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட ஒலி வடிவமே இசை என்னும் கருத்தும் கொள்ளப்படுகின்றது. காலப்பிரமாணம், அமைப்பு, ஒலிய–ளவு, தொனி என்பனவற்றின் ஒன்றிணைவால் வருவது இசை. பல்வேறு வகையறாக்களை இசை தன்னகத்தே அடக்கியுள்ளது.

'ஆடலுடன் பாடலைக் கேட்பதிலேதான் சுகம் சுகம்' என்பதில் எத்துணை உண்மையுள்ளது. கண்களுக்கும், காதுகளுக்கும் குளிர்ச்சியை மட்டுமன்றி, மனோரம்மியத்தை இசையும், நடனங்களும் தரவல்லன. இவை இரண்டும் மனித வரலாற்றில் எப்போது, எங்கே ஆரம்பித்தன என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும், எல்லா இனத்தினதும் முக்கிய கலைகளாக நடனம், இசை என்பன அமைந்துள்ளன. காலம், இடம் என்பனவற்றிக்கேற்ப இக் கலைகளின் வடிவங்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், இவை இன, மத மொழி வேறுபாடுகளைக் கடந்து, மனித பண்பாட்டோடு பின்னிப்பிணைந்து உள்ளன என்பதே உண்மை.

கனடாவில் கால்பதித்து வாழ்ந்துவரும் எம்மவரின் பண்பாட்டோடு இரண்டறக்கலந்து கர்நாடக இசையும், பரதமும் வளர்ந்து வருவதற்கு அவை எமது பாரம்பரியக் கலைகள் என்பதோடு, அவற்றினைப் பயிற்றுவிப்பதற்கான போதியளவு ஆசிரியர்கள் புலம்பெயர்ந்து வந்து குடியேறியுள்ளமை முக்கிய காரணியாகக் கொள்ளலாம். அத்தோடு தங்கள் இதயங்களில் சுமந்து வந்த நிறைவேறாத ஆசைகளைத் தங்கள் பிள்ளைகளின் மூலம் காண முற்படும் பெற்றோரின் ஆதங்கமும், இங்கு இசை, நடனக் கலைகளில் காட்டப்படும் ஆர்வமும், அதற்காக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களும் காரணிகளாகின்றன.

நான் கனடாவில் குடியேறிய காலந்தொட்டு (1995) எம்மவர்களின் மேடை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தும், அவை பற்றி எழுதியும் வந்துள்ளேன். எழுதுவதற்காக நான் அரங்கேற்றங்கள், ஆண்டு விழாக்கள் மற்றும் ஊர்க் கொண்டாட்டங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு சென்று கூர்மையாக அவதானித்துள்ளதோடு, கலைஞர்களோடு உரையாடியும் வந்ததன் பயனாகப் பெற்றுள்ள அனுபவம் எனக்கு இக்கட்டுரையை எழுத அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே, எனக்கு கனடிய கலை நிகழ்ச்சிகள் பற்றி எழுதும்படி 'விளம்பரம்' பத்திரிகையின் ஆசிரியர் குழு கேட்டுக்கொண்டதற்கு நியாயம் உள்ளது என்பதனை உணர்ந்துகொண்டேன்.

கர்நாடக இசை தென்னிந்தியாவின் பாரம்பரிய இசைமரபு சார்ந்தது. இது தொன்மைமிக்க இசை வரலாற்றைக் கொண்டுள்ளது. வாய்ப்பாட்டு, இசை, இராகம், தானம், பல்லவி என்னும் விஸ்தாரப் பரப்பினுள் பிறளாது இடம்பெறுகிறது. இராகங்கள் சுரங்களை அடிப்படையாகக் கொண்டவை. சுரங்கள் ஸ–ரி–ஹ–ம–ப–த–நி என்னும் ஏழு எழுத்துக்களால் குறிக்கப்படு – கின்றன. இந்தச் சுரங்களின் கால அளவு வேறுபாடுகளின் அடிப்படையில் இராகங்கள் பெறப்படுகின்றன. "ஏழு சுரங்களில் எத்தனை இராகம்" என்னும் பாடலில் குறிப்பிடப்பட்டது போன்று பல்வேறு இராகங்களின் தோற்றத்தின் அடிப்படை சுரங்களேயாகும். தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மூவரும் கர்நாடக இசையின் மும்மூர்த்தி – களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுக்கு முன்னர் முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்துப்பிள்ளை என்போர் தமிழிசையின் ஆதி மும்மூர்த்திகள் எனப்பட்டனர். இம்மூவரும் தமிழிசையை வளர்த்தனர். தமிழகத்தை ஆண்ட பல்லவர், நாயக்கர், மராட்டியர் என்போர் தெலுங்கு மொழிக்கும், வட மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்தமையால், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. தமிழ் இசைக்குப் பதிலாக தெலுங்கு, கன்னடம் போன்றவற்றோடு வட மொழியின் ஆதிக்கம் தமிழக இசையை ஆக்கிரமித்துக் கொண்டது. இக்காலகட்டத்தில் தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள்,

முத்துத்தாண்டவ தீட்சிதர் என்போர் கர்நாடக இசைப் பாடல்களை இயற்றிப் பாடி அவற்றை வளர்த்துவந்தனர்.

கனடாவில் கர்நாடக இசை

இசை மரபு தமிழகத்திற்கு மட்டுமன்றி, தமிழ் மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச்செல்லப்படுவதும், அவற்றைப் பிள்ளைகள் கற்றுக்கொள்வதும் இயல்பாகிவிட்டது. புலம்பெயர்ந்த நாட்டில் தங்கள் கலைகள் பண்பாடுகளைக் கைவிடாது, தொடர்ந்து தக்கவைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் பயனாக, எமது பாரம்பரியக் கலைகள் புலம்பெயர் நாடுகளில் வளர்ச்சிபெற்று வருகின்றன. கனடாவில் இன்று கர்நாடக இசை, திரை இசை, 'பொப்' இசை, 'றொக்' இசை என்பன முக்கியம் பெற்று வருகின்றன. பெரும்பாலான தமிழ்ச் சிறார்கள் கர்நாடக இசையையும், பரத நாட்டியத்தையும் கற்றுவருகின்றார்கள் என்பதிலும் பார்க்க, பெற்றோரின் அக்கறையின் காரணமாக கற்க வைக்கப்படுகின்றார்கள். தாமாக விரும்பிக் கற்பவர்களைவிட, பெற்றோரின் விருப்பதிற்காகக் கற்கத் தொடங்குபவர்களே அதிகம் என்பதனை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அதற்காக முயற்சிக்கும் பெற்றோரைப் பாராட்டவும் வேண்டும். நான் ஒரு பிள்ளையிடம் கர்நாடக இசை கற்பதில் உங்களுக்கு ஏன் ஆர்வம் வந்தது என்று கேட்ட போது, அவர் வெளியிட்ட வார்த்தைகள் என்னைத் தூக்கி வாரிப்போட்டன. "எனக்கு இசை கற்க விருப்பமில்லை. அம்மாவின் தொல்லை தாங்க முடியாமல் இசை கற்கப்போகின்றேன்" என்றார். இவ்விதமே பல பிள்ளைகள் சொல்வதைக் கேட்டுள்ளேன். நடனம் கற்கும் பிள்ளைகளிலும் சிலர் இந்த விடையைத்தான் வைத்திருக்கின்றார்கள்.

கலைகளில் ஒன்றான இசை ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக உள்ளது. இவற்றுள் இசைக் கலை மிகவும் மேன்மையானது. இசையினால் அன்பு, அமைதி, சமாதானம், சாந்தி, இன்பம், இயல்பு நிலை என்பனவற்றைத் தோற்றுவிக்கவும், வளர்க்கவும் முடியும். துன்பம் வந்துற்ற போது இசை மனதை ஆற்றும் அருமருந்தாக அமைந்துவிடுகின்றது. சோக கீதங்கள் துன்பமுற்றவர்களின் மனங்களில் உள்ள இரணங்களை ஆற்றும் வல்லமைவாய்ந்தவை. குரலை வளர்க்கும், இன்பக் கிளர்வுகளை ஏற்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. வாய்ப்பாடலோடு வாத்திய இசைகள் இணைவதால் இசை மேன்மையடைகின்றது, தேவகானமாக மாறுகின்றது என்பது முதுமொழி. காதல், சோகம், துன்பம், இன்பம், வீரம் என்பனவற்றை வெளிப்படுத்தவும், இறைவனை வணங்கவும் இசை பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், இசையை முழு மனதோடு கற்று அதனை வாழ்நாளில் பின்பற்றும் நிலைமை தமிழ் நாட்டில் இருப்பது போன்று இங்கும் தொடருமா என்பது கேள்விக்குறியே.

இன்றைய இசை ஆசிரியர்கள் தாம் கற்ற கர்நாடக இசைக் கீர்த்தனங் – களையும், பாடல்களையும் தமது மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, அவற்றையே அரங்கேற்றங்களிலும் பாடவைக்கின்றனர். தெலுங்கு மொழியில் அமைந்துள்ள கீர்த்தனங்களைக் கருத்தறியாது பாடுவோரும், இசையைக் கேட்போரும் இராக சம்பிரதாய, ஆவர்த்தன, அலங்காரங்களை மட்டும் கேட்டு ரசிக்கின்றார்களே ஒழிய, அவற்றின் பொருள் என்ன என்பதனை விளங்காது இருப்பது வேதனைக்குரியதே. வாய்ப்பாட்டு இசை அரங்கேற்றங்களில் பாடப்படும் 14 அல்லது 15 பாடல்களில் ஒன்றோ அல்லது இரண்டோ பாடல்கள் பாரதி பாடல்களாக அல்லது பாபநாசம் சிவனின் பாடல்களாக அமைகின்றன. மற்றவை வெறும் இராகங்களாகவே மக்களிடம் சென்றடைகின்றன. ஏன் இந்தத் தமிழ் மொழி மீதான புறக்கணிப்பு எனப் பல பார்வையாளர்கள், இசை ரசிகர்கள் அங்கலாய்த்துக் கொண்டதனைக் செவிமடுத்துள்ளேன். எழுதியும் உள்ளேன். இருந்தும் இசை உலகம் திருந்துமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆண்டுதோறும் பஞ்சரத்தினக் கீர்தனங்களை ஸ்ரீமேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இசை ஆசிரியர்கள் இணைந்து தமது மாணவர்களோடு இசைத்து வந்தனர். இசை, நடன ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த உற்சவம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போன்ற நிலைமை ஏற்பட்டமையை அவதானிக்க முடிந்தது. ஆரம்பிக்கப்பட்ட முதல் இரு வருடங்களில் மண்டபம் போதாத அளவிற்கு இசை ஆசிரியர்களின் ஈடுபாடு காணப்பட்டது. பின்னர் யார் முன்னணியில் இருப்பது, யார் ஒழுங்கமைப்பது என்பன போன்ற கருத்து வேறுபாடுகளால் சில ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமல் பின்வாங்கிவிட்டனர். கடந்த ஆண்டோடு ஸ்ரீமேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு நிறுத்தப்பட்டு, அதனைக் கனடிய கலை வளர்ச்சிக்காக ஈடுபடும் அமைப்பான கனடா தமிழர் கலைப் பண்பாட்டு முன்னேற்றப் பேரவை பொறுப்பேற்றது. இது அந்த நிகழ்வை தக்கவைத்துக் – கொண்ட ஒரு முயற்சியாகவே கொள்ளமுடியும். இந்த ஒழுங்கமைப்பை தனிப்பட்ட ஓர் ஆசிரியரிடம் கையளிக்காது ஒரு அமைப்பாகச் செயற்படுவது பொருத்தமானதாக அமைந்துள்ளது எனலாம்.

இசைக் கருவிகள்

வாத்திய இசைகளில் தென்னகத்திலும், ஈழத்திலும் இசை வடிவங்களில் யாழ், வயலின், வீணை, மிருதங்கம், தபேலா, தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், பேரிகை, கடம், உடுக்கு, மத்தளம், தாளம் போன்ற வாத்தியங்கள் பாவிக்கப் – படுகின்றன. ஆனால், தென்னிந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் பழமை மாறாத் தனியிசையாக தவில், நாதஸ்வரம் என்பன உள்ளன. நாதஸ்வர இசை ஆலயங்களிலும், திருமண விழாக்களிலும் கேட்க

முடிந்தாலும், அதனைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளன. இசைக்கருவிகளில் மிருதங்கம் கற்றுக்கொள்ளும் மாணவர்களின் தொகை ஒப்பீட்டுரீதியாக மற்றைய இசைக்கருவிகளை விட அதிகமாகவே அமைந்துள்ளன. வீணை கணிசமான தொகைப் பிள்ளைகளால் கற்கப்படுகின்றது. வீணை அரங்கேற்றங்கள் மிகக் குறைந்தளவிலேயே இடம்பெறுகின்றன. கடந்த ஆண்டு சத்திய சாய் நிலையத்தில் 108 வீணைகளை ஒரே நேரத்தில் இசைக்கும் ஓர் இசை விழா திருமதி ஜெயந்தி ரட்ணேஸ்வரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆசிரியைகளும், மாணவிகளும் இணைந்து வாசித்த வீணை விழா மிகவும் ரம்மியமாக இருந்தது. தனித்துவமாக சில பிரபல இசை மேதைகள் எனக் கணிக்கக்கூடிய பேராசிரியர் திருச்சி சங்கரன், காரைக்குடி மணி, திருவாரூர் பக்தவசலம், பூவலூர் ஸ்ரீனிவாசன், நெய்வேலி வெங்கடேசன் போன்றோர் வருகைதந்து சில மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்ததோடு, தாங்களும் இணைந்து மிருதங்கத்தை வாசித்து, பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தினர். இத்தகைய நிகழ்வுகள் இசை பயிலும் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் ஒவ்வொரு இன மக்களும் தமக்கெனப் பாரம்பரிய இசைக்கருவிகளை வைத்திருந்தபோதிலும், உலகில் உள்ள நவீன கருவிகளையும், தொன்மையான சிறந்த கருவிகளையும் கலந்து பயன்படுத்தும் தன்மை வளர்ந்து வருவதனைக் காணலாம். தமிழர்களைப் பொறுத்தவரை மிருதங்கம், வயலின், வீணை ஆகியன முக்கியம் பெறுகின்றன. இவற்றைவிட, புல்லாங்குழல் இசையிலும் பயிற்சி பெறுகின்றார்கள். 'கீபோர்ட்', 'ட்றம்' என்பனவற்றிலும் எம்மவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள். இங்கு வந்து இவ்வித பயிற்சி எடுத்தவர்களில் ஒரு சில இளம் கலைஞர்கள் தொடர்ந்தும் இவ்விசைக்கருவிகளை மீட்பதோடு மட்டும் நின்றுவிடாது, அவற்றைக் கற்பித்தும் வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். மிருதங்கத்தைக் கற்றுக்கொண்ட பலர் அதனைக் கற்பிக்கும் ஆசியர்களாக உள்ளனர். ஆனால், கர்நாடக இசை, பரதநாட்டியம் என்பன இங்கு பயின்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரால் மட்டுமே கற்பிக்கப்பட்டு வருவது கவலைதருகின்றது.

கனடாவில் கால்பதித்த ஈழத்தவர்கள் மத்தியில் கர்நாடக இசை, பரதநாட்டியம் மற்றும் மிருதங்கம், வயலின், வீணை, வேய்ங்குழல் போன்ற இசைக் கருவிகளின் அரங்கேற்றங்களும் ஆண்டுதோறும் இடம்பெறுவதினைக் காணலாம். ஈழத்தில் தமக்குக் கிடைக்காத வாய்ப்பினைத் தமது பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் அவா பல பெற்றோர்களிடம் இருப்பதும், ஒருவரின் பிள்ளை பழகினால் அதனைப் பின்பற்றித் தனது பிள்ளையும் பழகவேண்டும் என்னும் நோக்கத்தின் உந்துதலும் இந்த கலைகளைப்

பிள்ளைகள் கற்றுக்கொள்ள வாய்ப்புக்களைக் கொடுப்பதாக உள்ளது. இதனை ஊக்கப்படுத்தும் வகையில் நடனம், வாய்ப்பாட்டு மற்றும் வாத்திய இசைகள் ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் விளம்பரங்களும், அரங்கேற்றங்களும் இடம்பெறுகின்றன. இதனால் கவரப்படும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நடனம் வருமா, நடனத்திற்கான உடலமைப்பு உள்ளதா, நடனமாட விருப்பமுள்ளதா என்று கூடப் பார்க்காது நடன வகுப்புக்களில் சேர்த்துப் பணத்தைச் செலவிடுகின்றனர். அவ்விதமே கர்நாடக இசை பயில்வதற்கு தங்கள் பிள்ளையின் சாரீரம் எப்படி என்று கூடப் பார்க்காது இசை வகுப்புக்களுக்கு அனுப்புகின்றனர். பொதுவாக, இந்தியா–விலும் சரி, ஈழத்திலும் சரி முன்னர் இருந்த நடன, இசை ஆசிரியர்கள் தங்களிடம் கற்கவரும் பிள்ளைகளை முதலில் பார்த்து அவர்கள் இக்கலை–களைக் கற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள்தான் என்பதனை அளவிட்டுத்தான் வகுப்பிற்கு அனுமதித்தார்கள். சாதாரணமாக எல்லோரையும் வகுப்பில் சேர்ப்பதே இல்லை.

ஈழத்தின் நடனக் கலைஞராக விளங்கிய ஏரம்பு சுப்பையா அவர்கள் தன்னிடம் வரும் மாணவர்களை நிற்கவைத்து, நடக்கவைத்துப் பார்த்து அவர்களின் உடலமைப்பு நடனத்திற்கு உகந்ததா என்பதனை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அனுமதி கொடுத்து வந்தார். அவரைப் போல கலைக்காக வாழ்ந்தவர்கள் பலர் உண்டு. அவர்களில் பலர் தனக்குப் பின்னர் தன் பிள்ளைகளையும் அந்தக் கலையைக் கற்றுத் தொடரவேண்டும் என ஆசை கொண்டவர்கள். சில ஆசிரியர்களிடம் நடனத்தைக் கற்கும் மாணவர்கள் மிகக் குறைவாக இருப்பதற்கு அவர்கள் கனடாவில் இடம்பெறும் மேடை நிகழ்ச்சி – களுக்குப் தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற்கு பின்நிற்பதும் ஒரு காரணம் என்பதனை அறிவேன். அவர்களிடம் கற்றவர்கள் வேறு ஆசிரியர்களிடம் மாறியும் சென்றுள்ளனர். அப்படிச் சென்றவர்களில் ஒரு தாய் என்னிடம், "அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பொது மேடைகளில் நடனம் ஆட விடுவதில்லை என்பதனால் எனது பிள்ளைகளை வேறு ஆசிரியரிடம் மாற்றிவிட்டேன்" என்று பெருமையாகச் சொன்னார்.

பரதநாட்டியம்

நடனக்கலை எப்போது தொடங்கியது என்பதற்கான 'திட்டவட்டமான வரையறை' இதுவரை அறுதியிட்டுக் கூறப்படவில்லை. மனிதன் தோன்றிய காலம் தொட்டே நடனக்கலை மக்களிடையே இடம் பெறத்தொடங்கிவிட்டது என்னும் முடிவுக்கு பல ஆய்வாளர்கள் வருகின்றனர். கலைக்களஞ்சியம் (VI – 1959) நடனக்கலை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "கலைகள்

யாவற்றிற்கும் அடிப்படையாகவும், ஆதியாகவும் உள்ளது ஆடற்கலை. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உடற்கூறுகள் வாயிலாக புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கமாகும். 'லயம்' என்பது இயற்கையின் இயல்பான விளைவு, இது கற்பனையால் ஆக்கப்பட்ட மகிழ்ச்சியின் தோற்றமாகும். மனிதன் உலகில் தோன்றிய காலம் முதல் தன் உளத்தின் இன்பத்தை நடனத்தால் வெளிப்படுத்தி வைத்திருப்பதை நாமறிவோம். "உலகில் நடனமாடாத இடமும் இல்லை, நடன மாடாத மக்களும் இல்லை" எனக் கலைக்களஞ்சியம் வரையறுக்கின்றது.

பிரபல நடனக் கலைஞர் பாலசரஸ்வதி அவர்கள் நடனக்கலை பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: "பாரம்பரிய இந்திய பரதநாட்டியம், அதன் அசைவு, இசையின் தோற்றப்பாட்டின் காட்சியமைப்பாகும்... ஆயிரமாயிரம் ஆண்டு – களுக்கு மேற்பட்ட நாட்டிய சாஸ்திர நடனம் இசையோடு இணைந்தது. ஒருவர் நடனத்திற்காக தன்னை அர்ப்பணிப்பவராக இருந்தால், அவர் சங்கீதத்திற்கும் சமத்துவமாக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும், இரண்டையும் ஒன்றாகப் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் இந்தியப் பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தைச் செய்முறைகள் மூலம் மெய்ப்பித்துக் காட்டும் போது நான் சிறப்பான ஒரு கருத்தைப் பார்வையாளர்– களுக்குக் காட்டுகின்றேன். அது நடன அசைவுகளின் உண்மைத்தன்மை இராகத்தின் வெளிப்பாட்டோடு அபிநயம், அதன் உட்கூறான கமகம், சுருதியின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிரவலைச் சமப்படுத்தல் அல்லது ஆக்குதல், நடனத்தால் வெளிக்கொண்டுவரப்படுகின்றது. அதே தன்மையிலேயே இராகமும், தாளமும் கலப்பது போன்றே இராகமும், அபிநயமும் நடன வெளிப்பாட்டில் இணைக்கப்பட வேண்டும் என்பதனை நாம் கருத்திற்கொள்கின்றோம்." இவ்வாறு குறிப்பிட்டுள்ள பரதத்தின் அடிப்படைத்தன்மைகளை பரதம் கற்றுக் கொள்ளும் பிள்ளைகளோ அன்றி அவர்களின் பெற்றோர்களோ அறிந்து உள்ளார்களா என்பது கருத்திற்கொள்ளற்பாலது. நடனத்தைப் பற்றிய அடிப்படை அறிவு அற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளையின் குரு சொல்வதனை அப்படியே கேட்டுக்கொண்டு அதன்படி பணத்தை அள்ளிக் கொட்டுகின்றனர். நடனத்தில் எந்த ஆசிரியர் சிறந்தவர், அவரின் தகமைகள் என்ன என்பத– னைக் கருத்திற்கொள்ளாது ஏதோ மேடை நிகழ்ச்சிகளில் தங்கள் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் ஆசிரியர்களிடம் போய்ச் சேர்த்துவிடுகின்றார்கள். அவர்கள் பரதத்தின் நுட்ப நுணுக்கங்களைக் கற்றுக்கொள்கின்றார்களா அல்லது முகபாவம், அங்க அசைவுகள், முத்திரைகள், பதம்பிடித்தல் போன்றவற்றில் முறையான நுட்பங்கள் கையாளப்படுகின்றனவா என்பனவற்றை அறியாமல் கும்பலில் கோவிந்தா போடும் நடன முறைகளையும் காணமுடிகின்றது.

'அவிநயம்' என்னும் தமிழ் நாட்டிய நூலை அவிநயர் எழுதியுள்ளார். 'அவிநயம்' தொல்காப்பியர் காலத்து நூலாகும் அது இன்று கிடைத்திலது. எனினும், அந் நூல் தமிழியல் பற்றியும், நடனக்கலை பற்றியும் எழுந்த நூல் என்பதில் ஐயமில்லை. கூத்தர், விறலியர், கோதியர், வைரியர், பாணர் போன்ற குழுவினர் நடனக்கலையில் வல்லவர்களாகச் சங்க காலத்தில் திகழ்ந்துள் – ளனர். சங்க காலத்தில் சதானர் என்பவரால் எழுதப்பட்ட 'கூத்தநூல்', அறிவாணரால் எழுதப்பட்ட 'பஞ்ச மரபு', மதிவாணரின் 'நாடகத் தமிழ்' என்பன அவிநயரின் 'நாட்டிய நன்நூலை' தொடர்ந்து எழுந்த நாட்டியம் பற்றிய தமிழ் நூல்களாகக் காணப்படுகின்றன.

"தொல்காப்பியர் காலத்தவரான அவிநயர், அகத்தியரின் சீடர்கள் பன்னிருவரில் ஒருவராக் கொள்ளப்படுகின்றார். ஆனால், பரதமுனிவரோ பல்லவர் ஆட்சிக் காலமான 4ஆம் அல்லது 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவருக்கு முன்னரே அவிநயர் நாட்டிய நன்நூலைப் படைத்துள்ளார். எனவே, அவிநயருக்குத்தான் கோயில் கட்டவேண்டும்" என முனைவர் ஆர். மதிவாணன் குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் நாட்டிய நன்னூல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே, நாட்டிய நன்னூல், நாட்டிய வகைகளையும், அதன் வரைவிலக்கணத்தையும், ஆடல் முறைகளையும் அதனோடு தொடர்பான இசைப்பாரம்பரியங்களையும் உள்ளடக்கி இருத்தல்வேண்டும். இந்நூல் பல பழந்தமிழ் நூல்கள் அழிந்தது போன்று அழிந்திருக்க வேண்டும். எனவே, பரத முனிதான் சதுர் பற்றி முதன் முதலாகத் தமிழருக்கு நாட்டிய சாத்திர நூலைப் படைத்தார் என்பதும், பரத முனிவரால் நாட்டிய சாத்திரம் எழுதப்பட்டது என்பதனால் 'சதுராட்டம்' என வழங்கப்பட்ட நடன மரபு 1920களின் பின்னர் 'பரதம்' என மாற்றம் செய்யப்பட்டது என்பதும் அறியக் கிடக்கின்றது. இது தொடர்பாக திராவிடப் பேரவையின் செயலாளர் என். நந்திவர்மன் தமிழ் அறிஞர்களுக்கு குறிப்பாக ஈழத்தைச் சேர்ந்த நடனம் கற்பிக்கும் தமிழ் நடன ஆசிரியர்களுக்கு "பரதநாட்டியம் என்பதற்குப் பதிலாக 'அவிநயம்' என மாற்றிக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் ஒன்றை 2007 மே 23ஆம் திகதிய 'The Voice of Global Tamils' விடுத்திருப்பது கருத்திற்கொள் – ளத்தக்கது. இந்திய நடனப் பாரம்பரியம் சிவனிடம் இருந்தே ஆரம்பித்தது என்பது பொதுவான கருத்தாகும். அம்பலத்தாடி, நடனசபாபதி, தில்லைக் – கூத்தன், விண்ணக்கூத்தன், சுடலையாடி எனப் பல பெயர்களினால் ஆடலரசனாகிய சிவபெருமான் நடராஜன் அழைக்கப்படுகின்றான்.

தமிழ்க் கற்கைகள் தொடர்பான இரண்டாவது அனைத்துலக மகாநாட்டில் பத்மா சுப்பிரமணியம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் அவர் இரட்டைக் கலைகளான நடனமும், சிற்பமும் தமிழர் மத்தியில் முக்கியம் பெற்றிருந்தமையைக் குறிப்பிடுகின்றார். ஆரியர்தான் நடனக் கலையை

எமக்குக் கற்றுத்தந்தவர்கள் அல்லது புகுத்தினார்கள் என்பதனை விட, எம்மிடம் இருந்து வளர்ச்சி பெற்றிருந்த கலைகளை அவர்கள் தமதாக்கிக் கொண்டனர் என்பதே பொருந்தும். இந்தியாவில் காணப்படும் நடன வகைகளில் மிக முக்கியமானவையாக பாரம்பரிய நடன வகைகளை எட்டாக வகைப்படுத்தி உள்ளனர். பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபாடு கொண்டதாக இந்த நடன அமைப்புக்கள் காணப்படுகின்றன. நடனம் தமிழ் நாட்டில் பரத நாட்டியம் எனவும், வட இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் கதக் நடனம் எனவும், ஆந்திராவில் குச்சுப்பிடி எனவும், வட கிழக்கிந்திய மாநிலத்தில் மணிப்புரி எனவும், ஒறிசாவில் ஒறிசி எனவும், சத்திரிய எனவும், கேரளாவில் கதகளி, மோகினி ஆட்டம் எனவும் வழங்கப்படுகிறது. இதில் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை அடியொற்றியதாக பரதமும், ஒடிசியும் காணப்படுகின்றன. அவை ஆகம முறைப்படியான நடனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. தர்பாரி ஆட்ட வகையைச் சேர்ந்ததாக குச்சுப்பிடி, மோகினி ஆட்டம் என்பன உள்ளன. மணிப்புரி மற்றும் சத்திரிய நடன வகைகள் கதக் நடனத்தைப் போன்றன. இந்த நடன வகைகள் பாரசீக (ஈரானிய) நடன வகையை ஒத்திருப்பதாக ஆய்வாளர்கள் ஒப்புநோக்கிக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்திய நடன வகைகளில் மிக முக்கியமானவையாகக் காணப்படுவது முத்திரைகள் அல்லது கை அசைவுகள். அபிநயங்கள் என்பன நடனமாடு–வோர் தமது உணர்வுகளை அல்லது தாம் சொல்ல வருகின்ற கதைகளை அல்லது கருத்துக்களை இந்த முத்திரைகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். முத்திரைகள் உள்ளடக்கியுள்ள பொருட்கள் நடனம் பயில்வோருக்கு அல்லது நடனத்தைப் பற்றி அறிந்துகொள்ள விளைந்து அவை பற்றிக் கற்றுக்கொள் – வோருக்கு இலகுவாக விளங்கிவிடுகின்றன. எனினும், பின்னணி இசையோடு கூடிய பாடல்கள் இந்த முத்திரைகளின் பொருளை தெளிவாகப் பார்வை – யாளர்களுக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

அரங்கேற்றம்

அரங்கேற்றம் என்பது பரதநாட்டிய அரங்கேற்றமாக இருந்தால் மிருதங்கம், வயலின் உட்பட கடம், கஞ்சிரா, புல்லாங்குழல், வீணை, முகர்சிங் (வாய்வீணை) போன்ற இசைக்கருவிகளில் ஒரு சிலவற்றின் ஒத்திசைவோடு இடம்பெறும். இங்கு அரங்கப்பிரவேசம் செய்யும் ஒரு பிள்ளை பரதநாட்டியத்தின் அடிப்படை களை நன்கு கற்று தனது குருவின் பூரண திருப்தியுடன் மேடையேறி அங்கீ–காரத்தைப் பெற்றுக்கொள்வதோடு, பார்வையாளர்களின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளும் ஒரு பெரு நிகழ்வாகவே கருதப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இன்று இந்த நிலையில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

சில அரங்கேற்றங்கள் அரைகுறையாகக் கற்றுக்கொண்ட பிள்ளைகளை மேடையேற்றுவதாகவும் அமைந்துவிடுவதனைக் காண முடிகின்றது. இவற்றைவிட 'ஜூனியர்' அரங்கேற்றம் என்னும் ஒரு நிலையும் பரவலாக இடம்பெறுவதினைக் காண முடிகின்றது. பெற்றோரின் சம்மதத்தோடு சில ஆசிரியர்கள் இந்த இளைய அரங்கேற்றத்தைச் செய்கின்றனர். ஏதோ படித்துவிட்டார்கள், அரங்கேற்றத்தைச் செய்து முடித்துவிட்டால் தங்கள் கடமை முடிந்துவிட்டது எனப் பெற்றோர் நினைக்கின்றார்கள். பிள்ளை முழுமையாகக் கற்றுக்கொண்டதா? என்பதனை அறியாத நிலைமை பல பெற்றோர்களிடமும் உண்டு.

அடிப்படையில் பரதநாட்டியம் என்றால் என்ன என்பது பற்றி ஆசிரியர்கள் சொல்வதனை அறிவற்றவர்கள் தேவவாக்காக ஏற்றுச் செயற்படுகின்றனர். அதனால் அரங்கேற்றத்திற்கான முழுத் தகைமையையும் அடைய முன்னரே அரங்கேற்றம் செய்யப்படுகின்றது. பிள்ளைகளின் மேற்படிப்பிற்கு தொடர்ந்து கலையைக் கற்பது இடைஞ்சலாக அமைந்துவிடும் என பல பெற்றோர்கள் எண்ணுவதனால், அரங்கேற்றத்தை வைத்து முடித்துவிட வேண்டும் என எண்ணுகின்றார்கள். பெற்றோர்கள் கேட்கின்றார்கள் என்பதற்காக சில ஆசிரியர்கள் அவசர அவசரமாக சில உருப்படிகளை மட்டும் கற்றுக் கொடுத்துவிட்டு பரதத்தின் நுணுக்கங்களையோ, அன்றி நுட்பங்களையோ சரிவரக் கற்றுக்கொடுக்காது அரங்கேற்றம் செய்ய முற்படுகின்றார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு அரங்கேற்றத்தின் இடைவேளையின் போது நான் மேடையின் பின்பக்கம் சென்றிருந்தேன். அரங்கேற்றம் செய்துகொண் – டிருக்கும் இரு மாணவிகளின் குருவோடு இன்னுமொரு நடன ஆசிரியர் கதைத்துக் கொண்டிருப்பதனை அவதானித்தேன். அந்த ஆசிரியை அவசரப்பட்டு அரங்கேற்றத்தை செய்துவிட்டதாகவும், நடனம் சரியாக இல்லை என்றும் அவர் குறைப்பட்டுக் கொண்டார். அது ஓர் அரங்கேற்றமாக அன்றி, ஒரு சமூக நிகழ்ச்சியாகவே காணப்பட்டது என்பது எனது கருத்து. ஒரு நடன உருப்படியில் சிவதாண்டவம் இடம்பெற்றது. நடனம் ஆடிய பிள்ளைகள் இருவருமே தொங்கித்தொங்கி, துள்ளிக் குதித்தார்கள். சிவதாண்டவம் என்பதற்கே அர்த்தம் தெரியாமல் இது கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு வியப்பை ஊட்டியது. பெற்றோரிடம் பலர் குறைபட்டுக்கொண்டனர். பாவம் அந்தப் பெற்றோருக்கு பணத்தைச் செலவு செய்தும், தங்கள் பிள்ளைகளுக்கு நடனம் நன்றாகக் கற்றுக்கொடுக்கப்படவில்லையே என்பது பின்னர்தான் தெரியவந்தது.

சில அரங்கேற்றங்களில் நடனத்திற்குரிய அனைத்து உருப்படிகளையும் செய்யாது சிலவற்றைக் குறைத்துவிடுவார்கள். வர்ணம் என்ற உருப்படி 40 அல்லது 35 நிமிடங்களையாவது எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதற்காக

வைத்து இழுத்தடிப்பதையும், அல்லது நேரத்தைக் குறைத்துவிடுவதனையும் நான் பல அரங்கேற்றங்களில் பார்த்துள்ளேன். வர்ணத்தில் வரும் சில நிகழ்வுகள் திரும்பத்திரும்ப இடம்பெறுவதனையும் அவதானிக்க முடிகின்றது. பிரபல பரதநாட்டிய விமர்சகர் சுப்புடு அவர்கள் ஒரு முறை அரங்கேற்றம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடும் போது வர்ணத்தில் இடம்பெற்ற ஒரு பாடல் வரியைக் குறிப்பிட்டிருந்தார். "தெருவில் வாறானே..." என்ற வரிகளுக்கான அபிநயம்... முகம் கழுவி, தலைவாரி, பொட்டிட்டு, பூச்சூடி, அலங்கரிக்கும் காட்சி... தெருவில் வந்தவன் அந்த இடத்தைக் கடந்து சென்றும் பல நேரங்கழிந்திருக்கும். ஏனென்றால் அவ்வளவு நேரம் இதனைப் போட்டு இழுத்-தடிக்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தமை நினைவுக்கு வருகின்றது. சிலவேளைகளில் பாடகரும் ஒரே வரியைப் பலமுறை பாடிப்பாடி பிள்ளையை மட்டுமன்றி, பார்வையாளர்களையும் சலிக்கவைக்கும் காட்சிகள் அரங்கேற்றங்-களில் இடம்பெறுகின்றன.

கர்நாடக இசை, பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல் ஆகிய அரங்கேற்றங்கள் பலவற்றிற்கு நான் சென்று பார்த்தது மட்டுமன்றி, அவை பற்றி நிறையவே பத்திரிகைகளில் எழுதியும் வந்துள்ளேன். அரங்கேற்-றத்தில் உள்ள குறை நிறைகள் பற்றி பொதுவாக எழுதுவது மரபு. அப்படி எழுதுவதில் உள்ள இடையூறுகள் பற்றி நினைக்கும் போது ஒருபுறம் மகிழ்ச்சியும் இன்னொரு புறம் வேதனையும் வரும். அரங்கேற்றம் சரியில்லாமல் இருந்தாலும் ஏதோ அதனைப் புகழ்ந்து உண்மையை மறைத்து எழுதவேண்டும் என்பது அரங்கேற்றம் செய்யும் மாணவர்களினதும், பெற்றோரினதும் விருப்பம் மட்டுமன்றி ஆசிரியர்களின் விருப்பமும் தான். குறை சொல்லிவிட்டால் முகத்தைச் சுழித்துக்கொள்ளுவார்கள். தவறுகளை உணர்ந்து திருந்திக் -கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவர்களாகத்தானே அதிகமான இசை நடன ஆசிரியர்கள் உள்ளனர். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஓர் அரங்கேற்றத்-தைப் பற்றி அது காலதாமதமாக ஆரம்பித்தது என்பதனை எழுதிய போது, அதனை வாசித்தே பார்க்காத நடனமாடிய பிள்ளையின் தாயார் தொலை-பேசியில் அழைத்து என்னை வாங்குவாங்கென்று வாங்கித்தள்ளினார். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து, "நீங்கள் எழுதியதை நான் வாசிக்கவில்லை. இதனை நடன ஆசிரியையும், மிருதங்க வித்துவானும் சொன்னதைக் கேட்டு உங்களோடு பிழையாகக் கதைத்துவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள். நீங்கள் நடனத்தைப் பற்றி நன்றாகத்தான் எழுதியிருக்கிறீர்கள்" என்றவர், "எனது மகளின் நடன நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது. தயவுசெய்து வாருங்கள்" என்று அழைப்புவிடுத்திருந்தார். அரங்கேற்றத்தில் இடம்பெற்ற ஓரிரு உருப்படிகள்தான் அங்கும் இடம்பெறும் என்பதனை ஊகித்துக்கொண்ட நான் அதற்குச் செல்லாமல் விட்டுவிட்டேன். இவ்விதமாக 'ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற

நிலையில் இந்த அரங்கேற்றங்களைப் பற்றி எழுதி பலரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டேன்.

ஓர் அரங்கேற்றத்தில் மிருதங்க இசை ஒத்துப்போகவில்லை, சோபிக்க-வில்லை என்று எழுதிய போது, எனது வீட்டிற்கு அந்த மிருதங்கவித்தகர் தொலைபேசி எடுத்து என்னைத் தாறுமாறாக ஏசினார். ஆனால், அவரது குருவே அவருக்குப் பயிற்சி போதாது, கற்றுக்கொண்டிருக்கின்றார், திருந்தி விடுவார் என்றார். அதனை மெய்ப்பிப்பதாக அந்த மிருதங்க மேதை தனது மாணவர் ஒருவரை அனுப்பி இவருக்கு உதவியதன் பயனாக அடுத்த ஆண்டு நடந்த அரங்கேற்றத்தில் அவரது மிருதங்க வாசிப்பு களைகட்டியிருந்ததைக் காண முடிந்தது. எமது இசை, நடனக் கலைஞர்கள் தங்கள் மாணாக்கர்-களைக் கற்பிப்பதோடு, தாங்களும் தொடர்ந்து கற்கவேண்டும் என்பதனை மறந்துவிடுகின்றார்கள். ஒரு சிலரோ தங்களை வளர்த்துக் கொள்ளுகின்றா-ர்கள் என்பதையிட்டு அவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களை, அவர்களின் மாணவர்களின் மூலம் அவதானிக்க முடிகின்றது.

தனியே தங்கள் வருமானத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட ஆசிரியர்களிடம் இவ்விதம் தங்களை வளர்த்துக் கொள்ளும் நிலைமை அருகிப்போயுள்ளமை கண்கூடு. ஆனால், மாணவர்களுக்குத் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்யும் ஆசிரியர்களும் உள்ளனர். யோகப் பயிற்சிக்கு அல்லது உடற்பயிற்சிக்குப் போகவேண்டிய சற்று உடல் பருத்த பிள்ளைகள் நடன்த்தைக் கற்பதனால் அவர்களது உடல் நிறை குறையும் என்ற எண்ணத்தில் நடன வகுப்பில் சேர்த்துவிடும் பெற்றோரும் நம்மத்தியிலே உள்ளனர். நடனப் பயிற்சி உடலை நலியவைக்குமா என்பதையும், தொடர்ந்து அது நன்மையைக் கொடுக்குமா என்பதனையும் பெற்றோர் உணர்ந்து கொள்வதில்லை. பெரும்பாலான பிள்ளைகள் அரங்கேற்றத்தோடு தங்களின் கலைக்கு முழுக்குப் போட்டுவிடுகின்றனர். நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இவ்வித பாரம்பரியக் கலைகளைக் கற்பித்து வருகின்றனர். ஆண்டுதோறும் அரங்கேற்றங்கள் இடம்பெறுகின்றன. அதன் பின்னர் அரங்கேற்றம் செய்தவர்களில் ஒருவீதமாவது தாங்கள் கற்ற கலையை முன்னெடுத்துச் செல்கின்றார்களா? அல்லது திருமணத்தின் பின்னர் அதனைத் தொடர்-கின்றார்களா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. சில பெற்றோர் பல்கலைக்கழகம் போக முன்னர் அரங்கேற்றத்தை முடித்துவிட வேண்டும் என எண்ணுகின்றார்கள். பல்கலைக்கழகக் கல்விக்கு கலைகளைக் கற்பதால் தடங்கல் ஏற்படும் என்பதே அவர்கள் கொண்டுள்ள எண்ணப்பாங்காக உள்ளது. கலையில் ஈடுபாடுள்ள பிள்ளைகள் கூடத் திருமணத்தின் பின்னர் தங்கள் கலையில் உள்ள ஆர்வத்தைத் தொடர முடியாத சிக்கல்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். வாழ்க்கைத் துணைவரின் விருப்பில்லாத நிலையில்

ஒன்றில் திருமண முறிவு அல்லது கலைவாழ்விற்கு முற்றுப்புள்ளி என்ற நிலைமையும் ஏற்பட்டுள்ள சிலரை நான் அறிவேன்.

எமது பாரம்பரியக் கலைகளை வளர்ப்பதற்கு அவற்றை இளஞ்சந்ததி-யினரிடையே எடுத்துச் செல்வதில் பல்வேறு இடர்பாடுகளை அழகியற் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களும், கற்கும் பிள்ளைகளும், அவர்களைக் கற்கவைக்கும் பெற்றோர்களும் எதிர்கொள்கின்றனர். பல பெற்றோர் போதிய வருமானம் இல்லாத காரணத்தால் தங்கள் பிள்ளைகளை இவற்றைக் கற்றுக்கொள்ள வைப்பதில் தயக்கம் காட்டுகின்றனர். இசை, நடனம், வாத்திய இசைகள் ஆகியவற்றிற்கு மாதாந்தம் செலவழிப்பதுபோக ஆண்டுதோறும், வாணி விழா, ஆண்டு விழா என ஆசிரியர்கள் பெற்றோரிடம் பணத்தை எதிர்பார்ப்பது அவர்களுக்கு பணச்சுமையை ஏற்படுத்துகின்றமையால் தங்கள் பிள்ளைகளை அனுப்ப முடியாமல் மனதளவில் தங்கள் ஆசைகளைப் பூட்டிவைத்துக்கொள்கின்றனர்.

அரங்கேற்றம் என்பது சாதாரணமாக 15 ஆயிரம் டொலர்களுக்கும், 60 ஆயிரம் டொலர்களுக்கும் இடையில் செலவிடப்படுவதாக அறியக்கிடக்கின்றது. அரங்கேற்றம் செய்யும் ஒரு பிள்ளையின் ஆசிரியருக்கு மட்டும் 2,000 முதல் 5,000 டொலர் வரையில் வெகுமதி கொடுக்கவேண்டும். அதனைவிட விலையுயர்ந்த சேலை, உட்பட பலவிதமான நன்கொடைகளும் எதிர்பார்க்-கப்படுகின்றன. ஓர் அரங்கேற்றம் முடிய தன்னைக் கற்பித்த மற்றும் அரங்கேற்றத்திற்கு உதவிய பின்னணி இசைக்கலைஞர்களுக்கும் வெகுமதி-களை அல்லது பரிசில்களை வழங்குவது வழமை. இவை ஏதோ ஒரு பரிசிற்பொருட்களாகக் கொடுக்கப்படுகின்றது. ஆனால், சில பொருட்களால் தங்களுக்குப் பயன் இல்லை என்பதனால் அதனையும் பணமாகவே தந்தால் நல்லது என முன்கூட்டியே சொல்லிக் கொள்ளும் நிலைமைகள் சில பெற்றோரைச் சங்கடத்தில் ஆழ்த்துகின்றது. இசையையோ அன்றி இந்தச் சுமையையோ எல்லாப் பெற்றோராலும் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனைக் காரணம் காட்டியே பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழகியற் கல்வி கற்பதன் பக்கம் விட விரும்புவதில்லை.

கலைக் கல்வியில் பின்னடைவு ஏற்படுகின்றதா?

கடந்த ஆண்டில் முன்னைய ஆண்டுகளை விட பரதநாட்டிய மற்றும் வாய்ப்பாட்டு இசை அரங்கேற்றங்கள் குறைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. 2013இலும், அதற்கு முன்னரும் ஆண்டுதோறும் நான்கு அல்லது ஐந்து அரங்கேற்றங்கள் வரை செய்த சில குருமார் 2014இல் எந்த ஓர் அரங்கேற்றமும் காணாதது ஏன் என்ற கேள்வி கலா ரசிகர்களிடம் எழுந்துள்ளது.

எமது பாரம்பரிய கலைகள் கற்பதில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்டுள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது. இதற்குப் பல காரணிகள் இருக்கலாம். ஓர் அரங்கேற்றத்திற்கு ஏற்படும் பணச்செலவு, பிள்ளைகளின் ஆர்வம் இன்மை, பெற்றோரின் விருப்பமின்மை, பொருளாதாரப் பற்றாக்குறை, இவற்றோடு ஆசிரியர்களின் கெடுபிடிகள் எனப் பல்வேறு காரணிகளைப் பெற்றோர் கூறுகின்றனர். பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து தங்கள் பிள்ளைக்கு ஏதோ ஒரு கலையைக் கற்றுத்தர முன்வந்த பெற்றோர் பிள்ளைகளின் படிப்பு வீணாகின்றது, அவர்கள் தங்கள் மேல் படிப்பில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக தொடர்ந்து அவர்கள் கலைகளைக் கற்றுக்கொள்வ–தனை இடையிலேயே நிறுத்திவிடுகின்றார்கள். "அரங்கேற்றத்தைச் செய்து என்ன செய்வது?

அதற்கு ஏன் இவ்வளவு பணத்தைச் செலவு செய்யவேண்டும்" எனச் சில பெற்றோர் சொன்னதைக் கேட்டுள்ளேன். இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் தனது பிள்ளைகளை அரங்கேற்றம் வரை நடனத்தைக் கற்பித்துவிட்டு அரங்கேற்றம் செய்யவில்லை. ஏன் என்று கேட்டதற்கு மேற்கண்ட பதிலைத் – தான் தந்தார். இவ்விதமாகப் பல பெற்றோர் கூறிக்கொள்ளுகின்றார்கள். அரங்கேற்றம் இடம்பெறாத போது ஆசிரியர்களுக்கு விளம்பரமும் இல்லை, வருமானமும் இல்லை என்பது வெளிப்படை. இதனைவிட தங்களிடம் கற்றுக் கொண்ட புதிய மாணவர்களைக்கொண்டு அவர்கள் கற்க வரும் நேரங்களில் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு இசை, நடனம், மிருதங்கம் போன்றவற்றைக் கற்றுத்தரும் சில ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அவ்விதம் கற்றுத்தரும் பிள்ளைகளுக்கு இது அனுபவத்தையும், பயிற்சியையும் பெற்றுக்கொள்ளவும், தாங்கள் கற்றுக்கொண்டவற்றை மீட்டுக்கொள்ளவும் வாய்ப்பாக அமைந்துள்ள போதிலும், பெற்றோர் நாங்கள் எங்கள் பிள்ளைகள் மேலும் கற்கவேண்டும் என்றுதானே அனுப்புகின்றோம் என்று குறைபட்டுக் கொள்வதனையும் கேள்வியுறுகின்றோம். அவ்விதம் தாங்கள் பயன்படுத்தும் மூத்த மாணவர்களிடம் அறவிடப்படும் மாதாந்தத் தொகையையாவது அறவிடாதுவிட்டால் பெற்றோரின் இந்தக் குறைகூறலுக்கு ஆளாகவேண்டிய நிலைமை யைத் தவிர்த்துக்கொள்ளலாம், அல்லது அவர்களுக்கு ஏதாவது சொற்ப கூலியையாவது கொடுக்கலாம். ஆனால், எதுவும் இல்லாது அவர்களைத் தங்கள் வருமானத்திற்காகப் பயன்படுத்துவது எந்த வகையிலும் நியாயமாகாது.

இவற்றைவிட மெல்லிசைப் பாடல்கள், புதிய நடன முறைகள் ஆகியன இளைஞர்களிடையே முக்கியத்துவம் பெற்றுள்ளமை எமது பாரம்பரியக் கலைகளின் நாட்டத்தைக் குறைத்துள்ளதா என்பதும் கேள்விக்குறியாக

உள்ளது. சுப்பர் சிங்கர், சன் சிங்கர், ஜோடி போன்ற இந்தியக் கலைவானில் கவர்ச்சிகரமாக இடம்பெறும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எம்மவரையும் கவர்ந்திழுத்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனவே, அத்துறைகள் நோக்கிய ஒரு நகர்வு ஏற்பட்டுள்ளதைக் காணமுடிவதோடு, நவீன முறையிலான மாற்றங்கள் எங்கள் பாரம்பரியக் கலைகளில் ஏற்பட்டுவருவது காலத்தின் நியதியாகிவிட்டது.

'பவதாரணி பாரதி கலைக்கோயில்', 'சென்னை நிதம்ஸ் ஓகெஸ்ரா', 'சைனஸ் இசைக்குழு', 'மெகா ரியூனேர்ஸ்', 'ராகாலயம்', 'சத்தியம் மியூசிக்கல்ஸ்', 'பிறிமா டான்ஸ் ஸ்கூல்', 'கிறியேற்றிவ் டான்ஸ் ஸ்கூல்', 'வர்ணம் இசைக் கல்லூரி' போன்ற இசை, நடன நிறுவனங்கள் மேலைத்தேய இசைக் கருவிகளையும், எமது பாரம்பரிய இசைக்கருவிகளையும் பயன் – படுத்துவதோடு, மேடைப் பாடல்களாக சினிமாப் பாடல்களைப் பாடப் பயிற்சி கொடுப்பதோடு, நடனத் துறையிலும் புதியனவற்றைப் புகுத்துவதனால், அதில் பெரும்பாலான மாணவர்கள் விரும்பிச் சேர்கின்றார்கள்.

கனடிய மண்ணில் பாரதி கலை நிறுவனம் ஆண்டுதோறும் இந்தியக் கலைஞர்களை வருவித்து, இசைக் கச்சேரிகளை வைப்பது கர்நாடக இசைப்பிரியர்களையும், கர்நாடக ஆசிரியர்களையும், அதனைப் பயிலும் மாணர்களையும் பெரிதும் கவர்ந்துகொள்ளும் நிகழ்வாக இடம்பெறுகின்றது.

இவற்றைவிட, பல்வேறு நிறுவனங்களும், தனியாரும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். பெருந்தொகையான இசை, நடனக் கலைஞர்களை வரவழைத்து ரசிகர்களை மகிழ்விக்கும் நிகழ்வுகளும் நடந்தேறி வருகின்றன.



தங்கராசா சிவபாலு, M.A.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பட்டத்தை சிறப்புப்பிரிவில் பெற்றுக்கொண்டதோடு யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். ஆசிரியராகவும், அதிபராகவும். கொத்தணி அதிபராகவும் கடமையாற்றியவர். கட்டுரைகள், செய்தி விபரணங்கள், விமர்சனங்கள் எழுதுபவர். விளம்பரம் பத்திரிகையில் இலக்கியத்துறை சார்ந்த படைப்புக்களைத் தொடர்ந்து எழுதி வருகிறார். நாட்டுக்கு உழைப்போம் என்னும் கவிதைத் தொகுதியையும், பாடசாலை மாணவர்களின் தகாத செயல்கள், திருமண முறிவுகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். சங்கப்பொழில், ஈழத்துத் தபோதனர்கள், அ.பொ.செல்லையா வாழ்வும் வழியும் போன்றவற்றைப் பதிப்பித்தும் உள்ளார்.

மொழிபெயர்ப்பாளர்

- மணி வேலுப்பிள்ளை

நான் பறந்து வந்த விமானம் ரொறன்ரோவில் தரையிறங்கிய போது, எனது கடிகாரம் காட்டிய நேரம்... அது வன்னி நேரம்... கண்ணாடிச் சாளரத்தின் ஊடாக வெளியே எட்டிப் பார்த்தேன். ஓடுபாதையிலும் அதற்கு அப்பாலும் எரியும் மின் விளக்குகள், கிளம்புவதற்காக அல்லது இறங்குவதற்காக வலம்வரும் விமானங்கள், விமானத்துறையின் எல்லைக்கு வெளியே மின்னி மறையும் வாகனங்கள், மண்ணுலக வாழ்வை ஒரு சொட்டும் சட்டை செய்யாது கொட்டும் பனியின் வெண்மை...

"உன்னுடைய புத்தகம் என்னிடமே இருக்கட்டும்... அது எனக்குத் திரும்பவும் தேவைப்படும்" என்று துரை அண்ணா காதோடு காதாகச் சொல்லிய சேதி நினைவுக்கு வந்தது. அவருக்கு என்னில் எள்ளளவும் நம்பிக்கை ஏற்படவில்லை. எனக்குத் தெரிந்த கொஞ்சநஞ்ச ஆங்கிலத்தைக் கொண்டு என்னால் ஓரளவு சமாளிக்க முடியும் என்று சொல்லி அவருக்கு நான் தெம்பூட்டினேன். "முட்டாள், இங்கிலிஷில் ஒரு சொல்லும் உன்னப் – படாது. நீ பச்சைத் தமிழ் கதைத்தால் தப்பிப் பிழைப்பாய். கொச்சை இங்கிலிஷ் கதைத்தால் பிடிகொடுத்துவிடுவாய்" என்று சொல்லி அவர் என்னை அச்சுறுத்தினார்.

அவர் கடைசியாக என்னைப் பார்த்த பார்வையில் அருவருப்பு தெரிந்தது. எனது சிற்றறிவுக்கு எட்டியவரை என்னைப் பார்த்து வேறெவரும் அவ்வளவு தூரம் அருவருக்கவில்லை. ஆதலால் அவருடன் மேற்கொண்டு பேச்சுக் கொடுக்காமல் தூங்குவது போல் பாசாங்கு செய்தேன்.

காற்றிடைவெளிகளில் விமானம் விழுந்து கிளம்பிப் பறந்தது. கல்லொழு-ங்கையில் ஏறிவிழும் மாட்டு வண்டியைப் போல... அந்த ஒற்றுமை என்னை வியக்க வைத்தது. விண்ணில் பறக்கும் நினைப்பே ஏற்படவில்லை... அப்புறம் விழித்துக்கொண்டேன். அப்பொழுதுதான் நான் உண்மையிலேயே தூங்கி – விட்டேன் என்பது புரிந்தது. ஐயோ... துரை அண்ணாவைக் காணவில்லை! நான் அவரைக் காணாமல் தவித்ததை அவதானித்த யாரோ ஒருவர், நான் இடம், தலை தெரியாமல் தவிப்பதாக நினைத்தாரோ என்னவோ, 'வன்கூவர்!'

என்று கூவினார்... வன்னியில் தோன்றிய துரை அண்ணா வான்கூவரில் மறைந்த மாயத்தை எண்ணியவாறு நான் கண்களை மூடினேன்.

ரொறன்ரோ விமான நிலையத்தில் என்னைப் புடைசூழ்ந்த கண்காணி – களைக் கடைக்கண்ணால் நோட்டம் விட்டேன். காட்டுக்குள் இருந்து வெளிப்பட்டு நாட்டுக்குள் புகுந்த ஒரு விலங்கினைக் கைப்பற்றிய வீறாப்பு அவர்களுடைய நடமாட்டத்தில் புலப்பட்டது. ஒன்றுக்குமேல் ஒன்றாக அணிந்த உடுப்புகளின் உள்ளே உப்பிய உடம்புடன் கூடிய அந்தக் கனடியர்களைப் பார்க்க எனக்கு விசித்திரமாய் இருந்தது. ஒரு கோடியில் இருந்த கூடத்துக்கு அவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கே பல்வேறு அடைப்புகள் போடப்பட்டிருந்தன. என்னை ஓர் அடைப்புக்குள் தள்ளிவிட்டார்கள். அங்கே ஒரு மேசையும் மூன்று நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. மேசையில் இருந்த ஒரு தகட்டில் குடிவரவு அதிகாரி என்று பொருள்படும் பதவி ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. மேசையில் வைக்கப்பட்டிருந்த ஒரு மணிக்கூடு நேரத்தை இலக்கத்தில் காட்டியது... அதிகாலை மூன்றே முக்கால் மணி. அவர்கள் அடைப்புக்கு வெளியே நின்று என்னை வேவுபார்த்தபடி தங்களுக்குள் குசுகுசுத்தார்கள்.

ஒருவர் தனது கைத்தொலைபேசியில் யாரையோ அழைத்து "Sri Lankan... Tamil..." என்று சொல்லிக் கதைத்தது எனது காதில் விழுந்தது. என்னிடம் ஒரு சொல்லும் கதைக்காமலேயே அவர்கள் என்னை இன்னார் என்று இனம்கண்ட விதத்தை எண்ணி நான் பீதியடைந்தேன். உடம்பு வெடவெடத்தது. பற்கள் கிடுகிடுத்தன. விரல்கள் குறாவின. கனடாவில் ஒருவர் ஒரே சமயத்தில் பல உடுப்புகளை அணியவேண்டிய நிர்ப்பந்தம் நியாயமானதே என்பது படிப்படி – யாகப் புரிந்தது. "ஒரு மிடறு விஸ்கி, ஒரு தம் சிகரட்... குளிர் கிட்டவும் வராது..." என்று துரை அண்ணா வகுத்த பரிகாரம் அப்பொழுது நினைவுக்கு வந்து என்னை வாட்டியது.

ஒருவன் சட்டுப்புட்டென்று வந்து எனது அடைப்புக்குள் புகுந்தான். அவன் நிறத்தாலும் திரட்சியாலும் முற்றிக்கனிந்த தக்காளிப்பழம் போலவே இருந்தான். ஒரு கையில் ஒரு கோப்பு. மறு கையில் ஒரு நீற்றுப்பெட்டி போன்ற கடதாசிக் குவளை. உரலில் குத்திநிற்கும் உலக்கையைப் போல அதில் ஓர் உறிஞ்சுகுழல் வேறு! அடைப்புக்குள் ஏற்கனவே ஒரு மனிதப் பிறவி நிற்பதை அவன் சட்டை செய்யவில்லை. தனது இருக்கையில் அமர்ந்த கையோடு தனது பதவியை அறிவிக்கும் தகட்டை எனக்கு நேரே தள்ளிவிட்டான். அவன் கோப்பினை எடுத்தெறிந்த விதம் என்னைத் தூக்கிவாரிப் போட்டது. அது என் மூஞ்சியில் பட்டும் படாமலும் ஒரு கரையிலிருந்து மறு கரைக்குத் தாவியது. பிறகு அதனை எட்டி எடுத்து விரித்து வைத்துக்கொண்டு, என்னை நிமிர்ந்து

பார்க்காமலேயே அமரும்படி சைகை காட்டினான். அவன் வாய் திறக்காத–படியால் எனக்குக் கரவு வந்துவிட்டது.

துரை அண்ணாவைப் போல வேறு சில பேர்வழிகள் ஈழநாட்டு அகதிகளின் ஆட்சிமொழி பற்றி எல்லாம் குடிவரவு அதிகாரிகளின் காதில் இதமாக ஒரு வார்த்தை போட்டு வைத்திருக்கிறார்களோ என்ற ஏக்கம் என்னைப் பீடித்துக்கொண்டது.

"You need an interpreter, don't you?" என்று அவன் உறுமினான்.

"தமிழ்..." என்று இழுத்தேன்.

"Yes, you know English, but you speak only Tamil, don't you?" என்று உறுக்கினான்.

"தமிழ்..."

"Yes, yes, A Tamil interpreter is on his way to help you out."

"தமிழ்..."

"He'll be here shortly" என்று சொல்லிவிட்டு, தனது நெற்றியில் அடித்துக் கொண்டான்.

"தமிழ்..."

எனது தமிழ் முழக்கத்தை அவன் மேற்கொண்டு பொருட்படுத்தவில்லை. குவளையில் ஒரு மிடறு உறிஞ்சுவதும், கோப்பில் ஆங்காங்கே கிறுக்குவதுமாக இருந்தான். எனது மனத்தில் கொந்தளிப்பு. ஆனால் அலவாங்கு விழுங்கிய ஆளைப் போல நான் அசையாமல் இருந்தேன். அந்த ஆள் அந்தக் குளிருக்குள் அவ்வளவு குளிர்பானம் குடிக்கிறானே, நீரிழிவு வந்து சாகப் – போகிறானே என்று என்னால் அங்கலாய்க்காமல் இருக்க முடியவில்லை. அவன் உறிஞ்சித் தள்ளியதைப் பார்த்ததாலோ என்னவோ எனக்குத் திடீரென முடுக்கியது. அப்பால் போய்ப் பெய்துவிட்டு, சுடச்சுடத் தேநீர் பருகவேண்டும் போலிருந்தது. அதையெல்லாம் போய் அவனிடம் சொல்லிப் பரிகாரம் தேடுவது மரியாதையாய் இருக்காது என்று பட்டதால், அடக்கிக்கொண்டேன். திடீரென ஓர் உருவம் அடைப்புக்குள் நுழைந்தது. அந்த உருவத்துக்கும் கத்தரி வெருளிக்கும் இடையே ஒரேயொரு வித்தியாசம்: முகமூடி! இங்குமா

தலையாட்டிகள்? ஒரு கணம் மனம் பதறியது. முகமூடிக்குள் அகப்பட்ட மூக்குக் கண்ணாடியின் ஊடாகத் தெரிந்த கண்களைத் தவிர வேறோர் அங்கமும் எனக்குத் தெரியவில்லை. தலையை ஓர் இறப்பர் தொப்பி கவ்வி இருந்தது. கழுத்தைச் சுற்றி ஒரு சேலை வரியப்பட்டிருந்தது. உச்சந்தலையில் இருந்து கணுக்கால் வரை நீண்டு தொங்கிய வெளிப் பாவாடையில் உலகப் படம் கீறிய மாதிரிப் பனித்துகளின் சுவடு படிந்திருந்தது. தாறு ஊற்றுவோர் அணியும் சப்பாத்தும் கையுறையும்... உள்ளே ஓர் இளக்கமான அங்கி, அதற் – குள்ளே ஓர் இறுக்கமான அங்கி, அதற்குள்ளே ஒரு முழுக்கைச் சட்டை... அவர் முகமூடியைக் களைந்து தனது கோலத்தைக் கலைத்துக்கொண்டே அந்த அதிகாரியிடம் சொன்னார்: "Hi, Robin, I'm sorry for being late."

"Oh, it's OK. Freezing outside, isn't it, Kanaa?"

"Yea, Robin, that's the only thing I hate in Canada."

"Were you driving?"

"In this weather? No way... TTC."

இ.போ.ச.வின் (இலங்கைப் போக்குவரத்துச் சபையின்) கனடியப் பதிப்புத்தான் TTC என்றும், கணாதான் எனது மொழிபெயர்ப்பாளர் என்றும், கணவதி அல்லது கணவதிப்பிள்ளை என்ற பெயரை அவர் கணா என்று குறுக்கிவிட்டார் என்றும் கற்பனை பண்ணிக்கொண்டேன். அவர் தனது வெளிப் பாவாடைக்குள்ளிருந்து ஒரு வெந்நீர்க் குடுவையை வெளியே எடுத்து, மேசைக்குக் கீழே பிடித்து, மூடியை முக்கித் திறந்து, குடுவையைச் சாடை – யாகச் சரித்து, கொஞ்சத்தைப் பக்குவமாய் ஊற்றி, ஒரே மிடறில் குடித்துவிட்டு, திரும்பவும் குடுவையை மூடி ஒளித்து வைத்தார். றொபின் அதனைக் கண்டும் காணாதவன் போல் இருந்தான். அவர்கள் தொடர்ந்தும் காலநிலையைப் பற்றியே கதைத்தார்கள். அப்புறம் திரும்பவும் எப்பொழுது தாங்கள் இருவரும் அந்த அடைப்புக்குள் சந்திப்பது என்பதையும் குறித்துக்கொண்டார்கள். நான் ஒருவன் அங்கே இருக்கிறேன் என்ற நினைப்பு அவர்கள் இருவரிடத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்பொழுது பக்கத்து அடைப்புக்குள் கோப்பித்தூள் நிறத்தில் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து தள்ளிவிட்டார்கள். நான் அவளை ஓரக் – கண்ணால் நோட்டம்விட்டதைக் கணா அவதானித்திருக்க வேண்டும். அவர் என்னைத் திரும்பிப் பார்க்காமலேயே "என்னடா பொடியா, புழுத்த மீனைப் பூனை பார்த்த மாதிரிப் பார்க்கிறாய்!" என்று சீண்டினார். வம்பும், ஏளனமும்,

எச்சரிக்கையும் கலந்த அந்த அதிரடித் தாக்குதல் என்னை குலைநடுங்க வைத்தது. குனிந்த குனியில் கோப்பினைப் புரட்டிக்கொண்டிருந்த றொபின் என்னையும் கணாவையும் நிமிர்ந்து பார்க்காமலேயே "Shall we start?" என்று கேட்டான்.

கணாவும் என்னைப் பார்க்காமலேயே "கூத்து துவங்கப் போகிறது" என்றார். நான் உடம்பை நெளித்து முறுவலித்து கடைக்கண்ணால் கணாவைப் பார்த்தேன். றொபின் என்னைப் பார்க்காதபடியால் கணாவும் என்னைப் பார்க்கவில்லையோ, இதுவும் ஒரு மொழிபெயர்ப்பு நுட்பமோ என்று வியந்தேன். கணா றொபினைப் பார்த்து உன்னிப்பான குரலில் "OK, Robin. Let's start" என்றார்.

றொபினும், கணாவும் சொல்லப்போவது எனக்கு விளங்கினால் என்ன, விளங்காவிட்டால் என்ன, அவற்றை எல்லாம் ஒன்றும்விடாமல் கேட்பதற்கு நான் காதைத் தீட்டி வைத்துக்கொண்டேன். றொபின் தனது கோப்பிலிருந்து ஒரு கடதாசியை எடுத்து, அதன் முதலாவது வரியை அறுத்துறுத்து வாசித்தான். கணா வாய் திறப்பதற்கு முன்னரே அந்த ஆங்கில வசனத்தின் கருத்து எனக்கு ஓரளவு புரிந்தது: "கேட்கப்படும் கேள்விகளுக்கு நீர் மறுமொழி சொல்லாவிட்டால், உமது அகதிக் கோரிக்கையை நீர் கைவிட்டுவிட்டீர் என்று முடிவுசெய்யப்படும்..." கணாவோ றொபினை இடைமறித்து, அவனையே பார்த்துக்கொண்டு, "இவன் ஒரு பனியன். முழுப் பனியும் இவன் தலையில்தான் கொட்டியிருக்கிறது. அவ்வளவு பனி கொட்டியும் இவனுக்கு ஒரு பனிக்கட்டியும் விளங்கவில்லை. இவன் ஆசைதீர வாசிக்கட்டும். இவன் சொல்லுவது நடக்கவே நடக்காது. நீ மறுமொழி சொல்லாமல் வாயைப் பொத்திக்கொண்டு இருப்பதுதான் புத்தி..." என்று சொல்லி, எனக்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டார்.

றொபின் தொடர்ந்து வாசித்தான்: "சொந்தத் தகவல் படிவத்தை 28 நாட்களுக்குள் நிரப்பி அனுப்பாவிட்டால், உமது அகதிக் கோரிக்கையை நீர் கைவிட்டுவிட்டீர் என்று முடிவுசெய்யப்படும்..." கணா மீண்டும் குறுக்கிட்டார். "இது ஒரு வேடிக்கையான வாடிக்கை. ஏன் வாடிக்கையான வேடிக்கையும்கூட. ஒரு மாதத்துக்குள் என்று சுகமாகவும், இதமாகவும் சொல்லியிருக்கலாம்... ஒரு மாதம் 30, ஒரு மாதம் 31, மாசி மாதம் 28... இப்படி மாத நாட்கள் மாறுவதால்தான் 28 நாட்களுக்குள் என்று வந்தது. இந்தக் காலக்கெடு அவ்வளவு முக்கியமில்லை. முந்திப் பிந்தி அனுப்பலாம். அது இவனுக்குத் தெரியாது. இவன் ஒரு விடுபேயன். இவனுடைய கதையைக் காதில் விழுத்தக்கூடாது..." என்றார்.

"படிவத்திலுள்ள அறிவுறுத்துரைகளையும், வினாக்களையும் சரிவர விளங்கி, அதனை நிரப்பி அனுப்ப வேண்டும்..." இதற்கும் கணா உடன்பட-வில்லை: "இவனே அதை வாசித்ததோ, விளங்கியதோ கிடையாது. அதை எல்லாம் உன்னால் எப்படி வாசிக்கவோ, விளங்கவோ, நிரப்பவோ முடியும்? நீ இதை எல்லாம் சரிவர விளங்கி நிரப்பி அனுப்பத் தேவையில்லை. என்னைப் போல ஆட்கள்தான் அதை எல்லாம் நிரப்பி அனுப்புவது வழமை – தேச வழமை! எங்களால்தான் அது முடியும். இதனைச் சரிவரப் புரிந்துகொண்டால், நீ உருப்படுவது நிச்சயம்..."

"படிவத்தை நிரப்புவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி தேவைப் – பட்டால்..." றொபினை கணா இடைநிறுத்தினார். "படுமுட்டாள்! என்னை முன்னுக்கு வைத்துக்கொண்டு... வெண்ணெயை முன்னுக்கு வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதைப் பற்றிக் கதைக்கிறான். நீ அப்படி அலையப் போவதுமில்லை. அது இவனுக்குப் புரியப் போவதுமில்லை..."

"உமது மறுமொழிகள் மொழிபெயர்ப்பாளருக்கு விளங்குகிறதா என்று பார்க்க வேண்டும்..." றொபின் தானாகவே இடைமறித்து கணாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு ஒரு மிடறு உறிஞ்சினான். அதற்குப் பழக்கப்பட்டவர் போல கணா தொடர்ந்தார்: 'இவன் தனக்கே விளங்காததை என்னைப் போல ஒருவருக்கு விளங்கப்படுத்தும்படி எதுவுமே புரியாத உனக்குச் சொல்லுகிறான். இவனுக்கு ஒரு பனிக்கட்டியும் தெரியாது. என்னைப் போல வேலைசெய்து பிழைக்கும் ஆட்களுக்குத்தான் எல்லாம் விளங்கும். அவர்கள் உனது படிவத்தில் சரியான மறுமொழிகளைப் போட்டு நிரப்பித் தருவார்கள். அந்த மறுமொழிகள் உனக்கு விளங்கவும் போவதில்லை, விளங்கவும் தேவை-யில்லை. அதைப்பற்றி எல்லாம் நீ அலட்டிக் கொள்ளவும் கூடாது... என்ன? நான் சொல்வது உனக்கு விளங்குகிறதா?"

"உமது கைவசமுள்ள உண்மையான, போலியான அடையாளப் பத்திரங்கள் அனைத்தையும் சொந்த தகவல் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவை கைவசம் இல்லாவிட்டால், அவை எங்கே இருக்கின்றன, அவற்றைத் தருவிக்க முடியுமா, அவை அழிக்கப்பட்டனவா..."

கணா மிகுந்த எரிச்சலுடன் சொன்னார்: "யாரோ மூளை பிசகி எழுதி வைத்ததைத்தான் இவன் பாவி வாசித்துக் கொண்டிருக்கிறான். இவன் நல்லவன். ஆனால் மடையன். அகதிகளின் அகராதியில் மெய்யும் பொய்யும் ஒத்த சொற்கள் என்பதோ, உன்னுடைய கடவுச்சீட்டை எல்லாம்வல்ல முகவர் பத்திரமாக எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டார் என்பதோ, உன் கைவசம் எஞ்சிய பத்திரங்களை நீ தின்பண்டங்களுடன் சேர்த்துத் தின்றிருப்பாய்

அல்லது மலசலத்துடன் சேர்த்துக் கழித்திருப்பாய் என்பதோ, முகவரிடமிருந்து கடவுச்சீட்டைத் தருவித்தால் அவர் கையோடு அடுத்த ஆளை அனுப்ப-முடியாது என்பதோ இவனுக்குத் தெரியாது. அசல் மடையன். இவனுக்கு அசலும் நகலும் ஒரே சாமான் என்பதுகூடத் தெரியாது. குடிவரவு அதிகாரி என்ற பதவித் தகடு வேறு!..."

"அத்தகைய பத்திரங்கள் உமது கைவசம் இல்லாவிட்டால், நீர் அதற்குத் தகுந்த நியாயம் காட்டி விளக்கமளிக்க வேண்டும்..."

கணா பொறுமை இழந்து பொரிந்து தள்ளினார்: "நியாயமோ விளக்கமோ அளிக்கத் தேவையில்லை. ஆகவே தகுந்த நியாயமும் விளக்கமும்... என்ற பேச்சுக்கே இடமில்லை. சுத்த மட்டி. உனக்கு அடையாள அட்டையோ பிறப்புக் கடதாசியோ இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, எதையும் அஞ்சலில் எடுப்பிக்கலாம். நீ அஞ்சத் தேவையில்லை..." கணா "சுத்த மட்டி" என்று றொபினைத்தான் திட்டினார். ஆனால், அவர் என்னைத் திட்டியது போலவே பட்டது.

"உமது விசாரணையை வேறொரு மாநகரத்தில் வைத்துக்கொள்ள விரும்பினால்..." றொபின் மீண்டும் ஒரு தடவை உறிஞ்சிய பொழுது பானம் தீர்ந்த சத்தம் கேட்டது.

கணா ஒரு தடவை தொண்டையைச் செருமிவிட்டுத் தொடர்ந்து பேசினார்: "இவனுக்கு இந்த மண்ணுலகில் நடப்பது எதுவுமே தெரியாது. மொன்றியலில் முழுப்பேரையும் உள்ளுக்கு விட்ட காலம் போய் ஆண்டுக் கணக்கு ஆகிவிட்டது. இப்போ எல்லாம் மொன்றியலிலும், வான்கூவரிலும் ரொறன்ரோ-விலும் ஒரே கதைதான். 9/11க்குப் பிறகு கொஞ்சம் கடுவல். அவ்வளவுதான். என்னைப் போல ஆட்கள் உனக்கு எழுதித் தருவதும் ஒரே கதைதான். நானே பேரையும், ஊரையும், இடத்தையும், தேதியையும் கச்சிதமாய் மாற்றி அற்புதமாய் எழுதித் தருவேன். அதற்கு அதிகம் செலவு பிடிக்காது. கனடாக் காசில் ஒரு நூறு, இருநூறு, முன்னூறு ரூபா பிடிக்கும்.... எல்லாம்வல்ல முகவருக்கு இலட்சக் கணக்கில் வாரி வழங்கிய உனக்கு நான் போய்க் கடலைக்கொட்டை வாங்கிற காசைப் பற்றிச் சொல்லி... சரி, அதெல்லாம் பிறகு. நீ இடம் மாறப்போவதில்லை. உனது விசாரணை ரொறன்ரோவில்தான் நடக்கும். வேறு கதை தேவையில்லை. என்னுடைய கதைதான் செல்லும்..." கணா மேசையில் குத்தாத குறை! சிலேடையில் பேரம் பேசும் சீமான் என்று மனம் சொல்லியது. அவர் தனது சப்பாத்துக் காலால் எனது சப்பாத்துக் காலில் ஒரு தட்டுத் தட்டி அந்தப் பேரத்தை வலியுறுத்தினார்.

"வெளிப்படல் அறிவித்தலில் உமது பெயர் எவ்வாறு எழுதப்பட்டுள்ளதோ அவ்வாறே இடமாற்ற விண்ணப்பத்திலும் எழுதப்பட வேண்டும்..."

கணா இப்பொழுதுதான் எனது பெயரைக் கேட்டார். நான் சாம்பசிவமூர்த்தி என்றேன். அவர் சொன்னார்: "நீ இடமாற்ற விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பப் போவதில்லை. அதற்கான காரணம் உனக்கும் தேவையில்லை, இவனுக்கும் தேவையில்லை. மற்றது, அலுவல் எல்லாம் முடிந்த பிறகு... நீ அகதி விசாரணையில் வென்ற பிறகு... நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் வென்று தருகிறேன். உனக்கு வெற்றி நிச்சயம்... அதற்குப் பிறகு உனது பெயரைக் குறுக்கி வைத்திரு. நான் கணநாதமுருகவேள் என்ற பெயரை கணா என்று குறுக்கிய பிறகுதான் கனடியன் என்னுடன் பேசிப் பறைந்து என்னை இந்த வேலைக்கு வைத்துக்கொண்டான். நீயும் உனது பெயரை சாம் என்று குறுக்கினால்தான் கனடியன் உனக்கு வேலை தருவான். ஆனால் உனக்கு நான் பார்க்கிற வேலை வேண்டாம். இது ஒரு பீத்தல் வேலை. இந்த வேலை என்னைப் போல மதியம் திரும்பின ஆட்களுக்குத்தான் சரிவரும். உன்னுடைய வயதுக்கு... போராளிகளே உன்னைச் சேர்க்கமாட்டார்கள். உனக்கு கனடாவில் நல்ல வேலை கிடைக்கும்."

"நீர் குறித்த இடத்திலும், தினத்திலும் நேரத்திலும் உமது விசாரணைக்குத் தோற்றத் தவறினால், உமது அகதிக் கோரிக்கை கைவிடப்பட்டுவிட்டது என்று கருதப்படும்..."

கணா தொடர்ந்து பேசினார்: "சாம், இவன் பாவி நல்லவன். ஆனால், விடுபேயன். யாரோ ஒரு பித்துப்பிடித்த பேர்வழி அச்சடித்து வைத்த கடதாசியை அப்படியே வாசித்து முடித்துவிட்டான். இவனுக்கு எழுத்துக்கும் கருத்துக்கும் வித்தியாசம் தெரியாது. சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் தெரியாது. அகதிகள் விசாரணைக்குத் தோற்றாமல் இருப்பதும் தலைமறைவாகுவதும் நடப்பதுதான். ஆனால், அகதிக் கோரிக்கை எதுவும் கைவிடப் பட்டதாக வரலாறு கிடையாது. இவன் வரலாறு படிக்கவில்லை. ஒரு வேளை History Channel பார்த்திருப்பான். அதுதான் இவனுடைய வரலாறு. நான் ரொறன்ரோவில்தான் இருக்கிறேன். நான்தான் உனக்குக் கதை எழுதித் தரப்போகிறேன். உனது விசாரணை ரொறன்ரோவில்தான் நடக்கும். அதற்கு நீ போகத்தான் போகிறாய். போய் வெல்லத்தான் போகிறாய்..."

"மேலதிக விபரங்களுக்கு அகதிகளுக்கான வழிகாட்டியைப் பார்க்கவும்..." ரொபின் கோப்பினுள்ளிருந்து வேறொரு படிவத்தை எடுத்து கணாவின் மூஞ்சியில் பட்டதும் படாததுமாக வீசிவிட்டு எழும்பி அடைப்புக்கு வெளியே போனான்.

இப்பொழுது கணாவின் பாணி மாறும் என்று எதிர்பார்த்தேன். அவர் சொன்னார்: 'இந்த ஒட்டகப் பிறவி குடித்ததை எல்லாம் பெய்துமுடித்துவிட்டு மேலும் குடிப்பதற்கு வாங்கிக்கொண்டு வரப் போயிருக்கிறான். அவன் கிடந்தான்... அவன் சொன்னது உன்னை மாட்டிவிடக்கூடிய வழிகாட்டி... நீ முழியைப் புரட்டி என்னைப் பயப்படுத்த முடியாது... அகதிகளுக்கான வழிகாட்டி என்றால், தொடர்ந்தும் அகதிகளாய் இருப்பதற்கான வழிகாட்டி என்பதுதான் கருத்து. அது உனக்கு விளங்கவில்லையோ? அல்லது தமிழ் விளங்கவில்லையோ?

"மேலதிக விபரங்களுக்கு என்னைப் போல ஆட்களைத்தான் பிடிக்க வேண்டும். உனக்கு அந்த இந்தக் கதை தேவையில்லை? உனக்குத் தோதான கதை என் கைவசம் இருக்கிறது. உனக்கு..." இந்த இடத்தில் இடைநிறுத்திய கணா முன்னர் ஒளித்துவைத்த வெந்நீர்க் குடுவையைத் திரும்பவும் தேடியெடுத்து அண்ணாந்தபடியே குடித்து முடித்துவிட்டு, "முழி புரளத் தேவையில்லை" என்று சொல்லி முடித்தார்.

கணா அந்தப் படிவத்தை எட்டி எடுத்து, என்னை எழுத்துக்கூட்டச் சொல்லாமலேயே அதில் எனது பெயரை எழுதி, அதனை மளமளவென்று நிரப்பித் தள்ளினார். அதன் அடியில் ஒப்பமிட்டு, அதில் ஒரு புள்ளடி போட்டு, தனது பேனையை அதற்கு மேலே வைத்து அதனை எனக்கு நேரே தள்ளிவிட்டார். "சாம், புள்ளடி போட்ட இடத்தில் ஒப்பம் போடு, மகனே" என்றார். அவர் திடீரெனக் குழையவே நான் எச்சரிக்கை அடைந்தேன். ஆனாலும், மறு பேச்சில்லாமல் அவர் புள்ளடி போட்ட இடத்தில் ஒப்பம் வைத்துக் கொடுத்தேன். அப்பொழுது றொபின் கையில் வேறொரு நீற்றுப்பெட்டியுடன் வந்து சேர்ந்தான். அவன் படிவத்தை எடுத்துப் புரட்டிப் பாரத்துவிட்டு, 'ஓ, சம்பாசீவா... என்று என்னை விளித்தான். "No, no, Robin, சாம்பசிவா..., சாம்பசிவா..." என்று சொல்லிக்கொடுத்தார் கணா.

"May I call you Sam?" இப்பொழுதுதான் றொபின் என்னைப் பார்த்துக் கதைத்தான்.

கணா என்னை முந்திப் பதில் சொன்னார்: "Oh yes, why not? Call him Sam. He's going to be known as Sam in Canada."

"That's good..." என்று சொல்லிவிட்டு றொபின் தனது கோப்பினையும் கணா நிரப்பிய படிவத்தையும் தூக்கிக்கொண்டு போய்விட்டான். கணா என்னைப் பார்த்து, "பார்த்தாயா, சாம், சாமின் மகிமையை?" என்று கேட்டார்.

காலை ஆறே கால் மணி ஆகியிருந்தது. எழும்பி நின்று உளைவெடுத் – துக்கொண்டே பக்கத்து அடைப்பை எட்டிப் பார்த்தேன். அந்தக் கோப்பித்தூள் நிறத்தவள் நிமிர்ந்த நிலையில் கண்களை மிருதுவாய் மூடியிருந்தாள். பொன்கீற்றுப் போன்ற கூந்தல் அவள் தோளை வருடியது. கழுத்திலிருந்து நாவல் நிறத்தில் மடிந்து தொங்கிய பட்டுத்துணி அவள் மார்பில் துவண்டது. திடீரென விழித்து என்னைப் பார்த்துவிட்டு மீண்டும் கண்களை மிருதுவாய் மூடிக்கொண்டாள்... கணாவின் சொற்கள் என் காதில் விழுந்தன: 'அவள் பிறேசில்காரி, சாம். அது கோப்பித்தூளுக்குப் பேர்போன தேசம். அவளுடைய உடம்பு கோப்பித்தூள் பட்ட உடம்பு... றொபின்தான் அவளையும் விசாரிக்கப் போகிறான்..."

கணா திரும்பவும் கத்தரி வெருளி வேடம் தரித்து புறப்படும்பொழுது ஒரு கடதாசி அட்டையை எடுத்து நீட்டினார். அதில் இப்படி அச்சிடப்பட்டிருந்தது: கணா, மொழிபெயர்ப்பாளர், 905.874.2106

கணா விடைபெறும் பொழுது என்னிடம் கேட்டார்: "சாம், மாதகலில் எனக்கொரு மருமகள் இருக்கிறாள்... உனது முகவருடன் என்னைத் தொடர்புபடுத்திவிடுவாயா?"



மணி வேலுப்பிள்ளை

நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர். இவர் 'மொழியினால் அமைந்த வீடு', 'நாங்கள்– அவர்கள்' நூல்களை வெளியிட்டுள்ளார். 'மார்க்சியம் – ஒரு மீள்நோக்கு', மாயமீட்சி, 'வெட்டுக்கிளிகளை உற்றுக்கேட்டல்', 'காஷ்மீர் – சீற்றம் பொதிந்த பார்வை' ஆகிய தமிழாக்கங்களை வெளியிட்டுள்ளார்.

'கடலோடி'

நூலாசியர் திரு. நரசய்யாவுடன் ஒரு கலந்துரையாடல்

கலந்துரையாடியோர்: அ. முத்துலிங்கம், சத்தியா மகேந்திரன்



எனக்கு தெரிந்த வரையில், மகாபலிபுரம் பெரிய கோட்டை என்றெல்லாம் சொல்வார்கள். அது அவ்வாறு இல்லை. அதற்கு பெயர் சதுரங்கப்பட்டணம். இவர்கள் சும்மா மகாபலிபுரம் என்று சொல்கிறார்களே தவிர, அதற்கு ஆதாரம் இல்லை. அதனைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. இது பற்றி எழுதுவதற்கு என்ன செய்வது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கையில் செல்லப்பன் என்று ஒருவரைச் சந்தித்தேன். அவர் பழனியப்பா பதிப்பகம் என்று ஒரு வெளியீட்டகம் நடத்துகின்றார். மிக நல்ல புத்தகங்களை மட்டுமே அவர்கள் வெளியிடுகின்றார்கள். பிரதானமாக கல்வி சார்ந்த புத்தகங்களை மட்டுமே அவர்கள் வெளியிடுகின்றார்கள்.

"இதைப்போன்ற புத்தகங்களை நாம் பிரசுரிக்க தயாராக இருக்கின்றோம்". சாகித்திய மண்டலத்தின் முதல் பரிசு கிடைத்தது நாங்கள் பிரசுரித்த புத்தகங்களுக்குத் தான். அது ரா.பி.சேதுப்பிள்ளை எழுதியது. அதனால் நீங்கள் எழுதுங்கள்" என்று அவர் என்னிடம் கூறினார்.

அவர் இப்படிக் கூறியதும் எனக்குத் தைரியம் ஏற்பட்டது. எனவே, நான் கடலோடியை எழுதத் தொடங்கினேன். இடையில் கம்போடியாவிற்கு சென்றேன். அங்கே ஒரு கோவிலில் ஓர் இடத்தில் சிற்பம் ஒன்றைத் தோண்டியுள்ளார்கள். அச்சிற்பத்தில் கரை போல் ஒன்றிருக்கின்றது. கடல் இருக்கின்றது. அதில் கப்பல் ஒன்றுள்ளது. உடனே நான் முன்னர் படித்தது நினைவிற்கு வந்தது. பார்த்த விடயங்கள் எனக்கு ஆச்சரியத்தை தந்தன. எனவே, அதில் நான் தீவிரமாக இறங்கினேன். மூன்றரை வருடங்கள் கடுமையாக உழைத்தேன். கடலோடி எழுதி முடித்து, அது வெளியிடப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்த சிட்டி அதனை வெளியிட்டு வைத்தார்.

இந்நூல் பற்றிய விமர்சனங்களை 'தினமலர்' ஆசிரியராக இருந்த ஆர். கிருஸ்ணமூர்த்தி வெளியிட்டார். "நூல் அதன் ஆசிரியரது உண்மையான ஆய்வு" என்று வெங்கடாஜலபதி எழுதினார். நிறைய கடல் பயணங்கள் சென்று, இதற்கான ஆய்வுகளை நான் மேற்கொண்டேன்.

இரண்டாவது புத்தகமாக மதராசப்பட்டணம் எழுதத் தொடங்கினேன். அதற்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதற்கு கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் எடுத்தன. நூல்களை எழுதும் போது நானே அதனைக் கணினியில் தட்டச்சு செய்து, வெளியீட்டகத்திற்கு அனுப்புவேன். அத்துடன் புகைப்படத்துறையில் எனக்கு ஆர்வம் இருப்பதால் அவற்றையும் அதில் உள்ளடக்கினேன்.

கேள்வி: 'மதராசப்பட்டணம்' என்று திரைப்படம் ஒன்று வந்தது, அது உங்களது கதையா?

இல்லை. அந்த தலைப்பை அவர்கள் பயன்படுத்தியிருந்தார்கள். அதனை இயக்கியவர் எனது புத்தகம் தான் இப்படத்தை இயக்குவதற்கு ஒரு உத்வேகத்தை அளித்தது என என்னிடம் கூறியிருக்கின்றார்.

கேள்வி: நீங்கள் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், தொகுதிகளையும் எழுதியிருக்கின்றீர்கள், நிறைய விருதுகள் எல்லாம் பெற்றிருக்கின்றீர்கள். புலம்பெயர்ந்திருக்கின்ற இளையோருக்கு தமிழ்ச் சிறுகதைகளை வாசிக்க எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்று கூறுவீர்களா?

முதலில் அவர்களை தமிழ் படிக்க ஊக்குவிக்க வேண்டும். அதன் பின்னர் தமிழில் நல்ல சிறுகதைகள் என்ன என்று அவர்களுக்கு தெரிவு செய்து வாசிக்கக் கொடுக்க வேண்டும். கடுந்தமிழ் அல்லாத சாதாரண தமிழில் அதாவது, எளிய தமிழில் உள்ளவற்றை அவர்களுக்கு படிக்க

கொடுக்க வேண்டும். ஐராவதம் அவர்கள் எனது புத்தகத்தைப் பார்த்து-விட்டு அதன் எளிய தமிழுக்காக பாராட்டியிருந்தார். சுஜாதா போன்ற எளிய தமிழில் எழுதும் எழுத்தாளர்களின் கதைகளை வாசிக்க கொடுக்கலாம். அது அவர்களுக்கு வாசிப்பில் விருப்பத்தை ஏற்படுத்தும். அதிக தீவிரமானவற்றை அவர்கள் படிக்க மாட்டார்கள். நல்ல கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் அவர்களை படிக்கச் செய்யலாம். ஆங்கிலத்தில் படித்தவர்கள் அதன் சொந்த மொழியான தமிழில் படிக்க விரும்புவார்கள். எனது கதைகளும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் - படுகின்றன. ரிஷிகேசன் என்பவர் மொழிபெயர்க்கின்றார். சிறுவர்களுக்கு கதை வாசிப்பு பழக்கத்துடன், கலைகளிலும் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். கலை உணர்வு அவர்களிடம் வந்தால், தவறான விடயங்கள் அவரிகளிடமிருந்து வெளியேறிவிடும். இங்குள்ள சிறுவர்களுக்கு தமிழில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கு நாம் தான் முயல வேண்டும். தமிழில் எத்தனை நல்ல கவிதைகள் உள்ளன. இதனை நாம் எவ்வாறு அவர்களுக்கு உணர்த்துவது?

உமர்கய்யாமின் கவிதையை தேசிய விநாயகம்பிள்ளை தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

எழுத்திச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேல் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு வார்த்தையேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

இதைப் போல், எவ்வளவோ விடயங்கள் உள்ளன. ஒரு பெண்மணி 'பிள்ளைத்தமிழ்' என்ற நல்ல புத்தகம் ஒன்றை பிள்ளைகளுக்காக எழுதியிருக்கின்றார்.

கேள்வி: தமிழின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்று கருதுகின்றீர்கள்?

தமிழுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. குறிப்பாக இன்று தமிழின் எதிர்காலம் இணையத்தில்தான் உள்ளது. இதில் இரு முன்னேற்றங்கள் உள்ளன. இப்போது எதனையும் சேகரித்து வைக்க வேண்டியதில்லை. நினைத்ததும் படிக்கலாம். நிறையப் படித்தவர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் வெளியிலிருந்து எழுதுகின்றார்கள். இதனை முழுவதும் புலம்பெயர்ந்தவர்கள்தான் செய்கின்றார்கள். தமிழுக்கு மற்றைய மொழி-களிலும் பார்க்க சிறந்த எதிர்காலம் உண்டு. உதாரணத்திற்கு தெலுங்கு

அழகான மொழியாக இருந்தாலும், அதனை வளர்ப்பதற்கு வெளியில் யாரும் இல்லாத நிலை உள்ளது. தமிழுக்கு வெளியே நிறையப் பேர் உள்ளனர்.

கேள்வி: தமிழ் நாட்டில் தமிழில் படிக்காமலே ஒருவர் நல்ல தொழில் வாய்ப்பைப் பெற முடிகின்றதே! அது எப்படி?

தமிழ் படித்தால்தான் அங்கே தொழில் கிடைக்காது (சிரிப்பு). அங்கு கல்வி முறை அப்படியாகிவிட்டது.

கேள்வி: மற்றைய மாநிலங்களிலும் அப்படியான நிலை இருக்கின்றதா?

இல்லை. இந்தி படித்து விட்டு ஆங்கிலம் தெரியாமலேயே தொழில் செய்கின்றார்கள். டெல்லியில் நொய்டா என்றொரு இடமிருக்கின்றது. அங்கே தொலைக்காட்சி விற்பனை நிலையங்கள் போன்ற பல இலத்திரனியல் விற்பனை நிலையங்கள் உள்ளன. அங்கிருப்பவர்களுக்கு ஒரு வார்த்தை ஆங்கிலமும் தெரியாது. ஆனால், அழகாக தொழில் செய்கின்றார்கள். அவர்கள் வசதியாக கார்களில் பயணிக்கின்றனர். அது நம்மவர்களுக்கு முடியாமலுள்ளது. இந்தியில் நிறைய முன்னேற்றங்கள் கண்டுள்ளார்கள். இந்தியில் நல்ல கலைத்துவமான திரைப்படங்கள் வந்துள்ளன. தமிழில் என்னைப் பொறுத்தவரையில் அந்தளவு வரவில்லை. ஆனால், தமிழில் அற்புதமான எழுத்தாளர்கள் உள்ளனர். இளைஞர்கள் நன்றாக எழுதுகின்றார்கள்.

அதுவே விதைத்து அறுவடையும் செய்து கொண்டு போட்டுது

- மறைந்த முன்னாள் அதிபர் பொன். கனகசபாபதி





சூரியகாந்தி என்றதும் நம்மில் பலரின் கண்முன்னே தோன்றுவது மஞ்சள் நிறமுடைய வட்டவடிவான ஒரு பெரிய பூ. அதன் சுற்றுப் புறமெல்லாம் மஞ்சள் நிறத்திலுள்ள நீளமான இதழ்கள். பார்வைக்கு ஒரு பெரிய அழகிய பூ போலத் தோன்றும் இம்மலர் ஒரு தனி பூ அல்ல. உண்மையிலே சூரியகாந்தியை பல சிறிய மலர்களாலான ஒரு கூட்டுப்பூ என்றே கூறுவோம். சுற்றியல் பகுதியில் இதழ்கள் போன்று தோன்றுவது ஒவ்வொன்றும் ஒரு சிறுபூ. இவற்றினை கதிர்ச் சிறு பூ (Ray floret) என்போம். இவை வெறும் கவர்ச்சியைத் தருவதற்காக மட்டுமே உபயோகமாக உள்ளன. அவை தரும் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட பூச்சிகள் மகரந்தச் சேரக்கைக்கு உதவகின்றன. இச்சிறு பூக்கள் மலட்டுப் பூக்கள். இவை விதைகளைத் தோற்றுவிக்க மாட்டா. இந்த கதிர்ச் சிறு பூக்களால் சூழப்பட்டு மத்தியில் உள்ளது தனித்தனியான சிறுபூக்களாலான ஒரு கும்பல். இவை ஒவ்வொன்றினையும் வட்டத்தட்டுச் சிறு பூ என்போம் (Disc floret). இவைதான் விதைகளைத் தோற்றுவிக்கும் சிறுபூக்கள். கதிர்ப் பூக்கள் இல்லாவிட்டால் எந்தப் பூச்சியும் இவற்றின் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டாது. உங்களிற் சிலபேரைப்போலத்தான் நானும் சூரியகாந்தி என்றால் மஞ்சள் நிறப்பூ பூக்கும் தாவரம் என்றே எண்ணியிருந்தேன்

கனடாவில் கால் பதிக்கும் மட்டும். அதுவும் ஸ்காபரோவில் குடியேறிய பின்னர்தான் அறிய முடிந்தது. அதற்கும் நான் தொடர்பு வைத்திருந்த நாற்றுப் பண்ணைகளே (Nursery) காரணமாகவிருந்தன. அவை ஒவ்வொரு பருவ காலத்தின் ஆரம்பத்திலும் தம்வசமுள்ள நாற்றுக்கள், விதைகள் பற்றிய விபரப்பட்டியல் கொண்ட பிரசுரத்தினை (catalogue) எனக்கு அனுப்பி வைப்பது உண்டு. அந்த நாற்றுக்களின் பூக்களின் வர்ணப் படங்களையும் அந்தப் பிரசுரங்களில் போட்டிருப்பார்கள். ஐந்து வருடங்களின் முன்னர் ஒரு நாற்றுப் பண்ணையின் குளிர் காலத்துக்கான பிரசுரம் வந்திருந்தது. விரித்துப் பார்த்தேன். பூக்களின் வண்ணவண்ணப் படங்கள் வந்திருந்தன. எல்லாவற்றினுக்கும் கீழே சூரியகாந்தி (Helianthus) என பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.



என்னை அறியாமலேயே என் வாய் பிளந்தது. இத்தனையும் சூரியகாந்திப் பூக்களா. இத்தனை வர்ணங்களில் உள்ளனவா. வெள்ளை தொடக்கம் மஞ்சள் வரை எத்தனை நிறங்கள். தனி இதழ்களால் சூழப்பட்டது முதல் பல இதழ்கள் அடுக்காக. ஆஹா என்ன அழகு! நம்ப முடியவில்லை. நிறுவனத்துக்கே அழைப்பு விடுத்துக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் அத்தகைய வகைகளை என்றுமே, எங்கேயுமே கண்டதில்லை. ஆகவே ஒவ்வொருவகையினது விதைகளையும் அனுப்பி வைக்குமாறு பணித்தேன். வந்தன. எல்லா விதைகளுமே அவை சூரியகாந்தி விதையென ஊர்ஜிதமாயின. என் தோட்டத்தின் முற்புறத்தில் நட்டேன். பசளையின் செறிவினால் அவை அமர்க்களமாக வளர்ந்தன. பொதுவாகவே மூன்று அடி உயரம் வரை வளர்பவை. எனது பராமரிப்பின் விசேடத்துவத்தால் ஏழு அடி வரை செழிப்பாக வளர்ந்தன. பெரிய அரையடி விட்டம் உடைய பூக்கள் மலர்ந்தன. பார்த்துப் பரவசமானேன். ஒரு நாள் நான் அவற்றின் இடையே நின்றதைக் கண்ட தபால் விநியோகத்தவர், கொஞ்சம் நகைச்சுவை உணர்வுடையவர். ஓய்! உனக்கு

ஏதாயினும் நடந்து நீ தரையில் விழுந்தால் உனது மகள்மார் ஒரு வான் ஊர்தியல்லாவா வாடகைக்கு எடுத்து உன்னைத் தேடவேண்டும் என்றார். கேட்டதும் உல்லாசமாயிருந்தது. ஆனால் இந்த ஆனந்தம் நிலைக்க முடியாமல் போனதற்கு நாவூறா? ஒவ்வொரு பூவினது சுற்றுப்புற இதழ்கள் ஓர் ஐந்து நாட்களாவது அப்படியே இருக்கும். பின்னர் உதிர்ந்து விடும். ஆனால் விதைகள் முற்றாக உருவாவதற்குக் குறைந்தது ஒரு மாதமாவது எடுக்கும், பொறுமையுடன் இருந்தேன், விதைகளை எடுப்பதற்காக. ஆனால் என்னிலும் பொறுமை காட்டாத இன்னொரு ஜீவன் அதனை காத்திருக்க விரும்பவில்லை என்பது கழுத்து முறிந்து தொங்கிய பல பூக்கள் எடுத்துக் காட்டின. ஆம், ஓர் அணில் பட்டாளமே எனது சூரிய – காந்தியின் மேல் கண் பதித்தமையால் வந்த வினை. எனது தோட்டம் தனது அழகு கெட்டு அவலட்சணமாகக் காட்சி தந்தது.

ஆஹா! அழகாயுள்ளதே எனத் தெருவால் போவோர் பார்த்தவர்கள் இப்போ ஓஹோ! இப்படி அவலட்சணமாய் உள்ளதே எனக் கழிவிரக்கம் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. 'அன்று விட்டேன் கொண்டலடி' எனத் தமிழில் ஒரு கூற்று உண்டு. எனது சூரியகாந்தி ஆசைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன். அந்த ஆசையை விட்டே ஐந்து வருடங்கள் ஆகியது. மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது மருமகன் ஒருவன் வதியும் டென்மார்க் நாட்டினிற்குச் சென்றிருந்தேன். சமதளமான அழகிய பூமி. நிறையவே நாடெங்கிலும் காற்றாலைகள் காணப்பட்டன. நாடும் நல்ல குளிர்ச்சியாகக் காணப்பட்டது. அவனது வீட்டில் போய் இறங்கிய என்னை பொலிவுடன் பூத்துக் குலுங்கியபடி சூரியகாந்திச் செடிகள் வரவேற்றன. என்னவை போன்று இராட்சத வளர்ச்சி இல்லாமல் அழகாக அளவோடு வளர்ந்திருந்தன. மஞ்சள் நிறப் பூக்கள்.

எனது பிரலாபத்தை– காட்ட வேணுமே. ஆகவே இந்தச் சூரியகாந்–தியில் வேறும் பல நிறங்கள் உள்ளன தெரியுமோ என நான் கேட்டேன். இல்லையே மாமா என ஆச்சரியம் கலந்த ஏகோபித்த குரலில் கணவனும் மனைவியும் ஒத்திசைத்தனர். நான் அங்குபோய் அந்த விதைகளை அனுப்பி வைக்கிறேன் என்றேன். நான் ஊருக்குத் திரும்பும்போது விமான நிலையத்திற்கு கூட்டி வந்த மருமகன் குறியே கண்ணாக மாமா சூரிய காந்தி விதைகளை மறக்காதீர்கள் என்றான். அவன் என்னிடம் படிக்கவில்லை. ஆகவே எனது ஞாபகசக்தி பற்றி அதிகம் அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை. மறக்காமல் அடுத்த வருட ஆரம்பத்தில் சிலவகை விதைகளை அனுப்பி வைத்தேன். அவ்வருட முடிவில் அவனது மைத்துனரின் மகளது சாமர்த்தியச் சடங்கினுக்கு வந்தான். எப்படிச் சூரியகாந்தி எனக் கேட்டேன். அதை ஏன் கேட்கிறீர்கள் மாமா. ஊரே

படையெடுத்து விட்டது, பார்த்து ஆச்சரியப்படு– வதற்கு. பலர் விதை கேட்டார்கள். சிலருக்குக் கொடுக்க முடிந்தது என்றான்.

இம்முறை வசந்தகாலத்தில் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. எனது முற்புறத்துப் பூந்தோட்டத்திலும் பக்கத்து காய்கறித் தோட்டத்திலும் மறுபக்கத்து வாசல் பக்கமாகவும் மூன்று சூரியகாந்திச் செடிகள் தலை காட்டின. நான் விதை போடவில்லை. சூரியகாந்திச் செடிகளை நான் பயிரிட்டே ஐந்து வருடம் சென்று விட்டது. அப்படி என்றால் இவை எப்படி முளைத்தன. யோசித்துப் பார்த்த பொழுது இது அணிலின் உபகாரமாகத் தான் இருக்க வேண்டும் என உணர முடிந்தது. நாம் செய்த தவறான செய்கையால் இவன் மனமொடிந்து சூரியகாந்தியைப் பயிரிடாமல் விட்டு விட்டானே. பாவம் நாமாவது உதவலாம் என்ற நல்லெண்ணத்திலே விதைகளைக் கொண்டுவந்து எனது தோட்டத்தில் இட்டுவிட்டன போலும்.

நல்ல ஜென்மங்கள். எங்கும் உபகாரிகள் இருக்கவே செய்கின்றன என என் நெஞ்சம் வாழ்த்தியது. பக்குவமாக அவற்றினை வளர்த்தேன். வாளிப்பாக வளர்ந்து பூத்தன. மஞ்சள் நிறவகை. அழகாக இருந்தது. அடுத்த ஆண்டு ஏனைய வகை விதைகளையும் வரவழைத்து இன்னு மொரு முறை பயிரிட்டால் என்ன என எனது மனதில் ஒரு அபிலாசை ஏற்பட்டது. பார்த்தவர்களில் சிலர் எமக்கும் விதை தாருங்கள் என வேண்டினர். தாராளமாகத் தரலாம் என்றேன். அந்தோ? காத்திருந்தவன் பெண்டிலை நேற்று வந்தவன் கொண்டுபோன கதையாயிற்று.

விதை வர எங்கே விட்டன என் அழையா விருந்தாளிகள். இதழ்கள் உதிர முன்னரே அவர்களுடைய அறுவடை தொடங்கி விட்டது.

உரிமையுடன் செயற்பட்டனர் என்னைக் கண்டால். மாத்திரம் பாய்ந்தோடின. ஆகவே எனது சூரியகாந்திச் செடிகள் யாவும் தலைவிரி கோலமாக நின்றன. அவற்றினைக் கட்டிப் பிடித்து அழாத குறையாக இனிமேல் உங்களோடு சகவாசம் வேண்டாமென்றேன். வேறு என்ன செய்யலாம்?

அவைகளே விதைத்தனர் அறுவடையும் செய்து கொண்டனர். என் தலையில் மா அரைத்த கதையாக முடிந்தது.

[நொவம்பர் 15, 2014 இல் விளம்பரம் இதழில் வெளிவந்த கட்டுரை]

மூன்று கிளிகள் சுதந்திரமாக பறக்கின்றன

- செழியன்

இரண்டு பெண்கள் என்னை பார்ப்பதற்காக எனது வீட்டு படலைக்கு வந்திருந்தார்கள். படலைக்கு பூட்டுக் கிடையாது. ஆனால் என்னுடைய அம்மா தான் பெரும் பூட்டு.

'அவனை நீங்கள் ஏன் பார்க்க வேண்டும்?' என்று பேசி துரத்திவிட்டுட்டார்.

'என்ன சிவகுமார்' உம்மை பார்க்கவே ஒரு பொம்பிளைகளும் வரக் கூடாதாம். இப்படி சொல்லி உங்கட அம்மா எங்களை துரத்திவிட்டுடா. ஒரு ஐந்து வீடு தள்ளி இருக்கின்ற குலரஞ்சி அக்கா இப்படி எனக்குச் சொன்னதும் சிரிப்புத்தான் வந்தது.

குலரஞ்சி அக்காவின்ட பிறந்த மாதம், பிறந்த திகதி எல்லாம் என்னுடைய தேதி தான். ஆண்டு தான் வித்தியாசம். குலரஞ்சி அக்காவின் மூத்த அண்ணா தான் எங்கள் உரும்பராய் இந்துக் கல்லூரியின் கணக்காளராக இருந்தவர்.

'அக்கா என்ட அம்மாவை பத்தி உங்களுக்கு தெரியும் தானே' என்ன விசயம்?

'இல்லை சிவகுமார்' ஆறு மாதமாய் வீட்டை விட்டு எங்கையோ ஓடி' எங்கையோ ஒழிச்சு போய்ட்டு வந்திருக்கிறீர்'. நீர் எங்க போனீர் என்று எங்களுக்கும்'. உங்கட அம்மா அப்பா ஒருத்தருக்குமே தெரியாது. ஆனால் சிவகுமார்.. நீர் திரும்பி வந்திட்டீர் என்று கேள்விப் பட்டோம்' அதுதான் பார்த்திட்டு போகலாம் என்று வந்தனாங்கள். எல்லாம் நல்ல படியா முடியும் தானே?'

இப்ப இந்த சுவாமிகளையும், ஆசாமிகளையும் பார்க்கின்ற ஆசை போலத்தான்' அந்த நாட்களில் போராளிகளை பார்க்கின்ற ஆசை மக்களுக்கு.

அந்த நாட்கள் இனிமையான நாட்கள். எமது மரணத்திற்கு எத்தனை நாட்கள் என்று நாங்கள் நினைப்பதே இல்லை. அது அடுத்த நிமிடமாய் இருக்கும் என்பதே நம்பிக்கை.

நான் கடல் கடந்து தமிழ் நாட்டிற்கு சென்று வந்தது அந்தக் கிராமமே அறியும். இப்போது உள்ளது போல் காட்டிக் கொடுகின்றவர்கள் இல்லாத அற்புதமான நாட்கள் அது. இப்படி எத்தனையோ அக்காமார், அண்ணன்மார், நண்பர், கிராமங்கள் என்று மக்கள் எங்கள் பின்னால் நின்ற நாட்கள் அது.

ஆறு மாதம் கழித்து நான் நாடு திரும்பியதும் முதலில் எனது வனஜா அக்கா வீட்டுக்குத் தான் சென்றேன். எதிர்பாராத விதமாக என்னுடை குரு அப்பா அங்கே நின்றார். நான் பயந்து போனேன்.

எனது அப்பாவுக்கு பயங்கர மகிழ்ச்சி. 'தம்பி வீட்டுக்கு போ' என்று உத்தரவு இட்டார். பின்னர்தான் என் அப்பா சொன்னதைக் கேள்விப் – பட்டேன் 'எனக்கு ஐந்து பிள்ளைகள்'. மூத்தவனை நாட்டிற்கு கொடையாக கொடுத்துவிட்டேன்.

இப்படி எத்தனை தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை நாட்டிற்காக கொடுத்திருக்கின்றனர்? கணக்கிட முடியுமா?

குலரஞ்சி அக்கா வீட்டு முன் படலையில் மல்லிகைப் பந்தல் இருந்தது. காலையில் அந்த வீட்டைக் கடக்கையில் மல்லிகைப் பூக்கள் முற்றத்திலும், வீதியிலும் கொட்டோ கொட்டு என்று பரவிக் கிடக்கும். அந்த வாசனையோ அற்புதம்.

அது போலத்தான் போராளிகளும் அந்த நாட்களில் மல்லிகைப் பூ கொட்டு கொட்டு என்று கொட்டுவது போல் கொட்டினார்கள். அப்படி கொட்டிய முத்துக்களுக்கு தெரிந்த வீடுகள் பல. அப்படி ஒரு வீடுதான் எனது வீடு.

இப்ப சொன்னால் நம்பமாட்டார்கள். கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வன்னி என்று பெண் போராளிகள் வந்து குவிந்து கொண்டிருந்த நாட்கள்.

அப்படி ஒரு நாளில் தோழர் ராஜன் என்னிடம் வந்தார். நூறு பூக்கள் மலரட்டும் என்று அந்த சீன மேதை சொன்னது போல் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு பூ தான் இந்த ராஜன்.

'தோழர்' ஒரு பெண் எங்கட அமைப்பில சேரவேண்டும் என்று நினைக்கிறா. ஆனால் அவருடைய அப்பா அதை மறுக்கின்றார். நீங்கள்

வந்து பேசி அதை முடித்து வைக்க வேண்டும்.

'எந்த இடம்'

கட்டப்பிராய். தோழர் சுரேஸ் இன்ட மருமகள்

'அட நம்மட தோழர் சுரேஸ் இன்ட மருமகளா?'

அந்த வீடு எனது தாய் வீடு மாதிரி. தோழரை தெரியும். தோழரின் அம்மாவை தெரியும். அவரின் தம்பி சஸ்வேஸ் மூத்த அக்கா மலர் அக்கா அவவையும் தெரியும். எல்லாருமே இந்த நாட்டிற்காகத்தானே வாழ்கின்றார்கள். பிறகு என்ன? என்ற சிந்தனை எனக்குள் ஏற்பட்டது.

'இல்லைத் தோழர் அந்த பெண்ணின் அப்பாதான் தடையாக இருக்கின்றார்'

ஒரு நாள் இரவு தோழர் ராஜனுடன் அந்த வீட்டுக்கு சென்று அந்த முகம் அறியாத பெண்ணின் தந்தையுடன் கதைத்தேன். அவர் தனது மகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக செல்வதை ஏற்றுக் கொள்ளவே இல்லை.

சரி எல்லாம் முடிந்து விட்டது என்று நானும் ராஜனும் புறப்பட்டு சைக்கிளில் ஏறும் போது அந்த வீரத்தாய் வந்து ஒரே ஒரு சொல் சொன்னார்.

'அவள் எங்கள் வீட்டில் இருந்து கொண்டே உங்களோடு பணியாற்றட்டும்'

நாட்டிற்காக தனது மகளை. அந்த தேவதையை பரிசளித்த ஒரு வீரத் தாயை அன்று நேரினில் கண்டேன்.

இப்படி எத்தனையோ தேவதைகள் நாட்டிற்காக பரிசளிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று அனாதைகள் ஆக உடன் பிறப்புகளினாலும், பெற்றார்க ளினாலும் மக்களினாலும் நிராகரிக்கப்பட்டு, வாழ்க்கை என்பதே இனி இல்லை இனி வாழ்வதா சாவதா?. என்ற கேள்வியோடு கண்ணீர் மட்டுமே மிஞ்சி இருக்கின்றது இவர்கள் வாழ்க்கையில்.

இது மட்டுமா? இந்தக் கண்ணீர் கதைகளை சொல்வதுக்கும், எழுதுவதுக்கும் கூட முடியாத நிலையில் இருக்கின்ற அந்த பெண் தெய்வங்களை யார் நினைக்கின்றார்கள்?

ஒருவர் எழுதியிருந்தார் 'ஒரு தெய்வத்தை விபச்சாரியாகப் பார்த்தேன்'. நான் அவளுக்கு உதவி செய்யச் சென்றிருந்தேன். ஆனால் அவளோ என்னை. என்று நினைத்து விட்டாள். பின்னர் என்னை அண்ணாவாக ஏற்றுக்கொண்டு கதறி அழுதாள். வறுமை. நிராகரிப்பு இதுதானா நாம் இந்தப் பெண் தெய்வங்களுக்கு கொடுத்த பரிசு?

சில காலங்களுக்குப் பிறகு ஓர் இரண்டு தெய்வங்களைப் பார்த்தேன். சந்தோசமாக இருக்கின்றார்கள். ஏனைய தெய்வங்கள் எல்லாம் எங்கே? என்ற கேள்விக்கு அவர்களிடமும் பதில் இல்லை.

யாரோ சிலர் சொன்னார்கள் ஒருத்தி தற்கொலை செய்து விட்டாள் என்று இன்னொருத்தி சிறையில், வேறொருத்தி எங்கே என்றே தெரிய-வில்லை. ஒரு நம்பகரமான செய்தி கிடைத்தது, ஒருத்தி, கிறிஸ்துவின் மகளாக சாமியாராக போய்விட்டாள் என்று.

கொட்டோ கொட்டு என்று கொட்டிய இந்த மல்லிகைப் பூக்கள் எல்லாம் எங்கே?

ஒரு பூ மட்டும் என்னோடு வாழ்கின்றது. அந்த தேவதை மூன்று பெண் குழந்தைகளுக்கு தாயாக, ஆனால் ஒரு கூண்டுக் கிளியாக. என்னோடுதான்.

ஆனால் அவர் பெற்ற மூன்று கிளிகளும் கூண்டு கிளியாக இருக்க மாட்டோம் என்று சிறகசைத்து பறந்து திரிகின்றன. அதை பார்க்கும் போது ஆச்சரியம் மகிழ்ச்சி.

இந்த தேவதையை எனக்கு தன்னை அறியாமலே பரிசளித்த தோழன் ராஜன் இன்று உயிரோடு இல்லை. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பயிற்சி பெற்று பின்னர் தமிழ் நாடு கும்பகோணத்தில் நடந்த மோட்டார் பயிற்சியில் எதிர்பாராத விதமாக இறந்து போனார்.



செழியன்

ஈழப்போராட்டத்தின் இலக்கிய முன்னோடிகளில் ஒருவர். 'மரணத்தின் வாழ்வு' தொகுப்பின் ஊடாக அறிமுகம் ஆனவர். அடக்கப்பட்ட மக்களுக்காக தனது செயலை தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்.

என் படுக்கை அறைக்குள் நுழைந்திருந்தது மரம்

- திருமாவளவன்

'இது நம்ப முடியாதது. கவிஞனின் வெறும் கற்பனை." இப்படி நீங்கள் எண்ணக்கூடும். ஜெயமோகனின் அறம் தொகுப்பின் ஒரு கதையைப் படித்து முடித்த போது தலைமாட்டோரம் தூக்க விலங்கு இருந்தது. என் முகத்தை வாஞ்சையோடு நக்கியது. அது எப்போது என்னை விழுங்கியது. இப்போது நினைவில் இல்லை. திடீரென ஏதோ ஒருவித அமுக்கம். இந்த சிறிய அறைக்குள் ஒரு பெரிய யானை நுழைந்துவிட்டதைப் போல அல்லது நெடுந்தூரம் விமானத்தில் பறந்து மெல்லத் தாழ இறங்கும்போது உடல் உணர்வது போன்ற ஒரு வகை அசுமாத்தம்.

எதிரேபார்த்தேன். என் கால்மாட்டோரம் ஒரு கிழவர் இருந்தார். அவரை முன்பு எங்கோ பார்த்தது போன்ற பிரமை இருந்தது. மேலே 'சேர்ட்' அல்லது தோளில் ஒரு துவாய்த் துண்டு கூட போட்டிருக்கவில்லை. அவிழ்ந்து தொங்கும் நீளத் தலைமுடியிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

வெளியே நல்ல உறைபனிக் குளிர். இருந்தும் அவரது உடலில் நடுக்கம் இருக்கவில்லை. ஒரு மல்யுத்த வீரனின் உருக்குலைந்த தேகம் போல தோன்றியது. "இந்தக் குளிரில் ஒரு எப்படி 'ஜக்கட்' கூட இல்லாமல் வந்திருக்கிறீர்கள்?"

பதில் இல்லை. கிழவரின் உடலில் சிறு அசைவு கூட இல்லை. கண்கள் மட்டும் விடிவெள்ளி போல சுடர்ந்தவண்ணம் இருந்தது. அந்தப் பார்வை என் மீது நிலை குத்தி நின்றது. அதில் ஒளிர்வது பரிவா, பரிகாசமா, கோபமா அல்லது சாந்தமா? எதுவும் எனக்குப் புரியவில்லை. மனசை கூசவைக்கும் அந்தப் நெருப்புப் பார்வையை எதிர்கொள்ளத் திராணியற்று தலையைக் குனிந்து கொண்டேன். மௌனமும், இறுக்கமும் நிறைந்த அந்தச் சூழல் எனக்குள் ஒருவித அச்சத்தைத் தந்தது. உண்மையில் கொஞ்சம் பயந்து போனேன். இப்போது மௌனத்தை கலைக்க ஏதாவது பேசியாக வேண்டும் போலத் தோன்றியது.

"இதென்ன கோலம்? அப்பொழுதெல்லாம் எவ்வளவு திடமாகவும்,

உறுதியாகவும் இருந்தியள். என்ன நடந்தது? இடையில் ஏதாவது வருத்தம் கிருத்தம் வந்து இருந்தீர்களா?"

மீண்டும் நானே விசாரிக்கிறேன். அதற்கும் மூச்சுவிடவில்லை. மௌனம் சில சமயம் அழகு. மனத்தின் பரிபாசை என்றுகூடச் சொல்லலாம். அதற்காக எப்போதும் அப்படியே இருக்கும் என்றல்ல. பல சமயங்களில் எரிச்சலூட்டும். சினம் கொப்பளிக்கும். எழும்பி அறைய வேண்டும் போலத் தோன்றும். இவர் என்ன பேச்சிழந்து போனாரோ? கொஞ்சம் வாயைத் திறந்தால் என்ன குறைஞ்சா போய்விடும். ஆனால், பார்வையைப் பார். நெருப்பு மனசைச் சுடுகிறதே.

"என்ன ஒண்டும் கதைக்கிறியள் இல்லை?" குரலை உயர்த்தி கொஞ்சம் உறைப்யாய்க் கேட்டன்.

கிழவன் திடீரென சற்று அசைந்து இருந்தான். அப்போது தான் பார்த்தேன். அவனது ஒரு கை இல்லை. கை இழந்த உடலின் சுவடு பெரும் சூறைக்கு காவு கொடுத்த பெருமரத்தின் பொந்து போலத் தெரிந்தது. என்னை அறியாமலே, "ஓ! நீங்களா?"

அவ்வளவுந்தான் தெரியும். திடீரென இருட்டு. என் முன்னே எதுவும் இல்லை.

"இப்போதாவது தெரிஞ்சுதா? நீ இனி என்னைப்பார்க்க வரமாட்டாய். அது எனக்கு வடிவாய்த் தெரியும். உன்னைப் பார்க்க வேண்டும் போல வாஞ்சையாய் இருந்திச்சு. வந்தேன்."

திடுக்கிட்டு முழிச்சுப் பார்த்தன். கனவு. துணையின் பக்கம் திரும்பினேன். அவள் நல்ல உறக்கத்தில் இருந்தாள். இது யாருடைய குரல். ஒரு கணம் என் அப்பாவின் குரல் போலவும் இருந்தது. பிறகு இல்லை என்றும் தோன்றியது. ஒருவித அச்சம் படர்ந்தது. தேகம் நடுங்கியது. உடல் வியர்க்கத் தொடங்கிவிட்டது. வெளியே சன்னலினூடு என் பார்வை விழுந்தது. முழு நிலவு. நல்ல பால் போலக் காயுது. கடும் காற்று. வில்லோ மரத்திலிருந்து தொங்கும் நீண்ட தூவல்கள் வெறிகொண்டவளின் மயிர்கற்றை போன்று காற்றில் காற்றின் திசையில் அங்கும் இங்குமாய் அலையுது.

மௌனகுரு அண்மையில் சந்திரலேகாவின் ஒரு நடனத் தோற்றத்தின் படத்தை முகப்புத்தகத்தில் பதிவேற்றியிருந்தார். சந்திரலேகாவின் அலைபோன்ற நீண்ட வெண்கேசம் நினைவுக்கு வந்தது.

அன்று முழுவதும் ஊரின் நினைவுகளில் மனம் ஊறிப்போய் கிடந்தது.

2.

கடந்த வருடம் என் மகளின் திருமணம் நிகழ்ந்தது. அது புரோகிதர் இல்லா மணவிழா. அதற்கான சடங்கு ஒழுங்குகளை தயாரித்துக் கொண்டிருந்தேன்.

விழாவை எப்படி ஆரம்பிப்பது?.

முன்பெல்லாம் ஊரில் ஒரு விழாவென்றால் தேவாரத்தோடு ஆரம்பிப்பார்கள்.

பின், "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி" என்ற தமிழ் வாழ்த்துப் பாடலாக அது மாறியது. அண்மையிலே திராவிட கீதம் என்ற தலைப்பில் "நீராரும் கடலுடுத்த" என்ற பாடல் ஒரு வெளியீட்டு விழாவின் தொடக்கமாக ஒலித்தது. "திராவிட நற்திருநாடு" என்று ஒருவரி வருகிறது. அதனாற்போலும் அது திராவிட கீதமாகிவிட்டது.

பெருமழையின் பின் பாய்கிற வெள்ளம் பள்ளத்தின் திசையில் ஓடிக்கொண்டிருக்கும். அதைத் தடுத்து நிறுத்தி மெட்டுக்கேற்றுதல் என்பது கல்லிலே கயிறு திரித்தலுக்கு ஒப்பானது. வேண்டுமாயின் வேறொரு பள்ளத்தில் திருப்பிவிடலாம்.

ஈழப்போரும் அப்படித்தான். ஈழத்தமிழரின் எல்லாப் பாண்பாட்டு விழுமி-யங்களையும் வேறொரு பள்ளத்தில் திருப்பிவிட்டது. இப்போது விழாக்கள் அனைத்தும் ஒருநிமிட மௌன அஞ்சலியுடன் தொடங்குவதே புது வழக்கு. யாருக்கு அஞ்சலி என்பது நடத்துவோரைப் பொறுத்தது. அது விழாவுக்கு விழா வேறுபடும். ஒரு திருமணவிழாவின் ஆரம்பத்தை அஞ்சலியோடு தொடங்க மனம் ஒப்பவில்லை.

என்னதான் நவீனம், பின் நவீனம், அதி பின்நவீனம் என புதிசுபுதிசாய் எது வந்தாலும்முன்னே செல்கிற தலைமுறைக்கு நான் கொஞ்சம் பழைய மனிசன் தான். அது ஏதோவொன்றுக்கு பழகிப்போன மனசு. சிலசமயம் சொல்வழிகேட்பதில்லை. ஒரு காப்பு கவிதை இருந்தால் அழகாக இருக்கும் என்று தோன்றியது. பழந்தமிழ் இலக்கியங்களில் காப்புப் கூறி தொடங்குதல் மரபு. அப்படியே முடிவு செய்தேன்.

இப்போது அதிலும் சிக்கல் வந்துவிட்டது. எந்தக் கடவுளை வேண்டி 'காப்பு' கேட்பது. மனிதர்கள்தான். கடவுளை உருவாக்கினார்கள் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. சிறு வயதில் விழுந்த பொறி வயது ஏறஏற பெரு நெருப்பாயிற்று. இருந்தும் இப்போதும் மனம் அவாவும் போது கோவிலுக்கு போவேன். தனிவழியில் வரும்போது மனப்பயம் தீர உயரக் குரலெடுத்து பாடுவதில்லையா! அது போலவேதான் துன்பம் வரும்போது மனசு அவாவுகிறது. எப்போதாகிலும் அரிதாய் போகிறேன். அவ்வளவே. என் முழு நம்பிக்கையும் அறத்தின் மீதே.

சரி. இப்போ எந்தக் கடவுளை வேண்டுவது? எதை எழுதுவது? இக்கணத்தில் மனதில் தோன்றுவதெதுவோ அதுவே வரட்டும். எழுதத் தொடங்கினேன்.

என் ஊர் மூலம் முதிர் மாமருது
வானுற ஓங்கி விரிசடை பரப்பி
முறுகித் திரண்டு
வேருக்குள் உறுதிகொண்ட முதல்வன்
முன்னோர் தொடங்கி
என் ஊர் இருக்கும் வரையிலும்
மரமெனக் கருதார்
தெய்வம் என்றே கையெடுத்து தொழுத மருதன்.
மாமுனிவன்.
உன் வேர்முகம் மனதிருத்தி
இச்சிறு இணைகளின் மணவினைக்கருமம் தொடங்கினேன்
தேவரீர்!
நீயே இதற்கு காப்பு.

•

என் கவிதைகளில் பொதுவாகவே 'மரம்' பல்வேறு படிமங்களாக ஆக்கிரமித்து நிற்கும். இங்கும் அந்த மரமே என் முன் காப்புக் கவிதையாக எழுந்து நின்றது. என் ஊர் நடு நின்றது அந்தப் பெருமரம். ஊருக்கு ஊர் தேசத்துக்கு தேசம் ஓர் அடையாளம் உண்டு. ரொரன்றோ என்றால் சி.என். கோபுரம். பாரீஸ் என்றால் ஈபிள் கோபுரம். கொழும்பு என்றால் கோட்டைப் புகையிரத நிலையம். யாழ்ப்பாணம் என்றால் பனை மரம். இந்த வகையில் என் ஊர் என்றதும் நினைவுக்கு வருவது இந்தப் பெருவிருட்சந்தான்.

ஒரு தரு எத்தனை ஆண்டுகள் வாழும்? அதற்கு வயது உண்டா இல்லையா என சில சமயம் யோசிப்பதுண்டு. பள்ளியில் தாவரவியலில் படித்த ஆண்டு வளையக் கணக்கெல்லாம் சாதாரண மனித மூளைக்கு சரிப்பட்டு வராது. அதற்காக மரத்தை அறுத்து வீழ்த்தி அந்த மரத்தை கொன்ற பின் கணக்கிட்டு என்ன பயன்?

மன்னாரில் ஒரு மரம் உண்டு. ஐநூறு ஆண்டு பழமை வாய்ந்தது எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது ஐரோப்பியர் வருகையின் போது கொண்டுவந்து நாட்டியதால் இந்த ஐநூறு ஆண்டுக் கணக்கு. வெள்ளரசுக்கிளை மகிந்தன் சங்கமித்திரையால் கொண்டுவரப்பட்டதென மகாவம்சம் கூறுகிறது. அது உண்மையெனில் அதன் வயது இப்போது இரண்டாயிரத்து இருநூறு வருடங்கள்.

இங்கு காப்புப் பாடலில் நான் குறிப்பிட்ட மருதப் பெரு மரம் ஐநூறு வருடங்களுக்கு அப்பால் சில நூற்றாண்டுகளாவது முதுமைகண்டதென்பது என் ஐயுறவற்ற முடிபு. அசைக்க முடியாத நம்பிக்கை. ஐந்தாறு பேர் சேர்ந்து கட்டிப்பிடித்தாலும் கைகொள்ளாதது. அதனுடன் சூழ மேலும் சில மரங்கள். ஒரு கூட்டுக்குடும்பம் போலத் தோன்றும். இந்த மூல மரத்தில் மட்டும் ஆல், புளி, வேம்பு மற்றும் காத்தோட்டி என வேறும் சில மரங்கள். மரத்தின் பெரும் பொந்துகளில் பறவைகள் கொணர்ந்திட்ட எச்சம் முளைவிட்டு வேர்விட்டு இப்போ துணை விருட்சங்களாகிவிட்டன. அதிலும் குறிப்பாக ஆல் விழுதிறங்கி நிலத்தில் வேர்கொண்டுவிட்டது. பல இனக்கிளை கொண்ட ஒரு ஒட்டு மாங்கன்று போல இந்த மரமே பல்வேறு இன மரங்களைக் கொண்ட தனிக் காடு. இரவில் பார்த்தால் ஊரின் நடுவே மலைக்குன்றென இம்மரக் – கூட்டம் காட்சி தரும். பகலில் யானைக்கிளை நடுவே ஒரு பெரு யானை தலைமைகொள்வது போலத் தோன்றும். அதன் காலடியோரம் சிறு குளம். குளத்தில் இவை வேர்களால் நீர் அருந்துகின்றனவா அல்லது கிளைகளால் அருந்துகின்றனவா என்ற ஐயம் எழும். அந்த அளவுக்கு இரண்டும் அன்னி–யோன்னியமானவை. இரண்டுக்குமிடையே பெருத்த உறவுண்டு. குளம் நிரவியிருக்கின்ற காலத்தில் மருதன் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. புதுத்தளிர் எறிந்து சிரிப்பதும் பூக்களை உதிர்த்து மகிழ்வதுமாக இருக்கும். கோடைவர குளத்தின் சோகம் மருதனுக்கும் தொற்றிவிடும். ஆடித்தூக்கம் போல் எந்த அசைவும் இருக்காது. மயில் இறகு கொட்டுவது பழுத்த இலைகள் மெல்ல கீழ் இறங்கும். இந்த மரமும், குளமுமே என் ஊர் தொடங்க காரணமாக அமைந்திருக்கலாம். அதிலிருந்துதான் நாலாபுறமும் ஊர் விரிந்திருந்தது. முதுமையை, பிரமாண்டத்தை, அமானுசத்தை, அதிசயத்தை வணங்குவ தென்பது எங்கள் வழிவழி வந்ததொன்று. இங்கே யார் தொடக்கியதெனத் தெரியாது. ஒரு மந்தை மேய்க்கின்ற இடையன் தொடங்கியதாகச் சிலர்

சொல்கிறார்கள். ஆனால் ஊரவர் படிப்படியாக இந்த மரத்தை வணங்கத் தொடங்கிவிட்டனர். பின்னாளில் மரத்திலே கடவுளை பிரதிஸ்டை செய்தனர். பிறகென்ன ஐயர் வந்தார். பூசை முதலியன தொடங்கியது. மரத்துக்கு சொல்வதற்குத்தான் பிராமணர்களிடம் எந்த மந்திரங்கள் இல்லையே. எனவே, மந்திரங்கள் சொல்லக்கூடிய கடவுளைத் தெரிவு செய்யவேண்டும்.

இப்போது எந்தக் கடவுளை உருவகிப்பது? அவர் கனவில் வந்தார். இவருக்கு அசரீதி சொன்னார் என்ற வகையில் உப கதைகள் பரவின. மலைகுன்று என்றால் சந்தேகமே இல்லை. முருகனைப் பிரதிஸ்டை செய்துவிடலாம். இது மரம். கூடவே குளமும். பிள்ளையார்தான் பொருத்தம். ஆல் அரசு வேம்பு, பாலை ஆறு, குளம் என எந்த இடமாயிருந்தால் என்ன! ஒரு மொக்கும் முழியுமாயுள்ள கல்லை அடியில் வைத்துவிட்டால் போதும். பிள்ளையார் எனச் சொல்வது மிகச்சுலபம். அவரும் பொறுமையின் சிகரம். கோபித்துக் கொள்ளமாட்டார். ஆறு அல்லது குளத்தங்கரைகளில் மரங்களின் கீழ் பிள்ளையார் தானே குந்தியிருக்கிறார்

இங்கே கல்லெடுக்கும் வேலையைக் கூட மரம் இவர்களுக்கு வைக்க வில்லை. தன் அடிப்புறம் முழுவதும் பல வடிவங்களில் முறுகித் திரண்டு ஒரு நவீன ஓவியனின் கைவண்ணம் போல வெளிப்படுத்திக் கிடந்தது. நீங்கள் எந்தெந்த உருக்களை மனதிருத்திப் பார்க்கிறீர்களோ அந்தத்த வடிவம் அதில் தெரியும். யாரோ ஒரு ஞானக்கிறுக்கன் கிழக்குப்புறமாய் நிலத்தோடிருந்த குமிழ் போன்ற பகுதியை தெரிவுசெய்து பிள்ளையாரின் முடியெனச்சொல்லி பூ வைக்கத் தொடங்கிவிட்டான். பின் அதற்கு மேல் ஒரு காவோலையை நிழலாய் வைத்தான். தொடர்ந்து வளர்ந்தது ஒரு கிடுகுக் குடிசை. பின் மடா–லயம். பிறகு சிறு கோவில். ஊர் கலைந்தோடிய காலத்தில் ஓரளவு பெரிய கோவிலாகிவிட்டது.

முதுகிலே தன் ஓட்டைச் சுமந்தபடி மரமேறும் பெரு நத்தையைப் பார்த்திருப்பீர்கள். அப்படித்தான் வேரும், கிளையுமாய் நடுவில் தன் வீட்டைச் சுமந்தபடி மனக்கண்முன் தோற்றந்தருகிறது மரம்.

கோவில் வந்துவிட்டால் கொண்டாட்டத்திற்கு சொல்லவா வேண்டும்? பாலும், இளநீரும் பருகி வளர்ந்தது மரம். நான் நாஸ்தீகன் கிடையாது. அதற்காக முழுமையான ஆஸ்தீகனும் அல்ல. என்னிடம் கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்ற கேள்விகளுக்குப் பதில் இல்லை. அந்த ஆராய்சிக்குள் போவதும் இல்லை. இருந்தும் எனக்கும் இந்த மரம் கடவுள் போல.

உன் மிகச்சிறந்த நண்பன் யாரெனக் கேட்டால் மருதன் என்று இந்த

மரத்தின் பெயரைத் தயக்கமின்றிச் சொல்வேன். எனக்கு மிக நல்ல ஆசான். உரிமையுள்ள உறவினன். ஏதாவது மனசுக்கு துன்பம் வரும் வேளையில் முதல் நினைவுக்கு வருவது இந்த மருதன் தான். இப்போதும் கூட ஊருக்குப் போக அனுமதி கிடைத்தால் நான் பார்க்கப் பேச மனம் அவாவுகிற இடம் இந்த மரத்தடிதான். மரத்துக்கு ஞானமுண்டா? அதற்கு மனிதமொழி தெரியுமா? மனிதனுக்கு பகுத்தறிவுண்டல்லவா? இப்படி முட்டாள்த்தனமாய் மரத்தைப் போற்றலாமா? என யாருக்காவது ஐயுறவெழக்கூடும்.

புத்தன் எங்கே ஞானத்தைப் பெற்றான்? வெள்ளரசின் கீழ் இருந்தல்லவா! மணிவாசகருக்கு குருந்தை மரமல்லவா அதை அருளியது. மரத்துக்கு மொழி தெரியாமலா ஊரவர் எல்லோரும் மரத்துக்குத் தன் துயரங்களைச் சொல்கிறார்கள். மரத்தை சுற்றிச்சுற்றி மனதால் வேண்டுபவர்களை பார்த்திருக்கிறேன். மரத்தோடு வாய்விட்டு பேசுபவர்களை பார்த்திருக்கிறேன். மரத்துக்குத் தம் துயரங்களைச் சொல்லி கண்ணீர்விட்டு அழுபவர்களையும் பார்த்திருக்கிறேன்.

என் சித்தம் அரைவேக்காட்டுப் பருவத்திலிருந்த போது அப்பாவிடம் கேட்டேன்: மரத்துக்கு சக்தியுண்டா? எல்லோரும் கடவுள் என்கிறார்களே! நீங்கள் நம்புகிறீர்களா?

அவர் சொன்ன பதில் மிகச்சுவாரசியமாக இருந்தது. இமயமலை அடிவாரத்தில் பலர் நிஷ்டையிலிருந்து உயிருடன் சமாதியடைந்திருப்பதாக படித்திருக்கிறாராம். அதேபோல இங்கும் யாராவது சமாதியடைந்திருக்கலாம் என்றார்.

வித்துவசிரோன்மணி கணேசையர் இந்த மரத்தோரம் ஆச்சிரமம் அமைத்து நெடுங்காலம் ஒரு தவமுனி போலவே வாழ்ந்தார். அவர் காலத்தில் அவரிடம் பாடங்கேட்காத தமிழ்ப் புலமையாளர்கள் இல்லை. அவர்கள் எல்லோரையும் மரம் அறியும். அவருக்கும் மரத்தின் மொழி தெரியும். மரத்தோடு பேசுவார். மரத்திடம் வேண்டுதல் வைத்து ஊனின்றி பழிகிடப்பார். தான் நினைத்தவற்றை அதனிடம் இருந்து சாதித்துக்கொள்வார்.

ஒரு சமயம் பெரும்புயல். மரத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. கிளையை காவு கொடுக்க தயாராகிவிட்டது. அது மரத்தின் வலக்கை போன்ற பெரிய கிளை. வீழ்ந்தால் மரத்துக்கென மனிதர் இணக்கிய வீட்டின் மூலமே சிதைந்துவிடும். அது கணேசையரின் பெரும் உழைப்பில் கட்டிய குடில். ஊன் உறக்கமின்றி மரத்தின் கீழ் பழிகிடந்தாராம். முடிவில் விலகி வீழ்ந்ததாம் கொம்பர். மரத்துக்கும், அவருக்குமான உறவு மிக நெருக்கமானது. சிலசமயம்

அவரைப் பார்க்கும்போது மரமே மனிதனாய் உருவெடுத்து உலாவுகிறதோ என எண்ணத் தோன்றும் என என் தாயார் சொல்லுவார்.

கொம்பரை இழந்த தடம் பெரிய ஒரு மனிதன் நடந்து செல்லக்கூடிய பெரும் பொந்து போலத் தோன்றும். கல்கியின் சிவகாமியின் சபதம் நாவலில் புலிகேசி என்றொரு புத்த பிச்சுவின் பாத்திரம்வரும். அதற்கு மணியனின் ஓவியம் மிக அழகாக இருக்கும். மொட்டைத் தலையும், முறுகித் திரண்ட உறுதியான தேகமும், தீர்க்கமான விழிகளும் என் மனதை விட்டகலாத ஓவியம். கடைசியில் படையெடுத்துச் சென்ற பல்லவன் அவரது ஒற்றைக் கையை வெட்டிவிடுவான். எனக்கு மரத்தை பார்க்கும் போது அந்த ஓவியம் நினைவுக்கு வரும். புலிகேசி தீமை விளைவிக்கும் பாத்திரந்தான். இருந்தாலும் இம்மரத்தைப் பார்த்ததும் அந்த உறுதியான உடலும், கிளையிழந்த தடமும் எப்போதும் அந்த ஓவியத்தை நினைவூட்டும்.

இந்த மரத்திடம் ஆயிரமாயிரம் கதைகள் உண்டு. தன் ஊரில் குடியேறிய முதல் குடியை இந்த மரம் அறியும். அவர்களின் வாழ்வறியும். ஒவ்வொருவரின் கதையும் அதற்குத் தெரியும். தனக்கு பாலூற்றியவர்களை அறியும். அடுத்தவர்க்குப் பழி செய்தவர்களை அறியும். பழிசெய்த பாவம் கழிய பாலூற்றியவர்களையும் அறியும். யார் யாரை மிதித்து மேலே எழுந்தார்கள் என்பதை அறியும். யாருடைய நிலத்தை எவர் அபகரித்தார்கள் என்பதை அறியும். யார் கள்ள உறுதி எழுதி காணி பிடித்தார்கள், யார் எல்லை தாண்டி வேலியடைத்தார்கள், யார் பொய்ச் சத்தியம் செய்தார்கள், யார் மொட்டைக் கடிதம் எழுதி அடுத்தவர் குடும்பத்தை கெடுக்க நினைத்தார்கள், யார் யாருக்கு 'பெட்டிசம்' போட்டார்கள், யார் யாருக்கு செய்வினை வைத்தார்கள், யார் யாருக்குப் பிறந்தார்கள், யார் அருகில் நின்ற துணைமரங்களுக்கு உமி கொட்டி தீயிட்டார்கள் என்ற விபரம் எல்லாம் அதற்குத்தான் வெளிச்சம்.

சிறு வயதிலிருந்தே மருதன் எனக்கு நண்பன். நான் நினைவுக்கெட்டிய காலத்தில் இருள் பிரியும் முன்பு சின்னத்தங்கச்சிப்பாட்டி பூக்கூடையோடு வருவாள். நரை மின்னலடிக்கும் கூந்தலிலிருந்து நீர் சொட்டும். எங்கள் முற்றத்தில் செவ்வரத்தையில் அப்போதுதான் அவிழத் தொடங்கி பூக்கள் அரை மொட்டுப்பருவத்தில் இருக்கும். ஒவ்வொரு கிளையாக தாழ்த்திப் பறிக்கத் தொடங்குவாள்.

"சிவம் எழும்படா. உங்கை பார் சின்னத்தங்க ஆச்சி பூவாய்கிறா. நீ இன்னும் படுக்கையிலை சுருண்டு கிடக்கிறாய். எழும்பு. எழும்பி பல்லை மினுக்கிப்போட்டு வா! தேத்தண்ணி ஊத்திறன்."

அம்மாவின் ஆய்க்கினை தாங்க முடியாமல் பழஞ்சேலைப் போர்வையை

விலக்கி முற்றத்தைப் பார்த்தால் பனிப்புகாருக்குள்ளாலை பாட்டி பூவாஞ்சு கொண்டிருப்பது தெரியும். பாயைச்சுற்றி வைத்துவிட்டு விறகுக் கரியை பல்லில் நொருக்கி பெருவிரலால் விளக்கியபடி முற்றம் வந்தால், "வருகிறாயா என்னோடு கோயிலுக்கு" என்பாள். காலையில் போய் மரத்துக்கு பூச்சூட்டி வந்த பின்தான் ஒருமிடறு தேநீர் அவள் வயிற்றில் இறங்கும்.

எனக்கு வெடிவால் முளைத்த பருவத்தில் மார்கழி வந்தால் கொண் – டாட்டம்தான். மரத்தை பறவைகள் துயில் எழுப்பா மாதமது. ஈரப்பனிக்காற்றில் தூரத்தே சந்நிதி கோவில் மணி ஒலி கேட்டால் போதும் அம்மா உசுப்பி எழுப்பிவிடுவாள். வரதன், வணங்காமுடி, லிங்கன் என ஒவ்வொருவராய் சேர்ந்து ஒன்றாய் கூடிவிடுவோம். விநாயகமூர்த்தி அண்ணைதான் எங்கள் வழிகாட்டி. மரத்தைச் சுற்றி பள்ளியெழுச்சி பாட மரம் சோம்பல் முறித்து விழிக்கும். கிழக்கு வெளுக்கும். இந்த நாட்களில் திருவாதவூரர் புராணபடனம் நடக்கும். விநாயகமூர்த்தி அண்ணன் செய்யுள் படித்து சந்திபிரித்து அடியெ– டுத்துக் கொடுக்க பண்டிதர் சங்கரப்பிள்ளை அதை விரித்துப் பரப்பிப் பொருள் சொல்லுவார். அவர் ஆசிரியராக இருந்தவர். நாங்கள் எப்போதும் அவரை உச்சிவிட்டு குளக்கட்டில் போயிருந்து வேடிக்கை பார்ப்போம்.

என்னைப் பிடித்துக் கட்டிவிட்டால் மற்றவர்கள் தானாக வந்து இருந்துவிடுவார்கள் என்பது அவரது உத்தி. எனக்கு புராணபடனப் புத்தகம் வாங்கித் தந்து தினமும் ஐந்து செய்யுள்களை படித்து சந்தி பிரித்து பொருள் சொல்ல எடுத்துதர வேண்டும் எனக் கட்டளையிட்டார். அங்கேதான் என் இலக்கிய உலகம் முகை அவிளத் தொடங்கியது. சின்னப்பொடியனாய் திரிகையில் தென்னங்கோம்பைப் பாதியில் சுள்ளிகளை நிறைத்து தீமூட்டி குளத்தில் புகைக்கப்பல் மிதக்கவிடுவோம். தை பிறந்தால் மழை முடிந்து சூரியன் மின்னத் தொடங்கும். குளம் நிரவியிருக்கும். அதிகமும் மதிய நேரங்களில் மரத்தடி சனசஞ்சாரமற்று அமைதியாய் இருக்கும்.

திருவிழாவுக்கு கட்டிய வாழைக் குற்றிகளை இணைத்து படகோட்டுவோம். படகு கவுண்டு நீரில் வீழ்ந்து நனைந்த கழிசானைப் பிழிந்து காயவைத்துவிட்டு அம்மணமாய் அலறிச் செடியின் பின்னால் மறைந்திருப்போம். எப்படித்தான் காயவைத்து போட்டுக்கொண்டு போனாலும் அம்மாவுக்கு எப்படியோ மணத்துவிடும். பிறகென்ன சொல்லவா வேண்டும்? பூவரசந்தடிப் பூசைதான்.

மறுநாள் மீளப்போனால் எப்படி நல்ல அடி கிடைத்ததா என்பது போல மெல்லிய வாடைக்காற்றில் அசைந்து துளிர் இதழ்களால் நக்கல் சிரிப்புதிர்க்கும் மரம். மீசை முளைத்து வாலிபம் கண்ட பின் சோலிகள் கூடிவிட்டன. பாலினக் கவர்சிகள் தொடங்கிவிட்டன. மனசு சொல்வழி

கேட்காது. அந்தப் பருவத்தில்தான் என் அப்பாவை கான்சர் மிருகம் தின்று தீர்த்துவிட்டிருந்தது.

வீட்டிலே வறுமை. எப்போதும் வயிற்றிலே பசி. மனசிலும் கூட. என் பெரும் பொழுது மருதனோடுதான் தான் கழிந்தது. மருதுக்கு பூசைசெய்யும் ஐயரின் பிள்ளைகள் என் வயதொத்தவர்கள். அதனால் எனக்கு நண்பராயினர்.

"கொஞ்சம் நில்! போகும்போது என்னை சந்தித்துவிட்டு போ!"

எனக்கந்த குறிப்புணர்த்தல் தெரியும். ஆட்கள் எல்லாம் போனபின்பு எனக்கு ஐந்தாறு மோதகம் கிடைக்கும். வெள்ளி அல்லது விசேட நாட்கள் என்றால் அவருடைய பங்கிலிருந்து மூன்று நான்கு தேங்காய்ப் பாதி தருவார். நினைவுகள் எவ்வளவு அற்புதமானவை. அப்படி ஒன்றில்லை என்றால் இவற்றினூடு நான் இன்று வாழ முடியுமா? நினைவுகள் அல்லவா என் வாழ்வை அர்த்தப்படுத்துகின்றன. நினைவுகளூடல்லவா நான் இவர்களை நினைத்துப்பார்க்கிறேன்.

மனசின் இச்சைக்குள் வீழ்ந்த பெண்ணின் பெயரின் முதலெழுத்தை என் பெயரின் முதலெழுத்துடன் சேர்த்து மருதின் கீழ் குளத்துப் படிக்கட்டில் ஆழப் பொறித்து வைத்திருந்தேன். அது இன்றும் அழியாமல் இருக்குமா, இல்லையா அல்லது அவள் இருக்கிறாளா, இல்லையா என்பதெல்லாம் தெரியாது. ஆனாலும், நினைவிருக்கிறது இன்றும் ஈரமாய். அலை எழும்ப கடலிலே வீசி எறிந்த கல் போல. பளபளத்தபடி அடிமனசின் ஆழத்தில்.

இந்தக் காலத்தில்தான் எனக்கு காண்டேகர் அறிமுகமானார். 'கிரௌஞ்ச-வதம்' கிடைத்தது. பல முறை மீளமீளப் படித்தேன். 'கருகிய மொட்டு' கிடைத்தது. முதல் தடவை பெரிதும் உள்ளே செல்ல முடியவில்லை. பிறி-தொரு பொழுதில் முழுவதும் படித்து முடித்தேன். அது ஐந்து சோடி கணவன் மனைவியரின் தாம்பத்தியம் தொடர்பான நாவல். எனக்கு நாவலை விடவும் அதை என்னிடம் படிக்கத் தந்த பெண்மணியே இன்றுவரை நினைவில் நிற்கிறார்.

கு. நல்லபெருமாளின் 'கல்லுக்குள் ஈரம்' கிடைத்தது. மு. வரதராசனின் பல நாவல்கள் படித்தேன். எனக்கு இலக்கியத்தின் மீது ஆவல் பிறந்தது. அந்த நாட்களில்தான் கப்பல் மாமா தெருவோரம் அழகான வீடு கட்டி ஊருக்கு குடி வந்திருந்தார். அவரின் பிள்ளைகளில் மூத்தவள் மிக அழகி. பெண்களை தங்கவிக்கிரகம் என உவமிப்பார்களே! அது முற்றிலும் அவளுக்குத்தான் பொருத்தம். கொழும்பில் வாழ்ந்தவள். செல்வச் செழிப்பு

வேறு. ஒரு சினிமா நடிகை போலவே தோற்றந்தருவாள். அவளைப் பின்–தொடர்ந்த என் வயதொத்தவர்கள் பலர். முடியாத கட்டத்தில் அவளை துன்புறுத்தியவர்கள் வீட்டுக்கு முன்னால் சீனவெடி கொழுத்திப் போட்டு வெறுப்பேற்றியவர்கள் எனப் பல சம்பவங்கள் உண்டு. அதில் அந்த மரத்தடியில் சேரும் ஒரு நண்பன் இருந்தான். அவனுக்கு இவள் ஒரு வகையில் மச்சாள் உறவு. அவளுக்கு எங்கள் ஊரின் 'கூனி மாமா'வின் மகன் பாடசாலையில் வகுப்புத் தோழன். உறவினனும் கூட. குறிப்பிட்ட சில வார நாட்களில் அவர்கள் இருவரும் சைக்கிளில் அந்த மருதை கடந்து காங்கேசன்துறைக்கு அதிபர் 'கனெக்ஸ்'சிடம் 'ரியூசன்' போவார்கள். அந்த நாட்களையும், நேரத்தையும் கணக்கில் வைத்து அவர்கள் போகிற பாதையில் முள்ளுக் கம்பியை நிலத்தில் மறைத்து வைத்துவிட்டு மரத்தோரம் ஒட்டியிருந்து பார்ப்பான். அவளை வெறுப்பேற்றி மகிழ்கிற அல்ப சந்தோசம் ஒன்றுதான் அவன் குறி. ஒரு தடவைகூட அவன் வைத்த கண்ணியில் அவர்கள் அகப்பட்டதில்லை. மரம் அவன் செயல் கண்டு நகைத்துச் சிரிக்கும். கூட இருந்த எனக்கும் உள்ளூரச் சிரிப்புத்தான்.

ஒரு நடுப் பகலில் இந்த மருதின் நிழலிற்தான் எனது இணை தன் காதலை எனக்கு குறிப்புணர்த்தினாள். இவ்வளவு நாட்களும் இது தெரியாது அசடனாயிருந்துவிட்டேனே என அசடுவழிய நிமிர்ந்து பார்த்தேன். உச்சியிலே இருந்து ஏதோ ஒரு பெயர் தெரியாப் பறவை தன் இணையோடு ஊடலில் இருந்தது. ஏதோவொரு கிளையிலிருந்து ஒரு பூவின் தூவல் அவிழ்ந்து என் கண்ணில் வீழ்ந்தது.

போர் தொடங்கிய பிற்பாடு என் பெரும் பொழுது மருதனுடனே கழிந்தது. யாராவது ஒருவர் என்னைத் தேடிவந்து ஊரில் என் வீட்டை அடையாளம் கேட்டால் அடையாளம் சொல்லிய பின் அவன் அனேகம் மருதின் கீழ் நிற்பான். அங்கே போனால் காணலாம் என்று கூடவே விபரம் சொல்வார்கள்.

1990 ஜூலை 10ஆம் தேதி. மதியம் கழிந்து மாலை தொடங்குகிறது. மருதின் நிழலில் ஊர் கூடி நிறைந்திருந்தது. அன்று மருதனுக்கு ஐந்தாம் திருவிழா. பஞ்சமுக ஐங்கரனை தோளிலே சுமந்து ஆடும் நடனத் திருவிழா. கே. பத்மநாதனின் நாதஸ்வர இசை பெரு மழையெனச் சொரிகிறது. இருந்தும் ஒருவர் செவியிலும் இசை இறங்கவில்லை. எல்லோர் மனதிலும் ஒருவித ஊமை அமுக்கம். இருந்த சிறு மகிழ்வும் அழிந்து இருள் படரத் தொடங்கி–விட்டது ஒருவித பதட்டம். பதகளிப்பு. இந்திய ராணுவம் மீளச்சென்றதும் அமைதியாயிருந்த சில காலமும் முடிவடையப்போவதாக 'குசுகுசு'க்கிறார்கள்.

திடீரென மேற்கிலிருந்து எழுகிறது இரண்டு துவக்குகளின் தொடர்

வேட்டோலி. ஒரு நிமிட அமைதி. மீண்டும் தொடர்கிறது சரவெடிகள். கிழக்கே பலாலியிலிருந்து எழுந்துவிட்டது ஹெலி. பிறகு கச்சேரிக்கு சொல்லவா வேண்டும். ஹெலி சுற்றிச்சுற்றி அடிக்கிறது. பத்மநாதன் நாதஸ்வரத்தை உறையுள் சுற்றிக் கட்டியபடி பாதுகாப்பான இடம்தேடி ஒடுகிறார். பெரு மழையென வெடியொலி ஓய பாய்கிறது ஊர் பெருவெள்ளமாக.

இரண்டு நாட்களில் ஊர் வடிந்து ஒரு சொட்டுமில்லாமல் தீர்ந்துவிட்டிருந்தது.

நான் வீட்டுக்கும், மருதுக்குமிடையே பலமுறை நடந்துவிட்டேன். இரவு மருதின் கீழ் தங்கினேன். ஒரு மரணவீட்டில் இராப்பிணம் காப்பது போல இரவு முழுவதும் விழித்திருந்தேன். என்னோடு தங்கிய கண்ணப்பன் இனி இருப்பதில் பலனில்லை, காலையில் புறப்படுவோம் என்றான். மூன்றாம் நாள் புறப்பட முன் மரத்தை நிமிர்ந்து பார்த்தேன். அசைவற்று கிடந்தது. வீட்டிலிருந்து ஒரு பொருள்கூட எடுக்கவில்லை.

நடந்தேன். நெடுந்தூரம். உலகின் எல்லை வரை. இப்போது இருபது வருடங்களுக்கு பின் மேலும் சில ஆண்டுகள் சேர்ந்துவிட்டன.

0000

என் படுக்கையிலிருந்து விழித்ததும் யன்னலினூடு முதலில் தெரிவது அந்த விலோ மரந்தான். காலையில் காற்று அகோரந்தணிந்து அடங்கி இருந்தது. இள வெயில். கண்கள் கூசும் அளவுக்கு மின்னலடித்தது.

ஏனோ தெரியாது, இந்தப் புலம்பெயர்ந்த மண்ணில் மேப்பிள் மரத்தைவிடவும் விலோ மரங்களே என் மனதைக் கவர்பவை. மிகவும் உயரமான மரங்கள். அவற்றின் கிளைகளிலிருந்து தொங்கும் கூந்தல் முழந்தாள் தாண்டி நிலம் வரையில் நீண்டிருக்கும். நான் நீண்ட கூந்தலையுடைய பெண்களின் அழகில் மனம் மயங்குபவன்.

அடர் பச்சைசையை விடவும் சாம்பர் படிந்த மென்பச்சை மீதும் விருப்பம் அதிகம். இப்போது நினைத்துப் பார்க்கும் போது அது கூட மருதின் இலைக-ளின் நிறச்சாயல் கொண்டதனால் கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது. இவை யாவுமே இந்த விலோ மரத் தெரிவுக்கு காரணமாக இருக்கலாம். விலோ மரம் எந்தச் சலனமுமற மிக அமைதியாக நின்று புன்னகைத்தது. இருந்தும் என் சலனம் அடங்கவில்லை. இரவு கண்ட கனவின் மீதியில் மனம் நனைந்து அலைவுறத் தொடங்கிவிட்டது. நினைவுகளின் ஆழ்மன

வெளிப்பாடுதான் கனவு என்கிறார்கள். இதில் உண்மையிருக்குமா? நான் கடந்த நாட்களில் என்ன நினைத்தேன்.

திடீரெனப் பொறிதட்டியது போல் நினைவு விழித்துக்கொண்டது.

என் தங்கை வீட்டுக்கு முன் ஒரு நடுத்தர அளவிலான மரம் நின்றது. மிகப் பரந்த நிழல்தரு. கிளிப்பச்சை நிறத்தில் பூவரச இலையின் சாயலில் தேக்கிலை போன்ற பெரிய இலைகளை கொண்ட மரம். இளவேனில் காலத்தில் வெள்ளைப் பூக்களை உதிர்க்கும். மாலையில் இதன் நறுமணம் மனதை மயக்கும். அது வீட்டின் முன்கூடத்தின் யன்னலோரம் நின்றதால் உள்ளே ஒளிபுக வழியில்லை. எனவே ஓரிரு கிளைகளை நறுக்குவதென எண்ணியிருந்தோம்.

இரண்டு நாட்களுக்கு முன் அதை அவர்கள் நறுக்கியதாக அறிந்திருந்தேன். காலை நடைப் பயிற்சியோடு சேர்த்து அதையும் பார்த்து வரலாம் என்ற எண்ணத்தில் புறப்பட்டேன். அவர்கள் வீடு என் வீட்டிலிருந்து ஒரு அரை மணி நேரம் நடக்கும் தூரத்திலிருந்தது. அண்மிக்கும் போதே ஆழ்மனதிருந்து ஒருவித துயரம் என்னை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது. அருகில்சென்று மரத்தைப் பார்த்ததும் அதிர்ந்தே போனேன். மரத்தின் அனைத்துக் கிளைகளையும் அடிமரத்துக்கு நெருக்கமாக நறுக்கியிருந்தார்கள்.

இருபது கரங்களையும் தோளோடு வெட்டி வீழ்த்திவிட்ட பின்பும் எழுந்து நிற்கும் இராவணணின் தோற்றம் என் கண் முன் தெரிந்தது. மரம் உயிர் மூச்சைப்பிடித்தபடி நடுங்கும் குரலில் முனகிக் கொண்டிருந்தது.

எனக்கு குரல் விம்மத் தொடங்கிவிட்டது. துயரை அடக்கிக் கொண்டு தங்கையிடம் விபரம் கேட்டேன். முதலில் ஓரிரு கிளைகளை வெட்டுவதென்றே தொடங்கினார்களாம். ஒவ்வொன்றாக வெட்ட வெட்ட ஆசை விடவில்லை. உற்சாகம் கரைபொங்க அதை வெட்டினால் நன்றாயிருக்கும், இதை வெட்டினால் நான்றாயிருக்கும் என முடிவில் எல்லாவற்றையும் வெட்ட வேண்டியதாயிற்று என்றார்கள். மரம் வெட்டுவதாக இருந்தால் என்ன, போர் செய்வதாக இருந்தால் என்ன, ஆயுதங்கள் கைக்கு வரும்வரைதான் மனிதன் மனிதனாக இருக்கிறான். அவை இயங்கத் தொடங்கிய பின், அவையே அவனை இயக்கத் தொடங்கிவிடுகிறது.

அதை அடக்கத் தெரிந்தவன் கலைஞனாகிறன். முடியாதவன் அதன் வழிப்-போய் அதனூடே மாள்கிறான். இதுதானே எங்கள் கடந்த காலப் பட்டறிவு.

ரொரன்ரோவில் மரம் வெட்டுவதாயின் நகர சபையிடம் முன் அனுமதி

பெறவேண்டும். இவர்கள் சில கிளைகளை மட்டும் நறுக்குவதற்கே எண்ணியிருந்தனர். அதற்கு அனுமதி தேவையில்லை. ஆனால், தொடங்கிய கருமம் முடிவில் மொட்டையடிப்பில் அல்லவா முடிந்துவிட்டது.

யாரோ நகர சபைக்கு தகவல் கொடுத்துவிட்டார்கள். அதிகாரிகள் வந்து விசாரனை செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு மரத்தை முழுதாக அழிக்கும் எண்ணம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு எச்சரித்திருக்கிறார்கள். சில சமயம் மரம் இறந்தால் இரண்டு லட்சம் டாலர்கள் வரையில் அபராதம் விதிக்க சட்டத்தில் இடமுண்டு எனக் கூறியிருக்கிறார்கள்.

தங்கை மிகப் பயந்து போயிருந்தார். "மரம் அடியோடு பட்டு விடுமா?" என என்னிடம் கேட்டார். நான் இப்போது அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறவேண்டியிருந்தது.

"மனிதரைப் பார்த்து 'மரமண்டை' என்று பேசுவதெல்லாம் வெறும் அபத்தம். அது உயிருள்ளது. தன்னைக் கொல்வதற்கு வெட்டினீர்களா அல்லது
தேவை கருதி கிளைகளை நறுக்க முனைந்தீர்களா என்பது அதற்கு நன்கு தெரியும். நீங்கள் தன் மீது கரிசனையாய் இருக்கிறீர்களா, இல்லையா என்பதை எல்லாம் மரங்களும் அறியும். ஆதலால் அதன் மீது அன்பாயிருங்கள். எப்படியும் பிழைத்துவிடும்" என்றேன்

இரண்டு மாதங்கள் கழிந்தது. ஒரு காலையில் போயிருந்தேன். எல்லாக் கொம்பரிலும் புதுக் குருத்து. மரம் முழுவதும் கிளிகள் குந்தியிருப்பது போல மதாளித்து நின்று புன்னகைத்தது மரம்.



திருமாவளவன்

கனகசிங்கம் கருணாகரன் எனும் இயற்பெயர் கொண்டவர். யூனியன் கல்லூரியில் கல்வி பயின்று லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணி புரிந்தவர். 1990ஆம் ஆண்டு கனடாவிற்கு புலப்பெயர்ந்த இவர் கவிதை, சிறுகதை, பத்திகள், நாடகத்துறை என்பனவற்றில் ஈடுபாடுடையவர். பனிவயல் உழவு, அஃதே இரவு அஃதே பகல், இருள்–யாழி, முதுவேனில் பதிகம் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

காலப் பெருங் களம்

- செல்வம் அருளானந்தம்

நேற்றைய கவலையில் இன்றும்
நாளைய கவலையில் நேற்றும்
போகுது காலம்.
போர் என்றும் புலம்பெயர்வென்றும்
மாரென்றும், பெரு முதுகின் இடைச்சரிவென்றும்
அலைந்தது ஓர் காலம்.
கையறு நிலை வந்தபோதெல்லாம்
கடவுளைத் தேட இன்னொரு காலம்
இப்போதென்ற மாதிரி இருக்கிறது
அப்போது வயதொன்றுதான் இருந்தது
அது இருமுனையும் கூரான வாளாய் இருந்தது.
வானத்தைக் கிளித்து, மலையைக் குடைந்து
கடலைக் கடந்து, கண்டங்களைத் தாவினோம்.
வாக்களிக்கப்பட்ட பூமி வந்துசேரும்போது
நடுத்தலை வெளியானது.
வேலைக்குப் போனோம், வீட்டுக்கு வந்தோம்
வீட்டுக்கு வந்தோம்,
வேலைக்குப் போனோம்
நாடகம்போல நடந்தது.
குழந்தைகள் வளரவும், நாங்கள் தேயவும்
மகிழ்வாய் போனது காலம்.

பொன்மாலைப் பொழுதென்பது
பாட்டிற்கு நல்லது
மாலை மயங்க,மயங்க மனம் கலங்குது.
இட்ட அடி சறுக்க
அடுத்த அடிக்கு அரைமணியாகும்
காலங்கங்கள் வேண்டாம்.
நல்ல மரணம் வரும் நாள்வரை
தானாய் எழுந்து தண்ணீர் குடித்து
தனியே நடந்து கழிவறை சென்றால்
காத்தும்,படைத்தும், கரத்தும் விளையாடும்
அத்தன், ஆனந்தன், அமுதனே
அது உனக்கு அழகு.



செல்வம் அருளானந்தம்

'காலம்' சஞ்சிகையின் ஆசிரியர். கதை, கட்டுரை, கவிதைகள், எழுதுபவர். நாடகம், கூத்துக்களின் செயற்பாட்டாளர். 'வாழும் தமிழ்' என்ற பெயரில் தமிழ் புத்தகக் கண்காட்சியை ஆண்டுதோறும் ரொறொன்ரோவில் நடத்துபவர்.

பிரபஞ்சத்துக்கள்

- முத்துராஜா

சொல்லாமல்
அறிவித்தல் கொடுக்காமல்
கதவைத் தட்டாமல்
தானாக நுழைகின்றமை
நோய்
மரணம்

முயன்று தோற்று
தோற்று முயன்று வெற்றியடைந்து
சதம்
கோடியாகின்றது
கோடிகள்
பாலைவன மண்ணாகக்
காற்றடிக்கும் திசைகளில்
ஒதுங்குகின்றன

வானவில்
வர்ணஜாலம் காட்டுகின்றது

பிறந்த
வாசல் புரிகின்றது
போகும்
வாசல் தெரியவில்லை

அவசர வாழ்க்கையில்
பெற்றதாயை
தந்தையை
கவனிக்க முடியவில்லை

உள்ளே
உயிர்வாடுகின்றது
உபரி உயிர் உண்டாக்கக்
காமம்
கண் மறைக்கின்றது

பிறப்பு நான்கு எழுத்து
இறப்பு நான்கு எழுத்து
கழித்துப் பார்த்தால்
பெறுபேறு பூஜ்ஜியம்

இங்கே எவரும்
கொண்டு வந்தது
ஒன்றுமில்லை
கொண்டு போவதற்கும்
எதுவுமில்லை

மனமிருந்தால்
உறுப்புத்தானம் செய்யலாம்
மருத்துவக் கல்லூரிக்கு
உடலைக்
கொடையாக்கலாம்

தீ தனக்கென்கிறது
மண் தனக்கென்கிறது
நாய் நரி தமக்கு என்கின்றன
புழு தனக்கென்கிறது
கடலில் மூழ்கிவிடின்
மீன்கள் தமக்கு என்கின்றன

இந்த
நடமாடும் உணவகத்தை'



கந்தசாமி முத்துராஜா

தமிழியலில் இளமானி, முதுமானி பட்டங்களைப் பெற்ற இவர் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல்கள் எழுதி வருகிறார். 'மரபும் மாற்றமும்' எனும் ஆய்வுக் கட்டுரையும், 'சுனாமி' என்ற கவிதைத் தொகுப்பும், 'ஒரு நெய்தல் நிலத்தின் கதை' என்ற நாவலையும் வெளியிட்டுள்ளார்.

எத்தர்களும் பித்தர்களும்

- 'வீரகேசரி' மூர்த்தி



அறிவுடையார் அன்புமறமும் அடக்கமு முடையார்
அறிவிலார் பொய்யும் களவு முடையார்
குறியுடையார் பிறரின் இரத்தமுறிஞ்சும் கொசுவாய்
குறுக்கு வழியில் குபேரனாகி குசியாய்வாழ
பறித்திடுவர் பிறர்பொருளை பொதுப்பணியின் பெயரால்
பதவியும் வகித்திடுவார் சங்கமதில் தலைவராய்
நெறியற்ற வழியில் நெடுநாள் சேர்த்தபொருள்
நெஞ்சினில் அம்பாய் பாய்வதை அறியாப்பாவிகள்!

தானதர்மம் தலைகாக்குமெனும் பொன்மொழி அறியார்
தன்னைவிட புத்திசாலி தரணியிலுண்டோ என்பர்
கானகத்து முகாமதனில் கண்ணீரும் கம்பலையுமாயுள்ள
கைம்பெண்களின் கடும்பசி போக்கிட உதவிடுவீரென்றே
ஆனவரை பொய்யுரைத்து அடுத்தவரின் பொருள்திரட்டி
அவற்றை தம்கணக்கிலிட்டு வட்டியாய் பெருக்கிடுவர்
மானமற்ற ஏமாளிகளை நம்பிநாம் ஏமாறலாமோ?
மகாசனங்களே மகாபாவிகளை இனம்கண்டு கொள்ளுங்கள்!

எமையேமாற்றி விழாநடத்தி பறிக்கும் பணமெல்லாம்
எங்கே செல்கிறது என்பதனை உற்றுப்பாருங்கள்
தமைத்தாமே பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும்
தர்மவான்கள் திரட்டும்பணம் தமிழகதிகளுக்கு கிட்டுமா?
சுமைதாங்கி ஓடியோடி உடலை வருத்தியுழைத்த
சுளையான செல்வமதில் சுத்துமாத்திகள் சுதிபண்ணலாமோ?
நமையேமாற்றி நம்பிக்கை மோசடி செய்திடுவோர்
நரகத்தில் வீழ்ந்திடுவர் என்கிறதுநம் இந்துமதம்!

சர்வதேச விளையாட்டு அரங்கில் தமிழர்கள்

- எஸ். கணேஷ்



ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் தாயக மண்ணில் பல தமிழர் கல்வித்துறையில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினர். எடுத்துக்காட்டாக ஆசிய, ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் உயரம் பாய்தலில் பதக்கம் வென்ற எதிர்வீரசிங்கம், கிரிக்கெட் துறையில் பல சாதனைகளை ஏற்படுத்திய எஸ். சரவணமுத்து, 'செஸ்' விளையாட்டில் உலகளாவியரீதியில் பல சாதனைகளை ஈட்டிய அம்பலவாணர் போன்றோரை எனக்குத் தெரிந்தவரை குறிப்பிடலாம்.

இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தற்போது உலகளாவியரீதியில் சாதனைகளை ஏற்படுத்திய சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனை யாரும் மறக்க முடியாது. இவ்வாறான திறமைகளைக்கொண்ட தமிழினத்தின் இளம் தலைமுறையினர் தமது ஆற்றல்களை உலகெங்கும் வெளிக்கொண்டு வருவதற்கு, எமது நாட்டில் நடந்த உள்ளூர் போர் இடையூறாக இருந்தது. ஆனால், வந்தோரை வரவழைத்த கனேடிய மண் கடந்த 30 ஆண்டுகளாக எமது வீர, வீராங்கனைகளின் திறமைகளை உலகிற்கு வெளிக்கொண்டு வருவதில் முன் நிற்கின்றது என்றால் மிகையாகாது.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ சில விளையாட்டுத் துறைகளில் சில இனத்தவர்களே பரிணமிக்க முடியும் என்ற கட்டுக்கோப்புகளை உடைத்தெறிந்து, இன்று கனேடிய மண்ணில் தமிழ் வீர, வீராங்கனைகளும் பல்வேறுபட்ட விளையாட்டுத் துறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.



இதற்கு முன் உதாரணமாக அண்மையில் தமிழ் பெற்றோர்களின் புதல்வியான பிரியா ரமேஷ் அவர்கள் 'Ice Skate Dance' போட்டிகளில் தடம் பதித்து வருகிறார். ஆதி முதல்வனாகிய பரமசிவன் தந்த பரதநாட்டியத்தில் சிறந்து விளங்கும் தமிழ் பெண்களில் ஒருவரான பிரியா ரமேஷ் Ice Danceஇலும் தனது வேகமான நடனத்தால் உலக மக்களின்



வரவேற்பை பெற்றுள்ளார். அதுமட்டுமல்லாமல் 2012இல் Skate Ontario Winter விளையாட்டுகளில் தங்கப்பதக்கத்தையும், 2013இல் 'Pre Novice Figure Skating' விளையாட்டு போட்டிகளில் வெண்கல பதக்கத்தையும் பெற்று ஒலிம்பிக் போட்டிகளில் கனடா சார்பாக பங்குபற்றுவேன் என்ற இலட்சியத்தில் உறுதியாக உள்ளார்.

தேவராஜன் சின்னத்துரை 2010ஆம் ஆண்டு வன்கூவர் நகரின் ஒலிம்பிக் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்ற World Master's ஒலிம்பிக்போட்டிகளில் கலந்து கொண்டு நீளம் பாய்தல் (Long Jump), முப்பாய்ச்சல் (Triple Jump) ஆகிய இரு போட்டிகளிலும் கனடா நாடு சார்பாக, வெண்கல பதக்கம் பெற்ற முதல் தமிழ்வீரர் ஆவார். கிரிக்கெட் துறையில் பார்க்கப் போனால் ஏற்கனவே உலகத்தின் சுழல் பந்துவீச்சில் இன்றுமட்டும் முதல் தர வீரராக திகழுகிறார் முத்தையா முரளீதரன். ஆனாலும் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் பல திறமையான வீரர்களை எமது தமிழ் சமூகம் உருவாக்கியதும் மறக்கமுடியாத ஒரு விடயமாகும்.

தற்போது இலங்கை அணியின் கப்ரனும் சகலதுறை ஆட்டகாரருமான அஞ்சலோ மத்தியூஸ், (Angelo Mathews) முன்னை நாள் சகலதுறை ஆட்டக்காரரும், தற்போது International Cricket Commentaror ஆனவருமான Russel Arnold, முன்னைய உதவி கப்டன் Ravi Ratnayeke, Test Cricket விளையாட்டு வீரர் சிறிதரன் ஜெகநாதன், Opening Bowler வினோதன் ஜோன், இலங்கையின் முன்னைநாள் உதவி கப்ரனும் பல சாதனைகளை ஏற்படுத்தியவருமான Roy Dias, இதைவிட மேலாக ICC Cricket Umpireகளாக திகழ்ந்த ஆனந்தப்பா, International Test, ODI Umpire கந்தையா Francis, இவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல் மகாதேவன் சதாசிவம் இலங்கை அணிக்கு தலைமை வகித்ததுடன் SSC கிரிக்கெட் Club இன் காரணகர்த்தாவும் 1940ஆம் ஆண்டில் இருந்து 1960ஆம் ஆண்டு வரை உலகளாவியரீதியில் கிரிகெட் Test கிடைக்காத ஒரு நாடான இலங்கையை சர்வதேசத்திற்கு முன்னிலைப்படுத்தியவரும் Tamil Union Cricket Clubஐ மேலோங்க வைத்தவரும், 1948ஆம் ஆண்டு மேற்கு அணியின் தலைவரும் சிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரரான Dr. Garry Sobersஇனால் அழைக்கப்பட்ட 'The Greatest Batsman Ever on Earth' சதாசிவம் மகாதேவன் ஆகிய இப்படிப்பட்ட புகழ்பூத்தவர்கள் கிரிக்கெட்டில் உள்ளனர் என்பது ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் பெருமைப்படக் கூடியவிடயமாகும்.

இதைவிட இலங்கை அணியில் விளையாடிய Higest Lever Cricket இல், சபாபதிப்பிள்ளை இலங்கரட்ணம், ரவீந்திர புஷ்பகுமார ஜோ சவரி முத்துப்பிள்ளை, கமுன் நாட் பத்மநாதன், Neil and Dennis Chanmugam போன்ற கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் நான் பிறக்கும் முன்பே உலகளாவியரீதியில் இலங்கை அணியை பிரதி நிதித்துவபடுத்தியுள் - ளார்கள்.

1958ஆம் ஆண்டு Dr. Nagalingam எதிர்வீரசிங்கம் 1952 & 1956 Olympic Gamesஇலும் இலங்கை Asian Gamesஇலும் பிரதிநிதித்துவப் - படுத்திய தமிழ் வீரர் ஆவார்.

உதைப்பந்தாட்டத்தில் யாழ் இந்துக்கல்லூரி அதிபர் ஆகவும் International Soccer Referees ஆகவும் கடமையாற்றியுள்ள திரு. சபாலிங்கம் இளையதம்பி, யாழ். இந்துக்கல்லூரி பிரபல விளையாட்டு வீரரும், பலாலி Tranining College அதிபரும், திரு. சபாலிங்கம் அவர்களுடைய சகோதரருமான உலகளாவியரீதியில் உதைபந்தாட்ட நடுவருமான திரு. கனகலிங்கம் இளையதம்பி அத்துடன் பரமேஸ்வரா கல்லூரி சர்வதேச உதைபந்தாட்ட (FIFA) நடுவராக கடமையாற்றிய திரு. பேரின்பநாயகம் தம்பிராஜா ஆகியோர் இலங்கையை சர்வதேசரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்கள்.

யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களும் இலங்கை அணியை சர்வதேசரீதியில் பிரதிநிதித்துவப்படுத்திய 'Basket Ball Sri Lanka' கப்ரனும் கொழும்பு Trafic Police உத்தியோத்தருமான 'பெற்றா மாத்தையா' என அழைக்கப்படும் திரு. சித்திறஞ்சன், ஆசிய விளையாட்டு போட்டிகளி-லும் சரி, உதைப்பந்தாட்ட அணிகளிலும் சரி இலங்கையை பிரதிநிதித்-துவப்படுத்திய யாழ். இந்து மாணவர்களான திரு. தயாளன் முன்னாள் யாழ். உதயன் பத்திரிகை ஆசிரியரான திரு. வித்தியாதரன் (சிறந்த Sri Lanka School Team Goal Keeper) என்போர் என் வாழ்க்கையில் உலகளாவிய ரீதியில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்ற வகையில் இன்றும் மறக்க முடியாது உள்ளவர்கள்.

கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் ரொறொன்றோ நகரில் பல வெற்றிகளை ஈட்டி, கனேடிய தேசிய அணிக்கு பல தமிழ் வீரர்களை உருவாக்கிக் கொடுத்த பெருமை, தமிழர்களினால் ஆரம்பிக்கப்பட்ட 'செஞ்சூரியன்' (Centurion Cricket Club) னையே சாரும். இது 1987ஆம் ஆண்டில் இருந்து பல தமிழ் விளையாட்டு வீரர்களை உருவாக்கி உள்ளது. உதாரணமாக 2003ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடை-பெற்ற உலக கிண்ண (World cup 2003) போட்டிகளில், இலங்கை

அணிக்கும் கனேடிய அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், உலகப் புகழ்பெற்ற சனத் ஜெயசூரியாவின் விக்கெட்டை முதல் ஓவரி-லேயே விழவைத்த பெருமை ரொறொன்றோ செஞ்சூரியன் விளை-யாட்டு கழக பந்து வீச்சாளர் சஞ்சேய் துரைசிங்கத்தையே சாரும்.

கனேடிய மண்ணில் 1989ஆம் ஆண்டில் இருந்து தமிழர் மாணவர் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள், மிக வேகமான வளர்ச்சிகளை கண்டுள்ளது. இது கனேடிய தமிழர் விளையாட்டுத்துறை (CTSA) என பெயர் மாற்றப்பட்டு கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அந்தஸ்தை பெற்றுள்ளது. கடந்த 25 வருட காலமாக, தடகள போட்டிகள் (Track & Field), உதைபந்தாட்டம் (Soccer), மகளிர் வலைப்பந்தாட்டம் (Net Ball), கரப்பந்தாட்டம் (Volley Ball), வயது முதிர்ந்தவர்களுக்கான பூப்பந்தாட்டம் (Badminton), ரேபிள் ரெனிஸ் (Table Tennis) ஆகிய விளையாட்டுதுறைகளில் கனேடிய, மற்றும் வேறு நாட்டினத்தவர்களுக்கு இணையாகவும் சவாலாகவும் திகழ்ந்து வருகின்றது. 2013 டிசெம்பர் 22ஆம் திகதி கனேடிய தமிழர் விளையாட்டுத் துறையின் 25 வருடகால சேவையை பாராட்டி கனேடிய விளையாட்டுதுறை அமைச்சரினால் கௌரவிக்கப்பட்டமை ஒரு முக்கிய விடயமாகும்.

கனேடிய தமிழர் விளையாட்டுத்துறையினால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டம் ஒன்ராறியோ மாகாணத்தில் புகழ்பெற்ற உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகங்களான Woodbridge, Vaughan, Umsc, Aurora, Markham அனைத்தையும் வென்று 2013ஆம் ஆண்டில் 14 வயதுக்குட்-பட்டோர் பிரிவில் Championship பெற்றதும், அத்துடன் 2014ஆம் ஆண்டில் CSL Premier Divisionக்கு பதவி உயர்த்தப்பட்டதும் கனேடிய உதைபந்தாட்ட வரலாற்றில் மைல் கற்களாகும்.

கனேடிய மண்ணில் தமிழ் வீரர்களுக்கடையே தெரிவு செய்யப்பட்ட அணி Ontario Soccer Leagueஇல் பல தடவை 'Fair Play Award' விருதை வென்றது. இன்று கனேடிய பல்கலைக்கழகங்களிலும், அமெரிக்க பல்கலைக்கழகங்களிலும் தமிழ் உதைபந்தாட்ட வீரர்கள் பல புலமை பரிசுகள் பெற்று தமக்குத் தேவையான கல்வி வளத்துடன் தங்கள் விளையாட்டுத்துறை திறமைகளையும் பறைசாற்றி வருகின்றனர்.

கனேடிய மண்ணின் இளம் சிறுவனான கஜன் சிவபாலசிங்கம் அவர்களும் கனேடிய, அமெரிக்க Golf சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்றி கனடாவில் Junior Champion என்ற விருதையும், உலக Championஆன Tiger Woods அவர்களின் பாராட்டையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேலன் நந்தகுமாரன் என்ற தமிழர் ஒன்ராறியோ ஹொக்கி லீக்கில் (Ontario Hockey League) விளையாடுவதற்காக Windsor Spitfires Hockey Team இல் Professional NHL Draft இல் தெரிவு செய்யப்பட்டுள்ளார். Pitch Appleby Collegeஇல் 10ஆம் வகுப்பு படிக்கும் இவர் 16 வயதுடையவர் ஆவர். இவருக்கு 2015 ஏப்பிரல் 11ஆம் திகதி மேற்படி லீக்கினால் வழங்கப்படும் அதியுயர் விருதான 'Wayne Gretzky' விருது இம்முறை முதல் தடயைாக அவருக்கு கிடைத்துள்ளது. கனேடிய சரித்திரத்தில் முதல் தடவையாக வேலன் நந்தகுமார் ஒரு மைல்கல்லைப் பதித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் அவுஸ்திரேலியாவில் சாதனை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் இரத்தின – சிங்கம் செந்தூரன் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற விக்டோரியா விளையாட்டுப் போட்டியில், உயரம் பாய்தலில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகர், அல்பேர்ட் பார்க்கில் நடைபெற்ற இந்த போட்டியில் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். இவர் தேசிய கனிஸ்ட பிரிவு உயரம் பாய்தலில் 1.92 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை நிகழ்த்தியிருந்தார்.

தமிழ் பெண் வீராங்கனைகள் பலர் பல விளையாட்டு துறைகளிலும் தங்கள் திறமைகளை எடுத்தியம்பி வருகிறார்கள். முக்கியமாக வலைப்பந்தாட்ட அணிகளில் (Netball Competitive Leagues) தமிழ் பெண்கள் முன்னணி வீரர்களாக திகழ்கிறார்கள். கனேடிய மண்ணில் தமிழ் வீரர், வீராங்கனைகள் பல மைல்கற்களை தடம்பதித்து வருவது வீரம் செறிந்த விழுமியங்களை உடைய தமிழரின் எதிர்கால பரிமா - ணங்களை உலகெங்கும் எடுத்தியம்பும் என துல்லியமாக தெரிகின்றது.



எஸ். கணேஷ், Canadian Ceritified Soccer Referee, Assessor & Instructor

கனேடிய உதைபந்தாட்டத்துறையில் முதன்மை நடுவராக கடமையாற்றும் இவர் 'விளம்பரம்' பத்திரிகையில் தொடர்ந்து விளையாட்டுத்துறையில் எழுதிவருபவர். CMR வானொலி, TVI தொலைக்காட்சி விளையாட்டுத்துறை வர்ணனையாளரும் ஆவார்.

போட்டி நடுவர்கள்



அ. முத்துலிங்கம்



செழியன்



உ. சேரன்



ரதன்



பேராசிரியர் இ.பாலசுந்தரம்



பேராசிரியர் சொர்ணவேல்



மணி வேலுப்பிள்ளை



கந்தசாமி முத்துராஜா



ரஞ்ஜினி ஸ்ரீகதிர்காமநாதன்



கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்



கலாநிதி எஸ்.கௌசல்யா



இ. மகேந்திரன்



கலாநிதி குலமோகன்



இராஜ்மீரா இராசையா



நாமகள் சிவகுமார்



கலாநிதி மைதிலி தயாநிதி

300 பருத்தி வீரர்களும் ஒரு தலைவரும்

- கே. இந்திரஜித்

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டியில் 1ஆவது பரிசுபெற்ற கவிதை

நீண்ட நெடிய
பாலைவனப்
பயணத்திற்குப் பிறகு
இந்த இடத்தை
வந்தடைந்திருக்கிறோம்.
மலையின் உச்சியில்
'ஸ்பார்ட்டகஸ்' கண்ணீர்
மழையில் நிற்கிறான்.
திரும்பிய திசையெங்கும்
அய்யகோ அவர்கள்
அதுவாகிக்கிடக்கிறார்கள்.
இப்போது
300 பருத்தி வீரர்கள்
மட்டுமே இருக்கிறார்கள்.
அவர்கள்
போர் உடை அணிந்து
ஆயுதம் தரித்து
அணிவகுத்து நிற்கிறார்கள்.
வெகுதூரம்
வந்தாகிவிட்டது.
இனிமேல்
திரும்பிச் செல்ல முடியாது.
தலைவர் முன்
இரண்டு வழிகள்
மட்டுமே உள்ளன.
ஒன்று
தோல்வியடைந்து வெற்றி பெறுவது
மற்றொன்று
வெற்றியடைந்து தோற்றுப்போவது.

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டிகளின் முடிவுகள்

கவிதை



1ஆம் பரிசு – '300 பருத்தி வீரர்களும் ஒரு தலைவரும்'
– கே. இந்திரஜித் – திருப்பூர், தமிழ்நாடு

திருப்பூர் மாவட்டம், தமிழ்நாட்டை சேர்ந்த இவர் தமிழ், சமூகவியல் மற்றும் வரலாற்றில் முதுகலைமானி பட்டம் பெற்றவர். கலாநிதி பட்டம் பெற்ற இவர் தமிழ்துறை உதவிப் பேராசிரியராக அரசகலைக்கல்லூரி, உடுமலைப்-பேட்டையில் பணிபுரிகிறார். சாம்பல், விடியல் போன்ற பத்துக்கும் மேற்பட்ட நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

2. ஆம் பரிசு – 'ஒற்றை முலை'
– சில்வியாமேரி – சென்னை, தமிழ்நாடு

3. ஆம் பரிசு – 'துயர்நிழல்'
– வேலாயுதம் கெங்காதரன்
– கோலாலம்பூர், மலேசியா.

கட்டுரை

1ஆம் பரிசு – 'கலையும் பண்பாடும்'
– ஆர். லட்சுமணன் – சென்னை, தமிழ்நாடு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழும் இவர் பட்டதாரியும் பணிநிறைவு பெற்ற தலைமையாசிரியரும் ஆவார். 'நிறைவு' குறுநாவல் போட்டி வெற்றியாளர்கள்.

2. ஆம் பரிசு – 'மருத்துவமும் தமிழரும்'
– அறந்தை வ. முத்துவேல், அறந்தாங்கி தமிழ்நாடு

3. ஆம் பரிசு – 'கலையும் பண்பாடும்'
– த.வெ. மணிமாறன் – சென்னை, தமிழ்நாடு



அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கேரள பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். இவர் ஒரு தமிழ் வித்துவான் ஆவார்.

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டிகளின் முடிவுகள்

குறுநாவல்



1ஆம் பரிசு – 'வானவில்'

– **நிலானி சுதன், கெஸ்விக், கனடா**

பருத்தித்துறையில் பிறந்து யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்விபயின்ற இவர் கட்டுரை, கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளார். கனடாவிற்கு புலம்பெயர்ந்த இவர் குறுநாவல் எழுதும் ஆர்வத்தில் விளம்பரம் நடத்திய போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளார்.



2. ஆம் பரிசு – 'உன்னை விட்டு விலகுவதில்லை'

– **எஸ். செல்வசுந்தரி – திருச்சி, தமிழ்நாடு**

B.Sc. பட்டதாரியான இவர் துணை வட்டாட்சியராக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளியில் பணியாற்றுகிறார். ராணி, குமுதம், தினமணிக்கதிர், கல்கி, குங்குமம், தினமலர், கலைமகள் போன்ற பத்திரிகை களில் இவரது சிறுகதைகள், நாவல் வெளிவந்துள்ளன. இவற்றில் பல முதலாம், இரண்டாம், ஆறுதல், பரிசுகள் மற்றும் ஆளுநர் விருதையும் பெற்றுள்ளன.



3. ஆம் பரிசு – 'கனடாவில் ஒரு யாழ்ப்பாணம்'

– **எஸ். ராமேஸ்வரன் – மார்க்கம், கனடா**

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டிருக்கும் இவர் நாவல், குறுநாவல், சிறுகதைத் தொகுப்பு, நாடகம், சிறுவர் இலக்கியம் ஆகியவற்றை வெளியிட்டிருக்கிறார். தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் 43 நூல்களை வெளியிட்டுள்ளார். சாஹித்திய மண்டல விருது, மாகாண சபையின் இலக்கியப் பரிசுகளையும் பெற்றுள்ளார்.

திரைக்கதை



1ஆம் பரிசு – 'அதிதி'

– **எஸ் ராஜகுமாரன், சென்னை தமிழ்நாடு**

எழுத்தாளர், இயக்குனரான இவர் கவிதை, கட்டுரை, சிறுகதைகளை எழுதி வருகிறார். 'மேகவடு', நதியோடிய காலம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இலக்கியப் படைப்புகளுக்காக பல விருதுகள், பரிசுகளை பெற்றுள்ளார். குறும்படங்கள், ஆவணப் படங்களை இயக்கியுள்ளார். சுடலை மாடன் தெரு, திருநெல்வேலி டவுன் போன்ற ஆவணப் படங்கள் விருதுகள் பெற்றுள்ளன. விகடன் வெளியீடாக ஓமந்தூரார் முதல்வர்களின் முதல்வர் என்ற நூலை வெளியிட்டுள்ளார். விளம்பரம் பத்திரிகையின் பரிசு வென்ற அதிதி – திரைக்கதையை ஆங்கிலப் படமாக இயக்க வேண்டும் என்பது இவரது உலகச் சினிமா இலக்கு.

விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டிகளின் முடிவுகள்



2. ஆம் பரிசு – 'கனடா பிள்ளைகள்'

– சோ. ராமேஸ்வரன் – மார்க்கம், கனடா

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டிருக்கும் இவர் நாவல், குறுநாவல், சிறுகதைத் தொகுப்பு, நாடகம், சிறுவர் இலக்கியம் ஆகியவற்றை வெளியிட்டிருக்கிறார். தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் 43 நூல்களை வெளியிட்டுள்ளார். சாஹித்திய மண்டல விருது, மாகாண சபையின் இலக்கியப்பரிசு போன்ற பரிசுகளையும் பெற்றுள்ளார். தமிழியல் விருது மற்றும் கலாபூஷணம் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார். பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றிய இவர் தொலைக்காட்சி நாடகத்தில் உதவி இயக்குனராகச் செயற்பட்டுள்ளார்.



3. ஆம் பரிசு – 'வேண்டும் தமிழ்'

இராசமணி சிவலிங்கம் – ரொறொன்ரோ கனடா

75 வயதான இவர் மூத்தோர் கழகத்தின் அங்கத்தவர். கணினி, புகைப்படம் எடுத்தல், வீடியோ செய்தல், கவிதை போன்றவற்றில் ஆர்வமுள்ள இவரின் கவிதைகள் இணையத்தில் வெளிவந்துள்ளன.

கவிதை போட்டி நடுவர்கள்

உ. சேரன்

மகாகவியின் மகனும் தற்போதுள்ள புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர்களிலும் ஒருவர். வின்ட்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல், மனிதவர்க்கவியல், குற்றவியல் பிரிவில் ஓர் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவரது வெளியீடுகளில் History & Imagination: Tamil Culture in the in the Global Context (2007), New Demarcation: Essays in Tamil Studies(2009) மற்றும் தமிழில் இருந்து மொழிபெயர்க்–கப்பட்ட கவிதைத் தொகுப்பு You Cannot Turn Away (2011) என்பன உள்ளடங்குகின்றன.

செழியன்

ஈழப்போராட்டத்தின் இலக்கிய முன்னோடிகளில் ஒருவர். 'மரணத்தின் வாழ்வு' தொகுப்பின் ஊடாக அறிமுகம் ஆனவர். அடக்கப்பட்ட மக்களுக்காக தனது செயலை தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்.

ரஞ்ஜினி ஸ்ரீகதிர்காமநாதன்

தமிழ் சிறப்பு பட்டதாரி இவர் இலங்கையில் 22 வருடங்களாக ஆசிரியத் தொழில் புரிந்தவர். தற்போது கத்தோலிக்க மாவட்ட பாடசாலைச் சபையில் தமிழ் Credit பாடநெறியைக் கற்பிக்கின்றார். இவர் கவிதை எழுதுதலிலும் கட்டுரை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர் என்பதுடன், தமிழ் கலாசார நிகழ்ச்சிகளுக்கு வர்ணனையாளராகவும் விளங்குகிறார்.

கந்தசாமி முத்துராஜா

தமிழியலில் இளமானி, முதுமானி பட்டங்களைப் பெற்ற இவர் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் படைப்புக்களை எழுதி வருகிறார். யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் 'மரபும் மாற்றமும்' எனும் ஆய்வுக் கட்டுரையும், 'சுனாமி' என்ற கவிதைத் தொகுப்பும், 'ஒரு நெய்தல் நிலத்தின் கதை' என்ற நாவலையும் வெளியிட்டுள்ளார்.

கவிதாயினி இராஜ்மீரா இராசையா விமலநாதன்

முதுகலைமானி பட்டதாரியான இவர் தமிழாசிரியராவார். இவர் எழுத்து, நூல் ஆய்வு, மேடைப்பேச்சு, பட்டிமன்றம், கவியரங்கு, கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு, நாடகம் போன்றவற்றில் ஈடுபாடுடையவர். விளம்பரம் உட்பட பல ஊடகங்களில் எழுதி வருகிறார்.

கட்டுரை போட்டி நடுவர்கள்

மணி வேலுப்பிள்ளை

நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர். இவர் 'மொழியினால் அமைந்த வீடு', 'நாங்கள் அவர்கள்' நூல்களை வெளியிட்டுள்ளார். மார்க்சியம் – ஒரு மீள்நோக்கு, மாயமீட்சி, வெட்டுக்கிளிகளை உற்றுக்கேட்டல், காஷ்மீர் சீற்றம் பொதிந்த பார்வை ஆகிய தமிழாக்கங்களை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறை முன்னைநாள் பேராசிரியர். பொதுநலவாய நாடுகளின் சிரேஷ்ட புலமைப்பரிசில் பெற்று ஷெவ்வீல்ட் பல்கலைக்கழக நாட்டார்வழக்கியல் ஆய்வு நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டவர். 12 ஆய்வு நூல்களை வெளியிட்டதோடு, தற்போது கனடாவில் தமிழர் இருப்பும் வாழ்வும் என்ற

கட்டுரை போட்டி நடுவர்கள்

நூலை எழுதும் முயற்சியில் உள்ளார். ரொறன்ரோ பாடசாலைகளில் குடியமர்வு ஆலோசகராகக் கடமை ஆற்றிய இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் செயற்படுகிறார். ரொறன்ரோவில் பல்வேறு கலை – பண்பாட்டு அமைப்புக்களின் தலைவராகவும் போஷகராகவும் செயற்படுகிறார். கனேடிய அரசாங்கமும் பல்வேறு சமூக நிறுவனங்களும் இவருக்குப் பல விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

கலாநிதி குலமோகன்

யாழ். பல்கலைக்கழக பட்டதாரியும், கனடாவில் முதுகலைமானி பட்டம் பெற்றவரான இவர் கனடாவில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். அத்துடன் பல ஆக்கங்களை எழுதுபவர். வானொலி, தொலைக்காட்சி, மேடை நிகழ்வுகளிலும் பங் பற்றிவருகிறார்.

கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழியல் ஆய்வாளரான இவர் கனடாவில் பல நிகழ்வுகளில் பிரதம பேச்சாளராகப் பங்கெடுக்கிறார்.

கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம்

இசையியல் ஆய்வாளரான இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் சென்னை சிவகாமி கலாலயாவிலும் இசை ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் கனடாவில் தமிழ் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து வருகிறார்.

குறுநாவல் போட்டி நடுவர்கள்

அ. முத்துலிங்கம்

அறுபதுகளில் எழுத ஆரம்பித்த இவர் சிறுகதை, கட்டுரை, நேர்காணல், நாடகம், விமர்சனம், நாவல் என எழுதிவருகிறார். இவர் ஜோதி விநாயகம் பரிசு, லில்லி தேவசிகாமணிப் பரிசு, தமிழ்நாடு அரசாங்க முதல் பரிசு, இந்திய ஸ்டேட் வங்கியின் முதல் பரிசு, இலங்கை அரசு சாகித்தியப் பரிசு, கனடா தமிழர் தகவல் நாற்பதாண்டு சாதனை விருது, திருப்பூர் தமிழ்ச்சங்கம் பரிசு, விகடன் விருது 2012, ளுசுஆ பல்கலைக் கழக படைப்பிலக்கிய விருது ச் 2013, கனடா, மார்க்கம் நகரசபை இலக்கியத் துறையில் வழங்கிய கலாச்சார விருது 2014 ஆகியவற்றைப் பெற்றிருக்கிறார்.

நாமகள் சிவகுமார்

கொழும்பு, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர் ஆசிரியை கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியை ஆவார். தற்போது அறிவகத்தில் ஆசிரியராக பணியாற்றுகிறார்.

கலாநிதி மைதிலி தயாநிதி

இலங்கையில் உதவி அரசாங்க அதிபராகவும், கொழும்பு பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளராகவும் இருந்த இவர் கலைமானி, முதுகலைமானி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்.

திரைக்கதை எழுதும் போட்டி நடுவர்கள்

அ. கந்தசாமி

எழுத்தாளர், கவிஞர், சிறுகதையாசிரியர். வானொலி, தொலைக்காட்சித் தயாரிப்பாளர். முகரம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர், வெளியீட்டாளர், விமர்சகர், நாடகர், நவீன இலக்கியம், சினிமாவின் தீவிர நுகர்வாளர், இவரது ஆக்கங்கள் வீரகேசரி, வசந்தம், கணையாழி, தாயகம், மஞ்சரி, காலம், நான்காவது பரிமாணம், ஈழநாடு போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

பேராசிரியர் சொர்ணவேல்

மிச்சிக்கன் பல்கலைக்கழக திரைத்துறை பேராசிரியர், திரைப்படவியலில் கலாநிதிப் பட்டத்தை அயோவா பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார். பல விவரண, குறும் படங்களை இயக்கியுள்ளார். பல சர்வதேச திரைப்படவிழாக்களில் நடுவராக கடமையாற்றியுள்ளார். சினிமா பற்றிய பல நூல்களை தமிழில் எழுதியுள்ளார்.

ரதன்

விளம்பரத்தில் தொடர்ச்சியாக சினிமா மற்றும் அரசியல் கட்டுரைகளை கடந்த 15 வருடங்களாக எழுதிவருகிறார். பல திரைப்பட விழாக்களில் நடுவராக கடமையாற்றியுள்ளார். காலச்சுவடு, நிழல், கணையாழி, உயிர்நிழல் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. கடந்த 15 வருடங்களாக ரொறொன்ரோவில் சர்வதேச தமிழ்த்திரைப்பட விழாவை நடத்திவருகின்றார். அரசியல் விமர்சகர், கவிஞர், சிறுகதையாசிரியர், நாடகர். இரண்டு சினிமா நூல்களை எழுதியுள்ளார். ரி.வி.ஐ தொலைக்காட்சியில் நல்ல குறும் படங்களை ஒளிபரப்பியுள்ளார்.

1991-2015 'விளம்பரம்' இருபத்தைந்து ஆண்டுகள்



















விளம்பரம்

VLAMBARAM™

Published by
Vlambaram Publications Inc.

